விலை: யாழ். ரூபா 30, வன்னி ரூபா 20 பக்கங்கள் 56

# உதயன்

சுடர் 31 கதிர் 010 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 20, ஞாயிற்றுக்கிழமை 06.12.2015

மகாராஜா பொதிகள் சேவை

UK யில் Watford, Eastham, Wembley ஆசிய நகரங்களில் எமது பொதிகள் சேகரிப்பு நிலையங்கள் விரிவாக்கப்பட்டுள்ளது.

01 Kg கட்டணம் 449/=

GTV Enterprises (Pvt)Ltd.

இல 125, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
021 - 2224338 / 021-4925024

இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
024 - 4930200

## டக்ளஸ் ஓர் கொலையாளி

### நாடாளுமன்றில் கூறினார் சிறிதரன் எம்.பி.

கொழும்பு, டிசெ.6
ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஓர் கொலையாளி. முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன், ஊடகவியலாளர் நிமலராஜன் உள்ளிட்ட பலரின் படுகொலையுடன் தொடர்புடையவர். வடக்கில் 3ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமற்போகக் காரணமாக இருந்தவர்.
இவ்வாறு சபையில் நேற்றுக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.
நாடாளுமன்றத்தில் நேற்று கல்வி அமைச்சு, உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மீதான விவாதம் நடைபெற்றது. இதில் உரையாற் றும்போதே அவர் மேற் படி குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.
அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-
நான் கிளிநொச்சியில் பக். 53

# உள்ளகப் பொறிமுறை உருவாக்கும் பணிகள் ஜனவரியில் ஆரம்பம்

## 5 தரப்புக்கள் ஒன்றிணைந்து இது குறித்து ஆராயவுள்ளன

“ஜெனிவாத் தீர்மானத்தின் அடிப்படையில் எவ்வாறான பொறிமுறையை உருவாக்குவது –அதனை எவ்வாறு நம்பகத் தன்மையுடன் செயற்படுத்துவது குறித்து அரச உயர்மட்டம் ஆராய்ந்து தீர்மானம் எடுக்கவுள்ளது.”



கொழும்பு, டிசெம்பர் 6
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கான உள்நாட்டுப் பொறிமுறை நிறுவும் பணியை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஆரம்பிப்பதற்கான பக். 53



## ரணில் – மகிந்த இரகசிய சந்திப்பு

கொழும்பு, டிசெ. 6
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.
நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் பக். 53

## நகுலேஸ்வரத்தில் 5 ஏக்கர் விடுவிப்பதற்கு இணக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 6
கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியில் கடற்படையினரின்கட்டுப்பாட்டிலிருந்த 5 ஏக்கர் நிலப்பரப்பை விடுவிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு இணங்கியுள்ளது. இரண்டு வாரங்களில் குறித்த பகுதிகள் பொதுமக்களிடம் கையளிக் கப்படும் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளதாகத் தெல்லிப்பழை பிரதேச செயலக வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.
கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியில் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலி ருந்த வீடுகள் கடந்த ஜூன் மாதத்திலிருந்து படிப்படி பக். 51

## தாஜுதீன் கொலை; சந்தேக நபர்களை கைது செய்யத் தயார்

கொழும்பு, டிசெ. 6
பிரபல ரக்பி வீரர் மொஹமட் வசிம் தாஜுதீனின் கொலைச் சந்தேக நபர்களைக் கைது செய்வதற்குத் தயாராக இருப்பதாக, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் சகலரும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.
பிரபல ரக்பி வீரர் மொஹமட் வசீம் தாஜுதீன் வாகன விபத்தில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அவர் கொலை செய்யப்பட்ட பக். 53

## எதிர்க்கட்சித் தலைமையை கைப்பற்ற மீண்டும் முயற்சி

### மகிந்த தரப்பினர் சபாநாயகருடன் சந்திப்பு

கொழும்பு, டிசெ.6
நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுக்கொள்வதற்காக மகிந்த ஆதரவு அணியினரான கூட்டு எதிர்க்கட்சியினர் மீண்டும் களமிறங்கியுள்ளனர்.
இதற்கமைய எதிர்வரும் தினங்களில் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் சபாநாயகர் கரு ஜயசூரியவுடன் கலந்துரையாடவுள்ளனர். அதன் பின்னர் சர்வதேச நாடாளுமன்றச் சங்கத்தில் இது தொடர்பில் முறைப்பாடு ஒன்றையும் செய்யவுள்ளனர் எனவும் பக். 53

முச்சந்தி முரளி



இரகசியச் சந்திப்புகள் பற்றி கவனமா இருக்கவேணும் கண்டியளோ....

## மகேஸ்வரனின் கொலையாளி தன்னைத்தானே பிடிகொடுத்தார்

### டக்ளஸின் உரையையடுத்து விஜயகலா பதிலடி

கொழும்பு, டிசெ.6
எனது கணவரின் படுகொலையுடன் தொடர்புடைய சூத்திரதாரி இந்தச் சபையில் இருப்பதாக நான் கூறிய போதிலும், அவரின் பெயரைக் குறிப்பிடவில்லை. ஆனால், இன்று எனது கணவரின் பெயரைக் குறிப்பிட்டு அந்தச் சூத்திரதாரி பக். 53

## சுமந்திரனுடன் முரண்பட்ட முஸ்லிம் எம்.பிக்கள்

கொழும்பு, டிசெ. 6
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் - அமைச்சர்களுக்கும் இடையில் சபையில் கடும் வார்த்தைப் போர் ஏற்பட்டது. இதனால் சபையில் குழப்ப நிலைமை மூண்டது. பக். 53

## கடன் சுமை தாங்க முடியாது யாழில் இருவர் உயிர்துறப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 6
கடன் சுமையைத் தாங்க முடியாத காரணத்தால் வெவ்வேறு இடங்களில் விவசாயி ஒருவரும் குடும்பப் பெண் ஒருவரும் உயிர் துறந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
இந்தப் பரிதாபச் சம்பவங்கள் உரும்பிராய், கரவெட்டிப் பகுதிகளில் நேற்று இடம்பெற் றுள்ளன.
உரும்பிராயைச் சேர்ந்த பொன்னன் குணரத்தினம் (வயது 56) மற்றும் துன்னாலை தெற்கு கரவெட்டியைச் சேர்ந்த நாககுலராஜா ஈஸ்வரி (வயது 47) ஆகியோரே உயிர் துறந்துள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.
தற்காலத்தில் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்தவே சிரமப்படும் பக். 53

## சென்னை மக்களுக்கு உதவவுள்ளது வடக்கு

### நிதி சேகரிப்பை விரைவில் மாகாண சபை முன்னெடுக்கும்

யாழ்ப்பாணம், டிசெ. 6
இயற்கை இடரினால் பாதிப்புற்ற சென்னை மக்களுக்கு உதவி செய்வதற்காக வடக்கு மாகாண சபையினால் நிதி சேகரிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது. இது தொடர்பில் முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளதாக, வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
தமிழகத் தலைநகர் சென்னையில் வெள்ளத்தினால் பக். 51




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# யாழ். போதனாவில் குவியும் நோயாளர்

## மழையை அடுத்து ஏற்பட்டுள்ள தொற்று நோய்களால்

யாழ்ப்பாணம், டிசெ.6
யாழ். குடாநாட்டில் தொடர்ச்சியாக மழை பெய்து வரும் நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

காய்ச்சல், டெங்குத் தொற்று, வயிற்றுளைவு, வயிற்றோட்டம் உள்ளிட்ட பல நோய்களாலும் பீடிக்கப்பட்டுச் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் மாத்திரம் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனால் வைத்தியசாலையில் விடுதிகள் நிறைந்துள்ளன என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் டெங்கு உள்ளிட்ட தொற்று நோய்கள் குறித்து அவதானமாக இருக்க வேண்டியது அவசியம் என்று அவர் வலியுறுத் தியுள்ளார்.

பொதுவாகவே மழை காலங்களில் இத்தகைய தொற்றுக்கள் ஏற்படுவது வழமை. அது, இந்த முறை அதிகமாகவுள்ளது. டெங்குத் தொற்று, வயிற்றுளைவு, வயிற்றோட்டம் உள்ளிட்ட பலவகைத் தொற்றுக்களாலும் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்படுகின்றனர் என்று அவர் தெரிவித்தார்.

இது தவிர டெங்குத் தொற்றால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் நாளாந்தம் 20 பேர் வரையில் விடுதியில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர். டெங்குத் தொற்றால் கடந்த ஒக்ரோபர் மாதம் 49 பேரும், நவம்பர் மாதம் 192 பேரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் மாத்திரம் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (ற-ஜ-4)

# குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறிக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.6
யாழ். குடாநாட்டில் மரக்கறிகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அவற்றின் விலைகள் நாளாந்தம் சடுதியாக அதிகரித்து வருகின்றன. அதிகளவிலான மரக்கறிகள் கிலோ 200 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

சந்தைகளில் குறைந்தளவு மரக்கறிகளே விவசாயிகளால் கொண்டு வரப்படுகின்றன. அவையும் உடனடியாகவே விற்றுத் தீர்ந்து விடுகின்றன.

அண்மையில் பெய்த கடும் மழை வெள்ளத்தாலும் மற்றும் தொடர்ந்தும் மழை பெய்வதாலும் மரக்கறிச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. அதனாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

மரக்கறிச் செய்கையில் விவசாயிகள் தற்போது ஆர்வம் காட்டினாலும் தொடரும் மழையால் செய்கையை ஆரம்பிக்க முடியாத நிலையில் உள்ளனர் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

தற்போதைய மரக்கறித் தட்டுப்பாட்டை அடுத்து, கூடுதலாக தெற்கில் இருந்தே மரக்கறி வகைகள் தினமும் எடுத்து வரப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஜ-17)



வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கம், தமிழ் விருட்சம், கலை, இலக்கிய நண்பர்கள் வட்டம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த ஆறுமுகநாவலர் பெருமான் நினைவு தினம் வவுனியா இலுப்பையடிச் சந்தியில் அமைந்துள்ள ஆறுமுகநாவலர் சிலை அடியில் கடும் மழைக்கு மத்தியில் நடைபெற்றது. ஐ.கதிர்காமசேகரன் ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆறுமுக நாவலருக்கு மாலை அணிவித்தும் ,மலர் தூவியும் வணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து ஆறுமுகநாவலரின் பெருமைகள் தொடர்பாக ஐ.கதிர்காமசேகரன் ஆசிரியர் உரையாற்றினார். தொடர்ந்து வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் முன்னெடுக்கும் "தத்தளிக்கும் தமிழக உறவுகளுக்கு கை கொடுப்போம்" எனும் செயற்திட்டத்தில் இ.கௌதமன் , தமிழ் விருட்சத்தாலும் ஒரு தொகுதி உலர் உணவு பொதிகள் ஊடகவியலாளர் காந்தனிடம் கையளிக்கப்பட்டன. (ற-ஜ)

# ஊஞ்சல் கயிறு இறுகியதில் எட்டு வயதுச் சிறுவன் சாவு

மட்டக்களப்பு, டிசெ.6
ஊஞ்சல் கயிறு கழுத்தை இறுக்கியதால் எட்டு வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அக்கரைப்பற்று, கண்ணகி கிராமத்தில் நடந்துள்ளது.

வீட்டுக்கு அருகில் இருந்த மரம் ஒன்றில் ஊஞ்சல் கட்டி விளையாடியபோது கயிறு சிறுவனின் கழுத்தை இறுக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. சிறுவனின் தாய் அந்தச் சமயம் வீட்டுக்குள் மதிய உணவு தயாரிப்பில் இருந்துள்ளார். உணவு தயாரித்து அதைக் கொடுப்பதற்கு வெளியே வந்து பார்த்தபோது சிறுவன் ஊஞ்சல் கயிற்றில் கழுத்து இறுகிய நிலையில் காணப்பட்டுள்ளான் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிறுவன் உடனடியாக அயலவர்களின் உதவியுடன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளான்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஜ-10)

# சீருடைத் துணிகளைப் பெறலாம்

கரணவாய்,டிசெ.6
வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான சீருடைத் துணிகளை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முதல் குறிப்பிட்ட நிலையங்களில் பெற்றுக் கொள்ளமுடியும் என வலயக் கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார்.

சீருடைத்துணிகள் விநியோகிப்பதற்கு வடமராட்சிப் பிரதேசத்தில் 8 வர்த்தக நிலையங்கள் வலயத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கான சீருடைத் துணிகளுக்கான கூப்பன்கள் பாடசாலைகளில் வைத்து அதிபர்களால் வழங்கங்கப்பட்டுள்ளன. தற்போது வழங்கப்பட்ட கூப்பனுக்குரிய சீருடைத் துணிகளை பெற்றோர்கள் நாளை மறுதினம் முதல் வர்த்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ளமுடியும்.

பருத்தித்துறை நியூ வரதமகள் புடைவையகம், பருத்தித்துறை சரவணாஸ் ரெக்ஸ், நெல்லியடியிலுள்ள ஜெயாஸ் ரெக்ஸ், செல்வமுத்தூஸ் ரெக்ஸ்ரைல்ஸ், யசோ ரெக்ஸ், நெல்லைசில்க்ஸ் மற்றும் கப்பிரெக்ஸ் ஆகிய வர்த்தக நிலையங்களிலும் மருதங்கேணி லக்ஸ்மி புடைவையகத்திலும் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-108)

# இந்திய வியாபாரி கைது

யாழ்ப்பாணம்,டிசெ.6
சட்ட விரோதமான முறையில் உடுபுடைவை வியாபாரத்தில் ஈடுபட்ட இந்திய வியாபாரி ஒருவரை விசேட அதிரடிப்படையினர் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

யாழ்.கொட்டடிப் பகுதியில் உடுபுடைவை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தபோதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து சுற்றுலா நுழைவிசைவு மூலமாக இலங்கைக்கு வருகைதந்த குறித்த வியாபாரி யாழ்ப்பாணத்தில் விநியோகம் செய்வதற்காக ஏழு பைகளில் உடுபுடைவைகளை எடுத்து வந்துள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார். (ற-ஜ-106,ரி5)

# மண்வளம் குன்றலை குறைக்க அணுகுமுறைகளை ஆராய்க

## வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.6
யாழ். குடாநாட்டில் தண்ணீரில் நைதரேற்றின் செறிவு அதிகரித்துள்ளது. அதிகளவான செயற்கை உரம், கிருமிநாசினிகளின் பாவனையுமே இதற்குக் காரணமாகும். எனவே விவசாய நடவடிக்கைகளால் மண்வளம் குன்றலைக் குறைப்பதற்கான அணுகுமுறைகளை ஆராய்வது அவசியமாகும். - இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

உலக மண் தினத்தை முன்னிட்டு வடமாகாண விவசாய அமைச்சினால் "மண் உயிர் வாழ்வதற்கான திடமான தளம்" எனும் கருத்தமர்வு நேற்று யாழ்.கிறீன் கிறாஸ் விடுதியின் சங்கிலியன் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பு, விவசாயம், தட்ப வெப்ப நிலைமாற்றம், வறுமை ஒழித்தல், நிரந்தர அபிவிருத்தி ஆகியனவற்றுக்கு மண்ணானது அவசியமாகும்.

உணவுப் பாதுகாப்பானது இன்று உலகளாவிய ரீதியில் மிக முக்கியமானதொரு விடயமாக மாறியுள்ளது. மண் முகாமைத்துவ வழிமுறைகள் விவசாயத்தில் அதிகளவில் பாவிக்கப்படுகின்றன.

மண்ணின் தரமும் பண்பும் காலம் செல்லச் செல்ல பலகாரணங்களினால் குறைவடைந்து கொண்டே போகின்றன. மண், உணவு உற்பத்திக்கு ஆதாரமாகவுள்ளது - என்று அவர் குறிப்பிட்டார்.

இதற்கான தீர்வாக மண் வளங்களைச் சிதைவுறாது பாதுகாப்பது, அவற்றின் தரத்தை உயர்த்துதல், மண் வளங்களைப் பயன்தரும் நிலையான பாவிப்பால் பழைய நிலைக்குக் கொண்டுவரல் போன்ற பல வழிமுறைகளும் ஆராய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

> “மண்ணின் தரமும் பண்பும் காலம் செல்லச் செல்ல பல காரணங்களினால் குறைவடைந்து கொண்டே போகின்றன. மண் உணவு உற்பத்திக்கு ஆதாரமாகவுள்ளது.”

வடமாகாண சூழலுக்கு ஏற்ற விதத்தில் எவ்வாறு மாற்றங்களை ஏற்படுத்தி உயிர் வாழ்வதற்கு ஏற்ற திடமான தளமாக எமது மண்ணை மாற்றியமைக்கலாம் என்பதே இன்றைய கருத்தமர்வின் குறிக்கோளாக அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். அண்மையில் தண்ணீரில் எண்ணெய் கலந்துள்ளதனை ஆராய்ந்தபோது மிகப் பாரதூரமான பாதிப்பை உண்டு பண்ணக் கூடிய பதார்த்த



மொன்று அளவுக்கதிகமாக நீரில் கலந்திருப்பதை அவதானிக்க முடிந்தது.

தீவிர செயற்கை உரப் பாவனை, கிருமி நாசினிகளின் பாவனை ஆகியன மண்ணையும் நீரையும் பாதித்து வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

ஆகவே விவசாய நடவடிக்கைகளால் மண்வளம் குன்றலைக் குறைப்பதற்கான அணுகுமுறைகளை ஆராய்வது மிக முக்கியமானது எனவும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் வடமாகான விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண எதிர்க்கட்சித்தலைவர் தவராசா, அமைச்சர் சயந்தன், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், பிரதி விவசாயப் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட உணவு விவசாய நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர். பல்கலைக் கழக விரிவுரை யாளர்கள், கிராம மட்ட விவசாயிகளெனப் பலரும் கலந்துகொண்டனர். (ற-ஜ-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீருடை வவுச்சர் குறைபாடு அடுத்த வருடத்தில் நிவர்த்தி

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

பாடசாலை மணவர்களின் இலவச சீருடை விநியோகத்துக்கான வவுச்சர் முறைமையில் உள்ள சில குறைபாடுகள் அடுத்த வருடத்தில் நிவர்த்தி செய்யப்படும் எனக் குறிப்பிட்ட கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருக்கும் வரை வவுச்சர் முறையே நடைமுறையிலிருக்கும் என் றும் உறுதியாகத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற கல்வி அமைச்சு, உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் கல்விக்கு அதிக நிதியை ஒதுக்கியுள்ளது. பாடசாலை மாணவர்களின் சீருடை விநியோகத்துக்காக வவுச்சர் முறைமையை அறிமுகம் செய்துள்ளோம். இதற்கமைய 450 ரூபா முதல் ஆயிரம் ரூபா வரை வழங்கப்படுகின்றது. சாதாரண தர, உயர் தர மாணவர்களுக்காக 650,850,1000 ரூபா வரை வழங்கப்படுகின்றது.

இதற்கான வவுச்சர்கள் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி அனைத்துப் பாடசாலைகளுக்கும் விநியோகிக்குமாறு வலயக் கல்வித் திணைக்களங்களுக்கு உத்தரவிட்டோம். இதற்கமைய வவுச்சர் பகிர்ந்தளிப்பு இடம்பெற்றது.

டிசெம்பர் 4ஆம் திகதி பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டது. இந்த விடுமுறை தினத்தில் மாணவர்களின் முன்னேற்ற அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காகப் பெற்றோர்கள் பாடசாலைக்கு வர வேண்டும். இதற்கமையத்தான் முதலாம் திகதி விநியோகிக்கப்பட்டு 2,3,4ஆம் திகதி வரை உள்ள காலத்தில் கையொப்ப மிட்டு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாணவர்களின் முன்னேற்ற அறிக்கையைப் பெற பெற்றோர்கள் பாடசா லைக்கு வரவேண்டியுள்ளதால், அவர்களுக்கு ஒரு நாள் வீண்விரயம் என்று குறிப்பிட முடியாது.

இந்த விடயத்தில் ஆரம் பத்தில் குறைபாடு இருக்கும். இதனை நிவர்த்திசெய்வதற்காக அடுத்த வருடம் மூன்று மாதங்க ளுக்கு முன்னரேயே வவுச்சர்களை விநியோகிக்க நடவடிக்கை எடுப்போம். கையொப்பம் இடுவதற்கு 3 மாதம் காலம் வழங்கு வோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருக் கும் வரை இந்த வவுச்சர் முறைமை நடை முறையில் இருக்கும்.

ஜனவரி, பெப்ரவரி மாதத்தில் ஒரு தினத்தில் 43 இலட்சம் மாணவர்களின் சீருடைகளைப் பரிசோதிக்க நடவடிக்கை எடுக்கப்படும்–என்றார். (த-சி)

விஞ்ஞான வகுப்புக்கள்
Group Classes - Science
By.Mr.Ragumar
தரம் - 6-11 (தமிழ்/ஆங்கில மொழி மூலம்)
ஆரம்பம் - 07.12.2015 மாலை - 5.00, 077 605 9650

வீடு உடன் விற்பனைக்கு



யாழ்.நகரில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு 23 பேர்ச் காணியுடன் விற்பனைக்குண்டு. முழுவதும் Tiles பதிக்கப்பட்டது. 4 rooms (with attached bathroom), 2 halls, kitchen, garden.
யாழ்.போதனா வைத்தியசாலை, பஸ்நிலையம், யாழ்.புகையிரத நிலையம் என்பவற்றுக்கு அருகில்.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு-076 675 7548, 077 725 1850 (66743) (11,15)

NEW SCIENCE WORLD
Navalar Road- Brown Road Junction, Jaffna.
CHEMISTRY
A/L 2016 Day
இரசாயனக் கணிப்புக்கள்
திங்கள்- வெள்ளி 11.30 - 1.30pm / ஆரம்பம் 07.12.2015
By: Mr. T. Sivakumar B.Sc, PGDE

சதாபொன்ஸ் கல்வி நிலையம்
தரம் 3 - 11 வரை புதிய வகுப்புக்கள்
09 - 12 -2015 புதன்கிழமை
3.00 மணிக்கு ஆரம்பம்
அனுமதி இன்று முதல்
புலமைப்பரிசில் விசேட வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
021 226 3206, 077 309 5176 இயக்குனர்.

Mobile Phone Repairing
CCTV Technician
3 days Training Course
Next Batch 26 Dec 2015
Sat,Sun & Mon 8-5 PM
விரிவுரைகள் Colombo-AICT
Microsoft and Ministry of Education Awarded Institute as Innovative Teaching
கல்வியங்காட்டு சந்தியில் MCAI CAMPUS
The Island Wide leader in ICT
பதிவுகள் மட்டுபடுத்தப்பட்டுள்ளது
SMS பதிவுகளுக்கு : <Mobile / CCTV>, <Your Name>Send SMS 775520940
10% Discount All Credit Card Payment

Vocational Training Authority
giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

விருந்தோம்பல் முகாமைத்துவ பயிற்சி நெறிக்கான பயிலுநர்களை தெரிவு செய்யும் நேர்முக தேர்வு

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை (VTA), Deutsche Gesellschaft Fuer Internationale Zusammenarbeit (GIZ)- இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் தொழிற்பயிற்சி கருத்திட்டம் (VTN) இன் ஆதரவுடன் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் காரைநகர் பயிற்சி நிலையத்தில் நடத்தும் விருந்தோம்பல் முகாமைத்துவப் பயிற்சிநெறிக்கான பயிலுநர்களை தெரிவு செய்யும் நேர்முகத் தேர்வு எதிர்வரும் 08.12.2015(செவ்வாய்க்கிழமை) அன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தின் 2 ஆம் மாடியில் அமைந்துள்ள VTA மாவட்ட காரியாலயத்தில் காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. இப் பயிற்சி நெறியை தொடரவிரும்பும் இளைஞர் யுவதிகள் தங்களது சுயவிபர கோவை மற்றும் [illegible] சமுகமளிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
(66732) (14,15)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தெய்வநாயகி தம்பு



கொடிகாமம் பெரிய நாவலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வநாயகி தம்பு நேற்று (05.12.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளை தம்பு அவர்களின் அன்பு மனைவியும் தயாளினி (சமுர்த்தி வங்கிச் சங்கம் - கொடிகாமம்), மகீசன் (லண்டன்), றஜனி (லண்டன்), அசோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவரஞ்சன் (தபால் அலுவலகம் - கோப்பாய்), சிவசேந்தா (லண்டன்), லோஜினி (லண்டன்), மீரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் தணிகாசலம் (லண்டன்), மகேஸ்வரி, யோகேஸ்வரி, லோகநாதன் (ஜேர்மனி) காலஞ்சென்ற சற்குணநாயகம் மற்றும் மங்களேஸ்வரி, மங்கயற்கரசி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற நடராஜா மற்றும் கணேசலிங்கம் காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் சரோஜினிதேவி ஆகியோரின் மைத்துனியும் டினெக்ஷன், டிலக்ஷனா, மதுரா (லண்டன்), அபிராம் (லண்டன்), அட்ஷயா (லண்டன்), அனுஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியுமா வார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (07.12.2015) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

(66753) பெரிய நாவலடி, கொடிகாமம். T.P : 077 6067580

### திருமதி சிவயோகேஸ்வரி தெய்வேந்திரம்



இளவாலையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகேஸ்வரி தெய்வேந்திரம் நேற்று (05.12. 2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கனகசபை-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், இளையதம்பி-சரஸ்வதி தம்பதியரின் மருமகளும், தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும், சிவரஞ்சன், சசிகுமரன், காலஞ்சென்ற தீபன் மற்றும் சுஜந்தினி, அகிலன் ஆகியோரின் பாசமிகு தாயும், சுஜிதா, சிந்துஜா, மயூரதன் ஆகியோரின் மாமியும், விந்துயா, அபினயா, கலைப்பிரியன், கவின்யா, அபிசனா, மயூரன், மயூசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2015) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நகுலேஸ்வர வீதி, அளவெட்டி வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(66754) (10.17)

### திருமதி சௌந்தரம் நல்லதம்பி



காரைநகர் புது றோட், மல்லிகையைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சௌந்தரம் நல்லதம்பி நேற்று (05.12.2015) கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் குமாரசாமி, காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் குமாரதேவி, குலேந்திரன், யோகீஸ்வரன் காலஞ்சென்ற கிருபானந்தன் மற்றும் வசந்தினி (சிவா), நேசவதனா ஆகியோரின் அன்பு தாயாரா வர்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (06.12.2015) பி.ப 3.30 மணிக்கு வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று நவாலி வழுக்கையாறு பொது மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்டர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
077 4011 273

(66752)

### சின்னம்மா (சின்னமணி) சத்துருசிங்கம்



ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னம்மா (சின்னமணி) சத்துருசிங்கம் நேற்று (05.12.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்டர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. T.P :077985 2006 (66651)

தகவல் :
ச.தர்மகுலசிங்கம் (பெரியராசா)
ச.தனபாலசிங்கம் (பொன்ராசா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதான இளைஞரைப் பொலிஸார் தாக்கியதாக உறவினர் குற்றச்சாட்டு

## சிகிச்சைக்காக அவர் வைத்தியசாலையில்

முல்லைத்தீவு, டிசெ.6

முறிகண்டி பொன்நகர் பகுதியில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று அவரது உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இதனால் படுகாயமடைந்தவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதையடுத்து வைத்தியசாலையை அவரது உறவினர்கள் முற்றுகையிட்டனர்.

ஆயினும் தாம் அவ்வாறு அவரைத் தாக்கவில்லை எனப் பொலிஸார் மறுத்துள்ளனர்.

முல்லைத்தீவு, பொன்நகர் கிராமத்தைச் சேர்ந்த 33 வயது இளைஞர் ஒருவர் நேற்று முன் தினம் இரவு சந்தேகத்துக்கிடமாக நடமாடினார் எனக் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் பொலிஸார் தாக்கியதால் காயம் ஏற்பட்டதாகக் கூறிக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நேற்று அதிகாலை 3 மணியளவில் சேர்க்கப்பட்டார்.

தலை மற்றும் கால்களில் காயமடைந்த நிலையில் பொலிஸாரால் வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டமை தொடர்பில் உறவுகளுக்குத் தகவல் கிடைத்தது. இதனைடுத்து அதிகாலை 5 மணியளவில் பாதிக்கப்பட்டவரின் உறவினர்கள் வைத்தியசாலையை முற்றுகையிட்டனர்.

இவ்வாறு அதிகாலையில் முற்றுகையிட்ட குழுவினர் பெரும் கூச்சலிட்டதுடன் வைத்தியசாலைக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரையும் தாக்க மு[illegible]பட்டனர். இதனால் பதற்றமடைந்த வைத்தியசாலைப் பணியாளர்களும் நோயாளர்களும் பாதுகாப்புத் தேடும் நிலை ஏற்பட்டது. சிறிது நேரத்தில் மேலதிக பொலிஸார் வைத்தியசாலைக்கு வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இதேவேளை, குறித்த நபர்மீது பொலிஸார் தாக்குதல் நடத்தவில்லை எனவும், வீதியால் சென்ற வேறு நபர்கள் தாக்கியவரை பொலிஸார் மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்ததாகவும் பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது. (த-101)

## மகளைத் துஷ்பிரயோகம் செய்தவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.6

மகளைப் பாலியல் துஷ்பிரயோகம் செ[illegible]தார் என்னும் முறைப்பாட்டின் அடிப்படையில் தேடப்பட்டு வந்த நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை புங்குடுதீவைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமி தந்தையால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டார் என சிறுமியின் தாயாரால் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதியப்பட்டது. இதனைத் தொடர்ந்து பொலிஸாரால் தேடப்பட்டு வந்த குறித்த நபர் புங்குடுதீவை அண்டிய அடர்ந்த காட்டுப் பகுதியில் தூக்கில் தொங்கியநிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். புங்குடுதீவு மடத்துவெளிப் பகுதியைச் சேர்ந்த எஸ்.சிவரஞ்சன் (வயது-33) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது:- கடந்த மாதம் 28 ஆம் திகதி சம்பவ தினத்தன்று ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக மனைவி தன்னுடைய மூன்று பிள்ளைகளையும் தந்தையுடன் வீட்டில் விட்டுவிட்டு உறவினர் வீட்டில் இரவு தங்கியுள்ளார். இதன்போது தான் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாகச் சிறுமி தன் தாயிடம் கூறியுள்ளார். இதனையடுத்துத் தாய் 119 என்ற அவசர இலக்கத்துக்கு அழைப்பை மேற்கொண்டு முறைப்பாடு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து தலைமறைவான நபரை ஊர்காவற்றுறை பொலிஸார் தேடி வந்த நிலையிலேயே அவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். புங்குடுதீவு காட்டுப் பகுதியில் சடலம் ஒன்று காணப்படுவதாகப் பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(த-106-ரி5)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை - 2015



2015 ஆம் ஆண்டு
தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
150 புள்ளிகளைப் பெற்று எங்களுக்கு பெருமை சேர்த்த
பா.துஷ்யந்தக்குருக்கள் சுவர்ணா
தம்பதியினரின் புதல்வனும் எமது பேரனும் யாழ் மாதகல் விக்கினேஸ்வரா பாடசாலை மாணவனுமாகிய
செல்வன் து.வர்ஷாயுதன் சர்மா
அவரை சகல கல்விகளையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என பெரு மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.
Best Wishes
வாழ்த்துவோர்:
தாத்தா, அம்மம்மா
சிவஸ்ரீ.இ.மகாலிங்கக்குருக்கள்
மதிவதனி

சிறந்த கண்டுபிடிப்பாளரை வாழ்த்துகின்றோம்



தேசிய தொழில் முயற்சி அதிகார சபை மற்றும் யாழ்ப்பாணம் தொழில்துறை வர்த்தக சங்கமும் இணைந்து (14.12.2015) Green Grass Hotel இல் நடத்திய Northern Enterpreneurs Awards-2014 விருது வழங்கல் நிகழ்ச்சியில் Best Innovative சிறந்த கண்டுபிடிப்பாளர் விருதினைப் பெற்றுக் கொண்ட
திரு. இராசதுரை ஆனந்தராசா
(உரிமையாளர் Micro Auto Works)
அவர்களை மேலும் இதுபோன்ற பல விருதுகளைப் பெற்று புகழின் உச்சிக்கு செல்ல மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.
24/3,
சிவகுருநாதர் வீதி,
யாழ்ப்பாணம்.
Best Wishes
நகுலேஸ்வரன் குடும்பம்
ஜனகன்-கோபிகா (கனடா)
வர்மிஷா

இதோ ஓர் அரிய வாய்ப்பு!
வீட்டில் இருந்தவாறே பகுதிநேரத்தில் மேலதிக வருமானம் உழைக்க இதோ ஓர் அரிய சந்தர்ப்பம். மற்றும் அழகுக்கலை பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன.
மேலதிக தகவல்களுக்கு-077 748 1592 (F/20574)

செவிப்புலன் கருவிகளுக்கான விலைக்கழிவு Offer
up to 40% Discount
on selected range of Models
Offer Valid until 31st December 2015
FREE HEARING TEST
On purchases of any HEARING AID !
MEDCON
HEARING CARE CENTER
Colombo : 2813779, 0777539321
Kandy : 081 4951797, 0773607606
Matara : 071 2287087
Jaffna : 077 0124415
218, 1/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(66610)(10.15.17)

அன்பொளி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி
புதிய கல்வியாண்டு - 2016
தரம் 2 முதல் O/L வரை
ஆரம்பம் - 06.12.2015
ஞாயிற்றுக்கிழமை காலை - 9.00 மணி
விசேடமாக திரு.வே.அன்பழகன் அவர்களின் தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
இயக்குநர்.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2708 திகதி: 2015-12-05
23 32 34 47 R 51
ரூ. 12,953,025/-

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 431
சீட்டிழுப்பு திகதி 2015.12.05
வெற்றி இலக்கங்கள்
07 13 19 71 F
ரூ. 44,821,320/=

விலை மனுக் கோரல்
வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோயில் கூரையில் இருந்து கழட்டி எடுக்கப்பட்ட திராந்திகள், பனைமரங்கள், ஓடுகள், சட்டறிங் வேலைக்கு பயன்படுத்திய முட்டுத் தடிகள், றீப்பைகள், சட்டறிங் போட் என்பன விற்பனை செய்யப்படவுள்ளன. இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்புவோர். 11.12.2015 இற்கு முன்னர் பார்வையிட்டு விலைமனுவை பின்வரும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ சமர்ப்பிக்கவும். 12.12.2015 அன்று விலைமனு யாவும் திறக்கப்பட்டு கொள்வனவாளர் தீர்மானிக்கப்படுவர். தெரிவு செய்யப்படுபவர் பணத்தைச் செலுத்தி பொருள்களை உடன் எடுத்துச் செல்லல் வேண்டும்.
முத்துமாரி அம்மன் கோயில்,
வேலணை கிழக்கு.
(66636) (10.17)
செயலாளர்,
பரிபாலன சபை
077 9050274

வேலையாள்கள் தேவை
சைவ உணவகம் ஒன்றுக்கும், திருப்பதி வெங்கடேசன் என்டபிறைசஸ் நிறுவனத்துக்கும் வேலையாள்கள் தேவை!
மூன்று நேர உணவு, தங்குமிடவசதி, மாதாந்த சம்பளம், வைத்திய செலவு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டு சம்பளம் மாதம் வழங்கப்படும்.
1) உணவு பரிமாறுபவர்கள்
2) சமையலறை வேலை தெரிந்தவர்கள்
3) மரக்கறி வெட்டுபவர்கள்
4) சுத்திகரிப்பாளர்கள்
5) பார்சல் பொதி செய்பவர்கள்
6) ஏனைய உதவி வேலைகளுக்கும்
தொடர்பு:-
(66643) (10.17)
021 222 2373, 0777 917753

வேலைவாய்ப்புக்கள்
வேலை தேடிக்களைத்து சலித்துப் போய் நிற்கும் எம் இளைய சமுதாயத்துக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
* சகல விதமான திறமைகள் இருந்தும் உங்களுக்கான வேலை கிடைக்கவில்லையா?
* உங்கள் எதிர்காலத்தை இன்றே சிறப்பாக திட்டமிட விரும்புகின்றீர்களா?
உங்கள் வாழ்வினை உயர்த்திவிடும் ஏணிப்படிகளாக யாழ். நகரில் முதற்தர வேலைவாய்ப்பு மற்றும் ஆலோசனை நிலையம்.
WINSTAR JOB BANK
உங்கள் வேலை தொடர்பான கனவு நனவாக இன்றே உங்கள் சுயவிவரக் கோவையுடன் தொடர்புகொள்ளுங்கள்.
WINSTAR JOB BANK
106, தபாற் பெட்டிச் சந்தி, திருநெல்வேலி. (66628) (10.17)

அக்ஷயா அழகு கலை நிலையம்
* அழகுக்கலைப் பயிற்சி, இந்திய முறையிலான சாறி வுளவுஸ் கட்டிங் (6), பஞ்சாபி (4), அடிப்படையில் இருந்து தையல் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. * கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நாட்பட்ட பருக்கள், கடும் கறை, மஞ்சள் வெள்ளை, கறுப்பு புள்ளிகள் அகற்றும் கிறீம். * கழுத்துக் கடும் கறுப்பு, கை, கால் கருமை நீக்கும் கிறீம் * கண் கருவளையம் உதட்டுக் கருமை நீக்கும் கிறீம். * உடல் எடை கூட்டும் குறைக்கும் குளிசை, பால்மா, கிறீம் * ஒட்டிய கன்னங்களை குண்டு கன்னங்களாக மாற்றும் குளிசை * இடுப்பு, கால், தொடை பாகங்கள் எடை குறைக்கும் கிறீம். * முகத்தில் வளரும் தேவையாற்ற முடி அகற்றும் கிறீம் * மார்பழகு கூட்டும், குறைக்கும் கிறீம், குளிசை, சோப் * தலைமுடி வளரச் செய்யும் ஆயுள்வேத எண்ணை, குளிசை, மேற்குறிப்பிடப்பட்டவை எம்மிடம் விற்பனைக்கு உண்டு. * முகத்தில் உள்ள கருமை, கழுத்து கருப்பு ஒரே தடவையில் நீக்கும் பேசியல், முகம் மினுமினுப்பாக்கும் பேசியல், ஐப்றோ சேப், பேஸ் திரெட்டிங் செய்து கொள்ளலாம். அயனிங் பேர்மிங் செய்து கொள்ளலாம். நிச்கேக் (ஒன்று 55/=) ஐசிங்கேக் ஓடர் ஏற்றுக் கொள்ளப்படும்.
அக்ஷயா
077 21 06 155
221, நாவலர் வீதி, (பிறவுண் றோட் சந்தி, அருள் சிவநேசன் அருகில் - யாழ்ப்பாணம்.)
(66645) (10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முதல்தர உயர் கல்வி நிறுவனம் இப்பொழுது யாழ் மண்ணில்..

**ICBT CAMPUS**





புதிய பிரிவுகள் ஆரம்பம்
**December - 2015**

- HND in Computing
- HND in Business Management
- HND in Civil Engineering
- HND in Quantity Surveying

**MBA** March Intake

**DIPLOMA**
**ENGLISH / IT**

**ICBT CAMPUS**

No : 580,
Hospital Road,
Jaffna.
021 4 777 888

076 928 9784
076 928 9810
piroshaan@icbtcampus.edu.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வகுப்புக்கள்

Personal Classes - For Science 9 - 11
Medium - English - By Bsc (Sp)MSc (Pera)
**Contact - 077 597 2153**

### தையல் பயிற்சி

இலகுவான தையல் முறை சிறந்த விளக்கத்துடன் வெட்டி தைத்து பயிற்றப்படும். சாறிபிளவுஸ், சல்வார் வயது வித்தியாசமின்றி பயிற்றப்படும்.
443, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
19/12 ஆரம்பம் 077 9297474 (66728)(12.15)

### வேலை ஆள் தேவை

அபிராமி ரெக்ஸ்ரைலுக்கு அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு: 077 661 5973
யாழ்ப்பாணம். (66728)(12.15)

### வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளிற்கான வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படவுள்ளதால் தகுதியானவர்கள் தொடர்பு கொள்ளவும்.
Technical officer
Site Supervisor
T.P: 077 497 2756 (62216)(12.15)

### வீடு வளவு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் K.K.S வீதிக்கு மிக மிக அருகில் 4 அறைகள், 2 ஹோல், ஒரு குளியலறை, ஒரு சமையலறை, கராஜ், கிணறுடன் கூடிய நல்ல வீடு வளவு உடனடி விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் 077 905 0274 என்ற தொலைபேசி இலக்கத்துடன் காலை 6 மணி முதல் காலை 9 மணி வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்.
(தரகர்கள் தேவையில்லை) (c/20487)(11,15,17)

### காணி விற்பனைக்கு

மல்லாகம் கிராமம் நரியிட்டான் பகுதியில் கோழிப்பண்ணைக்கு எதிர்ப்புறமாகவுள்ள 5 பரப்புக்காணி - வீடு, நீர் விநியோக வசதியுடன் வான் பயிர், வளர் பயிர்களுடன் விற்பனைக்கு உண்டு.
077 653 7232 (66618)(11,15)

### கடை வாடகைக்கு உண்டு

கொடிகாமம் புகையிரத நிலையத்துக்கு அருகில் NSB வங்கி கட்டடத்துடன் இணைந்த மூன்று கடைகள் (16 அடி அகலம் 43 அடி நீளம்) சகல வசதிகளும் கொண்ட கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு :
077 3944912 , 077 3965018 (66669)(12.15)

### வேலைவாய்ப்பு

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள எமது FR கம்பனியின் கிளைகளுக்கு வேலைக்காக வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
(Jaffna, Kilinochchi, Trinco, Kandy, Nuvaralia, Colombo)
தகைமை: O/L or A/L தகைமை உள்ளவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு : 076 8433804, 077 2083140, 077 2803773, 077 880 9695

### வாடகைக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ் தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்திற்கு முன்பாக இல. 8 புகையிரத வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள் இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு உள்ளன.
தொடர்பு :
011 2504281 ,071 299 1256

Study & Work in
Singapore
Hotel Management
Learn & Earn up to Rs. 70,000/- Month
STUDY IN UK / CANADA AUSTRALIA
ONLINE VISA FORM FILLINGS
USA, Canada, UK, Australia, Swiss, France, Italy, German, New Zealand
போன்ற நாடுகளுக்கு Business / Family & Friends Visit / Tourist விசா Form சிறந்த முறையில் செய்து தரப்படும்.
Air Ticketing, Translation, Travel Insurance
GRAPHIC DESIGNING COURSE FEE Rs. 4,000/-
flex Institute
4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777 761 346
Tel : 2364157 Fax : 2501766
www.flexinstitute.lk

### காணி விற்பனைக்கு

அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள நிலப்பரப்பு 12 குளி 15விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :-
077 1671174, 0777 286061 (66648)

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ் நகருக்கு அண்மையில் அல்லது யாழ். நகரிலிருந்து 10 Km இற்குள் 3 பேர் அடங்கிய ஆசிரியர் குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.
(62216)(12.15)
தொடர்பு : 077 871 2428

### தேவை

கொலன்ட், இத்தாலி ஆகிய மொழிகளுக்கான மிகவும் திறமை வாய்ந்த ஆசிரியர் தேவை.
தொடர்பு : 077 9707322 (66728)(12.15)

### பணிப்பெண்கள் தேவை

கொழும்பில் இயங்கிவரும் எமது நிறுவனத்துக்கு குழந்தை பராமரிப்பாளர்கள், நோயாளர் பராமரிப்பாளர்கள், வீட்டுப் பணிப்பெண்கள், தங்கி வேலை செய்யும் பணிப்பெண்கள் தேவை.
(f/20496)(11,15) 077 114 1112

### வீடு-கடை வாடகைக்கு

கீழ்+மேல் அமைந்த மாடி வீட்டுடன் (வாகனத் தரிப்பிட வசதி, Attach Bathroom) பாதுகாப்பான பரந்த 25x25 பிளாட் கடையும் (தண்ணீர் pipe line வசதி, இல.146, இல.144 சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (K.K.S வீதிக்கு மிக அருகில்) இரண்டும் சேர்த்து வாடகைக்குக் கொடுக்கப்படும்.
(f/20496)(11,15) 011 236 3113, 077 536 1370, 077 152 6874

### சேவை

உங்களது மூத்த உறுப்பினர்களை (முதியோர்) தெஹிவளையில் மிக அமைதியான, பாதுகாப்பான சூழலில் 24X 7 நேர தாதியர் மருத்துவர் சேவையுடன் Professional இன் கண்காணிப்பின் கீழ் பராமரிக்க தொடர்பு கொள்ளவும். 076 8970707 (66728)

### தேவை

மூன்று பேர் மட்டும் வசிக்கும் எமது குடும்பத்திற்கு தங்கி வேலை செய்வதற்கு 20- 50 வயதிற்கிடைப்பட்ட பணிப்பெண் ஒருவரை எதிர்பார்க்கின்றோம். (66728)(12.15)
தொடர்பு: 077 114 1112

### HOME VISIT CLASSES ENG/ TAMIL MEDIUM

ACCOUNTING- O/L, A/L
ENGLISH LANG- ANY GRADE
GEO,HIS, CITIZEN- O/L
077331 6402 (66603)(12.15)

### வேலையாள் தேவை

இரவு வேளையில் மட்டும் பெண்ணொருவருடன் உதவியாகத் தங்குவதற்கு நல்லூருக்கு அண்மித்த பகுதியில் ஒரு பெண் வேலையாள் தேவை.
(66741)(12.15) தொடர்பு :077 761 2247

### தவறிவிட்டது

NPGQ 2171இலக்க மோட்டார் சைக்கிளின் ஆவணங்கள் கடந்த 01.12.2015 ஆம் திகதி அச்சுவேலிக்கும் புத்தூருக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு : 077 292 6773 (66609)(12.15)

### வீடு வளவு விற்பனைக்கு

இல. 333, ஆடியபாதம் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தில் பரப்பு 3 குளி 7.55 விஸ்தீரணம் கொண்ட வீடுவளவு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 076 702 3565 (66728)(12.15)

### காணி விற்பனைக்கு

கலட்டி பிள்ளையார் வடக்கு வீதி முன் ஒழுங்கையில் கிணற்றுப் பங்குடன் 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (66621)(14,15,17)
தொடர்பு: 021 721 0121, 077 117 5544

### வீடு வாடகைக்கு

வவுனியா தோணிக்கல்லில் இணைந்த குளியலறையுடன்இரண்டு அறைகள் கொண்ட (02அனெக்ஸ்) 3000/= ரூபாவிற்கு வாடகைக்குண்டு. (66621)(14,15,17)
தொடர்பு: 024 222 2289, 075 038 1389

### காணி தேவை

மல்லாகத்திற்கும் மாவிட்டபுரம் கோயிலுக்கும் இடையில் K.K.S றோட்டில் வீடு கட்ட 3 பரப்புக் காணி தேவை. (66750)(12.15)
தொடர்பு : 077 217 9443

### காணி விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு பருத்தித்துறை வீதியில், சத்தியசாயி நிலையத்துக்கு அருகில், வீதியிலிருந்து [illegible] அடி பாதையுடனான 5 பரப்புக் காணியும், கோப்பாய் பெற்றோல் நிலையத்துக்கு அருகில், பருத்தித்துறை வீதியில் 25 பரப்பு வெற்றுக் காணியும், இருபாலை V. H Lane இல் 3 பக்கங்களும் ஒழுங்கை [illegible] காணியும் [illegible] உண்டு.
தொடர்புக்கு: 0776 113 977

# சு.க அமைச்சர்களின் ஒதுக்கீட்டுக்கு ஆதரவளிப்பதற்குச் சிலர் தீர்மானம்

கொழும்பு, டிசெ.6

2016வரவு-செலவுத்திட்டத்தில்அமைச்சுக்களுக்கான குழுநிலை விவாதத்தின்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களது அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகளுக்கான வாக்கெடுப்பின்போது, எதிர்ப்புத் தெரிவிக்காது ஆதரவு வழங்கக் கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சு.க. உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்க்கட்சிசு.க.உறுப்பினர்களது இந்தத்தீர்மானத்துக்கு கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள ஏனைய உறுப்பினர்களும் ஆதரவு வழங்கியுள்ளனர் என்று அந்தக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சி சார்ந்த அமைச்சர்களது அமைச்சுக்கான குழு நிலை விவாதத்தின்போது கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கவும், நிதி ஒதுக்கீடு தொடர்பான வாக்கெடுப்பின் போது எதிராக வாக்களிக்கவும் கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

வரவு-செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்புக்கான வாக்கெடுப்பின் போது எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்துள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சிஉறுப்பினர்கள் உள்ளடங்கிய கூட்டுஎதிர்க்கட்சி, ஜே.வி.பி. என்பன எதிராக வாக்களித்திருந்தன.

அதேவேளை, வரவு-செலவுத்திட்ட மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் போது கூட்டு எதிர்க்கட்சியினர் எவ்வாறு வாக்களிப்பது என்பது தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்படவில்லைஎன்றும் வாக்களிக்கா[illegible] இருக்கவேண்டும் என உறுப்பினர்கள் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர் எனவும் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் நேற்று தெரிவித்தார்.

அதேவேளை, பாதுகாப்பு அமைச்சு மீதான நிதி ஒதுக்கீட்டுக்கான வாக்கெடுப்பிலும் இந்த நிலைப்பாடே காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

### கண்ணீர் அஞ்சலி

**நாகலிங்கம் செல்வநாயகம்**



மலர்வு 1937-07-28 உதிர்வு 2015-12-05

எமது பாடசாலையின் கணித ஆசிரியர் **திரு. செ.முரளீதரன்** அவர்களின் அன்புத் தந்தை நாகலிங்கம் செல்வநாயகம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!*

ஆசிரியர் கழகம் : யா/நீர்வேலி றோ.க.த.க பாடசாலை

### இதய அஞ்சலி

**திருமதி கண்ணகி தெய்வேந்திரம்**



எமது பாடசாலை ஆசிரியை செல்வி தெ.தமிழினி அவர்களின் தாயார் திருமதி கண்ணகி தெய்வேந்திரம் அவர்கள் 26.11.2015 அன்று இறைபதம் எய்தியமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை
ஸ்ரேசன் வீதி, கோண்டாவில். (66632)

ஆசிரிய கழகத்தினர்.

### கண்ணீர் அஞ்சலி



எமது அன்பு நண்பன்
பா.ரவீந்திரதேவா
அவர்களின் அன்புத் தாயார்
**சுகராணி பாலசுப்பிரமணியம்**
அவரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னையின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
நண்பர்கள்(2000Batch )
புனித பத்திரிசியார் கல்லூரி.

### கண்ணீர் அஞ்சலி

**நாகலிங்கம் செல்வநாயகம்**



அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மீளாத்துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**காவேரி சில்க்** உரிமையாளரும், ஊழியர்களும்.
இல.48, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (66647)

### விற்பனைக்கு

12" தச்சுப்பட்டறையும், ஆட்டோவும் விற்பனைக்கு உண்டு.
(66649) தொடர்புகளுக்கு :- 077 248 7124

### Sky Computers (Pvt) Ltd

விடுமுறைகால கணினி வகுப்புக்கள்
ஆரம்பம் - 08-12-2015
Ms office 2013, Internet & E-mail, Web Design, Hardware, DTP, Computer Type Setting, Graphic Design, Kids Programme.
TP:021-222-1417 89,கண்டி றோட், யாழ்ப்பாணம்.

### தவறிவிட்டது

தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் உட்பட ஒரு தொகைப் பணத்துடன் [illegible] ஒன்று பாஷையூர் சந்தைப்பகுதியில தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு:- 0779004117, 0772009634

### நாய்க் குட்டி விற்பனைக்கு

40 நாள் நிரம்பிய நல்லின Doberman நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 313 5795, 021 221 7412

### வாடகைக்கு

தாதிய பயிற்சி மாணவிகள்/படிக்கும் பெண்களுக்கு யாழ். நகருக்கு அருகில் அறைகள் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:- 077 2372543

### வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் கடை ஒன்றிற்கு ஆண்/பெண் வேலையாள்கள் தேவை.
(66649) தொடர்புக்கு :- 077 500 6769

### வேலை ஆள் தேவை

அலுவலகம் ஒன்றில் பணிபுரிய பெண் லிகிதர் கணினி அறிவுடைய பெண் பணியாளர் தேவை.
தொடர்பு: 077 516 4928
021 221 9822 (66728)(12.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மீதான தாக்குதல் மனித உரிமை மீறலேதான்

## ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு, டிசெ.6

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (எச்.என்.டி.ஏ) மாணவர்களின் மனித உரிமை, பொலிஸாரினால் மீறப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

உயர்தேசியகணக்கியல்டிப்ளோமா மாணவர்கள் அண்மையில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து உயர்கல்வி அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டபோது, ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்த மாணவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தினர். இது தொடர்பாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து மாணவர்கள் மீது பொலிஸார் நடத்திய தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா மாணவர்களின் மனித உரிமை, பொலிஸாரினால் மீறப்பட்டுள்ளது. அத்துடன், தாக்குதலின் போது படுகாயமடைந்த மாணவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

இதன்பிரகாரம் குறித்த தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்த மாணவிக்கு 25 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்கப்படுவதுடன் ஏனைய 8 மாணவர்களுக்கும் தலா 15 ஆயிரம் ரூபாவும் இழப்பீடாக வழங்குவதற்குப் பரிந்துரைக்கின்றோம்.

மேலும், தாக்குதலுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ-5-4)

## வீணாகியுள்ளன எதிர்பார்ப்புக்கள்

### பேராசிரியர் சங்கம் கூறுகிறது

கொழும்பு, டிசெ 6

8 வருடத்துக்கு மேலாகச் சேவையாற்றிய தமது எதிர்பார்ப்புகள் அனைத்தும் ஏமாற்றமளித்துள்ளதாகப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் சங்கத்தின் செயலாளர் விஜேரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

8 வருடம் தொடர்ந்து சேவையாற்றிய பேராசிரியர்களுக்கு தீர்வை வரிச் சலுகையின் கீழ் வாகனங்கள் பெற்றுக்கொடுக்கப்படும்எனக்கூறப்பட்டபோதும் அதனை அரசு நிறைவேற்றவில்லை - என்றார். (த-4)

## பெண்கள், சிறுவர் துஷ்பிரயோகம்; தினமும் யாழில் 3 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், டிசெ.6

பெண்கள், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் தினமும் 3 அல்லது 4 முறைப்பாடுகள் மாவட்டச் செயலகத்துக்கு வருவதாக யாழ். மாவட்ட செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் பெண்கள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் பலர் நேரில் சென்று முறையிட தயக்கம், அச்சம் அடைகின்றனர். இதனால் இவை வெளிவராமல் போவதால் மாவட்டச் செயலகத்தின் விசேட இலக்கத்துக்கும் முறையிடக் கடந்த மாதம் ஏற்பாடுகள் செய்திருந்தோம். இதன் பிரகாரம் நாள் ஒன்றுக்கு 3 அல்லது 4 முறைப்பாடுகள் எனத் தற்போதுவரை 40இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டு அவற்றுடன் தொடர்புடைய திணைக்களங்கள் ஊடாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதனால் இது தொடர்பான முறைப்பாடுகளை தொடர்ந்தும் தெரிவிக்க முடியும் - என்றார். (த-101)

## இரண்டு பொலிஸாருக்கு 7 வருட கடூழியச் சிறை

கொழும்பு, டிசெ. 6

பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு பேரைச் சித்திரவதை செய்த பொலிஸார் இரண்டு பேருக்கு 7 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது நீதிமன்று.

கண்டி மேல் நீதிமன்றில் இடம்பெற்று வந்த குறித்த வழக்கில் இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டனர். அதனையடுத்து அவர்களுக்கு தலா 7 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

குறித்த பொலிஸ் நிலையத்தில் வைத்து 2005 ஜூலை 28 ஆம் திகதியன்று சித்திரவதை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பொலிஸ் நிலையத்தில் தடுப்பிலிருந்த அதே இடத்தைச் சேர்ந்த ரோஹித லியனகே மற்றும் சரத் பண்டார ஆகிய இருவருமே சித்திரவதை செய்யப்பட்டதாகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டது. அவர்களைச் சித்திரவதை செய்த குற்றச்சாட்டில் இரு பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

பாதிக்கப்பட்டோர் சார்பில், கண்டி மனித உரிமைகள் அமைப்பு அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தது.

வழக்கு விசாரணையில் இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் குற்றவாளிகளாகக் காணப்பட்டு அவர்களுக்கு அந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. கண்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்களான நிஹால் ராஜபக்ச மற்றும் டபிள்யூ.எம். பாலசூரிய ஆகியோருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது. (த-4)

## 10 வருடத்துக்கு ஒரு முறை வாகனத்துக்கு வரிச் சலுகை

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 6

வாகன அனுமதிச் சலுகைகள் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படாது என்று முன்னர் கூறப்பட்ட நிலையில், அந்தச் சலுகை 10 வருடங்களுக்கு ஒரு முறை வழங்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

குறித்த வாகன வரிச் சலுகை முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதுவரை காலமும் அந்தச் சலுகை இருந்த நிலையில் அதனை முற்றாக நீக்குவதாக 2016 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதனால் அரச உத்தியோகத்தர்கள் அதற்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். அதனாலேயே மருத்துவர் சங்கங்கள் உள்ளிட்ட 17 தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று முன் தினம் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன.

இந்த நிலையில் அரச உத்தியோகத்தர்களில் குறிப்பிட்ட துறையினருக்கு 5 வருடங்களுக்கு ஒரு தடவை வழங்கப்பட்டு வந்த வாகன வரிச் சலுகையை 10 வருடங்களுக்கு ஒரு தடவை வழங்குவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார். அந்த வரிச் சலுகை அ[illegible] களுக்கு மாத்திரமே வழங்கப்படும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (த-4)

குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்


வீட்டுப் பாவனைக்கானது
பொது இடங்களுக்கானது
கல்சியப் படிவைத் தவிர்க்கும் "வோட்டர் சொப்னர்கள்"
• உறுதியான பாகங்கள் → நீண்ட பாவனைக் காலம்
• ஒரு வருட உத்தரவாதம், இலவச நிர்மாணம்
• குறைவான பராமரிப்பு செலவு
• விற்பனைக்குப் பிந்திய காலக்கிரமமான சேவை
UltraPure Water Shop (புகையிரத நிலையத்திற்கு பின்பாக)
Golden Sand International (Pvt) ltd., 405, Stanley Road, Jaffna
Tele: 021 561 4900, 077 022 7055. Hotline: 077 310 1267

கண்ணீர் அஞ்சலி
எமது அன்பு நண்பன்
சி.சிவராசா
(சிவா ரேடிங்கம்பனி - கொழும்பு ,சாவகச்சேரி
Siva Filling Station Ioc)
அவர்களின் அன்பு மாமனாரும்,
சிவயோகத்தின் தந்தையாருமான
வேலுப்பிள்ளை
சின்னத்தம்பி
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
உரிமையாளர், ஊழியர்கள்
சாரங்கா நகைமாடம்
சாரங்கா நாணயப் பணப்பரிமாற்றம்
வெங்கடேஸ்வரா எக்ஸ்பிறஸ்
இல.157/1,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P.021 222 6972
(86601) (13.15)


கண்ணீர் அஞ்சலி
எமது அன்பு நண்பன்
சி.சிவராசா
(சிவா ரேடிங் கம்பனி - கொழும்பு
சாவகச்சேரி, Siva Filling Station IOC )
அவர்களின் அன்பு மாமனார்
வேலுப்பிள்ளை
சின்னத்தம்பி
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
வெங்கடேஸ்வரா ரேடிங் பிறைவேற் லிமிட்டட்.
வெங்கடேஸ்வரா எக்ஸ்பிறஸ்
உரிமையாளர், ஊழியர்கள்.
No.217, Central Road, Colombo - 12
T.P: 011 244 4788


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## கோபுர திருக்குட நன்னீராட்டு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.6
காரைநகர் திண்ணபுரம் சிவன் ஆலயத்தின் (ஈழத்துச் சிதம்பரம்) நுழைவாயிலின் கோபுர திருக்குட நன்னீராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.18 மணி தொடக்கம் மு.ப. 11.24 மணிவரைநடைபெறவுள்ளது. (ஐ–ரி5)

## பொது நூலக பரிசளிப்பு விழா நாளை

யாழ்ப்பாணம். டிசெ.6
வட்டக்கச்சி கரைச்சிப் பிரதேச சபைப்பொது நூலகத்தின் பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபை உப அலுவலகப் பொறுப்பதிகாரி இ.சுதர்சன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன் கலந்து கொள்வார். (ஐ–ரி6)

## சாதனையாளர் கௌரவிப்பு விழா இன்று

கரணவாய்,டிசெ.6
வடமராட்சிக் கல்வி வலயம் நடத்தும் சாதனையாளர்கள் கௌரவிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரியின் கலையரங்கில் இடம்பெறவுள்ளது.
வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழரசுக்கட்சித் தலைவரும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசாவும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான சிவயோகம், சு.சுகிர்தன், கே.சிவாஜிலிங்கம் மற்றும் சி.தர்மலிங்கம் ஆகியோரும், வடமாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர் சி.அகிலதாஸும் கலந்து கொள்வர்.
இந்த நிகழ்வில் தரம் 5 புலமைப் பரிசில்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும், கற்பித்த பாடசாலை ஆசிரியர்களும், 'பிரதீபா பிரபா' விருது பெற்ற ஆசிரியர்களும் கௌரவிக்கப்படவுள்ளதுடன், கடந்த வருடம் இடம் பெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ பெற்ற மாணவர்களும், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3ஏ பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன் வடமராட்சிக் கல்வி வலயத்திலிருந்து மருத்துவபீடம் மற்றும் பொறியியல் பீடம் ஆகியவற்றுக் குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் விசேடமாகக் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஐ–108)

# முல்லையில் முப்படை வசம் 13 ஆயிரத்து 487 ஏக்கர் காணி

### மாவட்டச் செயலக புள்ளிவிவரங்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, டிசெ.6
முல்லைத்தீவு மாவட்டத்தில் 13 ஆயிரத்து 487 ஏக்கர் காணிகள் தற்போதும் அரச படையினர் வசம் உள்ளன.
காணி விடுவித்தல் தொடர்பான ஆய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட சான்று ஆவணங்களின் பிரகாரம் 13 ஆயிரத்து 487 ஏக்கர் நிலப்பரப்பு இன்னமும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது என்று மாவட்டச் செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவித்துள்ளன.
முல்லைத்தீவு மாவட்டத்தில் முப்படையினரதும் கட்டுப்பாட்டில் உள்ள நிலப்பரப்புகள் மாவட்டச் செயலகத்தால் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றில் காணி அனுமதிப் பத்திரங்கள் மற்றும் பொதுக் காணிகளாக 12 ஆயிரத்து 785 ஏக்கரும் , உறுதிக் காணிகளாக 702 ஏக்கரும் அரச படையினர் வசம் உள்ளன.

> காணி விடுவித்தல் தொடர்பான ஆய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட சான்று ஆவணங்களின் பிரகாரம் 13 ஆயிரத்து 487 ஏக்கர் நிலப்பரப்பு இன்னும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள குறித்த 13 ஆயிரத்து 487 ஏக்கர் காணிக்கு மேலதிகமாக 1983 ஆம் ஆண்டு முதல் சிங்கள குடியேற்றங்களுக்காக கையகப்படுத்திய பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து பறி போயுள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (ற–ஐ–101)

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு

கிளிநொச்சி, டிசெ.6
கிளிநொச்சி நகர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.
கிளிநொச்சி நகரில் உள்ள மரவேலை செய்யும் இடத்தில் உள்ள இயந்திரத்தில் குறித்த நபர் வழமைபோல் பணிபுரிந்தவேளை, மின்சாரத்தால் தாக்கப்பட்டார்.
மின்சாரத்தால் தாக்கப்பட்டவர் உடனடியாக மாவட்ட வைத்தியசாலைக்குக்கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர் உயிரிழந்தார்.
இந்தச் சம்பவத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தை யான எஸ்.சசிகரன் (வயது–26) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். (த–ஐ–101)

# சிதம்பரபுரம் நலன்புரி நிலைய மக்களுக்கு சொந்தக் காணிகள்

### இன்று வழங்கவுள்ளது வடக்கு புனர்வாழ்வு அமைச்சு



யாழ்ப்பாணம்,டிசெ.6
இலங்கையில் எந்தப் பகுதியிலும் சொந்தக் காணி இல்லாது வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் உள்ள 194 குடும்பங்களுக்கு இன்று சொந்தமாகக் காணிகள் வழங்கப்படவுள்ளன என்று வடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.
வவுனியா ஆசிகுளம் கிராம சேவகர் பிரிவில் உள்ள சுமார் 100 ஏக்கர் காணிகள், குறித்த குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் சீலன் பத்மநாதன் தெரிவித்தார்.
குறித்த 194 குடும்பங்களும் 1992, 1993 ஆண்டு காலப் பகுதியில் இந்தியாவில் இருந்து வந்தவர்களாவர். அப்போதைய அரசால் வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி நிலையம் உருவாக்கப்பட்டு தற்காலிகக் கொட்டில்களில் அவர்கள் தங்கவைக்கப்பட்டனர்.
கடந்த 22 வருடங்களாக இவ்வாறு தற்காலிகக் கொட்டில்களிலேயே அவர்கள் வசித்து வந்தனர். தற்போது அவர்களுக்கு மத்திய அரசின் காணி அமைச்சின் அனுமதியுடன் வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற காணிக் கச்சேரியில் காணிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.
வவுனியா ஆசிகுளம் கிராம சேவையாளர் பிரிவின் கீழ் உள்ள சுமார் 100 ஏக்கர் காணி தெரிவு செய்யப்பட்டு, அளவீடுகளும் முடிவுற்றுள்ளன. ஒரு குடும்பத்தினருக்கு ஆறு பரப்புக் காணி என்ற அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.
காணிகள் வழங்கப்பட்டவுடன் தற்காலிக வீட்டுத் திட்டத்துக்காக ஒரு குடும்பத்துக்கு 60 ஆயிரம் ரூபா வட மாகாண புனர்வாழ்வு அமைச்சால் வழங்கப்படும்.
நிரந்தர வீட்டுத் திட்டங்கள் அரசால் வழங்கப்படுமிடத்து வீட்டுத்திட்டங்கள் பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது. (ற– ஐ–21)

## கால்நடைகள் களவு; சந்தேகத்தில் ஹைஏஸ் வாகனம் மடக்கி பிடிப்பு

கிளிநொச்சி, டிசெ.6
கிளிநொச்சிப் பகுதியில் கால்நடைகளைக் களவாடிய கும்பல் பயன்படுத்தியது என்று கூறப்படும் ஹைஏஸ் வாகனம் ஒன்று நேற்று முன்தினம் கிளிநொச்சி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி–முரசுமோட்டை, அதனை அண்டிய பகுதிகளில் கால்நடைகள் தொடர்ச்சியாக காணாமற்போயிருந்த நிலையில், இதுகுறித்து அந்தப் பகுதி மக்களால் பல முறைப்பாடுகள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பதிவு செய் யப்பட்டன.
அத்துடன் கால்நடைகளைக் கடத்தப் பயன்படுத்தப்படுகின்றது என்று கூறி, ஹைஏஸ் வாகனம் ஒன்றின் இலக்கத்தையும் பொதுமக்கள் பதிவு செய்திருந்தனர்.
இந்தநிலையில் பொதுமக்களால் முறைப்பாட்டில் பதிவு செய்யப்பட்ட இலக்கத் தகட்டுடன் பரந் தன்– முல்லைத்தீவு வீதியில் பயணித்த ஹைஏஸ் வாகனமே நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.
கைப்பற்றப்பட்ட குறித்த ஹைஏஸ் வாகனம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் வாகனத்தை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஒப்படைத்துள்ளனர். (ற–ஐ–21)



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாண்டியன்குளம், துணுக்காய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் 100 பேருக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நிவாரண பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ற– ஐ– 21,ரி7)

# அரச ஊழியர் ஒருவர் அடாத்தாக சந்தைக் காணியைச் சுவீகரிக்கிறார்

### குற்றஞ்சாட்டுகின்றனர் தண்ணீரூற்று ஆலடிச் சந்திப் பொது மக்கள்

முல்லைத்தீவு,டிசெ.6
கரைதுறைப்பற்றுப்பகுதியில் உள்ள தண்ணீரூற்று ஆலடி சந்திக்கு அண்மையில் உள்ள சந்தை காணிஒன்று, அரசஉத்தியோகத்தர் ஒருவரால் அடாத்தாக சுவீகரிக்கப்பட்டுள்ளது என அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.
அதேவேளை, அந்தக்காணிகுறித்த உத்தியோகத்தருடையதே என்று கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் தெரிவித்துள்ளார்.
கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் உள்ள தண்ணீரூற்று ஆலடிச் சந்திக்கு அண்மையில் உள்ள பொதுச் சந்தை இயங்கிய காணியே அரச பொதுச் சொத்துக்கள், உடைமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரால் அடாத்தாகச் சுவீகரிக்கப்பட்டுள்ளது என்று மக்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தண்ணீரூற்று சமூக மட்ட அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.
கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளராகக் கடமையாற்றிய முன்னாள் செயலாளர் சு.இரவீந்திரநாதனிடம் மக்களின் குற்றச்சாட்டுக் குறித்துக் கேட்டபோது தான் பதவியில் இருந்தபோது இதுபற்றி பொதுமக்கள் சார்பாக பல தரப்பினரால் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதையடுத்துக் காணியைச் சுவீகரிக்க முனையும் உத்தியோகத்தரையும் தண்ணீரூற்று சமூக மட்ட அமைப்பினரையும் சமூகத்தில் மூத்த பிரசைகளையும் அழைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது.
அதன்போதுகுறித்தகாணியானது பிரதேசசபைக்கு உரித்தான காணியென்பதை உறுதிப்படுத்திக் கொண்ட நிலையில், குறித்த உத்தியோகத்தரைக் காணிக்குள் எந்த ஒருஅபிவிருத்திவேலைகளையோ அல்லது காணிக்கு எல்லையிடும் நடவடிக்கைகளையோ மேற்கொள்ள வேண்டாம் என எச்சரிக்கை செய்யப்பட்டது.
இதுகுறித்து கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது. – என்றார்.
கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளராகக் கடமையாற்றும் யே.செல்வனிடம் இது குறித்துக் கேட்டபோது –
குறித்த உத்தியோகத்தர் சுவீகரிப்பதாகக் கூறப்படும் காணி முற்று முழுதாகப் பிரதேச சபைக் குச் சொந்தமானது அல்ல. அவர் சுவீகரிப்பதாகக் கூறப்பட்ட காணி அவருடையதே. இது தொடர்பாக பிரதேச செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட் டுள்ளது – என்று பதிலளித்தார். (ற–ஐ–21, 102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லஞ்சம் ஊழல்களுக்கு எதிராக யாழில் விழிப்புணர்வு நிகழ்வு




யாழ்ப்பாணம்,டிசெ.6
இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பாக மக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்.பஸ் நிலையம் முன்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வின் முக்கிய அம்சமாக "அரசஊழியர்களுக்குச்சம்பளம்வழங்கப்படுவது உங்களுக்குச் சேவை செய்வதற்காகவே", "உங்களின் வரிப் பணத்தில் சம்பளம் பெறும் அவர்களுக்கு நீங்கள் இலஞ்சம் கொடுக்கத் தேவையில்லை", "இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராகச் செயற்பட வேண்டியது உங்களின் பொறுப்பாகும்", போன்றவாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்கள், தனியார் பஸ்கள், ஓட்டோ, பஸ் நிலையம் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் ஒட்டப்பட்டன.

வடமாகாணத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்படவுள்ள இலஞ்ச ஊழலுக்கு எதிரான விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தின் ஆரம்பமாக நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான ஆணைக் குழுவின் பணிப்பாளர் டயஸ் விக்கிரமசிங்க தெரிவித்ததாவது-

அரச ஊழியர்களிடமிருந்து அரச சேவைகளைப் பெறும்போது ஊழியர்களால் இலஞ்சம் கோரப்பட்டால் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான ஆணைக் குழுவில் 1954 இலக்கத்தின் ஊடாக முறைப்பாடு செய்யலாம்.

தற்போது பொது வேலைத்திட்டமாக நாட்டில் உள்ள அனைத்து அரச நிறுவங்களுக்கும் சென்று இலஞ்சத்தை ஒழிப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தச் செயற்பாட்டை முழுமையடையச் செய்வதற்கு மக்களின் ஆதரவு முக்கியம்.

அரச ஊழியர்களின் செயற்பாடு உங்களுக்கானது. அவர்களிடம் இருந்து சேவையைப் பெறும்போது இலஞ்சம் கோரப்பட்டால் எமக்கு அறியத்தாருங்கள். ஊழல்கள் தொடர்பான உங்களுடைய முறைப்பாடுகளைக் கடிதம், தொலைபேசி, மின்னஞ்சல் ஊடாக எமக்குத் தெரிவிக்கலாம் எனவும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய கபே அமைப்பின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவிக்கும் போது:

இலஞ்சம் ஊழலைத் தடுத்து நிறுத்துவதில் அதிமுக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். இந்த நடைமுறைகளை அரச நிறுவனங்களில் மட்டும் செயற்படுத்த முடியாது. அதிகமான அரச ஊழியர்கள், மக்கள் தொகையைக் கொண்ட இடத்தில் இலஞ்ச ஊழல் செயற்பாட்டை சட்ட நடவடிக்கைகள் ஊடாக நிறுத்த இயலாது.

நாட்டில் இதுவரை காலத்திலும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு பல்வேறுபட்ட ஊழல் குற்றங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ளது - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட பிரதம பொலிஸ் அத்தியட்சகர், சமுகநல அமைப்பினர், அதிகாரிகள், பொலிஸார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

(த-ஐ-ரி5)

## விபத்தை ஏற்படுத்தியவருக்கு ரூ. 4ஆயிரத்து 500 அபராதம்

யாழ்ப்பாணம்,டிசெ.6
கவனவீனமாக மோட்டார் சைக்கிளை ஓட்டி விபத்தை ஏற்படுத்தி, சிறுகாயத்தை ஏற்படுத்திய ஓட்டுநருக்கு 4 ஆயிரத்து 500 ரூபா அபராதம் மல்லாகம் நீதிமன்ற மேலதிக நீதிவான் ஜேசுறுப்பையா விதித்துள்ளார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட கதிரிப்பாய் அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட நபருக்கு 25 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடு வழங்குமாறும் பணித்துள்ளார்.

கடந்த ஒகஸ்ட மாதம் 8 ஆம் திகதி இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மேற்படி நபர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் புத்தூர் வடக்குப் பகுதியைச் சேர்ந்த நபரொருவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டு அச்சுவேலிப் பொலிஸாரினால் மல்லாகம் நீதிமன்றில் அவருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் விபத்தைத் தடுக்கத் தவறியமை, கவனவீனமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்தியமை, மற்றும் விபத்தின் மூலம் காயம் ஏற்படுத்தியமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் பொலிஸாரினால் முன் வைக்கப்பட் டிருந்தன.

(த-ஐ-107)

# கொட்டித் தீர்த்த பெரு மழையால் வரணியில் நெற்செய்கை பாதிப்பு

வரணி, டிசெ.6
அண்மையில் பெய்த கடும் மழையால் வரணியில் நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். மாவில் வயல் வெளி, கரவில் பழுதனை வயல் வெளி ஆகிய இடங்களில் ஒரு வாரத்துக்கு மேலாகியும் வெள்ளம் வழிந்தோடாத நிலையில் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இரு வயல்வெளிகளையும் இணைக்கும் வெள்ள வாய்க்கால்கள் நீண்ட காலம் தூர் வாரப்படாதுள்ளமையாலேயே வெள்ளம் வழிந்தோட முடியாத நிலைமை காணப்படுகின்றது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின் றனர்.

கமத்தொழில் திணைக்களமோ அல்லது உரிய அதிகாரிகளோ இதுவரை பயிர் அழிவுகளை வந்து பார்வையிடவில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இது தொடர்பில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ஆர்.நிசாந்தனிடம் கேட்டபோது -

மாவில் வயல் வெளி, கரவில்பழுதனை வயல்வெளி ஆகியவை ஒன்றோடு ஒன்று தொடர்பானவை. மாவில் வயல் வெளியில் மழைநீர் நிரம்பி, கரவில் பழுதனை வெளிக்குச் சென்று அங்கிருந்து வரணி வடக்கு வாய்க்கால் ஊடாக நாகர் கோவில் கடல் நீரேரிக்குச் செல்லும்.

தற்போது நாகர்கோவில் நீரேரியில் நீர்மட்டம் உயர்வாகவுள்ளது. அதனால் மாவில் வயல் வெளி, கரவில்பழுதனை வயல்வெளி என்பவற்றில் தேங்கியுள்ள வெள்ள நீர் வழிந்தோட முடியாதுள்ளது. - என்று கூறினார்.

வயல்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுள்ளமையே இதற்கான காரணம். நாகர்கோவில் கடல்நீரேரியில் நீர்மட்டம் குறையவேண்டும்எனில்தொண்டமானாறு தடுப்பணையில் உள்ள கதவுகள் திறக்கப்படவேண்டும் - என்றும் அவர் குறிப்பிட்டார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் விவசாய சம்மேளனம், கமநல சேவைகள் நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு பதியப்பட்டால் காப்பீட்டுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

(ற-ஐ-10,122)

# படையினருக்குள் மோதல் ஒருவருக்கு அறுபட்டது காது

யாழ்ப்பாணம்,டிசெ.6
காங்கேசன்துறைப் பகுதியில் அமைந்துள்ள படை முகாமில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற படையினருக்கிடையிலான மோதல்சம்பவத்தில் ஒருவர் காது அறுபட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். மேலும் இருவர் சிறு காயங்களுடன் பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக காங்கேசன் துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

விடுதியில் ஒன்றாகக் குடித்த மூவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம், கைகலப்பில் முடிந்தது. இந்தச் சம்பவத்தில் றொசான் திலகசிறி என்பவருக்கு மற்றைய இருவரும் காதில் [illegible]. இந்தச் சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-ஐ-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகா பயிற்சியின் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,டிசெ.6
யாழ்.யோகா அரங்கத்தால் விசேட விரிவுரைகளுடன் புதிய யோகா பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்தப் பயிற்சி நெறியின் அறிமுக நிகழ்வு மருத்துவர் ராஜசங்கர் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமைமாலை4.30மணிக்கு நல்லூர்த் தேரடி அருகே அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயன்மார் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் முதலாவது பயிற்சி நெறி காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரையும், இரண்டாவது பயிற்சிநெறி மாலை 4.30 மணி தொடக் கம் 5.30 மணிவரையும், மூன்றாவது பயிற்சி நெறி மாலை 6 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை நடைபெறவுள்ளன. (ற-ஐ-ரி6)

## விற்பனை தகவல் மைய திறப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ.6
யாழ். மாவட்ட செயலகத்தின் வாழ்வின்எழுச்சிச் சுற்றுலா உற்பத்தி விற்பனைத் தகவல்மையம் இன்று ஞாயிற்றுக்கிழமைகாலை9மணிக்கு நாவற்குழிஉணவுக் களஞ்சியக் கட்டடத்தில் திறக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் இந்தக் கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார். இந்த மையத்தில் யாழ்.மாவட்ட உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருள்கள் நியாயமான விலையில் கொள்வனவு செய்து நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படவுள்ளன. (ற-ஐ-9)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.6
யாழ்.மாவட்டத்தில்வெள்ள மூழ்கடிப்புப் பிரதேசம் தொடர்பாக அடையாளப்படுத்தல் மற்றும் தீர்வுக்கான உபாயங்களைக்கண்டறிதல் தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை மாவட்டச்செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள திணைக்கள அலுவலகங்களின் தலைவர்களைக் கலந்துரையாடலில்கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (ற-ஐ-9)

## இடமாற்றம்

கிளிநொச்சி,டிசெ.6
பூநகரி மத்திய கல்லூரியில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்பட்டு வந்த பூநகரி மத்தியஸ்தர் சபை அமர்வுகள் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளன. கல்லூரியில் ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை நடத்தப்படவுள்ளதையடுத்து இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் மறு அறிவித்தல் வரை பூநகரி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறுமென சபையின் தவிசாளர் பா.யசோதரன் அறிவித்துள்ளார். (ஐ-9)

## ஆவணப்பட வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.6
சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தையும் டெவ்-லிங் பணியகத்தின் 15 ஆம் ஆண்டு நிறைவையும் முன்னிட்டு ஆவணப்படம் ஒன்று இன்று பி. ப. 2 மணிக்கு நவாலி வை.எம்.சி.ஏ.மண்டபத்தில்வெளியிடப்படவுள்ளது. டெவ்-லிங் பணியகத்தின் போ-சகர் அருட்திரு.ச.லிங்கேஸ்வரன் தலைமையில் நடைபெறும்இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய்பிரதேசசெயலக சமூகசேவை உத்தியோகத்தர் வே.சிவராசா கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-ரி6)

## இசை இறுவட்டு வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், டிசெ.6
யாழ். மறை மாவட்டத்தின் புதிய ஆயர் பேரருள் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யின் ஆயர் நிலைத் திருப்பொழிவின் நினைவாக "என்வாழ்வின்ஒளிநீ"எனும் இசை இறுவட்டு வெளியீட்டு விழா நாளை மாலை 4 மணிக்கு, இல.286, பிரதான வீதி, யாழ்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூதுக் கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இளவாலைபுனிதஹென்றி அரசர் கல்லூரியின் அதிபர் அருட்பணி ஜே.எ. யேசுதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ் மறை மாவட்டத்தின் ஆயர் பேரருள் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் வெளியீட்டுரையைத் திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் வழங்கவுள்ளார். (ற-ஐ-10)

## பல்கலையன் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.6
யாழ். பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள் மாணவர்களின் 'பல்கலையன்' பத்திரிகை வெளியீடு நாளை திங்கட்கிழமைகாலை9மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழகக் கலைப்பீடாதிபதியும் சிரேஷ்ட பேராசிரியருமான ந.ஞானகுமாரன், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வதுடன், யாழ் பல்கலைக் கழக சந்தைப்படுத்தல் துறைத் தலைவர் இ.இரட்ணமும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-ரி6)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், டிசெ.6
சமகால கலை, கட்டட கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தின் 25 ஆவது நிகழ்வான "கடதாசியின் மீது பென்சில்" எனும் தலைப்பிலானசெயலமர்வு இன்று மு.ப. 10 மணிக்கு கோவில் வீதி நல்லூரில் உள்ளஆவணக் காப்பகத்தில் நடைபெறவுள்ளது. (ற-ஐ-21)




# பிரசவத்துக்குப் போராடிய பெண்ணுக்கு குருதித்தானம் வழங்கிய இராணுவத்தினர்

மாங்குளம்,டிசெ.6

உயிராபத்தான நிலையில் பிரசவத்துக்குப் போராடிய பெண்ணுக்கு அவசர தேவையில் இராணுவத்தினர் குருதி வழங்கி தாயையும் சேயையும் காப்பாற்றியுள்ளனர்.

முல்லைத்தீவைச் சேர்ந்த தமிழ்ப் பெண்மணியான கர்ப்பிணி ஒருவர் பிரசவத்துக்காக மாஞ்சோலை வைத்தியசாலயில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பிரசவத்தின் போது மிக அரிதான குருதிவகையொன்று குறித்த பெண்ணுக்குத் தேவைப்பட்டது.

இதனை அறிந்து கொண்ட அந்தப்பகுதியைச் சேர்ந்த ஏழு இராணுவத்தினர் குருதியை வழங்கித்தாயையும்சேயையும் இறப்பின் வாயிலில் இருந்து காப்பாற்றியுள்ளனர்.

குறித்த பெண்ணுக்குப் பிரசவம் நெருங்கி வந்த சந்தர்ப்பத்தில் அவசரமாக, அவருக்கு ஓ.ஆர்.எச் வகையைச் சேர்ந்த குருதியை ஏற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது. ஆனால் வைத்தியசாலையின் குருதி வங்கியில் அந்த வகையைச் சேர்ந்த குருதி இல்லாமல் இருந்ததால் தாயும் சேயும் ஆபத்தான கட்டத்தில் இருந்துள்ளனர்.

உடனடியாகச் செயற்பட்டிருந்த குருதி வங்கிக்குப் பொறுப்பான பெண் வைத்தியர், முல்லைத்தீவு இராணுவக் கட்டளையதிகாரியுடன் தொடர்பு கொண்டு, இராணுவ முகாமில் இருந்து அந்த வகை குருதியைப் பெறுவதற்கு வேண்டுகோளொன்றை விடுத்திருந்தார்.

அந்தக் கோரிக்கையை ஏற்று உடனடியாகச் செயற்பட்டிருந்த இராணுவப் படையணியொன்றில் இருந்து அந்த அரியவகைக் குருதியையுடைய ஏழு இராணுவத்தினர் மாஞ்சோலை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அந்த ஏழு இராணுவத்தினரதும் குருதிக் கொடையே அந்தத்தாயையும் சேயையும் சாவின் பிடியிலிருந்து காப் பாற்றியிருந்தது.

தாயும் சேயும் நலமாகவே இருந்தாலும்கூட சிசுவின் நிறை குறைந்திருப்பதன் காரணமாக முதிராத சிசுக்களைப் பராமரிக்கும் பிரிவில் சிசு பராமரிக்கப்பட்டு வருகிறது. (ஐ-22

# வரணியில் பனை மட்டைக்குக் கிராக்கி

வரணி,டிசெ.6

வரணிப் பிரதேசத்தில் பனம் மட்டைக்குப் பெரிய கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன், நாளாந்தம் அவற்றை விலைக்கு வாங்கிச் செல்லும் வியாபாரிகள் பலர் அந்தப் பகுதிக்குத் தமது லாண்ட் மாஸ்ரரில் படை எடுத்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் இருந்து வரும் வியாபாரிகள், இந்தப் பகுதிக்கு வருகை தந்து வீடு வீடாகச் சென்று அவற்றைச் சேகரித்து எடுத்துச் செல்வதைத் தினமும் காணக்கூடியதாக உள்ளது.

மழை காலத்தில் பனை மரங்களில் இருந்து விழும் பனம் மட்டைகளை எடுத்து வெட்டிச் சீர்படுத்தி விற்பனை செய்வதில் பலர் ஈடுபட்டுள்ளனர். வியாபாரிகள் ஒரு மட்டை 3 ரூபா வீதம் விலைக்கு எடுத்துச் சென்று அவற்றை தமது பகுதியில் கூடிய விலைக்கு விற்றுப்பணம் சம்பாதித்து வருகின்றனர். (ஐ-122)




Digitized by Noolaham Foundation

# கரோல் பிரார்த்தனை

வட்டுக்கோட்டை, டிசெ.6
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் கிறிஸ்மஸ் கரோல் பிரார்த்தனை இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும்.
வட்டுக்கோட்டை தென்னிந்தியத் திருச்சபைப் பேராலயத்தில் கல்லூரி முதல்வர் வண.கலாநிதி டானியல் எஸ்.சொலமன் தலைமையில் நடைபெறும்.
"ரெயின்டோர்ஸ் பெல்ஸ்" எனும் தலைப்பில் கிறிஸ்மஸ் கரோல் பிரார்த்தனை இடம் பெறும். (த-50)

## மரண அறிவித்தல்

### மகேந்திரராஜா கௌரிசங்கர்



யாழ்.சங்கானையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரராஜா கௌரிசங்கர் 17.11.2015 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நல்லம்மா , காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - மகிழம்மா தம்பதிகளின் அன்புப் பேரனும், மகேந்திரராஜா (முன்னாள் ஊழியர் - மில்க்வைற் தொழிலகம்), காலஞ்சென்ற சாந்தசோதி தம்பதிகளின் அன்பு மகனும், மகேந்திரராஜா - ஞானாம்பிகை தம்பதிகளின் அன்புப் பெறாமகனும், விமலாதேவி (இத்தாலி), சரோஜாதேவி, அற்புதராசா, வைத்தியநாதன், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் திருச்சிற்றம்பலம், வைத்திலிங்கம், சரவணபவன் ஆகியோரின் அன்பு மருமகனும், புஸ்பராசா, சிறிஸ்கந்தராஜா, ரஞ்சகுமார், தர்மசோதி(இந்தியா), வடிவாம்பிகை, வாலாம்பிகை ஆகியோரின் அன்புப் பெறாமகனும், லதாங்கி (லண்டன்), பிரமிலா (ஆஸ்திரேலியா), கிருஷ்ணகுமார் (லண்டன்), தர்சினி, கரிப்பிரசாத் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அனுசியா, அபிராமி, கிருஷ்நேந்திரா, அருள்வித்தியா, இந்துமதி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (07.12.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆஸ்பத்திரி வீதி,**
**சங்கானை, யாழ்ப்பாணம்.**
(சங்கானை அரச வைத்தியசாலை அருகில்)

தகவல்:
மகேந்திரராசா (தந்தை)
(புஸ்பராசா,சிறிஸ்கந்தராஜா,ரஞ்சகுமார்) சித்தப்பா
சரோஜாதேவி (அத்தை)
077 283 3627

(66605)
(11,15)

## மரண அறிவித்தல்

### திருமதி தர்மலெட்சுமி சூரியகுமார் (திரு அன்ரி)



சுருவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு அச்சுக்கூட வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மலெட்சுமி சூரியகுமார் 29.11.2015 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஓய்வுபெற்ற இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபன விநியோக உத்தியோகத்தரும், சத்தியப்பிரமான மொழி பெயர்ப்பாளருமான நல்லதம்பி சூரியகுமாரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுருவில் துரையப்பா - விசாலாட்சி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வேலணை வடக்கு நல்லதம்பி - இராஜலெட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகளும், தினேஷ்குமார் (லண்டன்), Dr.பிரதீபா (ward - 12 போதனா வைத்தியசாலை - யாழ்ப் பாணம்), கார்த்திகா (சிங்கப்பூர் - முன்னைநாள் யூனியன் வங்கி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சர்மிளா (லண்டன்), Dr.பிரதாப் (MOAnaes/ICU- போதனா வைத்தியசாலை - யாழ்ப் பாணம்), ஜெயராஜன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் அன்னலெட்சுமி (வவுனியா), அழகேஸ்வரி (கொழும்பு), பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/பெரியபுலம் மகாவித்தியாலயம் - தற்போது லண்டன்), பூபாலசிங்கம் (வவுனியா), காலஞ்சென்ற தனபாலசிங்கம் (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரி, சற்குணம் மற்றும் செல்வி சிவநேஸ்வரி - நல்லதம்பி (ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/ இந்துமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான துரைசாமி, கந்தவேள், கந்தசாமி மற்றும் இராஜலிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர் - தற்போது லண்டன்), கரோலின், சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், , இலக்கியா, அபிராம், பிரணவ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.68, அச்சுக்கூட வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(66508)(11,15)

தகவல்:
**ந.சூரியகுமார் (கணவர்)**
**மற்றும் குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

சாவகச்சேரி, டச்சுவீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சின்னத்தம்பி 03.12.2015 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தங்கமுத்து தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற அம்பலவாணர் - பொன்னாச்சி தம்பதிகளின் மருமகனும் மகேஸ்வரியின் பாசமிகு கணவரும் தேவயோகம்(உபஅதிபர் - கலைமகள் தமிழ் வித்தியாலயம், கொழும்பு - 14), சிவயோகன்(ஸ்ரீமுத்துமாரி அம்மன் ரேடர்ஸ் - யாழ்ப்பாணம்), நாகராசா (ஸ்ரீமுத்துமாரி அம்மன் ரேடர்ஸ் - யாழ்ப்பாணம்), மல்லிகா (முன்னாள் ஆசிரியை - நல்லாயன் மகளிர் வித்தியாலயம்), தவமலர்(ஆசிரியை - கொ/இந்துக்கல்லூரி - பம்பலப்பிட்டி), தவராணி(லண்டன்), சிவகுமாரன் (V.S.S ரேடர்ஸ் V.S.S அரிசி ஆலை - வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜவனிதை, இராஜேஸ்வரி சிவராசா(சிவாரேடிங் கம்பனி - கொழும்பு, சாவகச்சேரி, Siva Filling Station IOC), தயாபரன்(கொ/இந்துக்கல்லூரி - பம்பலப்பிட்டி), சிவகுமார்(லண்டன்), கேதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஜீகரன்(STC ரேடர்ஸ்), யதுர்ஷன், மதுஷா, டீபிகா, ரூபினி, கோபிலன்,டினோஜா, சேந்தன், கஜானா, ஷியாம்சஜீவன், கீர்த்தனா, பிரிணித்தா, தர்ஷிகா, யதுர்ஷிகா, பிரவீனன், பிரணவன் ஆகியோரின் அ:ன்புப் பேரனும் வருணி, ஹர்சிகா ஆகியோரின் அன்புப் பூட்டனாரும், திருஞானசம்பந்தர்(ஆஸ்திரேலியா) காலஞ்சென்ற வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரனும் மீனாட்சிப் பிள்ளை (ஆஸ்திரேலியா) காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்து னரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2015.12.06) ஞாயிற்றுக் கிழமை டச்சு வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10மணியளவில் பூதவுடல் சாவகச்சேரி இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**
**077 722 2537, 077 776 8835**

(66535)
(14,15,)




மலர்வு
07.03.1931

உதிர்வு
03.12.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கண்ணீர் காணிக்கை



## அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

வவுனியாவில் பிரபலமான
V.S.S. நிறுவனங்களின் நிறுவுநர்
சின்னத்தம்பி சிவகுமாரன்
அவர்களின் அன்புத் தந்தையின் பிரிவினால் துயருறும்
குடும்பத்தினரின் துயரில் பங்குகொண்டு
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.....

| | | | |
|---|---|---|---|
| சண்முகம் ஸ்ரோர்ஸ்<br>No.41, பசார் வீதி, வவுனியா.<br>024 222 2149 | Ghade Silva and co<br>No.58, பசார் வீதி,<br>வவுனியா.<br>024 222 1093 | SSR Traders<br>No.174, பசார் வீதி,<br>வவுனியா.<br>024 222 2176 | தயா ஸ்ரோர்ஸ்<br>No.54, பசார் வீதி,<br>வவுனியா.<br>024 222 0082 |
| Many and co<br>No.04, யாழ் வீதி,<br>வவுனியா.<br>024 222 2039 | V.S.K<br>No.2, யாழ் வீதி,<br>வவுனியா.<br>077 605 9749 | Sivasakthy Super Market<br>No.32, பசார் வீதி,<br>வவுனியா.<br>077 404 8920 | வெங்கடேஸ்வரா<br>Supermarket<br>No.21, பசார் வீதி, வவுனியா.<br>024 222 2418 |
| ஆறுமுகம் ஸ்ரோஸ்<br>No.82, பசார் வீதி,<br>வவுனியா.<br>024 222 2325 | கமலா Stores<br>நவீன சந்தை கட்டடம்<br>வவுனியா. | அன்னை பூரணி அரிசி ஆலை<br>கோயில் குளம், வவுனியா,<br>ஆ.மாதவன்<br>077 843 7960 | கீர்த்தி அரிசி ஆலை<br>வெளிக்குளம், வவுனியா<br>S.விவேகானந்தன்<br>077 306 7014 |
| பிள்ளையார் ஸ்ரோர்ஸ்<br>மன்னார் வீதி,வேப்பங்குளம்<br>வவுனியா.<br>077 199 9346 | உமா ஸ்ரோர்ஸ்<br>No.144, கண்டி வீதி,<br>வவுனியா.<br>077 758 5929 | சின்பொன் பேக்கவுஸ்<br>பூந்தோட்டம்<br>வவுனியா. | லக்ஸ்மி கிரைண்டிங் மில்<br>இல.142, ஹொறவபொத்தான வீதி,<br>வவுனியா.<br>024 222 2146 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள்கள் தேவை

1982 ஆம் ஆண்டு ரோகினி, 51 பாவம், செவ்வாய்க் குற்றமில்லை. பெற்றோர் வெளிநாட்டு வரனை எதிர்பார்க்கின்றனர்.

(66719) (11,15) தொடர்பு: 076 922 1802

1985 ஆம் ஆண்டு பூராடம் 3ஆம் பாதம் லண்டனில் வசிக்கும் மகளுக்குப் பெற்றோர் மணமகனை லண்டனில் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு: 076 922 1802

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் வடக்கு உடுவில் (றோட்டில்) வீதியில், Green ஆஸ்பத்திரிக்கு பின்புறமாக சந்திக்கு அண்மையாகவுள்ள ஐந்து (05) பரப்புக் காணி விற்பனைக்கு.

இல 17, உடுவில் வீதி, மானிப்பாய்

தொடர்பு :

**இரவீந்திரன்**
077 727 0310
Sam- UK- London
+ 44 7818557193

## படவரைஞர் பதிவுசெய்தல்

மாநகர சபையில் கட்டட வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் சகலபடவரைஞர்கள் மற்றும் பதிவைப் புதுப்பித்துக் கொள்ள விரும்புவோரும் எதிர்வரும் 31.01.2016 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பு: மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறிய படவரைஞர்களது பதிவுகள் இரத்துச் செய்யப்படும்.

ஆணையாளர், மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
(c20559) (14,15)

## யாழ் மாநகர சபையின் அறிவித்தல்

**வீதி எல்லைச் சான்றிதழ் வழங்கல்**

2016 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆதனத்தில் உள்ள சகல நிரந்தரமான கட்டட அமைப்புக்களினை உள்ளடக்கிய நில அளவைப் படத்திற்கே யாழ் மாநகர சபையினால் வீதி எல்லைச் சான்றிதழ் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆணையாளர், மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
(c20560) (14,15)

## Golden Look Beauty Care & Academy




யாழ்ப்பாணத்தில் வேறெங்கும் இல்லாத விலைக்கழிவுடன் அனைத்து அழகு சிகிச்சைகளையும் இங்கே பெற்றுக் கொள்ளலாம்.
அத்துடன் குறைந்த கட்டணத்தில் பயிற்சி வகுப்புக்களும் இடம்பெறும்.

- ☆ *Diploma in Beauty Culture & Hair Dressing*
- ☆ *Certificate in Beauty Culture & Hair Dressing*
- ☆ *Certificate in Self Makeup*
- ☆ *Certificate in Cake Icing*



இந்தியாவில் புகழ்பெற்ற அழகுக்கலை நிபுணர் Dr.வசந்தாவினால் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியரினால் அனைத்து பயிற்சிகளும் இந்திய முறையில் மிகச்சிறந்த பயிற்சி நெறி விளக்கத்துடன் இடம்பெறும்.





பயிற்சி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும்.



அலுவலக நேரம் 9.00 – 6.00 (அனைத்து நாள்களும்)
மேலதிக விவரங்களிற்கு: Miss. S.Nitharshana
DIP IN BEAUTY THERAPY & HAIR DRESSING
No.01,5th Lane, Palali Road, Kantharmadam. Jaffna.
T.P 077 224 2749

## YOGI'S

**INSTITUTE OF BEAUTY THERAPY HAIR DRESSING & HOME SCIENCE (Pvt) Ltd.**

பண்டிகைக்கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள் 3 நாள்கள் மட்டும்.

2015 December 12th, 13th, 14th திகதிகளில் முற்பகல் 10 மணி முதல் ஆரம்பம். இலகுவாகவும், வித்தியாசமாகவும், விரைவாகவும் செய்யக்கூடிய 5 கேக்வகைகள், 5 பேஸ்ரிவகைகள் (Pastries), 5 Sweets வகைகள்

வகுப்புகளில் சேரவிரும்புவோர் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.

தொலைபேசி இல: 021 222 2796, 077 716 4923
75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.



காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயில்
ஈழத்துச்சிதம்பர தேவஸ்தான

## நுழைவாயில் கோபுர திருக்குட நன்னீராட்டுவிழா

காலம்: இன்று (06.12.2015) ஞாயிற்றுக்கிழமை 9.18 மணி முதல் 11.24 மணிவரை

இடம் : ஈழத்துச்சிதம்பரம் காரைநகர்

பிரதம சிவாச்சாரியார் : சிவஸ்ரீ வி.ஈஸ்வரக்குருக்கள்

நுழைவாயிற்கோபுர அனுசரணை : திரு. சுப்பிரமணியம் கதிர்காமநாதன் கோவளம், காரைநகர்.

குறிப்பு:

- பகல் அடியவர்களுக்கு மாணிக்கவாசகர் மடாலயத்தில் அன்னதான நிகழ்வு இடம்பெறும்.
- நிகழ்வுகளை காலை 9.00 மணி முதல் 12.00 மணிவரை நேரலையாக karainagar.co, karainews.com இணையத் தளங்களில் பார்வையிடலாம்.
- அன்றையதினம் அடியவர்களுக்கு இலவசமாக தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்படும்.

ஆதீனகர்த்தாக்கள்
ஆ. அம்பலவிழ நகன்
ம.சுந்தரலிங்கம்

(சி.20580) (13,15)





மெண்டலின் சிவகுமாரின்
"லலித ஷேத்ரா"
இரண்டாம் ஆண்டு
விழாவை முன்னிட்டு.
இசை உலகின்
முதல் கட வித்துவாம்சினி
திருமதி சுகன்யா ராம்கோபால்
முதன் முறையாக நமது தாய் மண்ணில்
கானமும் லயமும் கடங்கள்
பத்தில் சங்கமிக்க வழங்கும்

"லய ராக சமர்ப்பணம்"

கொழும்பு

இடம் - புதிய கதிரேசன் மண்டபம், பம்பலப்பிட்டி.
காலம் - 05.12.2015.
நேரம் - மாலை 6.00 மணி.

யாழ்ப்பாணம்

இடம் - செல்வமஹால் மண்டபம், பூநாறி மடத்தடி, யாழ்ப்பாணம்.
காலம் - 07.12.2015.
நேரம் - மாலை 5.00 மணி

தொடர்புகளுக்கு - 0774486961, 0772798497

ஊடக அனுசரணை : வீரகேசரி
இணை அனுசரணை: ANDRA WEDDING CARDS, MacMix, eestee, GOKUL, HOTEL EUROLANKA (PVT) LTD., SKYLARR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி விஜயலக்சுமி இலிங்கேஸ்வரன்

06.12.2015 அன்று நடைபெற இருக்கும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் எமது சபையின் தொழிற் சங்க ஊழியர்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள் கின்றனர்.

சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை
வடபிராந்திய ஊழியர் தொழிற்சங்கம்

(66586)
(11,15)

## பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
17 . 09 . 1921

விண்ணில்
22 . 11 . 2000

### அமரர் அருணாச்சலம் ஆறுமுகம்

(சமாதான நீதிவான், இளைப்பாறிய அதிபர் - சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)

திதி: ஏகாதசி (06.12.2015)

ஆண்டுகள் பதினைந்து ஆனபோதும் ஐயா!!
உங்கள்நினைவுகள் நீங்கவில்லை ஐயா!
எங்கள் குடும்ப விளக்காய் இருந்தீர் ஐயா!
எமக்காய் ஒளி வீசினீர் ஐயா!
எம்மை விட்டு நீங்கள் சென்றாலும் ஐயா!
உம் நினைவுகள் எம்முடனே ஐயா!
எங்கள் உயர்வுகளுக்கெல்லாம் ஐயா!
உங்கள் ஆசீர்வாதம் இருக்க வேண்டும் ஐயா!

" ஜெயபதி "
தாமோதரம் வீதி, சாவகச்சேரி

ஜெயபதி
குடும்பத்தினர்.

(620581) (14,15)

## 78 ஆவது பிறந்தநாள் நினைவு தினம்
06.12.2015



### அமரர் V.R. வடிவேற்கரசன்

(பிரபல வர்த்தகரும், முன்னாள் ஸ்ரீலங்கா டயர் அசோசியேசன்ஸ் தலைவரும், யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவரும், கீரீன்லேன்ஸ் ஹோட்டல் முன்னாள் தலைவர் / நிர்வாகப் பணிப்பாளரும், ஸ்ரீ பிரதர்ஸ், வி.ஆர்.வி. டிரவல்ஸ், வி.ஆர்.வடிவேற்கரசன் நிறுவனங்களின் முன்னாள் தலைவரும்)

பொன்மனச் செம்மலின் அகவை எழுபத்தெட்டு
உலகையின் உச்சத்திலொரு ஆனந்தப் பிறந்தநாள் விழா

திரைகடலோடித் திரவியம்தேடும் ஒப்பற்ற உயர் உழைப்பை
தமிழர் பெருமையாய் தரித்த பரம்பரைக்கோர் அணி விழா

வடிவேற்கரசனாய் வர்த்தகத்தில் வாய்மை பதித்து
மனிதநேயத்தின் வடிவமாய் மனங்களில் நிறைந்த
வள்ளலுக்கோர் ஆனந்த விழா

மனங்கள் மகிழ்வில் கொந்தளிக்க வசந்தம் தொடர்ந்தும்
நிலைத்திருக்க வாழ்த்துவோம் நெஞ்சம் நிறைந்து
வாழ்க நின் புகழ் நீடூழி வாழ்கவென்று

மனைவி,மக்கள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்

## குளியலறையில் அடைக்கப்பட்ட மூதாட்டி பொலிஸாரினால் மீட்பு



கொழும்பு, டிசெ.6

மலசலகூடத்துக்கு அருகிலுள்ள குளியலறையொன்றில் அடைத்து வைக்கப்பட்டிருந்த வயோதிபப் பெண் ஒருவரை மீட்டியாகொட பொலிஸார் கண்டறிந்து மீட்டுள்ளனர்.

அந்த வயோதிபப் பெண்ணை அவரது பேர்த்தியே அவ்வாறு அடைத்து வைத்திருந்துள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 78 வயதாகும் அந்தப்பெண்ணுக்குமூன்றுபிள்ளைகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களில் ஒருவர் வெளிநாட்டில் இருக்கிறார். அவரது மகளே வீட்டில் தங்கியிருந்து தனது பாட்டியை அடைத்து வைத்திருந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். தற்போது குறித்த பேர்த்தி கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் அடைத்து வைக்கப்பட்டிருந்த பெண்ணின் மற்றுமொரு மகளை அழைப்பை மேற்கொண்டு வரவழைத்த பொலிஸார், தாயை ஒழுங்காகப் பார்த்துக்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டில் கைது செய்துள்ளனர். அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இவ்வாறான சம்பவம் தென்பகுதியில் மற்றொரு இடத்தில் சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

சிவா ரேடிங்கோ - கொழும்பு, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் - ஆகியவற்றின் உரிமையாளர் V.சிவராசா அவர்களின் மாமனும், S.T.C.ரேடர்ஸ் கொழும்பு,யாழ்ப்பாணம் உரிமையாளர், S.சுஜீகரன் அவர்களின் பாசமிகு பேரனும், சிறிமுத்துமாரி அம்மன் ரேடர்ஸ் உரிமையாளர்கள் சி.சிவயோகன்,சி.நாகராசா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் அவர்களது நிறுவன ஊழியர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.



பகட்டில்லா பண்பான நடத்தையாலே
கட்டிவைத்தீர் எம்மை உங்கள் பாசத்தாலே
காலன் செய்த கொடுமையாலே உம்மை
நாம் பிரிந்து விட்டோம்.

தரங்கா ஸ்ரோர்ஸ் - வவுனியா
பரந்தாமல் ஸ்ரோர்ஸ் - கிளிநொச்சி
N. அருள்மூர்த்தி - கிளிநொச்சி
சிறி விநாயகர் ஸ்ரோர்ஸ், கரந்தாப்பளை - கிளிநொச்சி
P. செந்தூர்ச்செல்வன் - கொடிகாமம்
P. நாதன் - சுதன் களஞ்சியம் - யாழ்ப்பாணம்
மலாயன்கபே - யாழ்ப்பாணம்
P. தயாளன் - சித்தன்கேணி
V.T. குமரன் - சித்தன்கேணி
மதுசிவா ஸ்ரோர்ஸ் - சுன்னாகம்

**உரிமையாளர்களும், பணியாளர்களும்.**

(66717) (13.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிடப்படாத நகரமயமாக்கலே சென்னை வெள்ளத்துக்கு காரணம்

## சுற்றுச்சூழல் மைய அறிக்கையில் தெரிவிப்பு; இயற்கை நீர் நிலைகளை பராமரிக்காமையும் தவறெனச் சுட்டிக்காட்டு

சென்னை,டிசெ.6
சென்னையில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்துக்கு திட்டமிடப்படாத வகையில் நடந்துள்ள நகரமயமாக்கலே காரணம் என்று இந்தியாவின் அறிவியல் மற்றும் சுற்றுச் சூழலுக்கான மையம் கூறியுள்ளது. கடந்த நூறாண்டுகளில் இல்லாத அளவுக்குப் பெய்துள்ள மழை நகரை முழுமையாக நிலைகுலையச் செய்துள்ளது என அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தின் தலைமை இயக்குநர் சுனிதா நரெயின் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


நிவாரணப் பணிகளில்....

**கவனிப்பாரற்ற நீர் நிலைகள்**
இயற்கையான நீர்நிலைகளைப் பராமரிப்பது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படாதமை, தற்போது சென்னையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு முக்கியமான காரணம் என்று அறிக்கை கூறுகின்றது. சென்னை மட்டுமன்றி டில்லி, கொல்கத்தா, மும்பை, ஸ்ரீநகர் ஆகிய இந்தியாவின் முக்கிய நகரங்களும் இத்தகைய நெருக்கடியை எதிர்கொள்ளும் அபாயம் உள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சென்னை, மும்பை போன்ற பெருநகரங்களில் போதுமான வகையில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப் படாமல், திட்டமிடப்படாது நகரம் வளர்ந்துள்ளது. உரிய ஒழுங்கு முறையின்றிக் கட்டடங்கள் கட்டப்படுவதால், வெள்ளம் ஏற்பட்டதும் தாக்குப் பிடிக்க முடியாமல் நகரம் திணறுகிறது. இப்படியான அதிவேக நகரமயமாக்கல்கள், இயற்கை வடிகால்களை அழித்துள்ளன. சென்னை போன்ற நகரங்கள் இதன் தாக்கத்தை இப்போது உணர்ந் துள்ளன.
1980களில் சென்னையில் 600 நீர் நிலைகள் இருந்தன. ஆனால் இப்போது அதில் மிகச் சொற்பமான வையே எஞ்சியுள்ளன. பாரிஸில் பருவநிலை மாற்றம் குறித்த உச்சிமாநாடு நடைபெற்று வரும்வேளையில், இப்படியான விடயங்கள் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டியதுமிகவும் அவசியமாகிறது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> “அனுமதி கோரி மனுக்கள் வரும் போது மேலோட்டமாக நிலங்களை மட்டுமே அதிகாரிகள் பார்க்கிறார்கள், அதிலுள்ள நீராதாரங்களைப் பார்ப்பதில்லை.”

நீர்நிலைகள் எப்படிச் சீரழிந்து போயுள்ளன என்பதற்கு போரூர் ஏரி ஓர் உதாரணம் என்றும், அப்படியான நீர் நிலைகள், நிலத்தடி நீர் மீண்டும் ஊறுவதற்கும், வெள்ளம் ஏற்படும்போது அதைச் சமாளிப்பதற்கும் பெரும் உதவியாக இருந்திருக்கும் எனவும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

**திட்டமிடப்படாத நகர மயமாக்கல்**
தமிழகத்தில் சதுப்பு நிலப்பகுதியில் எவ்வாறு கட்டுமானங்களுக்கு அனுமதி அளிக்கப்படுகின்றது எனும் கேள்விக்கு ஒருபோதும் பதில் கிடைத்தது இல்லை எனக் கூறும் அந்த அறிக்கை, அப்படியான நிலங்கள் நகர நிலச் சட்டங்களின் கீழ் மிகவும் அரிதாகவே பதியப்படுகின்றன எனவும், அதன் காரணமாகப் பலருக்கு அது தெரியவருவதில்லை என்றும் அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.
அனுமதி கோரி மனுக்கள் வரும்போது மேலோட்டமாக நிலங்களை மட்டுமே அதிகாரிகள் பார்க்கிறார்கள், அதிலுள்ள நீராதாரங்களைப் பார்ப்பதில்லை, எனவே பேராசை பிடித்த கட்டுமான நிறுவனங்கள் அதைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்கின்றன என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தமிழக அரசின் ஆவணங்களின்படி கடந்த 1980களில் 19 பெரிய ஏரிகளின் பரப்பளவு 1,130 ஹெக்டேயர்களாக இருந்தது, 2000ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் 645 ஹெக்டேயர்களாக சுருங்கியுள்ளது. அதன் காரணமாக அந்த ஏரிகளின் கொள்ளளவு குறைந்து போயின என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
மனிதர்களால் உருவாக்கப்படும் வடிகால் அமைப்புக்கள், ஒருபோதும் இயற்கை வடிகால் அமைப்புகளுக்கு மாற்றாக இருக்க முடியாது எனவும் அந்த அறிக்கை வலியுறுத்தியுள்ளது. சென்னையில் கூவம், அடையாறு போன்ற நதிகளை இணைக்கும் இயற்கைக் கால்வாய்களும், வடிகால்களும் இருப்பதைத் தமது ஆய்வுகள் காட்டுகின்றன எனக் குறிப்பிடும் அறிக்கை,


நிவாரணப் பணிகளில்....

கடந்த நூறாண்டுகளில் இல்லாத வகையில் சென்னையில் இந்த ஆண்டு நவம்பர் மாதம் மட்டும் 1,218 மி.மீ. மழை பெய்துள்ளது. இது சராசரியாக ஆண்டொன்றுக்கு கிடைக்கும் மழையின் அளவைவிட மூன்று மடங்கானது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. (உ-ரி4)

# ஆபிரிக்காவுக்குச் சீனா 60 பில். டொலர் உதவி

ஜோகன்னஸ்பேர்க், டிசெ .6
சீனா-ஆபிரிக்காவுக்கு இடையில் நடைபெற்ற வர்த்தகத்தில் கடந்த ஆண்டு ஆபிரிக்கா 222 பில்லியன் டொலர் இலாபம் அடைந்துள்ளது. இதனையடுத்து சீன ஜனாதிபதி சீ-ஜின்பிங், ஆபிரிக்காவின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு 60 பில்லியன் டொலர்கள் நிதியுதவி வழங்குவதாக நேற்று முன்தினம் உறுத்தியளித்துள்ளார்.
உலகப் பொருளாதரத்தில் இரண்டாவது நிலையில் உள்ள சீனாவில் ஏற்பட்டுள்ள பொருளாதாரத்தளம்பலை சரிசெய்ய இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.
ஜோகன்னஸ்பேர்க்கில் நடைபெற்ற மாநாட்டில் ஆபிரிக்காவின் பல தலைவர்கள் கலந்துகொண்டனர். இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சீன அதிபர், 3 வருட காலத்தில் 10 திட்டங்களுக்கு நிதி முதலீடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். ஆனால் ஆபிரிக்க நாடுகளில் குறிப்பாக எந்த நாடுகளில் சீனா முதலிடப்போகிறது என்கிற விவரத்தை அவர் குறிப்பிடவில்லை.
“இந்த வர்த்தகக் கூட்டு முயற்சி ஆபிரிக்க அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் [illegible] நபர்களின் தொழில் [illegible] நிதி வளம் என்பன விருத்தியடையும்” என்றார் சீன அதிபர்.



2012 ஆம் ஆண்டில் சீனா 30 பில்லியன் டொலர் நிதியுதவி வழங்கி [illegible] தற்போது [illegible] இருமடங்கால் அதிகரிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-ரி4)

# நத்தார்ப் பப்பாவுக்கு எழுதிய கடிதம் மீட்பு 75 ஆண்டுகளின் பின்

பீருவ், டிசெ. 6
ஆஸ்திரியாவில் 1930 களில் நத்தார் தாத்தாவிற்கு சிறுமியொருவர் எழுதிய கடிதம் கிடைக்கப் பெற்றுள்ளது. வீட்டின் புகை போக்கியைத் திருத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது இந்தக் கடிதம் கிடைக்கப் பெற்றது. இந்தக் கடிதத்தை எழுதிய கிறிஸ்ரின் சேர்சிலுக்கு தற்போது 82 வயதாகிறது.
அந்தக் கடிதத்தில் சிறந்த விளையாட்டுப் பொருள்கள் வேண்டும் என்றும், பாடல் புத்தகம் வேண்டும் என்றும் எழுதப்பட்டிருந்தது.
“நான் எழுதிய கடிதத்தை மீண்டும் பார்ப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. எனது 5 வயது ஞாபகங்கள் மீண்டும் என் கண்முன்னே நிற்கின்றன” என்றார் கடிதத்தை எழுதிய சேர்ச்சில். கடிதம் கண்டெடுக்கப்பட்ட வீடு ஜூலியா போக் என்பவருக்கு இப்போது சொந்தமாக உள்ளது. 7 தசாப்த காலங்களாகப் புகை போக்கியில் இருந்த கடிதத்தை ஜூலியா தற்பொழுது பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார். (உ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவு செய்யப்படாத 3 சிறுவர் இல்லங்கள் வடக்கில் மூடப்படும்

யாழ்ப்பாணம், டிசெ.6
பதிவு செய்யப்படாது வடக்கு மாகாணத்தில் இயங்கிவரும் 13 சிறுவர் இல்லங்களில் 3 சிறுவர் இல்லங்கள் மூடப்படவுள்ளன. அவற்றை உடன் மூடுவதற்கு குறித்த இல்லங்களின் நிர்வாகங்களே முன்வந்துள்ளன என்றுவடக்கு மாகாண சிறுவர் திணைக்களப் பணிப்பாளர் தி.விஸ்வரூபன் தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாணத்தில் 46 சிறுவர் இல்லங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 13 சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப்படாது இதுவரையில் இயங்கி வருகின்றன.
அதையடுத்து குறித்த சிறுவர் இல்லங்கள் சட்ட ரீதியாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் அவ்வாறு பதிவு செய்யாதவிடத்து அவற்றை மூட வேண்டும் என்று வடக்கு மாகாண சிறுவர் திணைக்களம் அழுத்தம் கொடுத்திருந்தது.
அதையடுத்து அவற்றில் 3 சிறுவர் இல்லங்களை மூடுவதற்கு அவற்றின் நிர்வாகங்கள் முடிவெடுத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-101)

# அச்சுவேலி வைத்தியசாலையில் டெங்கு நுளம்பு பரவும் ஏதுநிலை

## சிவப்பு அறிவுறுத்தல் ஒட்டப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.6
டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய சூழலைக் கொண்டிருந்த அச்சுவேலிப் பிரதேச வைத்தியசாலையில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களால் சிவப்பு அறிவுத்தல் ஒட்டப்பட்டுள்ளது.
அச்சுவேலி பொலிஸார், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த வியாழக்கிழமை அச்சுவேலி நகரப்பகுதி மற்றும் இதர பகுதிகளில் டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டத்தை முன்னெடுத்தனர். இதன்போது வைத்தியசாலையின் சுற்றாடலும் கவனிக்கப் பட்டது. அங்கு கழிவு வாய்க்கால் மற்றும் இளநீர்க் கோம்பைகளில் நுளம்புக்குடம்பிகள் அதிகளவு இருந்தமை கண்டறியப்பட்டது.
இது தொடர்பில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி கே.மகேந்திரனின் கையொப்பம் இடப்பட்ட சிவப்பு அறிவுறுத்தல் துண்டு வைத்தியசாலையின் முன் ஒட்டப்பட்டுள்ளது. இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டு மூன்று நாளைக்குள் அனைத்து இடங்களும் துப்புரவாக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.
இந்த வருடத்தில் யாழ்.மாவட்டத்தில் வைத்தியசாலை ஒன்றுக்குச் சிவப்பு அறிவுறுத்தல் வழங்கப்பட்த இதுவே முதல்முறையாகும். (ஜ-107)

# குருநகரில் டெங்குத் தொற்று தடுப்பு வாரம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.6
குருநகரில் டெங்கு நோய்த் தடுப்பு வாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றனது. அதை முன்னிட்டு தினமும் ஒலிபெருக்கி பொருத்திய வாகனத்தில் பரப்புரை மேற்கொள்ளப்படுகின்றது.
அத்துடன் டெங்குத் தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினருடன், பொலிஸாரும் இணைந்து இந்த நடவடிக்கைகளில் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக நாளாந்தம் ஈடுபடுகின்றனர்.
பழைய பிளாஸ்ரிக் தகர வாளிகள், சிரட்டை, தேங்காய் மட்டை, ரயர் மற்றும் கழிவுப் பொருள்களில் மழைநீர் தேங்குவதைத் தடுக்குமாறு குடியிருப்பாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.
பழைய பாவனைப் பொருள்களில் மழைநீர் தேங்கியிருந்த குடியிருப்பாளர்களுக்கு உடனடியாகவே தண்டப் பணம் அறவிடப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-160)

# பொலிஸாருக்கு மதுபானம் விற்றவர் கைது

யாழ்ப்பாணம் ,டிசெ.6
காரைநகர், கல்வயல் பகுதியில் 180 மில்லிலீற்றர் அரச மது பானத்தை 300 ரூபாவுக்குப் பொலிஸாருக்கு விற்ற நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
நாகலிங்கம் மோகனதாஸ் வயது(48) என்பவரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார். மேற்படி நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-107)

ஒளிப் படச் செய்தி



# கவனிக்குமா பிரதேச சபை

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக அளவெட்டி 768 வழித் தடத்திலே அலுக்கைச் சந்திக்கும் அம் பனைச் சந்திக்குமிடையே வழுக்கை யாற்றின் ஓரமாக நின்றிருந்த 200 வருடங்களுக்கு மேற்பட்ட வயதையுடைய ஆலமரம் ஒன்று குறுக்காக வீழ்ந்தது. அதனால் தொடர்ச்சியாக இரண்டு நாள்களுக்குப் போக்குவரத்தும் மின்சாரமும் முற்றாக தடைப்பட்டிருந்தது.



போக்குவரத்தையும் மின்சார வழங்கலையும் வழமை நிலைக்குக் கொண்டு வரும்பொருட்டு உடனடிநடவடிக்கையாக வலி. வடக்கு பிரதேச சபை ஒப்பந்த அடிப்படையில் ஆள்களை வரவழைத்து தனது மேற்பார்வையின் கீழ் வீதியின் குறுக்காக இருந்த ஆலமரத்தின் ஓர்பகுதியை மாத்திரம் வெட்டி அகற்றியது. ஏனைய மரத்தின் பாகங்கள் அப்புறப் படுத்தப்படாமல் அந்த இடத்திலேயே விடப் பட்டுள்ளன. சேதமடைந்துள்ள இந்த வீதியூடாக பிரயாணம் செய்யும் ஆயிரக்கணக்கான மக்களதும் மிகப் பிரதான மாக மாணவர்களது போக்கு வரத்து மிகுந்த சிரமத்தின் மத்தியில் இடம்பெற்று வருகின்றது. வீதி போக்குவரத்திற்கு உகந்ததாக இல்லாமல் குன்றும் குழியுமாக காணப்படுகின்ற இந்த பகுதியை சீர் செய்வதற்கான எந்த நடவடிக்கைகளும் உரியவர்களால் இதுவரையிலே மேற் கொள்ளப்படவில்லை என்று மக்கள் கூறுகின்றனர். (ற-ரி2)



# சாதாரணதர பரீட்சைக்கு 356 பரீட்சை நிலையங்கள்

## வடக்கு மாகாணத்தில்

யாழ்ப்பாணம், டிசெ.6
க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்காக வட மாகாணத்தில் 356 பரீட்சை நிலையங்களும் 75 இணைப்பு நிலையங்களும் இயங்கவுள்ளன என்று உதவிப் பரீட்சை ஆணையாளர் எஸ்.பிரணவதாசன் தெரி வித்தார்.
எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த சாதாரணதரப் பரீட்சை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இலங்கையின் வரலாற்றில் அதிகப்படியாக 6 லட்சத்து 64 ஆயிரத்து 715 மாணவர்கள் நாடளாவிய ரீதியில் இந்த முறை பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.
இதில் பாடசாலை ரீதியாக 4 லட்சத்து 3 ஆயிரத்து 443 பேரும் ,தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக 2 லட்சத்து 61 ஆயிரத்து 272 பேரும் தோற்றவுள்ளனர். இந்த [illegible] பரீட்சையில் இருந்து [illegible] இறுக்கமாகப் பின்பற்றப்படவுள்ளன. - என்று அவர் குறிப்பிட்டார்.
குறிப்பாக பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரும் பூரண உடற் பரிசோதனையின் பின்னரே பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படுவர். அதேபோல் எந்த விதமான ஒரு இலத்திரனியல் பொருள்களும் வைத்திருக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார். பரீட்சையில் மோசடியில் ஈடுபடும் மாணவர்களுக்குக் கண்டு பிடிக்கப்படும் பாடத்தினது அன்றி, முழுமையான பாடங்களினதும் பெறுபேறுகள் நிறுத்தப்படும்.
அதேபோன்று பரீட்சார்த்திகள் மட்டுமன்றி, நோக்கர்கள் மற்றும் உதவி மேற்பார்வையாளர்களும் பரீட்சை மண்டபத்தில் எந்தக் காரணம் கொண்டும் அலைபேசி பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள் அவர் குறிப்பிட்டார்.
பரீட்சையில் மோசடியில் ஈடுபட்டமை இனம் காணப்பட்டால் பெறுபேறு நிறுத்தப்படுவது மாத்திரம் அன்றி மேலும் பல ஆண்டுகளுக்குப் பரீட்சை எழுதுவதும் தடை செய்யப்படும். பரீட்சை தொடர்பிலோ அல்லது பரீட்சைப் பணிக்குழு தொடர்பிலோ மாணவர்கள் ,பெற்றோர், ஆசிரியர்கள் 1911 என்ற நேரடி எண்ணுக்கோ அல்லது 0112785111/12 ஆகிய எண்களுக்கோ முறையிட முடியும். - என்றும் அவர் தெரிவித்தார். (ற-ஜ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பண்பாட்டு மையமான குடும்பங்கள் சீரழிந்தால் சமூகம் சிதலமுறும்

நாமும், எமது சமூகத்தினரும் எங்கே செல்கிறோம்? வடக்கில், குடும்பங்களில் கணவர்மார், தமது மனைவிமார் மீது நடத்தும் தாக்குதல்கள், எப் போதும் இல்லாதவாறு உயர்ந்து செல்வதாக, வைத்திய வட்டாரங்கள் கவலையுடன் சுட்டிக் காட்டுகின்றன.

தாக்குதல் சம்பவங்களால் காயமுற்று, சிகிச்சை பெறுவதற்கு, சாவகச்சேரி அரச வைத்தியசாலையில் மட்டும் மாதாந்தம் நூறுக்கும் மேற்பட்ட பெண்கள் வருவதாக புள்ளிவிவரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

கணவன்மார்களாலும், சிலவேளை அயலவர்களாலும் உறவினர்களாலும் பெண்கள் தாக்கப்படுவதாக உறுதியான தகவல்கள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

சாவகச்சேரிப் பிரதேசத்தில் மட்டுமன்றி, குடாநாட்டில் மட்டுமன்றி, வடக்கின் வன்னி மாவட்டங்களிலும் இந்த ஒவ்வாத நிலை உயர்ந்து, பரவி வருகிறது.

இளம் பெண்களே, அவர்தம் கணவன்மாரினால், அதிக எண்ணிக்கையில் தாக்கப்படுகின்றனர்; பாதிக்கப்படுகின்றனர் என்ற நிலையும் நாளாந்தம் உயர்ந்து எழுந்து வருகிறது. ஆனால், பாவம், அவர்கள் பொலிஸ் நிலையம் சென்று நீதி தேடிக் கொள்வதற்குப் பின்னடிக்கிறார்கள்.குடும்ப உறவு கெட்டுப் போய்விடும், நலிந்து சுருங்கி விடும் என்ற அச்சமே அதற்குப் பிரதான காரணம்.

அதற்கான உதாரணமொன்று இங்கே தொட்டுக் காட்டக்கூடிய ஒன்றாகும்.

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர், இரண்டு பிள்ளைகளின் தாயொருவர் அவரது கணவனால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். அதன் பயனாக அவர் குணமடைந்தார். ஆனால் வீட்டுக்குச் செல்ல மறுத்தார் என்றும், அதனால் வைத்தியசாலை நிர்வாகம் பெரும் சிரமங் களை எதிர்நோக்க நேர்ந்ததாகவும் தெரிவிக் கப்பட்டிருந்தது.

இளவயதுத் திருமணம், பெரும் வயது இடைவெளித் திருமணம், குடும்பத்தில் போதைவஸ்துப் பாவனை, கணவனும் மனைவியும் ஒருவரை மற்றவர் புரிந்துகொள்ளாத தன்மை என்பவற்றை இன்று எம்மத்தியில் பரவலாகக் காணமுடிகிறது. பரந்த அளவில் இளமட்டங்கள் மத்தியில், பொல்லாத போதைவஸ்துப் பாவனை மலிந்து வருவதும், எமது சமூகத்தில் பல்கிப் பெருகி உயர்ந்து வருவதும், மக்களை இத்தகைய தாழ் நிலைக்குள் தள்ளி விடுகிறது.

தமது மனைவியை அடித்துத் துன்புறுத்திய கணவனுக்கு, பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைத்த ஆறுமாதச் சிறைதண்டனை விதித்தது.

இத்தகைய தகவல்கள், எம்மத்தியில் குடும்ப உறவுகளில், பெரும் பிளவுகள் வெடித்து வருகின்றன என்ற எச்சரிக்கையை மேலெழுப்பி நிற்கின்றன!

எமது பண்பாட்டின் முக்கியமான பெரும்கூறு, குடும்பம். நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்; அன்புமணி வழங்கும் சுரங்கள், அது வாழ்க, வாழ்க என்று கவிஞர் கண்ணதாசன் பாடினார்.

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்...

நமக்குள்ளே தாதரென்ற நிலைமை மாறி, ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே....

என்று முழங்கினான் பெருங்கவி பாரதி.

மொத்தத்தில்--

தமது இறுக்கமான பண்பாட்டு விழுமியங்களில், குடும்பத்தின் சீரான வாழ்க்கைக்கே தமிழர் சமூகம் முக்கியத்துவம் வழங்குகிறது. தமிழ் இனத்தின் பண்பாட்டு மையமாக விளங்குவது குடும்பம்.

குடும்பங்கள் சீரழிந்தால், அவற்றைத் தாங்கி நிற்கும் சமூகம் சின்னாபின்னமாகி விடும்.

அத்தகைய நிலை மேலுயராமல் தடுப்பதில், தமிழர் பிரதேசங்களின் குடும்பங்கள் அனைத்துக்கும் பெரும் பொறுப்பு உண்டு. அதனை இப் போது உணர்ந்து செயற்படுவது சகலரதும் கடமை ஆகும்.



# நல்லிணக்கம் எதிர்கொள்ளும் சவால்

சுனில் ராமன்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை நடத்திய இலங்கை இராணுவத்தின் உயர் மட்ட தளபதிகளை நவம்பர் மாதத்தின் மூன்றாவது வாரத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்தார். இந்தச் சந்திப்புக்கு இராணுவத் தளபதிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

இலங்கையில் 25 ஆண்டுகளாகத் தொடர்ந்த போரின் இறுதிநாள்களில் இடம்பெற்ற பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு ஒன்றை உருவாக்குவது தொடர்பில் இலங்கை அரசு எவ்வாறான பதிலை அளிக்க வேண்டும் என்பதை முக்கியத்துவப்படுத்தியே இந்தச் சந்திப்பு மேற்கொள்ளப்பட்டது.

இலங்கை மீதான பல்வேறு போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகத் தம்மீது ஏதாவது விசாரணைகள் மேற்கொள்ளப்படுமா என்கின்ற பீதியில் உள்ள இலங்கை இராணுவத்தினரை அமைதிப்படுத்துவதற்காகவே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டதாக கொழும்பு வட்டா ரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

போர்க் காலக் குற்றங்கள் தொடர்பாக நிச்சயமாக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என இராணுவ அதிகாரிகள் தெரிவிக்கின்ற போதிலும், மிகவும் கடினப்பட்டுவென்றெடுத்த சமாதானத்தை சிறிசேன அரசு குழிதோண்டிப் புதைக்கக்கூடாது என்பதே இலங்கைஇராணுவத்தினரினதும் சிங்கள மக்களினதும் கருத்தாகும்.

தம் மீது சுமத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணையை மேற்கொள்வதற்கும் பொறுப்பளிப்பதற்கும் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளைச் சமாதானம் செய்வதற் காகவும் இலங்கை அரசால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக இரா ணுவத்தினர் அதிருப்தி அடைந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இவர்களுக்கு ஆதரவாகச் சிறைகளில் வாடுவோர் போன்றோரைத் தற்போது மேற்குலக நாடுகள் அரசியற் கைதிகள் எனக் கூறுவது போன்று இராணுவ அதிகாரிகளும் போர்க்குற்றவாளிகளாக நோக்கப்படுவது தற்போது அதிகரித்துள்ளது.

இரண்டு முக்கிய அரசியற் கட்சிகளும் கூட்டாக இணைந்து தேசிய ஒற்றுமை அரசாக இலங்கை வழி நடத்தப்படுகிறது. கடந்த ஒக்ரோபரில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு கொழும்பு அரசு இணை அனுசரணை வழங்கியிருந்தது. அதாவது கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டு குற்றமிழைத்தவர்களுக்கு த் தண்டனை வழங்குவதற்கான தீர்மானத்தை கொழும்பு ஆதரித்திருந்தது.

> கடினப்பட்டு வென்றெடுத்த சமாதானத்தை சிறிசேன அரசு குழிதோண்டிப் புதைக்கக்கூடாது என்பதே சிறிலங்கா இராணுவத்தினரினதும் சிங்கள மக்களினதும் கருத்தாகும்.

தென்னாபிரிக்காவில் உருவாக்கப்பட்ட உண்மை, நீதி, மீளிணக்கப்பாடு மற்றும் மீட்சி அடைதல் போன்றவற்றுக்கான ஆணைக்குழு போன்று தனது நாட்டிலும் உருவாக்குவதாகவும், அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம், காணாமற்போனவர்களுக்கான அலுவலகம் போன்றவற்றின் ஆலோசனைகளுடன் இதனை உருவாக்குவதாகவும் ஜெனிவாவில் கடைசியாக நடந்த மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரின் போது கொழும்பு உறுதியளித்திருந்தது.

இந்தத் தீர்மானத்தின் பிரகாரம் நீதிப் பொறிமுறையானது, நடுநிலைமை மற்றும் ஒருமைப்பாடு போன்றவற்றைப் பின்பற்றும் தனிப்பட்ட நீதியாளர்களின் தலைமையில் உருவாக்கப்பட வேண்டும். சுயாதீன நீதி சார் மற்றும்விசாரணைசார்நிறுவகங்கள் உள்வாங்கப்பட வேண்டும்.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் இறுதியில் இடம்பெற்ற பல்வேறு மீறல்களுக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரிகளுக்குத் தண்டனை வழங்குவதற்கு அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த ஏனைய நாடுகள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளன.

போர் முடிவடைந்த காலத்திலிருந்து மகிந்த அரசால் கடைப்பிடிக்கப்பட்ட இறுக்கமான சூழ்நிலையைத் தற்போது சிறிசேன அரசு தளர்த்தியுள்ளதன் மூலம் இது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

தமிழ்மக்களின்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாக இலங்கை அரசு தற்போது தெரிவித்துள்ளது.

ஒரு வாரத்திற்கு முன்னர், அமெரிக்காவின் ஐ.நாவுக்கான நிரந்தரப் பிரதிநிதி சமந்தா பவர் கொழும்புக்கும் நாட்டின் வடபகுதிக்கும் பயணம் மேற்கொண்டிருந்த வேளையில், 16 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணிவந்ததாகச் சந்தேகிக்கப்படும் 424 தனிநபர்களில் 269 நபர்கள் மீதான தடைகளை விலக்கியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

மீளிணக்கப்பாட்டு நடவடிக்கைகளின் உரிமம் தொடர்பாக இலங்கை அரசு எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை என்பது மிகவும் வேதனைக்குரியதே. ஆனால், சிக்கலுக்குரிய பல்வேறு விடயங்களை வேறுபட்ட திசைகளில் இழுத்துச் செல்லும் இலங்கையின் தேசிய அரசானது இராணுவ வெற்றியையும் இராணுவத்தினரின் மனவுறுதியையும் ஆபத்திற்கு உள்ளாக்காது மீளிணக்கப்பாட்டு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய தேவையும் உள்ளது.

ஆங்கில மூலம்:
பெஸ்ட் போஸ்ட்,
தமிழில்: நித்தியபாரதி
நன்றி: புதினப் பலகை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிரன்

# தமிழரின் நம்பிக்கையை காப்பாரா மைத்திரிபால?

ஜனாதிபதி மைத்திரிபால அண்மைக் காலமாக வெளியிட்டு வரும் கருத்துக்கள் குறித்து தமிழ் மக்கள் மத்தியில் வரவேற்பும் அதிக அக்கறையும் ஏற்பட்டுள்ளது. கடந்த காலத்தில் சிங்கள அரசுகள் தமிழருக்கு எதிராக இழைத்த தவறுகளை ஒப்புக்கொள்ளும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வரும் ஜனாதிபதி, இனிமேல் அவ்வாறான தவறுகள் இடம்பெற இடமளிக்கப்படமாட்டாது என்றும், தமிழ் மக்களின் பிரச்சிகைள் இன்னும் தீர்க்கப்படாத நிலையில் உள்ளன என்னமும் அவர் கூறி வருகிறார்.

கடந்த கால அரசுகள் செயற்பட்டமை போன்று தமிழர் விடயத்தில் தான் செயற்படப் போவதில்லை எனவும், தமிழருக்கான தீர்வை வழங்குவதில் தனது அரசு தற்போது அர்ப்பணிப்புடனும் விட்டுக்கொடுப்புடனும் செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

அவரது அண்மைய கருத்துக்கள் குறித்து தமிழர்கள் மத்தியில் ஓர் நல்லெண்ணம் பிறந்துள்ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இந்த நல்லெண்ணத்தை தொடர்ந்து தக்க வைப்பதற்காகத் தமிழர் தீர்வு விடயத்திலும் அவர்களது அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பிலும் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய தேவை மைத்திரிபாலவுக்கு உள்ளது என்பது சுட்டிக்காட்டப்படவேண்டியது.

மீண்டும் ஒரு போர் ஏற்பட இடமளிக்கக் கூடாது. வடக்கு-கிழக்கு இளைஞர்கள் ஆயுதம் மீண்டும் ஏந்தாமல் இருக்கும் வகையில் நல்லிணக்க நடவடிக்கைகளை முன்னெடுப்பது அரசின் கடமை. நல்லிணக்கத்தைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதே இதற்குரிய சிறந்த வழி என்று அவர் நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள் ளார்.

ஆயுதம் ஏந்திப் போராடிய புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் 12 ஆயிரம் பேர் மகிந்த ஆட்சியின்போது புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். கிழக்கு மாகாண தளபதியாக இருந்த கருணாவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உபதலைவர் பதவி வழங்கப்பட்டது. இவற்றை நான் தவறு என்று கூறவில்லை. முன்னாள் அரசின் இந்த அணுகுமுறை சரி என்றால், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளை விடுதலை செய்வதற்கு எமது அரசு எடுத்துள்ள முடிவு எந்தவகையில் தவறாகும் என்றும் அவர் அங்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசு மீது இப்போது பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. கடந்த பல வருடங்களாக விசாரணைகள் எதுவுமின்றிச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்குக் கடும் அழுத்தங்களை வழங்கி வருகின்றது. அத்துடன் கைதிகளும் உணவு தவிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதனையடுத்து கைதிகள் விடயத்தில் அரசு சிறிது அக்கறை காட்டிச் செயற்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் சில கைதிகளின் வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டு அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள் ளனர். அத்துடன் மேலும் சில கைதிகள் புனர்வாழ்வுக்குச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளதால் அது குறித்து அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்த விடயம் அரசுக்கு

> கடந்த பல வருடங்களாக விசாரணைகள் எதுவுமின்றிச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்குக் கடும் அழுத்தங்களை வழங்கி வருகின்றது. அத்துடன் கைதிகளும் உணவு தவிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

எதிரான தரப்பினரால் திசை திருப்பப்பட்டு வருகின்றது. அதாவது குற்றம்



சாட்டப்பட்டுள்ள புலிகளுக்கு அரசு விடுதலை அளிக்கிறது என்ற கோணத்தில் மகிந்த அணியினரால் அரசுக்கு எதிரான பிரசார நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இந்தப் பிரசார நடவடிக்கைகள் குறித்துக் கடும் சினமடைந்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால, இவற்றுக்குப் பதிலடி வழங்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

போர் முடிவடைந்து ஆறு வருடங்களாகின்றன. 2009 மே 19ஆம் திகதி முதல் 2015 ஜனவரி 8 ஆம் திகதி வரை போருக்குப் பின்னர் முன்னெடுக்கப்பட வேண்டியிருந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. பௌதீக வளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் செய்யப்பட்டன. ஆனால், அபிவிருத்தியை மட்டும் வடக்கு-கிழக்கு மக்கள் எதிர்பார்க்கவில்லை.

அவர்களின் உள்ளங்களை முன்னாள் அரசு புரிந்துகொள்ளவில்லை. மக்களிடையே சந்தேகம் நீக்கப்படவில்லை. 2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதிக்குப் பின்னர் இலங்கைக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பம் உரிய வகையில் பயன்படுத்தப்படவில்லை. நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு செயற்றிட்டம் வகுக்கப்படவில்லை என்று ஜனாதிபதி நேற்றுமுன்தினம் ஆற்றிய உரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கு-கிழக்கு மக்கள் பெருவாரியாக எனக்கு வாக்களித்தனர். மட்டக்களப்பில் 81 சதவீதமும், வடக்கில் சகல மாவட்டங்களிலும் சராசரியாக 71 சதவீத வாக்குகளும் அளிக்கப்பட்டன. நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்காகவே எனக்கு ஆணை வழங்கப்பட்டது. இதனால் அந்த மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிய கடமை இந்த அரசுக்கு உள்ளது என்பதையும் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்குப் பிணை வழங்கியது பற்றியும், எட்டு புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீதான தடை நீக்கப்பட்டமை குறித்தும் அரசு மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது, புலிகள் அமைப்பு மீள தலைதூக்க இடமளிக்கப்படுகின்றது என்றெல்லாம் குறுகிய மனப்பான்மையுடன் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன.

இவற்றையெல்லாம் பொருட்படுத்தாத மைத்திரிபால, தனக்கே உரிய பாணியில் செயற்பட்டு வருகின்றமை குறித்துச் சர்வேதேச நாடுகளும் பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றன. அத்துடன் இலங்கை அரசுடன் சுமுகமான உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கு வெளிநாட்டுத் தலைவர்கள் பலர் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்து ரையாடி வருகின்றனர். இவை யெல்லாம் அவரது ஆட்சியின் மீது ஏற்பட்ட ஒரு நம்பகத் தன்மையின் வெளிப்பாடே.

எனவே இந்த நம்பிக்கைத் தன்மையைத் தக்க வைத்து தமிழர்கள் விடயத்தில் ஒரு தீர்க்கமான செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டிய தேவையும் அவசியமும் மைத்திரிபால அரசின் பக்கம் இருக்கும் பெரும் பொறுப்பாகவுள்ளது. இதனை எதிர்காலத்தில் எப்படி முன்னெடுக்கப் போகிறார் மைத்திரி என்பதே இன்றுள்ள கேள்வி.

## தமிழ்நாட்டில் வரலாறு காணாத வெள்ளம்

தமிழ் நாட்டில் அடைமழை, தொடர்மழை, காவிரி ஆறு பெருக்கு, ஏரிகள் உடைப்பு, என்பவற்றால் தலைநகரம் சென்னை நீரில் மிதக்கிறது. மூந் நூறு பேர் வரை இறப்பு. இறப்புக்கள் அதிகரிக் கலாம். கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுகின்றன. மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையம் வெள்ளத்தில். ரயில்கள் ஓடவில்லை. பேருந்துப் போக்குவரத்து இடை நிறுத்தம். வாகனங்கள் நீரில் மூழ்கின.

தமிழக மக்களுக்கு உணவு இல்லை. குடிக்கத் தண்ணீர்கூட இல்லை. உடுபுடைவைகள் நனைந்த நிலை. சேரிகளை வெள்ளம் மேவிப் பாய்கிறது. அடுக்கு மாடிகளையும் வெள்ளப் பெருக்கு விட்டபாடில்லை. இந்த நூற்றாண்டில் தமிழகத்தில் கண்டும் கேட்டிராத வெள்ளப் பெருக்கு. தமிழ் மக்கள் அவலம், சோகம்.

ஆகவே ஈழத் தமிழர்களாகிய நாம் இந்த நிலையில் வாய் பேசாது மௌனிகளாக இருக்க முடி யுமா? நாம் சிந்திக்க வேண்டும். தமிழ்த் தலை வர்கள் விரைவாகச் சிந்தித்துச் செயலில் இறங்க வேண்டும். வடமாகாண சபையும் துரித கதியில் செயலாற்ற வேண்டும். ஊடகங்கள் உட்பட அனைவரும் சிந்திக்க வேண்டிய நேரம். யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூதரகத்துடன் கலந்துரையாட வேண்டும். நிதி சேகரிப்பில் உதயன் முன்னின்று செயலாற் றலாம்.

மயூரன், யாழ்ப்பாணம்

## தரமுயர்த்துங்கள்; தரம் தாழ்த்தாதீர்கள்!

பிரதேச செயலகங்களும் பிரதேச சபைகளும் ஒரு நிர்வாக பிரதேசத்தின் இரு கண்கள் என்பது அடிக்கடி கூறப்படும் வாசகம்.

இலங்கை நிர்வாக சேவையின் தரம் 2 அலுவலரே பிரதேச செயலராகக் கடமையாற்றத் தகுதிபெற்றவர். இதனைவிட உதவிப் பிரதேச செயலர், உதவித் திட் டமிடல் பணிப்பாளர். கணக்காளர் சேவையைச் சேர்ந்த கணக்காளர் ஆகிய பதவிகளில் உள்ளவர்கள் ஊடாகவும் மக்களுக்குப் பயன் கிடைக்கும்.

இதனால் மக்களும் இந்த வகையான நிறுவனங்களை மிக உயர்தரத்தில் வைத்து நோக்குகின்றனர். மத்திய அரசும் தனது கீழ்மட்ட நிர்வாகமான பிரதேச செயலகத்தை எவ்வளவுக்கு அதிகாரங்களை வழங்கி எவ்வளவு உயர்தரமாக வைத்திருக்க முடியுமோ அவ்வளவுக்கு உயர்வாக வைத்திருக்கின்றது.

இதேபோல மாகாணசபை நிறுவனத்தின் கீழ் வடக்கில் 30 பிரதேச சபைகள் உள்ளன. இந்தப் பிரதேச சபைகளில் உதவிச் செயலாளர், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர், கணக்காளர் சேவையைச் சேர்ந்த கணக்காளர் என எவருமில்லை. இதுவரை உருவாக்கப்படவுமில்லை.

பிரதேச சபைகளின் ஒரேயொரு பிரதான நிறை வேற்று அலுவலராகச் சபையின் செயலாளர் (Secretary) காணப்படுகின்றார். கடந்த பல காலங்களில் பிரதேச சபைகளின் செயலாளர் பதவிக்கான ஆளணி இலங்கை நிர்வாக சேவை தரம் மூன்றில் இருந்தது.

இதன்போது உள்ளூராட்சி பிரதேச சபைகளின் தரம் ஆனது பிரதேச செயலகத்துக்கு நிகரானதாக ஒரே தரமுடையதாக இருந்தது. இதனால் உயர்ந்த நிர்வாகத்துடன் ஏனைய அரச நிர்வாகங்களால் மதிக்கப்பட்டது. இதன் பிரகாரம் உயர்தரமான சேவையும் இடம்பெற்றது. தற்போது உள்ளூராட்சி மன்றத்தின் சீர்திருத்தம் மீதான ஆணைக்குழுக்களின் அறிக்கை, உள்ளூராட்சி மறுசீரமைப்பு கொள்கை, உள்ளூராட்சியைப் பலப்படுத்தல், உள்ளூராட்சியை வலுப்படுத்தல் என்ற சகல கொள்கைகளின் அடிப்படையில் உள்ளூராட்சி சபைகளின் செயலாளர் பதவியை இலங்கை நிர்வாக சேவை தரம் ஒன்று என்ற பதவி நிலையில் வைத்திருக்க வேண்டும். ஆனால் சகல கொள்கை களையும் புறம்தள்ளி உள்ளூராட்சி சபைகளின் (பிரதேச சபை) செயலாளர் பதவி என்பது வடக்கு மாகாண சபை உருவாவதற்கு முன்னர் 2012இல் ஆளணி மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் சுப்றா தரத்துக்கு கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

தற்போது வடமாகாண முதலமைச்சரின் கீழ் உள்ளூராட்சி அமைச்சு உள்ளது. எனவே ஒரு நிர்வாகப் பிரதேசம் அதாவது பிரதேச செயலகத்துக்கு ஒத்த நிர்வாக அலகைக் கொண்ட பிரதேச சபை (Pradesha sabha) மீளவும் இலங்கை நிர்வாக சேவை தரம் மூன்றுக்குக் கொண்டு வரப்பட வேண்டியது கட்டாயம். எனவே பிரதேச சபைகளின் செயலாளர் பதவி மீளவும் இலங்கை நிர்வாக சேவை தரத்துக்கு (SLAS-III) கொண்டு வரப்பட வேண்டும்.

இதற்கான போதுமான நியாயப்படுத்தல்கள், நியாயாதிக்கம் என்பன உள்ளன.

பலசேவைத் தரத்தை உடையவர்கள் உள்ளூராட்சியில் இருக்க முகாமைத்துவ சேவை தரத்தின் சுப்றா தரம் என்பது ஒரு சேவைத் தரத்தை உடையோர் மட்டுமே பதவி உயர்வு பெற்று மேலெழும்ப உதவி புரியும். எனவே இலங்கை நிர்வாக சேவை தரத்தை உள்ளூராட்சி சபை செயலாளர் பதவிக்கு மீளக்கொண்டு வருவதன் ஊடாகச் சிறந்ததொரு உயர்தரமான சேவையை வழங்க முடியும்.

சி.சபாரத்தினம்
இளைப்பாறிய அலுவலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் இன்றி உள்ளூர் விளையாட்டு இல்லை

பிரகாஸ்

உள்ளூர் விளையாட்டுக்கள் இன்று இந்தளவு வேரூன்றி நிற்கின்றதென்றால் அதற்கு உதயன் பத்திரிகைதான் காரணம். அதைப் பற்றிச் சொல்வது மகிழ்ச்சிதான் என்று தன் கச்சித அடையாளமான புன்னகையுடன் ஆரம்பிக்கிறார் த.அருணகிரிராஜா. யாழ்ப்பாணம் நெருக்கடியான காலகட்டத்திற்குள் இருந்த காலத்தில் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தில் உடற் கல்வி உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர் அவர்.

விடுதலைப் புலிகள் கோலோச்சிய அந்தக் காலத்தில் நாட்டின் பெரு நிலப் பரப்புடன் யாழ்ப்பாணம் தொடர்பறுந்து கிடந்தது. திறந்த வெளிச் சிறைச்சாலை என்பதுதான் அதற்குப் பெயர். கடல் மார்க்கமாகவும் வான் வழியாகவும்தான் கொழும்பையும் ஏனைய இடங்களையும் சென்றடைய வேண்டியிருந்தது. இன்று ஒரு மணி நேரத்தில் சென்றடைந்து விடக்கூடிய கிளிநொச்சியை அடைவதற்கு, தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதைப் போன்று திருகோணமலை,வவுனியா சென்றுதான் போக வேண்டும்.இல்லையேல்வானூர்தி மூலம் இரத்மலானைக்குச் சென்று அங்கிருந்து வவுனியா ஊடாக கிளிநொச்சி வர வேண்டும்.

> பத்திரிகையின் அச்சுநேரத்தை தாண்டி கிடைக்கும் செய்திகளை உரிய வீரர்களிடம் அவர்கள் தான் கொண்டு போய்ச் சேர்த்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியே செல்வதற்கு மட்டும்தான் என்றில்லை, யாழ்ப்பாணத்துக்கு உள்ளேயே பயணிப்பதற்கும் தொடர்பாடுவதற்கும் மூச்சுக்கு மூன்று தடவைகள் யோசிக்க வேண்டிய காலத்தில், விளையாட்டு வீரர்களுக்கு செய்திகளையும் தகவல்களையும் தாங்கிச் சென்று அவர்களை அணி திரட்டி அதிரடி வெற்றிகளைக் குவிக்க வைத்ததில் உதயன் பத்திரிகையின் பங்கு மிக மிகக் காத்திரமானது என்கிறார் அருணகிரிராஜா.

யாழ்ப்பாணத்து விளையாட்டு உலகில் செய்திகளைத் தாண்டியும் ஆழமாக வேரூன்றியிருந்தது உதயனின் பணி. தபால்கள் இல்லை, தொலைபேசி இல்லை என்ற காலத்திலும் தகவல்கள் சரியான நேரத்திற்கு சரியான இடங்களுக்குப் பரிமாறப்பட்டன. பல நேரங்களில் உதயன் பத்திரிகையை விநியோகிக்கும் பையன்களே விளையாட்டு வீரர்களுக்கான தபால்காரர்களாக மாறியிருக்கிறார்கள். பத்திரிகையின் அச்சுநேரத்தைத் தாண்டிக் கிடைக்கும் செய்திகளை உரிய வீரர்களிடம் அவர்கள்தான் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறார்கள். ஓர் ஆட்டம் கைவிடப்பட்டதென்றாலோ அல்லது இடம்மாற்றப்பட்டதென்றாலோ அந்தத் தகவல் விநியோகப் பையன்களிடம் விளையாட்டுத் திணைக்களங்களாலோ கழகங்களாலோ சொல்லிவிடப்படும். பையன்கள் அந்தத் தகவல்களை உரிய நேரத்துக்கு உரிய இடத்தில் சேர்ப்பார்கள். உதயன் முகாமை அந்தளவுக்கு விளையாட்டின் வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்திருந்தது. சடசடவென்று சொல்லிக்கொண்டே போகிறார் அருணகிரிராஜா. சிக்கல்களும் சவால்களும் நிறைந்த அந்தக் காலம் அவர் கண்களில் பளிச்சிட்டு மறைகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் விளை யாட்டுக்கென்று ஒரு முழுப் பக்கத்தை முதல் முதலில் ஒதுக்கிக் கொடுத்தது உதயன்தான் என்றும் அவர் அவதானத்தைப் பகிர்ந்துகொள்கிறார்.

அதுமட்டுமில்லை உள்ளூர் விளையாட்டு வீரர்களை தேசிய மட்டத்துக்குக் கொண்டு சேர்க்கும் பாலமாக இருக்கிறது உதயன் என்கிறார் யாழ். மாவட்ட விளையாட்டுத் துறையின் முன்னாள் உயர் அதிகாரியான திருமதி ஜே.எவ்.ரூபசிங்கம். அவர் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத் தலைவியும்கூட.

செய்திகளுடன் மட்டும் நின்றுவிடாமல் ஏற்பாடுகள், ஒழுங்கமைப்புக்கள், அனுசரணைகள் என்பவற்றில் உதயனுக்கு இருந்த அக்கறையையும் அவர் அக்கறையோடு தொட்டுக்காட்டுகிறார்.

தேசிய மட்டப் போட்டிகளுக்கு கப்பல் மூலம் வீர, வீராங்கனைகள் தென்னிலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்ட காலங்களில் உதயன் ஆற்றிய பணி மிகக் காத்திரமானது. புறப்பட்டுப்போன தங்கள் பிள்ளைகள் அலைகளுக்குத் தப்பி நலமே போய்ச் சேர்ந்தார்களா என்பதைப் பெற்றோர்கள் அடுத்தடுத்த நாள்களில் உதயன் பத்திரிகையைப் பார்த்துத்தான் தெரிந்து கொண்டார்கள். அக்காலங்களில் தொலைபேசிகள் இல்லை. தொடர்பாடலும் இலகுவானதல்ல.

உதயன் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் ந.வித்தியாதரன் விளையாட்டுத் துறையில் காட்டிய தீவிர ஆர்வத்தை இன்றும் அது தொடர்வது தனக்கு ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் தருவதாகக் குறிப்பிடும் அருணகிரிராஜா. பலதரப்பட்ட விளையாட்டுக்கள் வந்துவிட்டன. அவை எல்லாவற்றையும் குறித்து செய்திகள் வரவேண்டும். உடற்பயிற்சி, ஜிம்னாஸ்டிக், [illegible] போன்றவற்றுக்கான அனுசரணைகளையும் பயிற்சி முகாம்களையும் உதயன் முன்னெடுக்க வேண்டும் என்று கோரிக்கையையும் முன்வைத்தார்.



# முத்துஐயன்கட்டுக் குளத்தில் நீர் தேக்கி வைக்கப்படுமா ?

இ - தனம்

**2015 - 2016** காலபோக நெற்செய்கையை முத்துஐயன்கட்டு குளத்தின் கீழ் மேற்கொண்ட விவசாயிகளின் பயிர்கள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. மேலும் நிலம் பண்படுத்தப்பட்ட நிலையில் விதைப்பை மேற்கொள்ள முடியாதநிலையிலுள்ள விவசாயிகள் பெரிய நட்டத்தை எதிர்கொண்ட போதிலும் தமது வாழ்வாதாரத்தை நோக்கமாகக் கொண்டு மீண்டும் விதைப்பை ஆரம்பித்துள்ளனர்.

ஆனால் இவர்களின் செய்கையானது மூன்றரை மாத நெல்லினமாகையால் மாசிமாதமளவில் அறுவடை செய்யும் விவ சாயத்துக்கு மழை இல்லாதுவிடின் நீர் கிடைக்காது போகின் அழியும் நிலை ஏற்படும். இதனால் விவசாயிகள் மீண்டும் பாதிப்புக்குள்ளாக நேரிடும்.

> போரினால் பாதிக்கப் பட்ட மக்கள் இன்னும் மீண்டெழ முடியாத நிலையில் தமது வாழ்வ தாரத்துக்காக முற்று முழு தாக விவசாயத் தையே நம்பி யுள்ளனர். முத்துஐயன் கட்டுக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் தொடர்வதால் குளத்தில் நீரைத் தேக்க முடியாத நிலை காணப்படுவ தாக, நீர்ப்பாசனத் திணைக் களம் கூறியுள்ளது.
> போரினால் பாதிக்கப் பட்ட மக்கள் இன்னும் மீண்டெழ முடியாத நிலையில் தமது வாழ்வ தாரத்துக்காக முற்று முழு தாக விவசாயத் தையே நம்பி யுள்ளனர். முத்துஐயன் கட்டுக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் தொடர்வதால் குளத்தில் நீரைத் தேக்க முடியாத நிலை காணப்படுவ தாக, நீர்ப்பாசனத் திணைக் களம் கூறியுள்ளது.

இந்த நிலையில் முத்துஐயன் கட்டுக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் தொடர்வதால் குளத்தில் நீரைத் தேக்க முடியாத நிலை காணப்படுவதாக, நீர்ப் பாசனத் திணைக்களம் கூறியுள்ளது. எனவே முத்துஐயன் கட்டுக் குளநீரை எதிர்பார்க்க முடியாது. போரினால் பாதிக் கப்பட்ட மக்கள் இன்னமும் மீண்டெழ முடியாத நிலையில் தமது வாழ்வாதரத்துக்காக முற்றுமுழுதாக விவசாயத்தையே நம்பியுள்ளனர். சுமார் 3,054 விவசாயக் குடும்பத்தினர் விவசாயத்தை மீண்டும் மேற் கொள்ளாதுவிடின்– அவர்கள் வங்கிகளில் பெற்றகடன் அடகு வைத்துப் பெற்ற பணம் மற்றும் தனியாரிடம் பெற்ற கடன் என்பவற்றை மீளச் செலுத்த முடியாத நிலை ஏற்படும். இதனைக் கருத்தில் கொண்டு எதுவரினும் வரட்டும் என மனதில் எண்ணிக் கொண்டுவிதைப்பைமேற்கொண்டுவருகின்றனர்.

மேலும் முத்துஐயன்கட்டுக் குளம் புனரமைக்கப்படுவதால், இந்த வருட சிறுபோகச் செய்கை நடைபெறாது எனத் தெரிவிக்கப்பட்டது. அதற்கமைவாக மழை வெள்ளம் ஏற்பட்டபோதும் குளத்திலே நீர் தேக்கப்படாது கதவுகள் திறந்து விடப்பட்ட நிலையில் உள்ளன. இதனால் குளத்து நீரை நம்பமுடியாது. இந்தவருடத்துக் கான விவசாயம் மழை வெள்ளத்தால் அழிவடைந்து விவசாயிகள் பெரிய நட்டத்தை எதிர்கொள்வதால் அவர்கள் மேற்கொள்ளும் விவசாயம் மழை இல்லாது விட்டால் பாதிப்படைய நேரிடும். அவற்றையாவது காப்பாற்ற குளத்துக்கு பாதிப்பேற்படாத வகையில் குறிப்பிட்ட ஓரளவு நீரையாவது தேக்கி வைக்கு மட்டத்து நீரைப் பெற்று விவசாயத்தைக் காப்பாற்ற முடியும். ஆனால் நீர்ப்பாசனத் திணைக்களம் இதற்கு எந்த அளவுக்கு இணங்குமோ தெரியவில்லை. ஒருபுறம் புனரமைப்பு, மறுபுறம் விவசாயம் மற் றொருபக்கம் அழிவு இதனை எப்படிச் சமா ளிக்கப் போகின்றனர் எனத் தெரியவில்லை. புனரமைப்பு தொடராவிடின் அதுவும் விவசாயிகளுக்கு பாதிப்புத்தான் ஏனெனில் முற்றுமுழுதாக இந்தப் பிரதேச மக்கள் நம்பி இருப்பது இந்தக் குளத்தையேயாகும். கடந்த காலங்களில் படித்த வாலிபர் திட்டங்களுக்கு பொருத்தப்பட்ட நீர்ப்பம்பிகள் இயங்காமையாலும், வாய்க்கால்கள் பழுதடைந்து புனர மைப்பின்றி இருந்த மையாலும் சில காணிகளுக்கு நீரைக் கொண்டு செல்ல முடியாத காரணத்தினால் காணி உரிமையாளர்கள் காணிகளை விற்றுவிட்டு வேறு இடங்களுக்குச் சென்றமையும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். அது மட்டுமன்றி பெண்கள் குடியேற்றத் திட்டம், படித்தவாலிபர் திட்டம் போன்றதிட் டங்கள் கைவிடப்பட்டு காணிகள் செய்கைபண்ணப்படாது உள்ளன. எனவே இந்த நீர் முக்கியமானதாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த வருடம் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட விவசாயிகளைக் கருத்தில் கொண்டு அவர்கள் மேற்கொண்ட விவ சாயத்தை காப்பாற்ற உதவியாக சிறிதளவு நீரை யாவது தேக்கி வைத்து அதனைக் காப் பாற்ற உதவ வேண்டு மெனத் தாம் எதிர்பார்ப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர். இந்த வருடம் முத்து ஐயன் கட்டுகுளத்தின் கீழ் உள்ள இடதுகரை முதலாம் கண்டம் முதல் 7 ஆம் கண்டம் வரையிலும், வலது கரை முதலாம் கண்டம் வரையிலான காணிகள் செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கதா கும். சிறு குளங்களின் கீழ் பயிர்ச் செய்கையை மேற் கொண்டோருக்கு நீர்ப் பிரச்சினை ஏற்பட வாய்ப்பில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே நீரைத் தேக்கு வதோ? விடுவதோ? என்ற முடிவு நீர்ப் பாசன திணைக்களத்தின் கையிலேயே உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருக்கிறது ஆபத்து! கட்டாயம் வேண்டும் கட்டுப்பாடு!

புவிவெப்பம டைதல் நிகழ்வை கட்டுக்குள் கொண்டு வர வேண்டும், இல் லையெனில் அதன் தீவிர விளைவு களைச் சந்திக்க தயாராக இருக்க வேண்டும்.




அன்ரன்

காலநிலை மாற்றம் தொடர்பில், பிரான்ஸ் தலைநகர்பாரிஸில்நடைபெற்றுவரும் உலக மாநாடு அனைத்து மக்களி னதும் கவனத்தையும் கவர்ந்துள்ளது. பல பெரு நகரங்களில் இந்த மாநாட் டுக்கு ஆதரவு தெரிவித்து பேரணிகள்கூட நடத்தப்பட்டன. 150 நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர். புவிவெப்பமடைவது உள்ளிட்ட பல காலநிலை மாற்றங்களுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக் கைகளை ஒருங்கிணைந்து எடுப்பதே இந்த மாநாட்டின் நோக்கம்.

புவி வெப்பமடைதலின் கோர விளைவுகளை விஞ் ஞானிகள் பல ஆண்டுகளாக சீரிய அறிவியல் ஆய்வுத் தகவல்களுடன் அறிவுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் இதுவரை நடத்தப்பட்ட பருவநிலை மாற்ற ஐ.நா. மாநாடுகளில் புவி வெப்பமடைதல், கரியமிலவாயு வெளியேற்றம் ஆகியவற்றை தடுக்கும் நடவடிக்கைகளில் எந்த வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அத்துடன், மேலும் உற்பத்தி நடவடிக்கைகள் பெருகவே செய்துள்ளன என்பதை உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பினர் கவலையுடன் எதிர்நோக்குகின்றனர்.

எனவேதான் பாரிஸ் மாநாடு குறித்து பெரும் எதிர் பார்ப்பு எழுந்துள்ளது. உலக நாடுகள் அனைத்தும் இணைந்து இந்த மாநாட்டில் ஓர் இணக்கத்துக்கு வந்து உலகத்தைக் காப்பாற்ற ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று சுற்றுச் சூழல் ஆர்வலர் கள் விரும்புகிறார்கள்.

சரி, நாடுகள் இதற்காக ஒன்றுமே செய்யவில்லை என்றால் என்ன ஆகும்? கடலோர நகரங்கள் கடல்நீரில் அமிழ்ந்து போகும். கடல் மட்டம் உயர்வது இதற்குக் காரணமாகும். உலகின் பெரும் பகுதிகள் வெப்ப அலைகளினால் தாக்குண்டு வறட்சியைச் சந்திக்கும். பட்டினிச் சாவுகள் அதிகரிக்கும். இவற்றால் பெருமளவு அகதிகள் பெருகுவார்கள். வளர்ந்த நாடுகள் பெரும் அச்சுறுத்தலைச் சந்திக்கத் தயாராக வேண்டும்.

ஒன்று புவிவெப்பமடைதல் நிகழ்வை கட்டுக்குள் கொண்டு வரவேண்டும், இல்லையெனில் அதன் தீவிர விளைவுகளைச் சந்திக்க தயாராக இருக்க வேண்டும். வளர்ந்த நாடுகளே புவி வெப்பமடைதலுக்குப் பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றன. அதேநேரத்தில் புவி வெப்பமடைவதால் ஏற்படக் கூடிய இயற்கைப் பேரிடர்களைச் சந்திக்கும் வலுவையும் அவை கொண்டிருக்கின்றன. ஆனால் அத்தகைய இயற்கைப் பேரழிவுகளைச் சந்திக்கும் ஏழை நாடுகளிடம் அதற்கான பொருளாதார வலுவில்லை. எனவே அவை பேரழிவுகளைச் சந்திக்க நேரிடும்.

இந்த நிலையிலேயே பாரிஸில் உலகத் தலைவர்கள் பருவநிலை மாற்ற ஐ.நா. உச்சி மாநாட்டுக்காகக் கூடி னர். இப்போது அவர்கள் அனைவரும் நாடு திரும்பி விட்டனர். எனினும் அவர்களின் பிரதிநிதிகள் தொடர்ந்தும் இது பற்றி விவாதித்து வருகிறார்கள். எதிர்வரும் 11ஆம் திகதி வரை மாநாடு இடம்பெறும்.

இந்த மாநாடும் இந்த விவகாரத்தில் குறிப்பிடத்தகுந்த அதிரடி முடிவுகளை எடுக்க முடியாது போனால், என்ன ஆகும் என்பது தொடர்பாக சுற்றுச்சூழல் அமைப்புகள் 15 அம்சங்களைச் சுட்டிக்காட்டி எச்சரித்துள்ளன.

1. இந்த நூற்றாண்டு முடிவில் பூமியின் வெப்ப அளவு 4 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும். இது குறித்த இமாலய அளவுக்கு விஞ்ஞான ஆய்வுத் தரவுகள் உள்ளன. அவை 4 டிகிரி செல்சியஸ் வெப்ப அளவு அதிகரிப்பு பேரழிவில் கொண்டு விடும் என்று எச்சரித்துள்ளன.

2. எது எப்படி போனால் என்ன? நாம் நம் உற்பத்தி, வர்த்தக நடவடிக்கைகளை கவனிப்போம் என்ற அலட்சிய நோக்கு, மீண்டும் நிலைநிறுத்த முடியாத அளவுக்கு பேரழிவுகளை ஏற்படுத்தும் என்று நாடுகளுக்கிடையேயான ஐ.நா. பருவநிலை மாற்றக் குழு எச்சரித் துள்ளது.

3. 2100ஆம் ஆண்டில் உலக அளவில் கடல்நீர் மட்டம் 26-82 செ.மீ. வரை அதிகரிக்கும் அபாயம் உள்ளது. அளவு அதிகரிக்கவே கூடுதலான வாய்ப்பிருப்பதாக ஐ.நா. தரவுகள் கூறுகின்றன.

4. கிரீன்லாந்து, அண்டார்டிகா பனிப்படலங்கள், இமயம் உள்ளிட்ட மலைகளின் பனிச்சிகரங்கள் உருகிக் காணாமற்போய்விடும். இதனால் கடல் நீர்மட்டம் அதிகரிப்பதோடு வெப்பமடைவதும் நிகழும்.

5. ஐ.நா. நிர்ணயித்த வெப்ப நிலை அதிகரிப்பான மட்டுப்படுத்தப்பட்ட 2 டிகிரி செல்சியஸ்கூட 28 கோடி மக்களின் அழிவுக்குக் காரணமாகிவிடும்.

6. அதிவேக புயல்கள், உறைய வைக்கும் குளிர், தீவிர வெப்ப அலைகள் ஆகியவை வழக்கமானவையாக மாறிவிடும்.

7. கடும் வெள்ளங்கள், பனிப்புயல், தைஃபூன் சூறைக் காற்று ஆகிய இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்ள வேண்டிவரும்.

8. மேலும் உலகின் ஒரு பகுதியில் தண்ணீருக்கு கடும் பற்றாக்குறை ஏற்படும்.

9. சிரியா மற்றும் கலிபோர்னியா வறட்சி நிலைக்கு வானிலை மாற்றமே காரணம் என்பதை விஞ்ஞானிகள் நிறுவியுள்ளனர்.

10. பருவநிலை மாற்றம் விளைவிக்கும் பெரிய வெள்ளங்களினால் பெரும்பகுதி மக்கள் திரள் தங்கள் இருப்பிடங்களை விட்டுப் புலம்பெயர வேண்டும்.

11. விவசாயம் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு, உணவுப்பொருள் தட்டுப்பாடுகள் ஏற்படும்.

12. நீராதாரத்திற்காக போர் மூளும் அபாயமும் உள்ளது.

13. கடல் நீர்மட்ட உயர்வினால் சுந்தரவனக் காடுகள் அழியும் ஆபத்து உள்ளது. இந்தப் பகுதியிலிருந்து இதுவரை இல்லாத அளவுக்கு வரலாறு காணாத மக்கள் தொகை புலம் பெயரும் நிலை ஏற்படும்.

14. மாலத்தீவுகள், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் கடல் நீர்மட்ட உயர்வால் வானிலை மாற்ற அகதி நாடுகளாக மாறும் நிலை ஏற்படும்.

15. இயற்கைப் பேரிடர்களினால் ஏற்படும் விளைவுகளிலிருந்து மக்களுக்கு நிவாரணம் அளிக்க முடியாமல் ஏழை நாடுகள் பொருளாதார தேக்க நிலைக்குத் தள்ளப்படும்.

இவை அனைத்தும் நிகழாமல் இருக்க வேண்டுமானால், பாரிஸ் மாநாட்டில் உருப்படியான தீர்மானங்கள் எடுக்கப்படவேண்டும். உலகை இன்னும் இன்னும் வெப்பமாக்காமல் இருப்பதற்கு உலக நாடுகள் அனைத்தும் இணங்க வேண்டும். அதனைச் சாதிக்கத் தவறினால், இந்தப் பூமியை இறைவனாலும் காப்பாற்ற முடியாமல் போய்விடும்.

## மாடியில் காடு!

பாரிஸில் இருக்கும் ' ஃப்ளவர் டவரைப்' பூங்கா கோபுரம் பார்க்கும்போது அடுக்கு மாடிக் கட்டடத்தில் சின்னக் காடு இருப்பது போலத் தோற்றம் தரு கிறது. 10 மாடிகள் கொண்ட அந்தக் குடியிருப்பில் ஒவ்வொரு தளத்திலும் 380 மூங்கில் மரங்கள் தொட்டிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன.

மழை நீர் சேமிக்கப்பட்டு, செடிகளுக்குத் தானாகத் தண்ணீர் செல்லும் விதத்தில் ஏற்பாடு செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.கிஷாந்தன்

# மலையகத்துக்கு அதிர்ச்சி தந்த நாள் டிசெம்பர்–4

1974 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி இரவு 10 மணி 10 நிமிடம் மஸ்கெலியா நோட்டன் பிரிட்ஜ் தெப்பட்டன் பகுதியை மட்டுமல்லாது அந்தப் பிரதேசத்தை அண்டிய ஏனைய பகுதி மக்களை யும் பீதியடைச் செய்த சம்பவம் அது.

ஆம் இந்தோனேசியா சுராபயாவிலிருந்து 182 ஹஜ் பயணிகளை ஏற்றிக்கொண்டு மக்கா நோக்கி பயணித்த மார்டின் எயார் டீ.சீ 8 ரக பயணிகள் விமானம் சப்த கன்னியா என அறியப்படும் ஏழுகன்னியர் மலையில் ஐந்தாவது குன்றின் மீது விமானம் மோதி சிதறிய நாள் அது. விமானமோட்டிகள் உட்பட 191 பேரும் அதே இடத்தில் உடல் சிதறி உயிரிழந்தனர்.

இலங்கை நாட்டைப் பொறுத்தவரை இது வரை வெளிநாட்டு விமானம் ஒன்றுக்கு ஏற்பட்ட மிக மோசமான விபத்து இதுவாகும். மலையகத்துக்கு இது ஓர் அதிர்ச்சியளித்த புது அனுபவம்.

191பேரைக் காவு கொண்ட இந்த ஏழு கன்னியர் மலையை ஆங்கிலத்தில் "வில்கின் ஹில்ஸ்" என்று அழைக்கின்றனர். இந்த விபத்தில் சாவடைந்த 190 பேர் தெப்பட்டன் தோட்ட கொத்தலென பகுதியில் அந்த இடத்திலேயே புதைக்கப்பட்டனர்.

அடையாளம் காணக்கூடியவாறு இருந்த விமானப்பணிப்பெண்ணில் உடலை அவரின் காதலர்ஹெலிகொப்டர்மூலமாக இந்தோனேசியாவுக்குக் கொண்டு சென்ற நெகிழ்ச்சியான சம்பவமும் இதில் அடங்கும்.

அத்தோடு விபத்துக்குள்ளான விமானப் பாகங்களில் எஞ்சியிருக்கும் ரயர்கள் இரண்டு மட்டும் இதுவரை பாதுகாக்கபட்டு வருகின்றன. ஒரு ரயர் நோட்டன் பொலிஸ் நிலையத்தில் உள்ளது. நல்ல நிலையிலிருக்கும் ரயர் நோட்டன் விமலசுரேந்திதர அணைக்கட்டுக்குச் செல்லும் வழியில் சம்பவங்ளைச் சுருக்கமாகத் தாங்கிப் பார்வைக்காக காட்சியப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த இடத்தில் சேகரிக்கப்பட்ட டொலர் தாள்கள் இன்னோரன்ன பொருள்களை அந்தப் பிரதேச மக்கள் பாதுகாத்து வருகின்றனர்.


அனைவரையும் புதைக்கப்பட்ட இடத்தில் நினைவுத்தூண் ஒன்றும் அமைந்துள்ளது. ஆனால் இன்று அந்தப் பகுதி காடாக காட்சியளிக்கின்றமை கவலைக்குரியதாகவுள்ளது.

இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 4 ஆம் திகதி இந்தோனேசியாவிலிருந்து உறவினர்கள் இந்த இடத்துக்கு வந்து செல்வது பலருக்கு தெரியாத விடயமாகவுள்ளது. விமானத்தின் கறுப்புப்பெட்டி தகவலின்படிதொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே இந்த விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் நடந்த இடத்தில் வசித்தவர்கள் இன்னமும் அந்தப் பகுதிக்குச் செல்பவர்களுக்கு சம்பவத்தை எடுத்துக்கூறுபவர்களாகவும் உள்ளனர். இந்த விமானத்தை செலுத்திய விமானி 8 தடவைகள் இலங்கை மார்க்கமாக மக்காவுக்கு விமானத்தை செலுத்திய அனுபவஸ்தர் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒரு முக்கிய விடயமாகும். இந்த வருடம் டிசெம்பர் 4ஆம் திகதியுடன் இந்த விபத்து இடம்பெற்று 41 வருடங்கள் கடந்து விட்டன. இன்னமும் இந்தச் சம்பவம் குறித்த நினைவுகளில் இந்தப் பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.













முதல் திரைப் படம் தோல்வி. இரண்டாவது படம் பாதியில் கைவிடப்பட்டுவிட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மூன்றாவதாக ஒரு படத்தை இயக்கும் வாய்ப்பு கிடைக்கிறது கருணாகரனுக்கு. ஆனால் ஒரு நிபந்தனை. படத்தைத் தயாரிக்க முன்வரும் எம்.எஸ்.பாஸ்கரின் செல்ல மகள் நந்திதாவைப் படத்தின் கதாநாயகியாக அறிமுகப்படுத்த வேண்டும். பட வாய்ப்பைப் பெற்றுத்தந்த மயில்சாமி பரிந்துரைக்கும் கிராமத்து இளைஞன் "டவுட்" செந்திலை உதவி இயக்குநராகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்தச் சமரசங்களைச் செய்துகொள்ளும் இயக்குநர் கருணாகரன், தனது நண்பர்கள் குழுவுடன் இணைந்து படத்தை இயக்கத் தயாராகிறார். அவரால் தயாரிப்பாளரின் மகளை நடிக்க வைக்க முடிந்ததா? உதவி இயக்குநராகச் சேர்ந்த "டவுட்" செந்திலால் பயன் இருந்ததா? படப்பிடிப்பு நடந்ததா ஆகிய கேள்விகளுக்குப் பதில்தான் உப்பு கருவாடு படம்.

தரமான படத்தைக் கொடுக்க வேண்டும் என்று கனவு காணும் இயக்குநர்களுக்கு, படத்தைத் தயாரிக்க முதலீடு செய்பவர்களிடமிருந்து வரும் நெருக்கடிகளை பற்றி இறுக்கமாகவும் அதேநேரம் நகைச்சுவையாகவும் பேசிய பல படங்களைத் தமிழ் சினிமா கண்டிருக்கிறது. தேர்ந்த வசனங்களுக்காகவும் உணர்ச்சிகரமான காட்சிகளுக்காகவும் பெயர்பெற்ற ராதா மோகன் இயக்கியிருக்கும் இந்தப் படமும் அதே கதையைத்தான் கையாள்கிறது.

சினிமா எடுப்பதற்கான போராட்டத்தை இயல்பான நகைச்சுவை கலந்து விறுவிறுப்பாகச் சொல்லியிருக்கிறார் இயக்குநர். பொன் பார்த்திபனின் வசனங்கள் படத்தின் பெரிய பலம். குறிப்பாகப் புண்படுவது குறித்த வசனம் கூர்மை. படம் எடுப்பதைப் பற்றிய படம் என்பதால் கதை விவாதம், ஒத்திகை என்று சில காட்சிகள் திரும்பத் திரும்ப வருகின்றன. ஆனால் அந்தக் காட்சிகளைச் சித்திரித்த விதத்தில் வித்தியாசம் காட்டி சுவாரஸ்யம் கூட்டியிருக்கிறார் ராதா மோகன். படத்தின் ஆதாரமான அம்சத்தை நீர்த்துப்போகச் செய்யாமல் எல்லாக் காட்சிகளிலுமே நகைச்சுவையைக் கலந்திருப்பது படத்தில் சிறப்பம்சம். கதையோடு ஒட்டிய பாத்திரச் சித்திரிப்புகளே நகைச்சுவைக்கு உத்தரவாதம் அளித்துவிடுகின்றன.

மயில்சாமி, ஜோதிடராக வரும் "டாடி" சரவணன், "டவுட்" செந்தில், நந்திதா ஆகியோரின் பாத்திரங்கள் கேலிச் சித்திரங்களாக இருப்பது கதைக்குப் பொருத்தமாக இருக்கின்றன. ஆனால் படம் எடுக்கும் எம்.எஸ். பாஸ்கரின் பாத்திரமும் கேலிச்சித்திரம் போலச் சித்திரிக்கப்படுவது படத்தின் ஆதாரத்தையே அசைப்பதாக உள்ளது.

படம் எடுப்பதிலுள்ள போராட்டம், வேதனை, பரவசம் ஆகியவை இயல்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த முயற்சிகளை மேற்கொள்ளும் மனிதர்களின் வாழ்க்கை யதார்த்தம் வலுவாக உருப்பெறவில்லை. இளங்கோ குமாரவேலின் பாத்திரம் மட்டுமே கனமாக உள்ளது. இயக்குநராக வரும் கருணாகரனின் பாத்திரம்கூட வலுவாக இல்லை. ஆனால் அவரது உண்மை வாழ்வின் காதல் அத்தியாயம் அழகாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

நகைச்சுவை நடிப்புக்காகப் புகழ் பெற்றுவரும் கருணாகரனை ஒரு முழு நீள நகைச்சுவைப் படத்தில் முழுக்க முழுக்க கனமான கதாபாத்திரத்தில் கச்சிதமாகப் பொருத்தியிருப்பது பாராட்டுக்குரியது. இந்த வாய்ப்பின் மதிப்பை நன்கு உணர்ந்து நடித்திருக்கிறார் கருணாகரன். ஒரே காட்சியில் இரு வேறு விதமாக நடிப்பதற்கான சவாலை நந்திதா நேர்த்தியாகக் கையாள்கிறார்.

ராதாமோகன் படங்களில் வலுவான பாத்திரத்தை ஏற்று அதற்குரிய நியாயம் செய்யும் இளங்கோ குமாரவேல் இந்தப் படத்திலும் அதைச் செய்திருக்கிறார். "டவுட்" செந்தில்போடும் அப்பாவித்தனமான வெடிகள் திரையரங்கைக் கலகலக்க வைக்கின்றன. சாம்ஸ், மயில்சாமி என அனைவரும் தங்கள் கதாபாத்திரங்களை உணர்ந்து செய்திருக்கிறார்கள். சரவணன் மீனாட்சி புகழ் ரஷிதாவின் நடிப்பு மனதில் நிற்கிறது.

மகேஷ் முத்துசுவாமி, கதைக்கான பொருத்தமான ஒளிப்பதிவைத் தந்திருக்கிறார். வசனங்களால் நகரும் காட்சிகள் அதிகம் என்பதால் ஸ்டீவ் வாட்ஸின் இசை தேவைப்படும் இடங்களில் அமைதியாக இருந்துவிடுவது படத்தை முழுமையாக ரசிக்க உதவியிருக்கிறது.

படைப்பூக்கத்துடன் போராடுபவர்கள், எத்தனை பொய்களைச் சொல்லியும் சினிமாவில் வேலை கிடைத்தால் போதும் என்று நினைப்பவர்கள், காலத்துக்கேற்ப மாற்றிக்கொள்ளாமல் தேங்கிவிடும் உதவி இயக்குநர்கள், கோடம்பாக்கத்துத் தெருக்களில் திக்கற்றுத் திரியும் "டவுட்" செந்தில் போன்ற இளைஞர்கள், தமிழ் சினிமாவிடம் மேன்மையை எதிர்பார்க்கும் இளங்கோ போன்ற சாமானியர்கள், நடிப்பு வாசனையே அறியாமல் நடிக்க வைக்கப்படும் கற்றுக்குட்டிகள் எனக் கோடம்பாக்கத்தின் பிரதிநிதிகள் சிலரை ராதாமோகன் நகைச்சுவை முலாம் பூசி நம் கண்முன் நிறுத்துகிறார். படம் எடுப்பதைப் பற்றிப் படம் எடுத் திருக்கும் இயக்குநர், அந்தச் சூழலை ஆழமாகக் கையாளவில்லை என்பது பெருங்குறை. வாழ்வின் யதார்த்தத்தைச் சொல்லவும் அதைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. என்றாலும் நகைச்சுவை, வசனங்கள், பாத்திரப் படைப்புகள் ஆகியவற்றால் உப்பு கருவாடு மணக்கிறது. ஒரு தடவை போய்ப் பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ். தீவிரவாதம் உலக நாகரிகத்துக்கு எதிரான சவால்

## ஜி - 20 மாநாட்டில் உலகத் தலைவர்கள் ஆலோசனை







ஜி - 20 மாநாட்டுக்காக அன்டால்யா நகரில் கூடியிருந்த உலகத் தலைவர்கள் உலக பொருளாதாரம், வர்த்தகம் விசேடமாக உலக வெப்பமடைதல் போன்ற விடயங்களில் மாத்திரம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. இந்த மாநாடு ஆரம்பமாவதற்கு சில நாள்களுக்கு முன்பே பாரிஸ் நகரில் இஸ்லாமிய அரசு எனப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு நடத்தியிருந்த அப்பாவி மக்கள் மீதான படுபாதக கொலைவெறித் தாக்குதல்கள் பற்றியும் விரிவாக ஆராய்ந்திருக்கிறார்கள்.

ஈராக்கிலும் – சிரியாவிலும் பெரும் நிலப்பரப்பை ஆக்கிரமித்துக் கொண்டு தமது ஆட்சியை நிலைநிறுத்தியுள்ள ஐ.எஸ். அமைப்பு உலக அமைதிக்கே அச்சுறுத்தலை விடுத்து வருவது பற்றி மாநாட்டில் உலகத் தலைவர்கள் ஆலோசித்திருக்கிறார்கள். அதன் விளைவாகவே இப்பொழுது அமெரிக்கா, ரஷ்யா மற்றும் பல நாடுகள் இணைந்து ஒருங்கிணைந்த முறையில் ஐ.எஸ். அமைப்பை ஒழித்துக் கட்டுவதற்குத் திட்டம் வகுத்து வருவதாகச் செய்திகள் கூறுகின்றன.

அமெரிக்க அதிபர் ஒபாமா ஜி - 20 மாநாட்டில் குறிப்பிடும்போது "ஒரு திரிபுவாத தத்துவார்த்தத்தின் மீது அப்பாவிப் பொது மக்களைத் தாக்கி அவர்களைக் கொன்றிருக்கும் நிகழ்வு பிரான்ஸ் நாட்டின் மீது அல்லது துருக்கியின் மீது மட்டும் நடத்தப்பட்ட தாக்குதல் அன்று, முழு நாகரிக சமுதாயத்தின் மீதும் நடத்தப்பட்டுள்ள தாக்குதலாகும்" என்று சரியாகவே குறிப்பிட்டிருந்தார்.

பிரான்சில், சார்லி யஹப்டோ நிறுவனத்தின் மீது கடந்த ஜனவரியில் ஐ.எஸ். தாக்குதல் நடத்தி 17 பேரைக் கொன்றதன் பின்னர் இரண்டாவது தடவையாக நவம்பர் 13ஆம் திகதி பாரிஸில் அவர்கள் நடத்திய காட்டுமிராண்டித் தனமான தாக்குதலில் 129 அப்பாவி மக்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள். அது மிகக் கவனமாக ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்பட்டுள்ள தாக்குதலாகும்.

குறிப்பிட்ட ஆறு இடங்களில் 8 ஆயுததாரிகள் இதனை நடத்தியிருந்தார்கள். எட்டுப்பேரில் ஏழுபேர் தற்கொலை செய்து கொண்டார்கள். பட்டக்ளன் நாடக அரங்கில் நடத்தப்பட்ட தாக்குதலே மிக மோசமானதாகக் கணிக்கப்பட்டுள்ளது. அதில் 80 பேர் கொல்லப்பட்டார்கள்.

இந்தச் சம்பவத்துக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கம் உரிமை கொண்டாடியிருப்பதுடன் தனது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசத்துக்கு அப்பால் முழு உலகத்தின் மீதும் அது போருக்கான அறிவிப்பையும் செய்துள்ளது.

ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்கள் சமயக் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அனைவரையும் அவிசுவாசிகளாகக் கருதுகிறார்கள். அதனால் தாம் கைப்பற்றும் பகுதியிலுள்ள ஏனைய மதத்

> “ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்கள் சமயக் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் அனைவரையும் அவிசுவாசிகளாகக் கருதுகிறார்கள். அதனால் தாம் கைப்பற்றும் பகுதியிலுள்ள ஏனைய மதத் தலைவர்களைத் தமது கொள்கைகளை ஏற்றுக் கொண்டு மதம் மாற அச்சுறுத்துகிறார்கள்.”

தலைவர்களைத் தமது கொள்கைகளை ஏற்றுக் கொண்டு மதம் மாற அச்சுறுத்துகிறார்கள். மாறாதவர்களைத் தண்டிக்கிறார்கள். எதிர்த்துப் போராடுபவர்கள் பிடிபட்டால் மிக மோசமான முறைகளில் வெட்டியும், சுட்டும், பள்ளத் தாக்குகளில் தள்ளிவிட்டும் மனித குலத்துக்கு ஒத்து வராத முறைகளில் கொலை செய்கிறார்கள்.

கடந்த காலங்களில் உலகின் பல நாடுகளிலும் போரில் வென்ற நாடுகள் வெல்லப்பட்ட நாடுகளில் தமது மதங் களைப் பலவந்தமாகவும் உதவிகள், சலுகைகள் மூலமும் பரப்பி வந்துள்ளன. ஆனால் இப்போது தலையெடுத்துள்ள ஐ.எஸ். அமைப்பின் செயற்பாடுகள் நினைத்துப் பார்க்கும் [illegible] மிராண்டித்[illegible] அப்பாவி மக்களைத் தாக்கிப் படுகொலை செய்வதென்பது நிச்சயம் இஸ்லாமியமாக இருக்காது என்று அறிஞர்கள் கூறுகின்றனர். பல இஸ்லாமிய நாடுகளும் இதனைக் கண்டித்துள்ளன.

ஐ.எஸ். அமைப்பானது இஸ்லாமிய நாடு ஒன்றைத் தங்கள் தத்துவங்கள், கோட்பாடுகள், நம்பிக்கைகளின் அடிப்படையில் அமைத்துக் கொள்வதை மட்டும் நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. தமக்கு மாறான கோட்பாடுகளைக் கொண்டவர்கள், அப்படியான நாடுகள் மீதும் ஊடுருவித் தாக்குதல் நடத்துவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளனர். அந்த வகையிலேயே பாரிஸ்நகரில் பெரும் தாக்குதலை நடத்தியுள்ளனர். அது மட்டுமல்ல அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்கும் ஏற்கனவே அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பொதுவில் ஐ.எஸ். அச்சுறுத்தல் முழு உலகையுமே உள்ளடக்குவதாக உள்ளது என்பதை இப்போது உலகத் தலைவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். எனவேதான் உலக வல்லரசுகள் அந்த அமைப்பின் முக்கிய கேந்திர நிலைகளைத் தகர்ப்பது குறித்து இப்போது ஆலோசிக்கத் தொடங்கியுள்ளன.

இதில் எதிரும் புதிருமாக இருந்து வந்துள்ள அமெரிக்காவும் – ரஷ்யாவும் இணைந்து செயற்படத் தீர்மானித்திருப்பதாக வந்துள்ள செய்தி – ஐ.எஸ். தாக்குதல் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள நாடுகளுக்கு ஆறுதல் அளிப்பதாக இருக்கும். ஏற்கனவே பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி போன்ற வல்[illegible] கூட்டணியில் இணைந்து [illegible]ள்ளன. பாதிக்கப்பட்டுள்ள மத்திய கிழக்கு நாடுகளும் இதில் இணைந்து கொள்வது சாத்தியமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலுடன்

உன் நினைவுகளோடு
உயிர் வாழ்கிறேன்...
உன் வார்த்தையில்
வண்ணமாகிறேன்
உன் பார்வையில் – என்
பாதையைக் காண்கிறேன்
உன் கோபத்தையும்
குறைவில்லாமல் ரசிக்கிறேன்...

இன்று உன் பிரிவில்
என் வழியை உணர்கிறேன்...
இன்று உன் வருகைக்காக
விழிகளை வழிகளில் வைத்து
காத்திருக்கிறேன்
காதலுடனும் கற்பனையுடனும்

## நினைவுகள்

உன்னை
மறக்க நினைத்து
தனிமையைத் தேடினேன்
அங்கும்
உன் நினைவுகள்
தளம் பார்த்து
இடம் போட்டுக் கிடக்கிறது

## ஒப்பாரி

ஆழமான துயரத்துடன்
நிகழ்ந்துவிட்டது
நம்முடைய பிரிவு...
நீ என்னை மறந்து போக
நினைத்திருக்கலாம்
அப்போதுதான் உனக்கு
காதல் புரியும்...!
ஒப்பாரி என்றால் என்ன ?
இப்போது தெரிந்தது எனக்கு !
உன் ஒவ்வொரு செயலும்
என் காதலுக்கு ஒப்பாரி தான்...!

## நீ யார் ?

கொதிக்கிறதே கண்களுக்கு
யார் உலை வைத்தது ?

தெறிக்கிறதே – நெற்றியில்
யார் பட்டறை போட்டது ?

தகிக்கிறதே
என் உடம்பைக் கொளுத்தி
யார் குளிர் காய்வது ?

என்னை இந்தக்
கதகதப்பான பரப்பில்
வெதுவெதுப்பாக வைத்தது யார் ?

செலவில் எழுதப்பட்ட
என் உயிரை
வரவில் எழுதி வைத்தது யார் ?


இந்தப் பூமியெனும் சிலுவையில்
என்னை ஆணிகொண்டு
அறைந்தது யார்?

என் சவத்துணியைக் கிழித்து
என் காயங்களுக்கு
பொன்னாடையாய் போர்த்தது யார் ?

என்னைப் பாதி சாவுப்படுக்கையில்
கிடத்திவிட்டுப் போன
நீ யார்......?



சுண்டியூர் எஸ்.தர்சி
கவிதைகள்



# இன்றும் இருக்கிறார்கள் அடிமைகள்!

எம். அருண்குமார்

இந்த நவீன காலத்திலும், உலக அளவில் மூன்று கோடி மக்கள் இப்போதும் அடிமைகளாக இருக் கின்ற னர் என்ற தகவல் அதிர்ச் சியை அளிக்கின்றது. கொத்தடிமைகள், கட்டாய பாலியல் தொழிலில் ஈடுபடுத் தப்படு பவர்கள், குழந்தைத் தொழிலாளர் கள், கட்டாயத் திருமணம் செய்யப்பட் டவர்கள், குழந்தைத் திருமணம் செய்யப் பட்டவர்கள் என அடிமைத்தனம் இன்றும் இருப்பது கவலைக்குரியது.

தனியார் தொண்டு அமைப்பு, உலகம் முழுவதும் 162 நாடுகளில் எடுத்த கணக் கெடுப்பில் அனைத்து நாடுகளிலும் அடி மைத்தனம் இன்றும் இருந்து கொண்டி ருப்பதைக் கண்டறிந்துள்ளது. எமது பக்கத்து நாடான இந்தியாவில் மட்டும் 1.4 கோடி மக்கள் இன்றும் அடிமைகளாக இருக்கின்றனர் என்றால் நம்புவதற்குக் கடினமாக இருக்கும், ஆனால் அதுதான் உண்மை என்கிறது 2013ஆம் ஆண்டில் வெளியான அறிக்கை தெரிவிக்கிறது.

அடிமைமுறை என்பது வலுக்கட்டாயமாக மனிதர்களைப் பிற மனிதர்கள் பிடித்து வைத்து, அவர்களிடமிருந்து வேலையை வாங்குவதாகும். இம்முறை நெடுங்காலமாகப் பல நாடுகளில் வழக்கில் இருந்துவந் துள்ளது. மனிதர் கள் அவர்களுடைய முத லாளிகளால், பிற பொருள்க ளைப்போல வாங்கி, விற்கப்பட்டனர்.

அடிமை முறை தொன்மைக் காலங்களில் இனங்களி டையேயான போரினால் ஏற்பட்டது. தோற்ற வீரர்கள் அடிமைகளாக் கப்பட்டார்கள். அவர்களின் பெண்களும், குழந்தைகளும் அடிமையாக்கப்பட்டனர். எகிப்தியர், போர் களில் தோற்ற வர்களையும், மற்றவர்களிடமிருந்து விலை கொடுத்து வாங்கியவர்களையும் அடிமைப்படுத்தினர். அடிமைகள் முதலில் அரசருக்குச் சொந்தம். அரசர் தனக்கு வேண்டி யவர்க்கு அடிமைகளைப் பரிசளிக்கும் வழக்கம் இருந் தது. அடிமை முறை கிரேக்க நாகரிகத்தில் பெரும்பங்கு வகித்தது. இந்தியாவிலும் அடிமை முறை இருந்துள்ளது. மன்னர்களும், வளம் படைத்தவர்களும் ஆண்களையும், பெண்களையும் விலைக்கு வாங்கி வேலை செய்ய வைத் துள்ளனர். மேலும், அடிமைகளை மற்றவர்களுக்குப் பரிசாக வழங்கியுள்ளனர்.

அடிமை விற்பனை, ஓலையில் பத்திரம்போல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது ஆளோலை, ஆள்விலைப் பிரமாண இசைவு சீட்டு, அடிமை விற்பனைப் பத்திரம் எனப் பெயர் பெற்று இருந்துள்ளது.

வறுமையின் காரணமாகத் தம் குடும்ப உறுப்பினர் களையும், தம்மைத்தாமேயும் விற்றுக் கொள்வதும் நிகழ்ந்துள்ளன. ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த வர்களும் அடிமைகளாக இருந்துள்ளனர்.

அடகுதொழிலாளர் முறையில் இன்றும் லட்சக்கணக்கான மக்கள் கட்டுண்டு உள்ளனர். நிலச்சுவான்தாரிடம் தன்னை அடகு கொடுத்து பெரிய வட்டியில் கடன் வாங்கி, அதை திருப்பிக் கொடுக்க முடியாமல் தன்னையும், தன் மனைவி மக்களையும் அந்த நிலச்சுவான்தாரிடம் அடிமைப்படுத்தி தலைமுறை தலைமுறையாக அந்த அடிமைத் தனத்திலிருந்து மீள முடியாமல் வாடும் பலர் இருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

பழங்கால வாங்கி - விற்கும் அடிமை முறை கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேல் தடை செய்யப்பட்டு இருந்தாலும், இன்றும் ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் அடிமை முறை இருந்து கொண்டிருக்கின்றது. குறிப்பாக சூடான், மௌரிடேனியா ஆகிய நாடுகளில் இது நடக்கிறது.

இரண்டாம் உலகப் போரின்போது ஆசியாவின் பல நாடு களைக் கைப்பற்றிய ஜப்பான், அந்தப் பகுதி மக்களை அடிமைகளாக வேலை வாங்கியுள்ளது. 19, 20ஆம் நூற் றாண்டுகளில் உலகெங்கும் உள்ள நாடுகளில், பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அடிமை முறையை நீக்கும் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. யூதர் களை அடிமைகளாக்கி வேலை வாங்கியது ஜேர்மனி.

18ஆம் நூற்றாண்டின் பின் பகுதியிலிருந்துதான் அடிமை முறையை மொத்தமாக ஒழிக்க சமூக ஆர்வ லர்களின் குரல்கள் எழுந்துள்ளன. இவை முதலில் இங்கிலாந்தில் வில்லியம் வில்பர்போர்ஸ் என்பவரால் பரப்புரை செய்யப்பட்டது. 19ஆம் நூற்றாண்டில் பல நாடு கள் அடிமை முறையை தடை செய்து ஒழித்துள்ளன.

20ஆம் நூற்றாண்டில்கூட, கொடூர அரசுகள் கோடிக் கணக்கான மக்களை அடிமை நிலையில் வைத்து சாகும் வரை கடும் வேலை செய்யவைத்து பிழிந்தெடுத்தன. அடிமைத்தனத்தை நீக்குவதற்காகப் பல முயற்சிகள் மே ற்கொண்ட ஐக்கிய நாடுகள் சபை 1949ஆம் ஆண்டு டிசெம்பர் 2ஆம் திகதியை சர்வதேச அடிமை ஒழிப்புத் தி னமாக அறிவித்தது.

அடிமைத்தனத்தை அகற்ற முதலில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது அவசியம். சாதாரண அடித்தட்டு, ஏழை மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியுள் ளது. பெரும்பாலும் அத்தகைய மக்கள்தான் அடிமை களாக இருந்து வருகின்றனர். அவர்களுக்குப் போதிய விழிப்புணர்வு, கல்வி அறிவு, பொருளாதாரம் தேவைப் படுகிறது. அடுத்தகட்டமாக, நவீன காலத்தில் உள்ள அடிமைத் தனத்தை அகற்றுவதற்குத் தேவையான புதிய கொள்கை களையும், சட்டங்களையும் இயற்றுவதற்கு மக்கள் பிரதி நிதிகள் பல்வேறு முயற்சிகளை எடுக்க வேண்டும்.

அரசு சாரா தொண்டு அமைப்புகள், அடிமைகளாக இருப்பவர்களை முதலாளிகளிடமிருந்து மீட்க நட வடிக்கை எடுக்கும் பட்சத்தில் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது.

அடிமைகளை மீட்டு அவர்களுக்கு உணவு, உறைவிடம், உடைகள் ஆகிய அடிப்படைத் தேவைகளை முதலில் பூர்த்தி செய்ய வேண்டும். நவீன சமுதாயத்தில் அவர்கள் மற்றவர்களைப்போல சுதந்திர மனிதர்களாக வாழ்வதற் காக அவர்களுக்கு உளவியல் ரீதியான ஆலோசனை களையும் வழங்க வேண்டும்.

வேலைவாய்ப்புக்கான பயிற்சிகளை வழங்கி, வேலை வாய்ப்பைப் பெற்றுத் தந்து, அதன் மூலம் கிடைக்கும் வருவாய் மூலம் தங்களுடைய பொருளாதார நிலையை உயர்த்தி வாழ்க்கை நடத்துவதற்கான சுயசார்பை பெற்றுத் தர வேண்டும்.

அப்போதுதான் அவர்கள் இந்த சமுதாயத்தில் மற்றவர் களைப்போல சுதந்திர மனிதர்களாக வாழ்க்கை நடத்து வார்கள். இதை உணர்த்துவதற்காகத்தான் ஒவ்வொரு டிசெம்பர் 2ஆம் திகதியையும் உலக அடிமைத்தன ஒழிப்பு தினமாகப் அறிவித்திருக்கிறார்கள்.

## அவர்கள் செய்தார்கள்; நான் திருப்பிச் செய்கிறேன்!



அலெக்ஸ் அஸ்ஸாலி சிரியாவில் இருந்து அகதியாக ஜெர்மனியில் தஞ்சம் அடைந்தவர். கடந்த ஓராண்டு காலமாக ஒவ்வொரு சனிக்கிழமையும் வீதியில் உணவுகளை வைத்து பசியால் வாடும் ஜெர்மன் மக்களுக்கு இலவசமாக உணவளித்து வருகிறார். அலெக்ஸின் சேவையைக் கண்டு நெகிழ்ந்து போயிருக்கிறார்கள் ஜெர்மன் மக்கள். சிலர் அவருடன் சேர்ந்து உணவளிக்கும் சேவையில் பங்கேற்கவும் செய்கிறார்கள்.

சிரியாவில் இருந்தபோது, அதிபரை எதிர்த்து ஃபேஸ்புக்கில் விமர்சனம் செய்தேன். என் உயிருக்கே அது ஆபத்தாக அமைந்துவிட்டது. என்னுடைய அடையாளத்தை மாற்றிக்கொண்டு, 2007ஆம் ஆண்டு ஜெர்மனிக்கு அகதியாக வந்து சேர்ந்தேன். எங்கே செல்வது என்று புரியவில்லை. தெரு வில் அலைந்த எனக்கு, நிறைய ஜெர்மன் மக்கள் உணவு, உடை என்று உதவி செய்தனர். ஒரு மூதாட்டி அவர் வீட்டில் என்னை தங்கிக் கொள் ளச் சொன்னார். ஒரு வேலை தேடிக் கொண்டேன். கணினி படித்தேன். இன்று தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். 8 ஆண்டுகளில் நல்ல நிலைக்கு வந்து விட்டேன். என்னைக் காப்பாற்றி, இன்று இந்த நிலைக்கு வாழ வைத்த ஜெர்மன் மக்களுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று முடிவு செய்தேன். அதனால் தினமும் பசிப்பவர்களுக்கு உணவளித்து வருகிறேன். நான் நன்கொடையாக எதையும் பெற்றுக்கொள்வதில்லை. என் சம்பளத்தில் இருந்து இதைச் செய்து வருகிறேன். கணினிப் பொறியாளராக இருந்தாலும் எனக்குச் சமைப்பது என்றால் விருப்பம் அதிகம். அதனால் நானே சமைத்து, எடுத்து வந்துவிடுவேன். ஏதா வது ஜெர்மன் மக்களுக்குத் திருப்பி அளிக்க வேண்டும் என்று எழுதி வைத்து விடுவேன். என்னைப் போல வேறு யாராவது இதுபோலச் செய்வதற்கு உதவியாக இருக்கும் இல்லையா? என்கிறார் மூச்சுவிடாமல். வாழ்க அலெக்ஸ்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அனித்தாவுக்கு இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. இனந்தெரியாத இன்ப உணர்வில் பூரித்தாள். மறுகணம் கண்கலங்கி அழுதாள்.

ரேகாவின் புன்னகையும் அழுகையும் மாறிமாறி வந்து அவள் மனக்கண்ணில் தரிசனம் தந்தன.

அவள் நல்வாழ்வுக்காய் எழுந்து இறைவனை மன்றாடினாள்.

ஒரு பெண்ணுக்குப் புனர்வாழ்வு அளித்ததான மகிழ்ச்சியில் புளகாங்கிதம் அடைந்தாள்.

கேசவனின் இந்த மனமாற்றத்தை ஓடிப்போய் அந்த நிமிடமே சித்திராவிடம் சொல்லிவிட வேண்டுமென்று மனது துடித்தது.

திருந்தாதவன் என்று உலகில் எவருமிருக்க முடியாதென்று நம்பினாள்.

அவனவன் பலவீனத்தை அறிந்து, உணர்த்துகிற மாதிரி உணர்த்தினால் எந்தக் கொடியவனையும் மனம்மாற்றலாம் என்று உணர்ந்ததாய்ப் பூரித்தாள்.

அந்த நினைவுகளை இடையறுத்து அம்மா அப்பாவின் நினைவு துளிர்த்ததும் மனது வெடித்துவிடும்போல் அழுதது.

சீ, அம்மாவுக்கு ஒரு சொல்... நாளைக்குக் கதைப்பம் அம்மா என்றவாறு சொல்லியிருந்தால், அவர்களாவது நிம்மதியாய்ப் படுத்துத் தூங்குவார்களே... என்று நினைத்தபோதுதன் அவசரச்செயலுக்காய்பெரிதும் மனம்வருந்தினாள்.

கேசவன் திரும்பிப்போகும்போது தன் மனநிலையை எவ்வாறு இவர்களுக்கு உணர்த்தியிருப்பானென்றும் அனுமானிக்க முடியவில்லை.

அவன் வந்து இரவு எனது அறையிலேயே நீண்டநேரம் தங்கி



நின்று என்ன கதைத்தான்....?

என்ன முடிவெடுத்திருப்போம் என்று, அந்த ஏக்கத்திலேயே புளுங்கிக் கொண்டிருப்பார்களே என்ற எண்ணம் நெஞ்சை அழுத்தியது.

நாளைக்கு எப்படி அம்மாவிடம் எடுத்துச் சொல்வதென்றும் புரியவில்லை.

கொஞ்ச நேரம் அதுபற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள்.

சிந்தனையை ஒருவழிப்படுத்த முடியாமல் தவித்தாள்.

தன்னைப்பற்றி, தன் தூய்மையைப் பற்றி அம்மா என்ன நினைப்பாள்? அப்பாதான் எதையுமே நம்பமாட்டாரே....?

இவ்வாறான தேவையில்லாத சிந்தனைகளால் சிறிது நேரம் அவதிப்பட்டாள்.

இதனை அறிந்தால், ஊரறிந்த துஷ்டனான கேசவனை நீ எப் படி இசைய வைத்தாயென்று சித்திராவே ஆச்சரியப்படு வாள் என்று நினைத்தாள்.

கேசவனைச் செய்யக்கூடாதென்று எனக்கொன்றும் பிடிவாதமில்லையே.., அவன் நடத்தை என் வாழ்வைச் சிதைக்கக்கூடாதென்ற நியாயமான உணர்வுதானே அவனை நெருங்கவிடாமல் என்னைத் தடுத்தது என்று அம்மாவிடம் சொல்ல வேண்டும்.

தேவையேற்பட்டால், ரேகா விசயத்தைச் சொல்லி, அவனைத் திசைதிருப்பி விட்டதாக அம்மாவிடம் சொல்ல வேண்டியதுதான்.

அடுத்து ரேகா. முதல் காதல் கொண் டவள் அவள். அவளையே முழு மையாக அடைய வழி வகுத்துக்கொடுத்த என்னை, சித்திரா நிச்சயம் தலைமேல் வைத்துக் கொண்டாடுவாள்.

கேசவன் மட்டுமென்ன, ரேகாவிடம் சொல்லாமலா விடப்போகிறான்?

இத்தியாதி நினைவுகளுடன் பின் னிரவில் தூங்கிப் போனாள்.

அம்மா வந்து நெடுநேரம் கத வைத் தட்டியிருக்க வேண்டும்.

கனவிலிருந்து சடுதியாக விழித்தது போல் விழிப்பு வந்தது. நேரத்தைப் பார்த்தாள்.

காலைச் சூரியனின் பிரகாசம் மிகுந்த ஒளிக்கதிர்கள் கண்களைக் கூச வைத்தன.

விடிந்து வெகு நேரமாகி விட்டிருப்பது புலனாக, வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து அவசர அவசரமாக பாத்ரூமுக்குப் போனாள்.

பல் துலக்கியது பாதி, கழுவியது பாதியாக குசினிக்குள் நுழைந்தாள்.

கண்களில் எரிச்சல் ஏற்பட்டது.

அம்மா, அவள் கண்களை ஊடுருவி எதையோ ஆராய்ந் தாள்.

அதை உணர்ந்தாற் போல் வாய் திறந் தாள் அனித்தா.

"அம்மா! அயர்ந்து போனன் என்ன..? நேரமும் போட்டுது! இண்டைக்கு வேலைக்குப் போறதா, விடுறதா எண்டு யோசிக்கிறன். போறதெண்டால் குளிச்சிட்டு வாறன். பிறகு ஆறுதலாய்க் கதைப்பம். இல்லாட்டி...."

அம்மாவின் முகத்தை ஏறிட்டாள்.

என்ன சொல்வதென்ற தயக்கம் அம்மாவிடம் தெரிந் தது.

இன்றே உடனடியாக ஓடிப்போய் சித்திராவிடம் எதையாவது உளறிக்கொட்டுவதைவிட, நாளைக்குச் சாவகாசமாய்ச் சொல்லிக் கொள்ளலாம் என்று நினைத்தாள்.

அந்த நினைப்பு வந்ததும், அம்மாவைப் பார்த்து முறு வலித்தாள்.

"அம்மா, எனக்கு அலுப்பாயிருக்குது. இண்டைக்குப் போகாமல் விடவா? சித்தாராவிட்ட லீவு நோட் குடுத்து அனுப்பலாமெண்டு பார்க்கிறன்..!"

அதை ஆமோதிப்பதுபோல், அம்மா ஒத்திசைவாகத் தலையசைத்தாள்.

> "உன் நல்ல மனசுக்கு ஆண்டவன் நிச்சயம் உனக்கும் நல்ல ஒரு வாழ்க்கை அமைத்தே தீருவார்!" என்று உளமார ஆசித்தாள். தீர்க்கதரிசிபோல் வார்த்தையால் வர்சித்தாள்.

"கொத்தான் என்னவாமடி பிள்ளை....?"

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அடக்க முடியாத அவசரத்தோடு அம்மா அவள் வாயைக் கிளறினாள்.

என்ன சொல்லலாம்? எப்படிச் சொல்லலாம்? என்று சற்றே யோசித்தாள்.

"நான்தான் நேற்றே சொல்லிப்போட் டேனே...."

முகத்தில் கேள்விக் குறியுடன் அம்மா ஏறிட்டாள்.

"அவருக்கு ஏற்கனவே ஒருத்தி வாழ்க்கைப்பட்டிருக்கிறாள்!"

அம்மா அதிர்ந்தாள்.

"அவன் சொன்னவனோ?"

"அவரெங்கை சொல்லிறது? நான் அறிஞ்சன். அதை உறுதிப்படுத்திட்டன். வேறு வழியில்லாமல் ஒத்துக் கொண்டார். இப்ப அவளோடு சமாதானமாய்ப் போகப்போறதாய் சத்தியம் பண்ணி யிருக்கிறார்."

அதற்குமேல் அம்மா பேசவில்லை. நகர்ந்து அப்பா விடம் போனாள்.

சித்திராவிடம் விடயத்தைச் சொன்னபோது அவள் மலைத்துப் போனாள்.

"உண்மையாய்த் தானாடி...?"

ஸ்ராவ் றூமில் இருக்கிறோம் என்பதையும் மறந்து, கட்டியணைத்து தன் மகிழ்ச்சியை வெளியிட்டாள்.

நல்லவேளை, என்ன ஏதென்று விடுப்புக்கேட்க அந்த நேரம் அங்கு யாருமில்லை.

"உன் வாய்க்கு ஸ்வீட் வாங்கிப்போட வேணுமடி, என் செல்லக்கண்ணு" என்று அளவுக்கதிகமாகவே சித்திரா உணர்ச்சிவசப்பட்டாள்

"உன் நல்ல மனசுக்கு ஆண்டவன் நிச்சயம் உனக்கும் நல்ல ஒரு வாழ்க்கை அமைத்தே தீருவார்!" என்று உளமார ஆசித்தாள். தீர்க்கதரிசிபோல் வார்த்தையால் வர்சித்தாள்.

எனக்குச் சிரிப்பு வந்தது.

"ஏன்டி சிரிக்கிறாய்?"

"சிரியாமல் பின்னை அழவா? கெட்டவனுக்கும் நிச்சயம் ஒருநாள் வாழ்வு வரும்.. ஆனால் நல்லவர்களுக்கு என்றுமே மிஞ்சிப்போவது சோதனைமேல் சோதனை தான்!"

என் விளக்கத்தை அவள் ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை.

'எதெது எப்பெப்ப எப்படியெப்படி நடக்க வேணுமென்று விதியிருக்கோ, அதது அப்பப்ப அப்படியப்படி நடந்தே தீரும். அதுதான் நியதி" என்றாள்.

"போடி, நீயும் உன் அதிகப் பிரசங்கித்தனமும்...? எழுதி உன்ர வீட்டுச்சுவரில மாட்டி வை!" நான் அலுத்துக் கொண்டேன்.

அடுத்த பீரியட்டுக்கான மணியடிக்க, பிறீ பீரியட்டில் இருந்த அவளும், சற்றே ஓய்வெடுத்த நானும் அவரவர் பாதையில் பிரிந்து போனோம்.

மாலை வீட்டுக்கு வந்தபோது, ஒரு புதிய அதிர்ச்சி காத்திருந்தது. (நெருப்பு உமிழும்....)

## பாம்புடன் விளையாடலாமா?

கிறிஸ்தவத் துறவி பிரான்சிஸ் என்பவர் அருள் உள்ளம் கொண்டவர். எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டி வந்தார். ஒருமுறை அவர் காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தார். அங்கே பாம்பு ஒன்று ஊர்ந்து கொண்டிருப்பதைக் கண்டார். அதனைப் பார்த்து அன்புடன் "தம்பி வா" என்று அழைத்தார். அந்தப் பாம்பு அவர் உடல் மீது ஏறியது. கழுத்தைச்சுற்றிக் கொண்டு சிறிது நேரம் இருந்தது. அவர் அதை அன்புடன் தடவிக் கொடுத்தார். பிறகு அந்தப் பாம்பு அவரை விட்டு கீழே இறங்கி தன் வழியே சென்று விட்டது. அவருடன் வந்தவர்கள் இதைப் பார்த்துத் திகைத்து நின்றார்கள். அவர்களில் ஒருவர், "துறவியாரே! கொடிய நஞ்சுடைய பாம்புடன் இப்படி விளையாடலாமா? அது தங்களுக்குத் துன்பம் செய்திருந்தால்...?" என்று கேட்டார். அதற்கு அவர் சிரித்துக்கொண்டே, "பாம்பிடம் மட்டும் தானா நஞ்சு உள்ளது ? மனிதர்களிடம் அதைவிடக் கொடிய நஞ்சு இல்லையா? பாம்பாவது எப்போதாவதுதான் யாரையேனும் தீண்டும். அதுவும் அவர்களே வலுவில் சென்று அதை மிதித்துத் துன்புறுத்தினால்தான் தீண்டும். பாம்புகளில் பெரும்பாலானவை நஞ்சு இல்லாதவை. இப்போது சொல்லுங்கள் . நான் மனிதர்களுடன் பழகுவது நல்லதா? அல்லது பாம்புகளுடன் பழகுவது நல்லதா?" என்றார். என்ன பதில் சொல்வது என்று அறியாமல் திகைத்து நின்றனர் மக்கள் கூட்டத்தினர்.

- நாரா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம் 06.12.2015 முதல் 12.12.2015 வரை
# உங்களுக்கு எப்படி?

## மேடம்

ராகு, செவ்வாய், குரு நற்பலன் தருவர். நடைமுறை வாழ்வில் இருந்த சிரமம் குறையும். உங்களை அவமதித்தவர்கள் தலைகுனியும் சூழல் உருவாகும். புத்திரர்களின் அறிவுபூர்வ செயல் கண்டு மகிழ்வீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்வு ஏற்படும். உறவினர்களின் உதவி கிடைக்கும்.

மனைவியின் செயல்களுக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டத்தை தவறாமல் பின்பற்றவும். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்களின் படிப்பில் உள்ள சந்தேகம் தெளிவடையும். சாஸ்தா வழிபாடு இடர் நீக்கும்.

## இடபம்

புதன், கேது, சந்திரனால் ஓரளவு நன்மை கிடைக்கும். உங்களின் அறிவுரை நண்பரின் மனதில் மாற்றம் தரும். வாகனத்தில் பராமரிப்புத் தேவைப்படும். புத்திரர்களின் செயலில் குறையை சரிசெய்வீர்கள்.

கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். மனைவியுடன் கருத்து பேதம் வரலாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சீராகும். பணியாளர்கள் புதிய தொழில்நுட்பங்களை அறிவதில் ஆர்வம் கொள்வர். பெண்கள் வீட்டுச் செலவுக்குச் சிரமப்படலாம். மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்களிடம் நன்மதிப்பு பெறுவர். ஆஞ்சநேயர் வழிபாடு, நன்மை தரும்.

## மிதுனம்

சனி, சூரியனின் அனுகூல சேர்க்கை விபரீத ராஜயோகபலன் தரும். அதாவது, எதிர்பாராத நன்மை கிடைக்கும். நல்ல செயல்களால் சமூகத்தில் அந்தஸ்துக் கூடும். வெகுநாள் எதிர்பார்த்த நன்மை எளிதில் வந்து சேரும். புத்திரர்கள் உங்கள் சொல் கேட்டு நடப்பர். பூர்வ சொத்தில் வளர்ச்சியும், வருமானமும் கூடும். விவகாரம் அணுகாத சுமுக வாழ்வு அமையும். மங்கல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். மனைவி, கருத்து இணக்கமுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் செழித்து பணம் சேமிப்பாகும். பணியாளர்கள் விரும்பிய சலுகை பெறுவர். பெண்கள் புத்தாடை, நகை வாங்க அனுகூலம் உண்டு. மாணவர்கள் வெளியூர் செல்வதைத் தவிர்க்கவும். சனீஸ்வரர் வழிபாடு வெற்றிக்கு வழி தரும்.

## கடகம்

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். சாதனை நிழ்த்தும் எண்ணத்துடன் பணிபுரிவீர்கள். தம்பி, தங்கைகள் கேட்ட உதவியை வழங்குவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர்களின் செயல்களில் மாறுபட்ட தன்மை இருக்கும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். நண்பரிடம் கடனாக கொடுத்த பணம் கிடைக்கும். மனைவி வழி உறவினர்கள் பாசம் கொள்வர். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள், பணிகளை வேகமாக முடிப்பர். பெண்களுக்கு தாராள பணவசதி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து பரிசு பெறுவர். சனீஸ்வரர் வழிபாடு சங்கடம் தீர்க்கும்.

## சிங்கம்

சுக்கிரன், சந்திரனால் ஓரளவு நன்மை ஏற்படும். நண்பர்களிடம் நன்மதிப்பு பெறு வீர்கள். வாழ்வில் வளம் பெற புதிய செயற்திட்டம் உருவாகும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர்களை வழி நடத்துவதில் இதமான அணுகுமுறை வேண்டும். மனைவியின் பாசம் மனதில் நெகிழ்ச்சி தரும். பயணத்தால் செலவு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் இப்போதைய நிலை தொடரும். பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடும். பெண்கள், குடும்ப நலன் சிறக்கத் தேவையான பணி மேற்கொள்வர். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடங்களுக்குச் செல்லக் கூடாது. விநாயகர் வழிபாடு வினை தீர்க்கும்.

## கன்னி

சுக்கிரன், புதனால் நன்மை உண்டு. சனி, சூரியனின் அமர்வு விபரீத ராஜயோக பலன் தரும். அதாவது, எதிர் பாராத நன்மை கிடைக்கும். பணிகளை ஆர்வ முடன் நிறைவேற்றுவீர்கள். உறவினர் வருகை மகிழ்ச்சி தரும். நோய் தொந்தரவு குறையும். மனை வியின் சொல்லும், செயலும் குடும்பத்துக்கு நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி சிறப்பாக நிறைவேறும். பணியாளர்கள் நிர்வா கத்திடம் நற்பெயரும், சலுகையும் பெறுவர். பெண் களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாண வர்களுக்கு படிப்பில் ஞாபகத்திறன் மேம்படும். பெருமாள் வழிபாடு, செல்வ வளம் தரும்.

## துலாம்

கேது, குரு, சுக்கிரன் அளப்பரிய நன்மை தருவர். தாமதமான பணியில் முன்னேற்றம் ஏற்படும். நிதானித்துப் பேசுவது நல்லது. வாகனங்களைப் பராமரிப்புச் செய்வதால் பயணங்கள் எளிதாகும்.

புத்திரர்களின் எண்ணத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற புதிய வாய்ப்பு வரும். பணியாளர்கள் பணியிடத்தில் சுமுக சூழல் இருக்கும். பெண்கள், உறவினர்களின் குடும்ப நன்மைக்கு உதவுவர். மாணவர்கள் அதிக மதிப்பெண் பெறுவர். சிவன் வழிபாடு சகல நன்மை தரும்.

## விருச்சிகம்

செவ்வாய், ராகுவின் அனுகூல சேர்க்கை எதிர்ப்புகளை விரட்டும். வாழ்வில் புதிய மாற்றம் உரு வாகும். உடன் பிறந்தவர்களின் உதவி உண்டு. பயணத்தால் பெறுகின்ற நன்மை அதிகரிக்கும். புத்திரர்களின் செயல் பெருமை தரும். வழக்கு, விவகாரங்களில் அனுகூலம் ஏற்படும்.

மனைவி பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற்று பணவரவு கூடும். பணியாளர்கள் கடும் வேலைப்பளுவைச் சந்திக்க வேண்டியிருக்கும். பெண்கள், கணவரின் நல்ல குணத்தை பாராட்டுவர். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் கொள்வர். பெருமாள் வழிபாடு, செல்வ வளம் தரும்.

## தனுசு

குரு, சுக்கிரன், சந்திரன் செல்வ வளம் தருவர். உடன்பிறந் தவர்களுடன் கருத்து வேறுபாடு வரலாம். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். ஆடம்பரச் செலவுகளை தவிர்ப்பதால் சிரமம் விலகும். மனைவியின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். வீட்டில் ஒற்றுமை, மகிழ்ச்சி கூடும். தொழில், வியாபாரம் செழிக்கக் கடுமையாகப் போராட வேண்டி வரும். பணியாளர்களுக்கு பணியில் குளறுபடி வரலாம். பெண்கள், உறவினர் குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் பாதுகாப்பு குறைந்த இடங்களுக்குச் செல்லக்கூடாது. முருகன் வழிபாடு நம்பிக்கை வளர்க்கும்.

## மகரம்

ராசிநாதன் சனி, அஷ்டமாதிபதி சூரியனின் சேர்க்கை ஆதாய பலன்களை அள்ளித் தரும். உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். புத்திரர்களின் எதிர்கால நலனுக்கு தேவையானதைச் செய்வீர்கள். மனைவி உங்களுக்கு நல்ல ஆலோசனை சொல்வார். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் செய்வீர்கள். பணியாளர்கள் பணி இலக்கை நிறைவேற்றி சலுகை பெறுவர். பெண்கள், இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் அதிகரிக்கும். ஆஞ்சநேயர் வழிபாடு நன்மை தரும்.

## கும்பம்

சூரியன், குரு, சுக்கிரன், புதன் அனுகூல அமர்வில் உள்ளனர். பேச்சில் உண்மை நேர்மை நிறைந்திருக்கும். குடும்பத்தில் சிறப்பான மதிப்பு, மரியாதை கிடைக்கும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். பூர்வ புண்ணிய நற்பலன் குடும்பத்தில், பலவித நன்மைகளை உருவாக்கும். மனைவியின் அன்பு, மனதுக்கு நெகிழ்ச்சி தரும். சுற்றுலாப் பயணத்திட்டம் உருவாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு கடனுதவி கிடைக்கும். பெண்கள் குடும்ப உறுப்பினர்களின் மனம் [illegible] அதிக [illegible], தைரியம் வளர்க்கும்.

## மீனம்

சுக்கிரன், சந்திரன், புதனால் நன்மை உண்டாகும். உடன் பிறந்தவர்கள் உதவி செய்வர். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு பின்பற்றவும். புத்திரர்களின் தேவையை நிறைவேற்றி அவர்களை மகிழச் செய்வீர்கள். சிறு அளவில் மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் இப்போதைய நிலை தொடரும். பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடினாலும் பணவரவு திருப்திகரமாகும். பெண்கள், பிறர் விடயத்தில் தலையிட்டால் சிரமம் வரலாம்; கவனம். மாணவர்கள் படிப்பில் முன்னேற இலட்சியத்துடன் படிப்பர். தட்சிணாமூர்த்தி வழிபாடு, மங்கல வாழ்வு தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செய்திப் பத்திரிகைகளும் அவை புரியும் பணிகளும் 10

# தமிழ் மக்கள் கருத்து வெளிப்பாட்டுக்கு ஒரு பத்திரிகை

ரம்யன்

கலா நிலைய நண்பர்கள் என்று அந்தக் காலத்தில் கலைப்புலவர் நவரத்தினமும் சகாக்களும் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் குறிப்பிடப்படக் கூடியவர்களாக எஸ்.அம்பிகைபாகன், து.சீனிவாசகம், கே.குமாரவேலு, எஸ்.பத்மநாதன், எம்.கதிரவேலு, ஏ.ஈ.தம்பர், கே.ஸி.தங்கராஜா மற்றும் சிலர் இருந்துள்ளனர்.

அந்தக் காலத்தில் அரசியல் மட்டத்தில் அக்கறை கொண்டிருந்ததும் தமிழ் இளைஞர்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வை உருவாக்க முயன்று கொண்டிருந்ததுமான வாலிப காங்கிரஸ் என்ற நிறுவனத்துடனும் இவர்களுக்கு அதிக தொடர்பு இருந்துள்ளது. வாலிப காங்கிரசின் முக்கிய பிரமுகராக விளங்கிய ஹண்டி. பேரின்பநாயகத்தின் செல்வாக்கும் இந்தக் குழுவினர் மீது தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கவேண்டும்.

அந்தக் காலத்தில் முன்பு குறிப்பிட்ட கலா நிலையத்தின் சார்பில் அச்சகம் ஒன்று இயங்கி வந்துள்ளது. அதன் மேற்பார்வையை, வண்ணார் பண்ணையில் ஆயுள்வேத மருத்துவ மனையையும் ஆய்வுகூடத்தையும் நடத்தி வந்தவரான வைத்தியர் கே.சி.சண்முகரத்தினம் செய்து வந்துள்ளார். அந்த அச்சகத்தின் வாயிலாகப் பல பழந்தமிழ் நூல்களும், மாணவர்கள் பயன்பெறக்கூடிய நூல்களும் வெளியிடப்பட்டு வந்துள்ளன.

இந்தக் காலகட்டத்தில் கலாநிலைய நண்பர்களில் ஒருவரும் வைத்தியர் கே.சி.சண்முகரத்தினத்தின் மூத்த சகோதரருமான கே.சி.தங்கராஜா (கிழக்கிலங்கை) வாழைச்சேனைக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார்.

இருவரும் கலா நிலையப் பிரமுகர்களாகவே இருந்தமையால் அதன் ஏனைய நண்பர்களின் ஆதரவுடன் தமிழ்ப் பத்திரிகையொன்றை வெளியிடும் சந்தர்ப்பச் சூழ்நிலை உருவாகியது.

அந்த வகையில் 1958ஆம் ஆண்டு ஈழநாடு என்ற பெயருடன் பத்திரிகையொன்று ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் கொழும்பில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த ரைம்ஸ் பத்திரிகை நிறுவனத்தின் பணிப்பாளர் சபையிலும் ஓர் உறுப்பினராக கே.சி.தங்கராஜா பணிபுரிந்தமையினால் அந்த நிறுவனம் சிங்கள மக்களின் கருத்து வெளிப்பாடுகளுக்கென லங்கா தீப என்ற பத்திரிகையை ஆரம்பித்திருந்தமையால் அதேவகையில் தமிழ் மக்களின் கருத்துக் களமாக ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகைக்கு ஈழநாடு என்ற பெயரிட முடிவு செய்யப்பட்டது. லங்கா தீப என்றால் இலங்கைத் தீவு என்று தமிழில் குறிப்பிடப்படலாம். அதேபோல் ஈழநாடு என்பது சிங்களத்தில் லங்கா தேசய என்று பொருள்படுவதாக இருக்கும்.

ஈழம் என்பது முழு இலங்கையையும் குறிக்கும் சொல்லாகும். ஆனால் தமிழ் ஈழம் என்றால் தமிழ்ப் பிரதேசங்களை மட்டும் உள்ளடக்கிய நாடாகும். இதை விளங்கிக் கொள்ளாத தென்னிலங்கை வாசிகள் அனேகர் வடக்கு கிழக்கு தமிழர்கள் ஈழம் கோருகிறார்கள் என்று கூறிவருகிறார்கள். ஈழம் என்பதற்கும் தமிழ் ஈழம் என்பதற்கும் உள்ள கருத்து வேறுபாடு இவர்களுக்குத் தெரியவில்லை.

ஈழநாடு பத்திரிகை முதலில் வார ஏடாகவே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஈழத்துச் சித்தரான யோகர் சுவாமிகளின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக பத்திரிகையின் முதல் பிரதியை ஈழநாடு நிர்வாகிகள் கொழும்புத்துறையில் இருந்த அவரது ஆசிரமத்துக்குக் கொண்டுபோய்க் காட்டியிருக்கிறார்கள். அதனைப் பார்வையிட்ட சுவாமிகள், ஏசுவார்கள், எரிப்பார்கள், தளராமல் கொண்டு நடத்துங்கள் என்று கூறி ஆசீர்வதித்துள்ளார்.

அவர் கூறியதுபோல் அந்தப் பத்திரிகையை ஏசியவர்கள்




உண்டு. எரித்தார்கள், குண்டு வைத்தும் தகர்த்தார்கள். ஆனால் அதனைத் தொடர்ந்து கொண்டு நடத்த முடியாமல் போயிற்று. அதற்கான காரணங்கள் பலவுண்டு. அவை பற்றி இங்கு நாம் ஆராயப்போவதில்லை.

ஈழநாடு வாரமலராக ஆரம்பித்த போது அதன் ஆசிரியராக எழுத்தாளரும் பத்திரிகையாளருமான இராஜ். அரியரத்தினம் பொறுப்பேற்றிருந்தார். கே.சி.தங்கராஜா மேலாண்மைப் பணிப்பாளராகவும் நிர்வாகப் பணிப்பாளராக வைத்தியர் கே.சி.சண்முகரத்தினமும் விளங்கினார்கள்.

அந்தப் பத்திரிகை பல்வேறு விதமான எழுச்சிகளையும் வீழ்ச்சிகளையும் எதிர்கொண்டு 25 வருடங்கள் துடிப்புடன் பணியாற்றியது.

தமிழ்ப் பிரதேசங்களில் தமிழரசுக் கட்சியினரின் அரசியல் செயற்பாடுகள் விறுவிறுப்படைந்திருந்தன. அதற்கு மக்கள் ஆதரவு பல்கிப்பெருகியிருந்த காலகட்டமானதால் சம்பவங்களின் விவரங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்வதற்கான ஊடகமாகவும் உள்ளூரிலேயே வெளியான பத்திரிகை பயன்படலாயிற்று.

கொழும்பிலிருந்து வந்த வீரகேசரி போன்ற பத்திரிகைகளும் அவ்வாறான செய்திகளை விவரமாக வெளியிடவே செய்தன. ஆனால், உள்ளூர்ப் பத்திரிகையில் உடனுக்குடன் மக்கள் செய்திகளை அறிந்து கொள்ளக்கூடியதாய் இருந்தது.

தமிழரசுக் கட்சியினர் ஆரம்பித்திருந்த சத்தியாக் கிரகத்தில் அமர்ந்திருந்த மக்கள் அங்கு நடந்தேறிய சம்பவங்களின் விவரங்களைத் தாங்களே குழுக்களாக அமர்ந்து படித்து மகிழ்ந்தார்கள். அந்தச் சூழ்நிலையில் எழுத்தாளர் வரதர் புதினம் என்ற பெயரில் ஒரு பத்திரிகையை ஆரம்பித்து நடத்தலானார். ஆனால் அது சிறிது காலத்தில் நிறுத்தப்பட்டு விட்டது. அதே காலத்தில் கண்டியிலிருந்தும் செய்தி என்ற பெயரில் ஒரு பத்திரிகை காளிமுத்து என்பவரால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதுவும்கூடத் தொடர்ந்து வெளிவரமுடியாமல் போயிற்று.

ஈழநாடு தினசரியாக வெளியிடப்படுவதற்கான காலச்சூழ்நிலை ஏற்பட்டதையடுத்து வீரகேசரியில் தலைமை ஆசிரியராக இருந்து, விலகியிருந்த கே.பி.ஹரன் தலைமை ஆசிரியராக ஈழநாடு பத்திரிகையில் இணைக்கப்பட்டார். அவர் யாழ்ப்பாணத்தில் ஈழநாடு காரியாலயத்திலேயே தங்கியிருந்து பணியாற்றினார். இராஜ் அரியரத்தினம் ஈழநாட்டில் தொடர்ந்தும் ஆசிரியராக இருந்து வந்த நிலையில், வீரகேசரியில் இருந்து வந்திருந்த எஸ்.எம்.கோபாலரத்தினம் செய்தி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். வேறும் பலர் வீரகேசரியிலிருந்து வந்து ஈழநாட்டில்

> தமிழ்ப் பிரதேசங்களில் தமிழரசுக் கட்சியினரின் அரசியல் செயற்பாடுகள் விறுவிறுப்படைந்திருந்தன. அதற்கு மக்கள் ஆதரவு பல்கிப்பெருகியிருந்த காலகட்டமானதால் சம்பவங்களின் விவரங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்வதற்கான ஊடகமாகவும் உள்ளூரிலேயே வெளியான பத்திரிகை பயன்படலாயிற்று. கொழும்பிலிருந்து வந்த வீர்கேசரி போன்ற பத்திரிகைகளும் அவ்வாறான செய்திகளை விவரமாக வெளியிடவே செய்தன. ஆனால், உள்ளூர் பத்திரிகையில் உடனுக்குடன் மக்கள் செய்திகளை அறிந்து கொள்ளக் கூடியதாய் இருந்தது.

இணைந்து கொண்டனர். அவர்களில் டி.எம்.முருகையா, எஸ்.பெருமாள், எஸ்.சபாரத்தினம் போன்றவர்களைக் குறிப்பிடலாம். ஜி.மகாதேவா, எம்.மாணிக்கம் முதலியவர்கள் ஈழநாட்டிலேயே இணைந்து பயிற்சி பெற்றுக் கொண்டவர்கள்.

யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சியினர் ஆரம்பித்திருந்த சத்தியாக்கிரகம் மும்முரமாகியிருந்த காலகட்டத்தில் பிரித்தானியப் பிரதமரும் இலங்கை இந்தியா போன்ற காலனித்துவ நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கப்படும்போது இங்கிலாந்துப் பிரதம மந்திரியாக இருந்தவருமான அட்லி பிரபு இலங்கைக்கு வந்திருந்தார். ஈழநாடு பத்திரிகையின் சார்பில் கே.பி.ஹரன் அவரைக் கொழும்பில் பேட்டி கண்டிருந்தார். இந்தப் பேட்டியின் விவரத்தை அட்வகேட் எஸ்.பொன்னையா எழுதி வெளியிட்டிருந்த சத்தியாக்கிரகம் என்ற நூலில் காணலாம். அதன் ஒரு பகுதி பின்வருமாறு:

கேள்வி: பிரிட்டன் போன்ற ஒரு ஜனநாயக நாட்டில் அது இலங்கையாக இருந்தாலும் மக்கள் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்திட முடியுமா? நாடாளுமன்ற சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்திட முடியுமா?

அட்லி பிரபு: ஆம்! நிச்சயமாக முடியும். இங்கிலாந்தில் அவ்வாறு நிகழ்கின்றது. இங்கிலாந்துக்கு வருகை தந்திருந்த அமெரிக்கர் ஒருவரை முக்கிய இடங்களைச் சுற்றிக் காட்டுவதற்கு காரில் அழைத்துச் சென்றிருந்தேன். லண்டன் ஹைட்பார்க் அருகில் வந்தபோது அங்கே கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த ஒருவரின் பேச்சைக் கேட்பதற்குக் காரை நிறுத்தினோம். பேச்சாளர் அன்றைய அரசையும் அதன் நிர்வாகத்தையும் படுமோசமாக விமர்சித்துக் கொண்டிருந்தார். அவர் செய்துகொண்டிருப்பது மிகமோசமான ஒரு காரியம் என்று கருதிய அமெரிக்க நண்பர், அங்கு கடமையில் நின்ற பொலிஸ் அதிகாரியை வெறித்துப் பார்த்தார். ஆச்சரியம் என்னவென்றால் எங்கள் காரின் பக்கமாக விரைந்து வந்த பொலிஸ் அதிகாரி காரின் வானொலிச் சத்தத்தைக் குறைக்கும்படியும் அப்பொழுது தான் பேச்சாளர் கூறுவதை நன்றாகக் கேட்க முடியும் என்றும் சாரதியிடம் தெரிவித்தார். இந்தச் சம்பவத்தை அந்தப் பேட்டியில் அட்லிபிரபு சுட்டிக் காட்டினார்.


பிரிட்டனில் அரசுக்கு எதிரான கருத்துக்களை மக்கள் கேட்பதற்கு எந்தவிதத் தடையும் கிடையாது, அதற்குப் பாதுகாப்பு அதிகாரிகளே வசதி செய்து கொடுப்பார்கள் என்பதை அந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுவதாக இருந்துள்ளது.

அந்தப் பத்திரிகையாளர் சந்திப்பின்போது சிறுபான்மையோரின் உரிமைகளை எவ்வாறு பாதுகாக்கலாம் என்பதற்கு அட்லிபிரபு பின்வருமாறு பதில் கூறியிருந்தார்.

ஒன்று சட்டங்கள் மூலம் பாதுகாக்கலாம். இரண்டு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் மூலம் பாதுகாக்கலாம். மூன்று பெரும்பான்மையோர் மத்தியில் சகிப்புத் தன்மையை வளர்ப்பதன் மூலம் பாதுகாக்கலாம் என்று கூறியிருந்தார்.

ஒரு நாட்டைத் தார்மீக வழியில் திறமாக நிர் வகிப்பதற்கு அங்கு சாதுரியமும் தூர நோக்கும் இயல்பாகவே கைவரப் பெற்ற பயிற்சியுடைய கனவான்கள் இருக்க வேண்டியது முக்கியம் என்று அவர் மேலும் கூறியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உடல் பருமனான ஸ்வீட்டியை (அனுஷ்கா) திருமணக் கோலத்தில் பார்க்க அம்மா ராஜேஸ்வரிக்கு (ஊர்வசி) ஆசை. அனுஷ்காவின் உடல் எடையைப் பார்த்து மாப்பிள்ளைகள் பின்வாங்குகிறார்கள். அப்படிப் பெண் பார்க்க வரும் அபியும் (ஆர்யா) அனுஷ்காவும் திருமணப் பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டாலும் நட்பு தொடர்கிறது.

அனுஷ்காவுக்கு ஆர்யா மீது காதல் வரும்போது அவர் இன்னொரு பெண்ணை விரும்புவதாகத் தெரிகிறது. ஆர்யா தன்னை விரும்பாததற்குத் தனது உடல் எடைதான் காரணம் என நினைக்கும் அனுஷ்கா, உடனடி எடை குறைப்புக்கு உத்தரவாதம் தரும் ஒரு நிலையத்துக்குப்போகிறார். அங்கு அதிர்ச்சியான உண்மைகளைக் கண்டறிந்து போராட்டத்தில் குதிக்கிறார். ஆர்யாவும் உதவுகிறார். முடிவு என்ன என்பது மீதிக் கதை.

உடல் பருமனை வைத்து அழகு நிலையங்களும், எண்ணெய் உள்ளிட்ட உணவு நிறுவனங்களும், தனியார் மருத்துவமனைகளும் நடத்தும் வியாபாரம் எத்தனை சுவாரஸ்யமான களம்! அதைத் தேர்ந்தெடுத்து அனுஷ்கா - ஆர்யாவைப் பாத்திரங்களாக முடிவு செய்தது வரையில் காட்டிய புத்திசாலித் தனத்தை, வேறு எதிலுமே காட்டவில்லை இயக்குநர். குறிப்பாகத் திரைக் கதையில்!

புதுமையான காட்சிகளோ, வசனங்களோ தப்பித் தவறியும் இருந்துவிடக்கூடாது என்று சபதம் போட்டுவிட்டே படம் எடுத்தார்களா, தெரியவில்லை. எடை குறைப்பு பற்றிய விழிப்புணர்வு அடைந்த பிறகு அனுஷ்கா, குறுக்கு வழிகளைக் கைவிட்டு, ஒரேயடியாக உழைத்து நிஜமாகவே இஞ்சி இடுப் பழகியாக மாறிவிடுவதுபோல் காட்டாத யதார்த்தத்துக்காக வேண்டுமானால் இயக்குநர் கே.எஸ். பிரகாஷ் ராவைப் பாராட்டலாம்.

கதையின் மையச் சிக்கல் உடல் பருமனா, காதலா அல்லது ஊரை ஏமாற்றும் எடை குறைப்பு வில்லன் பிரகாஷ் ராஜா என்ற குழப்பம் காரணமாகப் படத்துடன் ஒன்ற முடியாமல் பார்வையாளர்கள் தலையைப் பிய்த்துக்கொள்கிறார்கள். உடல் பருமன் பிரச்சினை, முக்கோணக் காதல், எடையைக் குறைக்கும் போலி நிறுவனங்கள் என எல்லாவற்றையும் கலந்து கட்டி அடித்ததில், பின்பாதியில் ஏகத்துக்கும் செரிமானப் பிரச்சினை வந்துவிடுகிறது.

ஆர்யாவை ஆவணப்பட இயக்குநராகச் சித்தரித்திருப்பது திரைக்கதைக்கு எந்த வகையிலும் வலுச் சேர்க்கவில்லை. அனுஷ்கா தொடங்கும் விழிப்புணர்வுப் பரப்புரையின் சித்திரிப்பும் ஆவணப்படம் போலவே உள்ளது.

கதாநாயகியாகக் கொடிகட்டிப் பறக்கும் நிலையில், நடிகைகள் ஏற்கத் தயங்கும் பாத்திரத்திலும் உருவத்திலும் வந்திருப்பதற்காக அனுஷ்காவுக்கு வாழ்த்துக்கள். நிறை பார்க்கும் இயந்திரத்தில் வரும் சாதகமான வார்த்தைகளுக்காக அந்த இயந்திரத்தின் மீது பாசத்தைக் காட்டுவது, துயரம், அன்பு, மன உளைச்சல், அழுகை, பொறாமை, விரக்தி என அத்தனை உணர்வுகளையும் தன் அசாத்தியமான நடிப்பால் அநாயாசமாக வெளிப்படுத்துகிறார். ஆனால், பல இடங்களில் அவரை மன முதிர்ச்சி அடையாத சேட்டைகளுடன் சித்திரிப்பது, பாத்திரப் படைப்பு பற்றிய குழப்பத்தையே ஏற்படுத்துகிறது.

ஆர்யா பாவம் - அவ்வளவுதான் சொல்ல முடியும்!

மெலிவு நிலையம் நடத்தும் பிரகாஷ் ராஜின் வில்லத்தனம் பரவாயில்லை. ஆனால், அவருக்கான வசனங்கள் அழுத்தம் இல்லாத அபத்தங்கள். அரிது அரிது மானிடராதல் அரிதுன்னு பாரதியார் சொல்லியிருக்காரு என்று சீரியஸாக அவர் சொல்வதைக் கேட்டால் ஔவைப் பாட்டிக்கு அழுகையே வந்துவிடும்.

இரு மொழிப் படமான இதில் தெலுங்கு வணிகப் படங்களுக்கான பளபளப்பைக் காட்டி இருக்கிறார், ஒளிப்பதிவாளர் நீரவ். பாத்திரங்களின் நடிப்பிலும், வார்த்தை உச்சரிப்பிலும் தெலுங்குக்கே உரிய அந்த தூக்கல்தனம் இருப்பதுதான் பிரச்சினையே! மொத்தத்தில் படம் பப்படம்.

சாம் ரமேஸ்குமார்

# சிவயோகரின் தியானம்

தியானம் மனிதனுடைய மனதைத் திறந்து இறைவனை அடைவதற்கான ஒரு திறப்பு. அதை மனிதன் தினம் தினம் செய்தாலே சிறப்பு. மனிதன் தியானத்தில் நிலைத்திருந்தானானால் இறைநிலை எய்துவான். இல்லையேல் சம்சாரக் கடலில் மூழ்கிப்போவான். இதுவே இந்தப் பிரபஞ்சத்தின் கட்டமைப்பாகும்.

இந்த உலகில் வாழும்போதே தன்னை யாரென்று ஒருதுளிகூட அறியாதவன் உயிரோடிருந்தும் அவன் ஒரு பிணம் போன்றவனே. தன்னை யாரென்று அறியும் தாகம் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் பெரும் மழைக்காக வானத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் பூமியின் தாகம் போன்றதாய் அமைய வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையென்ற மர்ம முடிச்சை அவிழ்க்கும் தியானமென்ற கலைக்குள் ஒருவனால் எளிதாகப் பிரவேசிக்க முடியும்.

தியானமென்றால் என்ன? என்ற கேள்விக்கு பதில் சொல்லும் விதமாக, ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்களும் எண்ணற்ற சொற்பொழிவாளர்களின் போதனைகளும் எத்தனையோ ஆன்மீக மையங்களில் கணக்கற்ற தியானப் பயிற்சிகளும் இதுவரை தியானத்துக்காக அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கின்றன. இருந்தும் மனிதர்களால் தங்கள் மனதை ஒருமுகப்படுத்தி தம் சுயத்தை அடைய முடியவில்லை. அவ்வளவும் வெறும் கானல் நீரானதே மிச்சம்.

எண்ணற்ற சித்தர்கள் ஞானிகள் மகான்கள் வந்துபோன இந்த அகண்ட அகிலத்தில் நாம் வாழ்கின்றோம் என்பதில் எமக்கு ஒரு பெருமையும் இல்லை. அவர்கள் கூறிய பாதையில் நாம் பயணிக்கின்றோமா என்பதில்தான் எமது முழுப்பெருமையும் தங்கியுள்ளது.

காலம் காலமாய் ஆன்மீக உண்மைகளைக் கூறிவந்த உண்மையறிந்த சான்றோர்களின் தியான போதனைகளைப் புறக்கணித்து விட்டு ஆன்மீகப் போர்வையைத் தம் சுயநலங்களுக்காக போர்த்தித் திரியும் தியானமென்ற மன அமைப்பே இல்லாத குள்ள நரிகளின் பின்னால் சென்று எம் அகவுலகத்தை பரிபூரணமாக உணராது நம் மகோன்னதமான மனித வாழ்க்கையை நாம் முழுமையாக இழந்து விடுகின்றோம். இதற்கு காரணம் எம் அறியாமையே.

ஈழதேசத்தில் ஆன்மீகப் புரட்சியை ஏற்படுத்தியவர் மகான் தவத்திரு யோகர் சுவாமிகள். அவர் உயிர்க் கடவுளாக எங்கும் நடமாடித் திரிந்தவர். எண்ணற்ற ஆன்மீக சாதகர்களுக்கு கலங்கரை விளக்காகத் திகழ்ந்தவர். அப்படிப்பட்ட யோகர் சுவாமிகள் தியானத்தைப் பற்றிய தம் அனுபவத்தை பாமர மக்களும் மிக எளிதாக விளங்குமாறு இப்படி அருளுபதேசம் செய்கின்றார்.

"தியானம் என்பது எதனையும் எண்ணிக் கொண்டிருப்பதல்ல; அது சும்மா இருத்தல்" என்கிறார். அதாவது எம் அகவுலகுக்குள் எண்ணங்கள் அற்று நிசப்தமாய் இருத்தல் ஆகும்.

மற்றுமோர் இடத்தில் சித்திரக்காரன் தீட்டிய தீபம் போல் நித்திய வஸ்துவில் நினைப்பும் மறப்புமற முக்தியிலிருக்கும் முறை என்கிறார். நித்திய வஸ்துவாகிய ஆன்மாவில், சித்திரக்காரன் வரைந்த தீபமாக ஆடாது அசையாது எண்ணங்களை மறந்து லயிக்கும் முறையே முக்தியாகிய மோட்சத்தில் இருக்கும் முறை.

எவ்வளவு ஒரு தெளிவான தியான உபதேசம் எண்ணங்களைத் தடுத்தல் அல்லது பரிபூரணமாக மறத்தல். நாமும் யோகரின் பாதையில் மிக இலகுவாக சிவத்தியானம் செய்து அன்புடன் இவ்வுலகில் வாழுவோம்.

*சிவத்தியானஞ் செய் செய் செய்*
*சிவமே நாமெனல் மெய் மெய் மெய்*
*அவனி யனைத்தும் பொய் பொய் பொய்*
*அதனை யறிந்து உய் உய் உய்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அக்குள் பகுதியின் கருமையைப் போக்க...

உங்கள் அக்குள் பகுதிகள் பார்ப்பதற்கு அசிங்கமாகவும் கருமையாகவும் உள்ளதா? பொதுவாக பெண்களுக்கு உள்ள பிரச்சினையே இந்த அக்குள் பகுதியில் உள்ள கருமை மற்றும் துர்நாற்றமும் தான். கவலை வேண்டாம். அதற்கு வீட்டில் இருந்தே தயார் செய்யக் கூடிய சில டிப்ஸ் உங்களுக்காக!

எலுமிச்சை சாறு மற்றும் வெள்ளரிச் சாறு கலந்து பேஸ்டாக செய்து உங்கள் அக்குள்களில் பூசி சில நிமிடங்கள் கழித்து காய்ந்த பின் நீரில் கழுவினால் கருமை நீங்கும். ரோஜா தண்ணீர் மற்றும் எலுமிச்சைசாறு ஒரு சில சொட்டு கலந்து பேஸ்ட்டாக செய்து பூசவும் . பின் 15-20 நிமிடங்கள் கழித்துக் கழுவவும். கடலை மா , மஞ்சள் தூள் ஒரு சிட்டிகை மற்றும் தயிர் கலந்து அக்குள் பகுதியில் தடவுங்கள். தயிர் கருமையை விலக்கும் மற்றும் தோலை பளபளப்பாக்க உதவும் . உங்கள் தோலில் உள்ள ஒரு அசிங்கமான மஞ்சள் கறை போய்விடும்.(அதிகமாக மஞ்சள் தூள் பயன்படுத்த வேண்டாம்).

மஞ்சள் தூள் ஒரு சிட்டிகை, எலுமிச்சை சாறு ஒரு சில சொட்டு மற்றும் ஒலிவ் எண்ணெய் கலந்து கருமையான அக்குள்களில் பூசி குளியலுக்கு முன்பு 20 நிமிடங்கள் வைக்கவும். இந்த வீட்டில் இருந்து தயாரிக்கும் டிப்சை உங்கள் அக்குகளில் பயன்படுத்தி வந்தால் உங்களுக்கு உள்ள பிரச்சினை விலகும் .

## சருமத்தை பளபளப்பாக்க

சருமத்தின் பொலிவு மற்றும் நிறத்தை அதிகரிக்க இயற்கைப் பொருள்களைக் கொண்டு ஒருசில பேஸ் மாஸ்க்குகளைப் போட்டு வந்தால், சருமத்தை அழகாகவும் பொலிவோடும் வைத்துக் கொள்ளலாம்

**தேன்**-தேன் சருமத்தை ஈரப்பதத்துடன் வைத்துக் கொள்வதோடு, சிறந்த ப்ளீச்சிங் பொருளாகவும் பயன்படும். மேலும் தேனில் அன்ரி-பக்றீரியல்; தன்மை அதிகம் உள்ளது. எனவே தேனைத் தினமும் முகத்தில் தடவி 5 நிமிடம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவி வாருங்கள். இதனால் நல்ல மாற்றத்தைக் காணலாம்.

**தயிர்**-தயிரில் உள்ள லாக்டிக் அசிட், சருமத்தில் உள்ள கருமையை நீக்கும் தன்மை கொண்டது. ஆகவே தினமும் தயிரை முகம் மற்றும் கை, கால்களில் தடவி ஊற வைத்து, வெதுவெதுப்பான நீரில் கழுவி வந்தால், முகம் பொலிவாகும். முக்கியமாக, ஒரு மாதத்திற்கு தொடர்ந்து பயன்படுத்தினால் முகம் பளபளப்பாகும்

**எலுமிச்சை** -எலுமிச்சையின் சாற்றை நீரில் கலந்து, முகத்தில் தடவி 5 நிமிடம் கழித்து, சுத்தமான குளிர்ந்த நீரில் கழுவி, பின் மாய்ஸ்சுரைசர் தடவவும். இப்படித் தினமும் செய்து வந்தால், முகத்தின் பொலிவு மேம்படும்.

**கடலைமா மற்றும் மஞ்சள் தூள்**
4 கரண்டி கடலை மாவுடன், 1 கரண்டி மஞ்சள் தூள் மற்றும் சிறிது பால் சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து, முகம் மற்றும் கழுத்தில் தடவி 30 நிமிடம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும். இந்த பேஸ் பேக், வெயிலால் ஏற்பட்ட கருமையைக்குறைப்பதோடு, பொலிவை அதிகரிக்கும்.

**எலுமிச்சை சாறு மற்றும் உப்பு**
அந்த எலுமிச்சையின் சாற்றில் சிறிது உப்புச்சேர்த்துகலந்து, குளிக்கும் போது இந்த கலவையைக் கொண்டு சருமத்தை மென்மையாக ஸ்கரப் செய்து, குளிர்ந்த நீரில் கழுவினால், சருமத்தில் உள்ள கருமைகள் அகலும்.




## பொரி உருண்டை

**தேவையான பொருள்கள்**

பொரி - 8 கப்
சீனி - 2 கப்
ஏலக்காய்த் தூள் - 1 கரண்டி
வேர்க்கொம்புத் தூள் - அரைக்கரண்டி

**செய்முறை:-**
ஒரு பாத்திரத்தில் சீனியைப் போட்டு அத்துடன் அரைக் கப் தண்ணீரைச் சேர்த்துக் கொதிக்க விடவும். சீனி கொதிக்க ஆரம்பித்ததும், அதை வடிகட்டி வேறொரு பாத்திரத்துக்கு மாற்றி பாகு காய்ச்சவும். பாகு கொதிக்க ஆரம்பித்ததும் சிறிது பாகை தண்ணீரில் விட்டால், அது கரையாமல் அப்படியே கெட்டியாக இருக்கும். அதை கைகளால் எடுத்து உருட்டினால் உருண்டு வரும். இதுதான் சரியான பதம். அதிரசத்துக்கும்விட சற்று முற்றிய பதம். இப்பொழுது அதில் ஏலக்காய்த்தூள், வேர்க்கொம்புத் தூள் சேர்த்துக் கிளறி, கீழே இறக்கி வைக்கவும். உடனே அதில் பொரியைக் கொட்டி நன்றாகக் கிளறி விடவும். பொரி சூடாக இருக்கும் பொழுதே உருண்டையாகப் பிடிக்கவும். ஆறினால் பிடிக்க வராது. கையில் ஒட்டாமல் இருக்கக் கொஞ்சம் நெய் தடவிக் கொள்ளவும்.



## மஞ்சள் நீராவி..

மஞ்சளை அரைத்துப்பூசினால் தான் அழகு கிடைக்கும் என்றில்லை. மஞ்சள் கலந்த நீராவி கூட அழகைக் கூட்டும். மூன்று கப் தண்ணீரைக் கொதிக்க வையுங்கள். பசும் மஞ்சள் கிழங்கு ஒன்றை அரைத்து அதன் சாறை எடுத்து கொதி நீரோடு கலந்து ஆவி பிடியுங்கள். அடுத்து ஒரு கைப்பிடி அளவு துளசியைப் போட்டு ஆவி பிடிக்க வேண்டும். எலுமிச்சை இலை அல்லது அரை மூடி எலுமிச்சை சாறு சேர்த்து ஆவி பிடியுங்கள். இத்தனையும் ஒன்றன் பின் ஒன்றாகச் செய்து முடித்ததும், கடைசியில் ஐஸ் கட்டியை முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தேயுங்கள்.

## கருவளையங்களைத் தவிர்க்க....

கண்ணின் கீழ் ஏற்படும் கருவளையங்களுக்கு, ரெட்டீன் -ஏ எனப்படும் ரெட்டினாயிக் அமிலம் கொண்ட புதிய மருந்து நல்ல பயன் தருகிறது. இது சூரிய ஒளியால் உண்டாகும் பாதிப்பை நீக்கி, சருமத்தின் மேற்புறமுள்ள பகுதிகளுக்கு குருதியோட்டத்தையும் அதிகரிக்கின்றது. தினசரி இரவு தூங்கச் செல்லும் முன் கண்களுக்கு கீழ்புறம் சிறிதளவு ரெட்டீன் -ஏ கிறீம் தடவி வந்தால் போதும். கிறீமின் அளவு அதிகமானால் முகத்தில் வீக்கத்தையும், வறட்சியையும் ஏற்படுத்தக்கூடிய பண்பு இதற்கு உள்ளது. கூடிய வரைக்கும் வெயிலில் செல்லும் போது சருமத்தைப் பாதுகாக்கக் கூடிய கிறீம்களைப் பயன்படுத்த வேண்டும். ரெட்டீன் -ஏ ஒரு சில மாதங்கள் சென்ற பின்னரே நல்ல பயனளிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றில் இன்றைய தினம்

1768 - பிரிட்டானிகா கலைக் களஞ்சியம் முதலாவது பதிப்பு வெளியீடு
1865 - அடிமைத் தனத்தை ஒழிக்கும் அமெரிக்க அரசியலமைப்பு 13 ஆவது திருத்தம் அனுமதிக்கப் பட்டது.
1873 - முதலாவது உலக உதைபந்தாட்டப் போட்டி அமெரிக்காவில் நடைபெற்றது.
1877 - முதலாவது இசைத் தட்டில் மனித குரல் பதிவு. தோமஸ் அல்வா எடிசன் குரலில்.
1877 - 'வோஷிங்டன் போஸ்ற்' பத்திரிகை முதலாவது வெளியீடு.
1897 - அனுமதி பெற்ற ரக்ஸிசேவை உலகில் முதலாவதாக லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது.
1922 - வர்த்தக ரீதியில் முதலாவது மின்சார இணைப்பு அமெரிக்கா, நியூயோக் நகரில்.
1923 - வானொலியில் உரையாற்றிய முதலாவது அமெரிக்க ஜனாதிபதி கல்வின் கூலிட்ஜ்.
1956 - நெல்சன் மண்டேலாவும் 156 பேரும் அரசியல் நடவடிக்கை காரணமாக தென் அமெரிக்காவில் கைது.
1988 - தாள் தட்டுப்பாடு காரணமாக உதயன் 4 பக்கங்களே என அறிவிப்பு.
1988 - தென்னிலங்கையில் 13 சடலங்கள் ஒரே நாளில் வீதியோரங்களில் கண்டெடுப்பு.
1988 - நெல்சன் மண்டேலா கேப்டவுன் விக்ரர் வெஸ்ரர் சிறைச்சாலைக்கு மாற்றம்.
1992 - 3 லட்சம் இந்துக்களால் பாபர் மசூதி தகர்ப்பு, 4 பேர் சாவு.
2002 - புதிய விதிகளுடன் மீண்டும் பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறை
- நாட்டில் அரசியல் வாதிகளால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சினையை அவர்களே தீர்க்க வேண்டுமென சியோட்டோ பல்கலைக் கழகத்தில் ரணில் பேச்சு.
- பிந்துனவெவ படுகொலை 39 சந்தேக நபர்களில் 37 பேர் தலா ஐயாயிரம் ரூபா பிணையில் செல்ல 3 நீதிபதிகள் கொண்ட குழு அனுமதி.
2006 - இனந்தெரியாத ஆயுததாரிகளது கொலை அச்சுறுத்தலைத் தொடர்ந்து மனித உரிமை ஆணைக்குழு முன் சரணடைவோர் எண்ணிக்கை அதிகரிப்பு.
2007 - பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவை யாழ். ஆயர் கொழும்பில் சந்தித்து குடா நாட்டு நிலை பற்றி ஆய்வு.
2007 - 126 மேலதிக வாக்குகளால் அவசரகாலச் சட்டம் நீடிப்பு. 2007 -இலங்கையில் சமஷ்டிக் கட்டமைப்புக்குள் தீர்வு. அமெரிக்கா, பிரிட்டன் வரவேற்பு. இந்தியா மௌனம்.
2012 - யாழ். பல்கலை மாணவர் கைது - உரிய நடவடிக்கை தேவையென சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து.
2013 - கென்யாவில் 2 வயதுச் சிறுவன் எபோலா நோயால் சாவு.




நா.மதுஜெனன்,
தரம் 5
சிறி சோமஸ் கந்தக் கல்லூரி



கு.சதுஷன்,
தரம் 09
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி



எஸ்.ஹரிஸ்ராம்,
உடுவில் மகளிர் கல்லூரி.



ஆர்.ருக்சிகா,
யாழ்.கார்மல் முன்பள்ளி.

## பழைய நாடுகளும் புதிய பெயர்களும்

- டச்சு கயானா - சுரினா
- அபிசீனியா -எதியோப்பியா
- கோல்டு கோஸ்ட் -கானா
- பசுட்டோலாந்து -லெசதொ
- தென்மேற்கு ஆபிரிக்கா - நமீபியா
- வட ரொடீஷியா -சாம்பியா
- தென்ரொடீஷியா - சிம்பாப்வே
- டாங்கனீகாம,சன்ஸிபார் - தான் சானியா
- கோட்டே டிவோயர் - ஐவரி கோஸ்ட்
- சாயிர் - காங்கோ
- சோவியத்யூனியன் -ரஷ்யா
- பர்மா - மியன்மார்
- கிழக்குப்பாகிஸ்தான் - பங்களாதேஷ்
- சிலோன் - சிறிலங்கா
- கம்பூச்சியா - கம்போடியா
- பாரசீகம்,பெர்ஷியா - ஈரான்
- மெஸமடோமியா - ஈராக்
- சயாம் - தாய்லாந்து
- பார்மோஸ் - தைவான்
- ஹாலந்து - நெதர்லாந்து
- மலாவாய் - நியூஸிலாந்து
- மலகாஸி- மடகாஸ்கர்
- டச் ஈஸ்ட் இண்டீஸ் - இந்தோனேஷியா
- சாண்ட்விச் தீவுகள் -ஹவாய்
- அப்பர்பெரு -பொலிவியா
- பெக்குவானாலாந்து - போட்ஸ் வானா

## பலே பேர் வழி



நகைச்சுவை மன்னன் பீர்பால், அக்பரின் ஆலோசகர்களுள் ஒருவராக விளங்கினார். மதிநுட்பமும், யுக்தித் தன்மையும் நிறைந்த பீர்பாலை அக்பர் மிகவும் நேசித்து வந்தார். அக்பரின் ராஜ சபைக்கு வரும் சிக்கல்நிறைந்த வழக்குகளைச்சாதுரியமாகத் தீர்ப்பதில், நகைச்சுவை மன்னன் பீர்பால் வல்லவராக விளங்கினார். ஒரு முறை இரண்டு ஏமாற்றுப் பேர்வழிகள் ஒரு பிரபல நகைக் கடைக்குச் சென்றனர். அவர்கள், தாங்கள் இருவரும் பல நாடுகளைச் சுற்றி வருவதாகவும், அந்த நாடுகளில் காணப்பட்ட அபூர்வ நகைகள் பலவற்றைத் தாங்கள் வாங்கி வந்திருப்பதாகவும் கூறி, அவற்றைக் காண்பித்தனர். நகைகளைக் காண்பித்த இருவரையும் பார்த்த நகைக் கடைக்காரருக்கு நல்ல அபிப்பிராயம் ஏற்படவில்லை. அவர்கள் மீது அவருக்குச் சந்தேகம் ஏற்பட்டது."இந்த நகைகளுக்கு இப்போது உடனே விலை கணிக்க முடியாது. நகைகளைத் தந்து விட்டுச் செல்லுங்கள். இன்று இரவு இவற்றைப் பரிசோதித்து விலைகளைக் கணித்து வைக்கிறேன். நாளை காலை வாருங்கள் நகைகளுக்குரிய பணத்தைத் தருகிறேன்" - என்றார் நகைக் கடைக்காரர். அந்த ஏமாற்றுப் பேர்வழிகள் இருவரும் தங்களுக்குள் ஏதோ இரகசியமாகப்பேசிக்கொண்ட பின்பு நகைகள் அடங்கிய பொதியைக்கடைக்காரரிடம்கொடுத்தனர். "முதலாளி! நாங்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து வந்தால் தான் நகைகளையோ, பணத்தையோதரவேண்டும்.ஒருவர்தனியாக வந்து கேட்டால் கொடுக்கக் கூடாது" என்று நிபந்தனை விதித்த பின்பு இருவரும் சென்று விட்டனர். சிறிது நேரத்தில் அந்த ஏமாற்றுப் பேர்வழிகளுள் ஒருவன் பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தான்.


"முதலாளி! முதலாளி...! எனது நண்பன் திடீரென சுகவீனம் அடைந்து விட்டான். அதோ அந்த மடத்தில்தான் அவன் படுத்துக் கிடக்கிறான். நகைகளை விற்கக் கூடாது என நாங்கள் முடிவு செய்து விட்டோம். உடனே எங்கள் நகைகளைத் தந்து விடுங்கள்...." என்று பதறியபடி கூறினான். கடை முதலாளி அந்த மனிதனிடம் நகைகளைக் கொடுத்தான். நகையைப் பெற்றதும் ஓடி மறைந்து விட்டான் அந்த மனிதன். அவன் சென்று மறைந்ததும், அவனுடைய நண்பன் விரைவாக ஓடி வந்தான். அவனை ஆச்சரியத்துடன் பார்த்தார் கடை முதலாளி. "முதலாளி எங்கள் நகைகளைத் தாருங்கள். எனது நண்பன் சுகவீனமாக அந்த மரத்தின் கீழே படுத்துக் கிடக்கிறான். அவனால் இங்கு வர முடியவில்லை" என்றான் அந்த மனிதன். அவனுடைய பேச்சைக் கேட்டதும் அதிர்ச்சி அடைந்தார் கடை முதலாளி. அந்த மனிதர்கள் இருவரும் ஏமாற்றுப் பேர் வழிகள் என்பதை அவர் புரிந்து கொண்டார். "சற்று நேரத்துக்கு முன்பு உனது நண்பன் வந்து நகைகளைப் பெற்றுக்கொண்டு போய்விட்டான் அவனைப்போய்ப்பார்" என்றார் முதலாளி.

"என்ன முட்டாள்தனமாகப் பேசுகிறீர்கள்...? நாங்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து வந்தால்தான் நகைகளைத் தர வேண்டும் என்பதே எங்கள் நிபந்தனை. அப்படியிருக்கதனிமையில்வந்த அவனிடம் ஏன் நகைகளைக் கொடுத்தீர்கள்.....? உடனே அந்த நகைளை என்னிடம் மரியாதையாகத் தந்து விடுங்கள்.." என்று சத்தமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தான் அந்த மனிதன். அதே நேரத்தில் அந்த வழியால் வந்த பீர்பால் நகைக்கடை உரிமையாளரிடம் என்ன விடயம் என்று என்று கேட்டார். நகைக் கடைக்காரர் நடந்த விடயங்களைப் பீர்பாலிடம் விளக்கமாக எடுத்துக் கூறினார். வந்திருப்பவர் பீர்பால் என்பதை அறிந்ததும் அந்த ஏமாற்றுப் பேர்வழி செய்வதறியாது திகைத்து நின்றான். "இரு வரும் ஒன்றாகச் சேர்ந்து வந்தால் தான் நகைகளைத் தர வேண்டும். என்றுநிபந்தனைவிதித்தீர்கள்அல்லவா? இப்போது நீ தனிமையாகத் தானே வந்திருக்கிறாய்....போய் உனது நண்பனை அழைத்துக் கொண்டு. இருவரும் ஒன்றாக வந்து சேருங்கள் உடனே உங்கள் நகைகளைக் கடைக்காரர் தருவார்" என்றார் பீர்பால். முற்றிலும் ஏமாற்றமடைந்த ஏமாற்றுப் பேர்வழி வந்த வழியே திரும்பி ஓடி மறைந்தான்.


பீர்பாலின் சமயோசித புத்தியை நகைக் கடைக்காரர் வெகுவாகப் புகழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூசணம் மு.மாசிலாமணி



# சிரிக்க சிந்திக்க சில வரிகள்



வாயிருந்தால் வங்காளம் போகலாம் என்பார்கள். இதற்குப் பல அர்த்தங்கள் கூறலாம். அதில் மொழி தெரிந்தால் வெல்லலாம் எனவும் எடுத்துக் கொள்ளலாம்.

உலகிலே ஆயிரக்கணக்கான மொழிகள் மனிதர்களின் தொடர்பாடலுக்கு உதவுகின்றன. இருந்தும் அந்த மொழிகளிலே ஆங்கிலம் முதலிடம் வகிக்கிறது. ஆங்கிலேயர்கள் தாம் ஆட்சி புரிந்த நாடுகளில் தமது மொழியைப் பரப்பியதால் அந்த மொழி உலக மொழியாக (INTERNATIONAL LANGUAGE) மிளிர்கின்றது.


ஆங்கிலம் பல மொழிகளிடம் கடன் வாங்கி வளர்ந்த மொழி என்பது கண்கூடு. எமது தமிழும் அந்த மொழிக்குப் பல சொற்களை வழங்கியிருக்கிறது. எமது சமூகத்தில் ஆங்கிலம் தெரிந்த மனிதரை, அவர் நல்லாய்ப் படிச்ச மனுசன் என்பர். ஒரு மனிதன் தன் அறிவை வளர்க்கவும், வேற்று மொழி பேசுபவர்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தவும் பன்மொழிப் புலமை அவசியம்.

சுயநலம் கொண்ட அரசியல்வாதிகளின் வழிகாட்டலில் எம்மில் பலர் எமது சகோதர மொழியைக்கூட கற்கவோ பேசவோ முடியாமற் போனமை எமது துரதிர்ஷ்டம். மகாகவி பாரதி, இந்திய மொழிகளின் அழகை, சுந்தரத் தெலுங்கு பாட்டுக்கும், கவிதைக்கு மராட்டிய மொழி எனவும் தமிழில் பாடி வைத்தான்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நான் பிறந்ததால் எனது கல்வியை ஆங்கில மொழியில் கற்க வேண் டியதாயிற்று. அதனால் ஆங்கில மொழியைப் பேசவும் எழுதவும் அது ஓரளவுக்கு உதவியது; உதவுகிறது. அண்மையில் வெளிநாடு ஒன்றுக்கு சென்ற இடத்தில், இந்த ஆங்கில மொழி உதவவில்லை. காரணம் அந்த நாட்டில் பிரெஞ்ச் மொழி தான் பேசுவார்கள். அவர்களுக்கு ஆங்கில மொழி ஓரளவுக்குப் புரிந்ததால் நிலைமையைச் சமாளிக்க ஆங்கிலம் உதவியது.

நான் மொழிகளைப் பற்றி சொல்லும்போது பழைய நகைச்சுவை ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது. இரு நண்பர்கள் ஒரு துவிச்சக்கர வண்டியில் போய்க் கொண்டிருக்கையில் திடீர் எனப் பொலிஸ்காரர் ஒருவர் வருவதைப் கண்ட அவர்கள் துவிச்சக்கர வண்டியிலிருந்து குதிக்க, இருவரும் தடக்கி வீழ்ந்து விட்டனர். இதை முழுமையாக அவதானிக்க முடியாத பொலிஸ்காரர் விடயம் புரியாது என்ன நடந்தது எனக்கேட்க, சமயோசிதமாக வண்டியை ஓட்டியவர் ஒன்றுமில்லை சேர், நான் தடுமாறி விட்டேன் என்றார் ஆங்கிலத்தில் (NO SIR, I LOST MY BALANCE) என்றார். வண்டியில் ஏறி வந்தவர் திடீர் என, ஓம்! நானும் நிதானத்தை இழந்திட்டேன் (YES, I ALSO LOST MY EQUILIBRIUM) என்றார். ஆங்கிலம் அதிகம் தெரியாத பொலிஸ்காரர் சரி பரவாயில்லை இரண்டு பேருக்கு இழப்பு (LOST) இருப்பதால் பொலிஸ் ஸ்ரேசனில் ஒரு முறைப்பாடு (ENTRY) போட்டுட்டுப் போங்கோ என்றார். இவர்கள் இருவரையும் அந்த ஆங்கிலம் காப்பாற்றி விட்டது. கொஞ்சம் சிரியுங்களேன்!

## சொற்சிலம்பம் - போட்டி இல: 397



அனுப்புபவர் பெயர்:........................................................

பூரணமான தபால் விலாசம்: ..................................................

..........................................................................

கையொப்பம்:...............................................................

**இடமிருந்து வலம்**

1. இந்திரலோகத்து ஆடல் நங்கை
4. உபகரணம்
6. தமிழ் மாதங்களுள் ஒன்று
8. ஒருங்கு சேர்த்தல்
10. பாவம் செய்தவன்
11. தர்க்கம்
12. சுவாமியை வைத்து இழுத்துச் செல்லும் சில்லுகள் பூட்டிய சாதனம்
13. மற்றொருவர் மீது தாக்குதல் மேற்கொள்ள இதுவும் பயன்படுவதுண்டு
14. பிரேதம்
15. நம்மைக் குறிப்பிடுவது
16. காலில் கையில் பத்து
18. உலோகப் பொருளுக்கு மேலே பூசும் பூச்சு
19. மலை
20. நீர் அருந்தும் சிறிய பாத்திரம்
21. மகள்

**மேலிருந்து கீழ்**

1. தூண்டுதல் மேற்கொள்
2. வாழ்தல்
3. உள்ளம்
4. கடல் நிலத்தைத் தொடும் பகுதி
5. கேள்வி - பதில்
7. ஓர் அசைச் சொல்
9. திருமணம்
10. பகுதி/பங்கு
12. ஒரு மாற்றுப் பயிர்
14. முன்னைய காலத்தில் ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிப்பது இதனால்
15. ஈரிரண்டு
16. மார்புக்கும் முதுகுக்கும் பக்கவாட்டில் இருப்பது
17. ஒரு சிறி புள்
18. ஒரு வித்து மண்ணிலிருந்து வெளிவரும் ஆரம்ப நிலை
19. உயரத்தில்/ உயர்வானது

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வது டன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடை களை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 395 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)பாதகம் (4)அவதி (7)யாசம் (8)சகடம் (9)சம்பந்தன் (10)கறவை (12) சிம்மம் (14)காவி(16)முறி (17) ஆசியா (18) கயல் (19) கல (20) தாது (21) அடம்பன்

**மேலிருந்து கீழ்**

(1)பாயாசம் (2)தசம் (3)கம்பளம் (4)அகன்ற (5)வட (6)திம்பு (8)சதகம் (11)வைகாசி (12)சிறியது (13)மதி (15) வியாழன் (16) முகதா (17)ஆலம் (19)கட

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.397
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(16.12.2015 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 395 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**

வே.தபேந்திரன்
மாவட்ட சமூக சேவைகள் திணைக்களம்,
மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.

**2 ஆம் பரிசு**

திருமதி க.அரியநேசன்
நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

**3 ஆம் பரிசு**

தர்மலிங்கம் இராமச்சந்திரன்
இலங்கை வங்கி அருகாமை,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

**4 ஆம் பரிசு**

திருமதி வா.அகல்யா
அமெரிக்க மிசன் பாடசாலை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

**5 ஆம் பரிசு**

அமலதாஸ் உமாசிறி,
சரஸ்வதி வீதி,
பட்டிதோட்டம், மன்னார்.

**பாராட்டுப் பெறுவோர்**

அகிலா ஆனல்ட்,
இல.33, 5/3 அருத்துஷா லேன்,
கொழும்பு-06

செ.சேந்தன்,
இல. 185/1 கண்டி வீதி,
சாவகச்சேரி.

குணராசா விஜிதன்
குமுளமுனை மத்தி, குமுளமுனை,
முல்லைத்தீவு.


சொற்சிலம்பம் போட்டி இல.397 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 20.12.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தங்களது சரியான முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 395 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணே பெண்ணே! பொறாமை வேண்டாம்!



பொறாமை பெண்களின் கூடப் பிறந்த குணங்களில் ஒன்று. பொறாமை என்பது ஒருவித மன நோய் என்று தான் கூற வேண்டும். தான் பெறாத ஒன்றை பிறர் பெறும் போது ஏற்படும் ஒருவகை உணர்வே பொறாமை உணர்வாகும். சிலர் தாம் பெற்றிருப்பதைத் தனக்குக் கீழே உள்ளவர்கள் பெறும் போதும் பொறாமைகொள்வர். பெண்களின் பொறாமைக் குணம் ஆச்சரியமானது. பொறாமை நெருக்கமானவர்களுக்கு மத்தியில் தான் ஏற்படும். அமெரிக் காவில் இருக்கும் ஒருவன் மீது இலங்கையில் இருப்பவன் பொறாமை கொள்ள மாட்டான். அடுத்து ஒரே துறையில் இருக்கும் இருவருக்கிடையே தான் பொறாமை ஏற்படும். தனது சகோதரிக்கு அழகிய கணவன் கிடைத்திருக்கிறான் எனப் பொறாமை கொள்ளும் பெண்கள் இருக்கின்றனர். சில பெண்கள் தமது குடும்ப வாழ்வில் பல சிரமங்களை சந்தித்திருப்பர். கணவனால் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கப்பட்டிருப்பர். இவர்கள் தங்களது மருமகள்களைப் பார்க்கின்றனர். தமது மருமகள் தாம் அனுபவித்த கஷ்டங்களை அனுபவிக்காமல் மகிழ்வாக வாழ்வதைப் பார்க்கும் போது சில மாமிகளுக்குப் பொறாமை ஏற்படுகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் அந்தப் பெண் பெரும் இன்பத்தை நிறுத்த ஏதேனும் செய்ய முடிந்தால் செய்வார்கள். அப்படி இல்லை யென்றால் புறம் பேசி, கோள் சொல்லி அல்லது அவதூறு கூறி அவளது கௌரவத்தைக் குறைக்க முயல்வார்கள். இந்தப் பொறாமைக் குணத்தால் மன அமைதி கெடுகின்றது. நீங்கள் பொறாமைக்காரியாக இருந்தால் உங்கள் நிம்மதியையும் மன அமைதியையும் நீங்களே கெடுத்துக் கொள்வீர்கள். நீங்கள் யார் மீது பொறாமை கொள்கிறீர்களோ அவர்கள் சந்தோசப்படும் போதெல்லாம் உங்களுக்குக் கவலையை ஏற்படுத்தும். இது தேவை தானா? உங்களோடு கூட இருப்பவர்கள் வாழ்வில் சந்தோசங்களை அனுபவிக்கும்போது அவர்கள் மீது பொறாமை கொள்வதை விட்டு விட்டு அவர்களை வாழ்த்தக் கற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்குக் கிடைக்காதது உங்கள் தோழிக்கோ, உறவுக்காரப் பெண்ணுக்கோ கிடைத்திருக்கிறதே என்று மகிழ்ச்சி கொள்ளுங்கள். மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள். உங்களுடன் கூட இருப்பவர்கள் சிறப்பை அடையும்போது மகிழ்வடையக் கற்றுக்கொள்ளுங்கள். பொறாமை கொண்டு அவர்களின் அந்தஸ்தையும், மகிமையையும் குறைக்கும் வண்ணம் பேசித்தொலைக்காதீர்கள். கூட இருப்பவர்கள் மகிழ்ச்சியுடன் இருக்கும்போது முகத்தை சுருட்டிக் கொண்டு சோகத்தில் வாடாதீர்கள். மலரும் பூக்களைக் கண்டு மனம் சோர்வடையலாமா? பூக்களின் நறுமணத்தைச் சுவாசிக்காமல் மூக்கை மூடிக் கொள்ளலாமா? எனவே, பொறாமை கொள்ளாதீர்கள். பொறாமை மூலமாக அன்பையும் மக்களது நேசத்தையும் இழந்து மன அமைதியையும், நிம்மதியையும் இழந்து கோள் சொல்லி, புறம் பேசி, அவதூறு கூறி, பாவத்தைத் தேடாமல் உங்களைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். நீங்கள் பிறர் மீது பொறாமை கொள்ளக் கூடாது. பிறர் உங்கள் மீது பொறாமை கொள்ளும் விதத்தில் நடந்து கொள்ளவும் கூடாது. இதிலும் நீங்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். வாழ்வில் வளங்களையும், உயர்வையும் அடையும்போது கர்வம் கொள்ளாதீர்கள். நீங்கள் அடையும் வளங்களால் உங்களைச் சூழ இருப்பவர்களும் நலம் பெறும் வண்ணம் பார்த்துக்கொள்ளுங்கள்.

"இந்தப் பொறாமைக் குணத்தால் மன அமைதி கெடுகின்றது. நீங்கள் பொறாமைக் காரியாக இருந்தால் உங்கள் நிம்மதியையும் மன அமைதியையும் நீங்களே கெடுத்துக் கொள்வீர்கள். நீங்கள் யார் மீது பொறாமை கொள்கிறீர்களோ அவர்கள் சந்தோசப்படும் போதெல்லாம் உங்களுக்குக் கவலையை ஏற்படும்."

## புதிய தலைமுறைப் பெண்கள்

அழகைக் கண்டு ஆசை
கொண்ட காலம் போயாச்சே! – அவள்
அறிவைக் கண்டு அச்சம்
கொள்ளும் காலம் வந்தாச்சே!

வெட்கங் கண்டு விரட்டிச்
சென்ற காலம் போயாச்சே! – அவள்
வீரம் கண்டு வேர்த்துப்
போன காலம் வந்தாச்சே!

மௌனம் கண்டு மடக்கப்
பார்த்த காலம் போயாச்சே! – அவள்
பேச்சைக் கண்டு பிரமிக்
கின்ற காலம் வந்தாச்சே!

அடக்கம் கண்டு அதட்டிப்
பார்த்த காலம் போயாச்சே! – அவள்
ஆற்றல் கண்டு அதிர்ந்து
போன காலம் வந்தாச்சே!

பொறுமை கண்டு புண்ணாய்ச்
செய்த காலம் போயாச்சே! – அவள்
திறமை கண்டு திகைத்து
நிற்கும் காலம் வந்தாச்சே!

பணிவைக் கண்டு பந்தாய்
ஏற்கும் காலம் போயாச்சே! – அவள்
துணிவைக் கண்டு துக்கம்
கொள்ளும் காலம் வந்தாச்சே!

மென்மை கண்டு மேயப்
பார்த்த காலம் போயாச்சே! – அவள்
வன்மை கண்டு வாலைச்
சுருட்டும் காலம் வந்தாச்சே!

என்ன செய்வாள் என்றே
மிதித்த காலம் போயாச்சே! – அவள்
எதையும் செய்வாள் ஏன்வம்
பென்னும் காலம் வந்தாச்சே!

பார்த்தால் (ள்) சிரித்தால் (ள்)
படிவாள் என்று பல்லைக் காட்டாதே! – அவள்
பார்வை வேறு பாதை
வேறு பாழாய்ப் போகாதே!

இணையவள்



## எல்லாரும் ஏறி...

அமிர்தலிங்கம் ஏறி (பிரச்சினையில்) சறுக்கிய குதிரையிலை
சக்கடத்தார் இல்லையில்லை சம்பந்தர் ஏறி வெற்றியுடன் வருவாரா?
சறுக்கி விழாமல் எழுந்து வந்தால் சரிதான்
சோழியன் குடுமி என்றும் சும்மா ஆடாது
ஆதாயமின்றிச் செட்டி ஆற்றை இறைக்கமாட்டான்
பேரினவாதிகளின் குடுமிகளும் சும்மா ஆடாது
தமிழில் பல பழமொழிகள் புது மொழிகளும் உண்டு
பப்பாவில் ஏற்றுதல், தலைப்பாக் கட்டுதல்
சவர்க்காரம் போடுதல்(சோப்பு) தைலம் வைத்தல்
இவற்றில் எதுவும் இல்லாமல் இருந்தால் எல்லோருக்கும் நல்லது
சம்பந்தர் ஐயா பழம்பெரும் அரசியல் விற்பன்னர்
அவருக்குத் தண்ணி காட்ட ஆராலும் முடியாது
ஆனால் ஆண்டாண்டு காலமாய் அடிபட்டவர் நாங்கள்
ஏமாந்த தமிழர் சூடுகண்ட பூனைகள்
எங்களுக்கு எல்லாம் சந்தேகம், எதிலும் சந்தேகம்
ஆள் மாறியதே அன்றி ஆட்சி மாறவில்லை
பேரினவாதக் குட்டையில் ஊறிய மட்டைகள்
பிரச்சினை பற்றிப் பெரியவரோ பிரதமரோ பேச மறுக்கிறார்கள்
முக்காட்டுக்குள் வைத்தே கை காட்டுகிறார்கள்
ஏதாவது பேசினால் பேரினவாதம் வைத்துவிடும் அரசுக்கு ஆப்பு
இப்போதும் அரசியல் கைதிகளைத் தாக்கி அறியாமல் செய்கிறார்கள்
எங்க்ள் தலைமைகளோ எதுவும் செய்ய முடியாமல்
இனப்பிரச்சினை அரசியல் கைதிகள் விடுதலை
காணிப்பிரச்சினை காணாமற் போனோர் இராணுவப் பிரசன்னம்
எதற்குமே தீர்வின்றி ஏங்கித் தவிக்கிறோம்
கானல் நீரென எண்ணிக் கடுக வழி நடந்தால்
தாகம் தீராது சாவுதான் தமிழருக்கு மிஞ்சும் இதை
எதிர்க்கட்சித் தலைவரும் கூட்டமைப்பும் உணர்ந்து நடந்தால் சரி
இன்று காலை மேதகு ஜனாதிபதியின் செய்தி நாட்டைக் காத்த படைவீரர்களை
எக்காலும் எவரிடமும் காட்டிக் கொடுக்கமாட்டாராம்
இதுதான் பேரினவாதத்தின் ட்ரேட் மார்க்

கந்த பேரின்பம் தீவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# கேள்விச் செவியர்

மிருசுவில் **தமிழ்தாசன்**

**கா**லை ஏழரை மணி. ஊரெங்கும் நாய்களின் குரைப்பொலிகள் கேட்டுக் கொண்டிருந்தன. எல்லோர் முகங்களிலும் இனம்புரியாத பயப்பீதி.

"டேய் சுகுணன்! உன்னையல்லே அந்த வைக்கல்க் கும்பியுக்கை போய் ஒளிக்கச் சொன்னனான். எக்கணம் அவங்கள் வந்தாலும்... ஓடிப்போய் ஒளியடா!"

தடியன் தம்பிராசர் சுடுகஞ்சி குடித்த நாய் போன்று செய்வதறியாது ஓடியாடி அலைந்து கொண்டிருந்தார்.

"பிள்ளையளுக்கு வைக்கல்ச் சுணை கடிக்குமெல்லே! டேய் தம்பி! சேட்டைப் போட்டுக் கொண்டுபோய் ஒளிமோனை!"

தம்பிராசரின் மனைவி அற்புதம் ஒரு சேட்டை எடுத்துக் கொண்டுவந்து சுகுணனிடம் அன்புடன் கொடுத்தாள்.

"மெய்யேப்பா! எங்கை உவள் மோகனா! அவளையும் கமலியையும் கட்டிலுக்குக் கீழே ஒளிக்கச் சொல்லும். எல்லாரும் ஒரிடத்திலை சேர்ந்து ஒளிக்கிறதும் ஆபத்துத்தான். அம்பிட்டால் எல்லாரையும் ஒண்டாய்ச் சாய்ச்சுக் கொண்டு போகிடுவாங்கள். கடவுளே....!" அதிகமாகப் பயந்து போயிருந்தார் தம்பிராசர். அவருடைய பயத்திலும் நியாயமில்லாமலில்லை. அடிபட்டவனுக்குத்தானே வலியின் வேதனை புரியும். அவர் ஏற்கனவே அடிவாங்கி அனு பவப்பட்டவரல்லவா!

ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற பெரிய சுற்றி வளைப்பில் மூத்த மகன் சுகிர்தனைப் பறிகொடுத்தவர். இன்று வரைக்கும் அவனைப்பற்றிய எந்தவித தகவல்களுமில்லை. தங்கையின் பதினெட்டு வயது மகள் சுமதியை விசாரணைக்கென்று அழைத்துச் சென்றவர்கள் இதுவரை அவளை விடுவிக்கவில்லை. இப்படியாக எத்தனை துன்பங்களை அனுபவித்த தம்பிராசர் எப்படித்தான் தைரியமாக நிற்பது!

பொழுது புலர்ந்து காலை ஏழு மணியாக முன்பே ஊர் நாய்களெல்லாம் ஒன்று சேர்ந்து குரைத்துக் கொண்டிருந்தன.

அந்தக் கிராமத்தில் படித்தவர்கள், உத்தியோகத்தர்கள் என்று சொல்லப்போனால் மிகக் குறைவானவர்களே காணப்பட்டனர். விவசாயிகளும் அன்றாடம் கூலிவேலை செய்து வயிற்றைக் கழுவும் வறுமைப்பட்டவர்களுமே வாழும் சின்னஞ்சிறிய கிராமம்.

"உவடமெல்லாம் பொலிசுக்காரரும் ஆமிக்காரரும் வந்து நிக்கிறாங்களப்பா. சுற்றி வளைப்பு நடக்கப்போகுதாம். எல்லாரும் உங்கடை உங்கடை வீடுகளுக்கு ஓடிப்போய் இருக்கிற பெடிபெட்டையளைக் காப்பாத்திற வழியைப் பாருங்கோ!"

மிகுந்த அவசரத்தினாலும் பயத்தினாலும் உந்தப்பட்டு நாக்கிழுக்க ஓடிக்கொண்டிருந்தான் தங்கராசன்.

இன்று முதன் முதலாக தெருவுக்குப் போனவன் இவன் ஒருவன்தான். வழமையாக விடிந்ததும் விடியாததுமான அந்த வைகறைப் பொழுதில் வேம்படிச் சந்திக்குப் போய் விடுவான். கடற்கரையில் மீன் கொள்வனவு செய்பவர்களுக்குத் தரகு தம்பட்டம் பார்த்து எப்படியாவது ஒரு ஐநூறு என்றாலும் சம்பாதித்துக் கொண்டு வந்துவிடுவான்.

அப்படியானவனே இன்று உழைப்புப் பிழைப்பேதுமின்றி உயிரைக் கையில் பிடித்தபடி ஓடோடி வந்து விட்டான் எனில் சூழ்நிலையின் தீவிரம் சற்றுப் பாரதூரமானதாகத்தானிருக்க வேண்டும்.

"என்னப்பா சுப்புறுவர்! பேந்தும் பழையபடி றவுண்ட் அப்போ? அட்டம்பொம்போ செய்யத் துவங்கீட்டிங்களாம்? உங்கை சந்தியள் ஒழுங்கையெல்லாம் ஆமியும் பொலிசும் வந்து நிக்குதாம்."

வாய்க்குள் வேப்பங்குச்சியை வைத்துக் கடித்துத் துப்பியபடி புண்ணிய மூர்த்தியர் நக்கல் நளினத்துடன் கேட்டார்.

"காணும்! எனக்கு உதுமுந்தியே தெரியும். புதிய அரசும் வந்திட்டுது எண்டு உங்கை புளுகித் திரிஞ்சவை, இனி என்ன செய்யப் போகினமாம்? கொஞ்ச நாள் எப்பன் நிம்மதியாயிருந்தம். இனித் துவங்கீட்டாங்கள் இருக்கிற பொடிபொட்டையளை அள்ளிக் கொண்டு போறதுக்கு. கடவுளே என்ன நடக்கப் போகுதோ! உவையை நம்பித்தானே எங்கடை சனமெல்லாம் உவைக்கு எலச்சனுக்குத் துண்டுபோட்டதுகள். பேந்தென்ன சீலம் பாய்க்கு உப்பிடி வந்து நிண்டு நம்பிக்கைத் துரோகம் செய்யுறாங் கள்!" ஆத்திரத்தில் பற்களை நறநறவென நெருடினார் சுப்புறுவர்.

"நல்ல காலம்! இப்ப உவன் தரகன் தங்கராசன் உந்தக் கதை சொல்லாட்டில் எங்கடை ஆக்கள் ஒருத்தருக்கும் தெரியவந்திருக்காது. நாங்களும் சந்திப் பக்கம் அலமலுக்கை போயிருந்தமெண்டால் அவங்கள் பாவியளிட்டை அம்பிட்டு அதிலை குந்திக் கொண்டிருக்க வேண்டி வந்திருக்கும்."

"ஓமப்பா! உந்தப் புதினங்கள் புடுங்கிறதிலை தங்கராசன் ஒரு விண்ணன்தான்."

இற்றைக்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற பெரிய சுற்றி வளைப்புக்கள், தேடுதல் நடவடிக்கைகளில் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த அப்பாவிகளே அதிகமாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். அந்த வலியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக இப்போதுதான் மீண்டுகொண்டிருக்கையில் இனியும் ஒருசோதனையா? அந்த ஊரவர்களால் இதை ஜீரணிக்க முடியவில்லை.

தங்களின்வயது வந்த பிள்ளைகளை முடிந்த வரையில் தலைமறைவாகச் செய்துவிட்டு அயல்வீடுகளுக்கு வந்து ஒன்றாக முடங்கிக் கொண்டனர். பெற்று வளர்த்த பிள்ளைகளைப் பறிகொடுப்பதென்பது என்ன சாதாரண விடயமா? அவர்களை எப்படிக் காப்பாற்றலாம் என்பது பற்றி ஒருவருடன் ஒருவர் கலந்தாலோசிப்பதற்காக ஒவ்வொரு பக்கத்துவீடுகளிலும் நான்கைந்து பெற்றோர்கள் ஒன்று சேர்ந்து கொண்டிருந்தனர். எல்லோர் முகம்களிலும் பயப்பீதி வழிந்து கொண்டிருந்தது.

"என்னடி பெட்டை கமலினி! எங்கையடி போட்டு வாறாய்! என்னடி! இண்டைக்குச் சுற்றி வளைப்பாம். உவன் தங்கராசன்தான் சொன்னவன். நீ அறியேல்லையே!" தன்னுடைய வீட்டிலிருந்தபடியே சிற்றம்பலத்தார் கமலினியிடம் பேச்சைக் கொடுத்தார்.

"ஓமோம் சித்தப்பா! உவன் தங்கராசன்தான் சொன்னவனெண்டு நானும் அறிஞ்சன். ஆமியும் பொலிசும் உங்கை சபாண்ணையின்ரை வீட்டுச் சந்தியிலை நிக்கிறாங்கள். உந்த நாச்சிமாராணை நான் என்ரை கண்ணாலை கண்டனான்."

"ஓமடி பெட்டை! இல்லாட்டில் உவடத்து நாயளெல்லாம் ஓடியோடி உந்தக் குலைப்புக்குலைக்குதுகளே! அதுசரி! அவங்கள் என்ன செய்து கொண்டு நிக்கிறாங்கள். "

"ஏகாம்பரத்தார் வீட்டை செம்புக்கை பச்சைத் தண்ணி வாங்கிக் குடிச்சுக்கொண்டு நிண்டாங்கள். நான் கிட்டம் போய்த்தான் கவனிச்சன். கடவுளே! பயத்திலை மாடும் அவுக்காமல் திரும்பி ஓடிவந்திட்டன். றவுண்ட் அப்போ தெரியாது. ஆனால் அவங்கள் சந்தியிலை நிக்கிறாங்கள்."

> ‘எனக்குத் தேத்தண்ணி யும் வேண் டாம் ஒரு பணியாரமும் வேண்டாம். கொஞ்சம் அங் காலை போப்பா! உண்ணாணைக் காத்தார்! வெக்கத்தை விட்டிட்டுச் செல்லுறன். எனக்கு உந்தச் சுற்றிவளைப்பு எண்ட கதை கேட்டவு டனை என்னையறியாமல் பயத்திலை ஒண் டுக்குப் போட்டுதப்பா!

இனியும் நின்று விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கப் பொறுமையில்லாது ஓட்டமும் நடையுமாக விரைந்து கொண்டிருந்தாள் கமலினி.

"பாத்தீரே காத்தார்! ஏகாம்பரத்தாற்றை பெட்டையளிட்டை தண்ணி வாங்கிக் குடிக்கிறாங்களாம். அப்ப இனி ஏகாம்பரத்தார் வீட்டுக்கு அவங்களாலை ஒரு கெடுதியும் வராது. பொய்யெண்டாற் பாருங்கோ!" சிற்றம்பலத்தார் சொல்லி முடிப்பதற்குள், "இது காணும்தானே! பிறகென்ன... அவளவை வலு சுந்தரியள். ஒருமாதிரிச் சிரிச்சு மயக்கி அவங்களை மருட்டி எடுத்துப் போடுவளவை. அதிலும் ஏகாம்பரத்தாற்றை அந்த இரண்டாவது பெட்டை இருக்குதெல்லே....! கடவுளே! பயங்கரச் சதுர்!"

ஏற்கனவே ஏகாம்பரம் குடும்பத்தினருடனிருந்தபழியை மனத்துக்குள் தீர்த்துக் கொண்டார் கார்த்திகேசர்.

"எணை அம்மா! என்ரை அடையாள அட்டையைக் கண்டனியேணை? ஐயோ இவ்வளவு நாளும் கிடந்தது, இப்ப அவங்கள் வரயுக்கை கோதாரி விழுந்ததைக் காணயில்லை. டேய் பகீர்! நீ கண்டனியே?"

நெருப்புக்குள் கால்வைத்துவிட்ட நாய்க்கடுவன் போலத் துடித்துக் கொண்டிருந்தான் குமாரவேலரின் மூத்தவன் யசோதரன். இங்கே பட்டறிலை

பொதுவாக இந்தக் கிராமத்து வீடுகளிலுள்ள இளைஞர்கள், யுவதிகள் எல்லோருக்குமே இப்போதைய நிலமையில் அது மிகவும் பிரதானமான தொன்றாயிருந்தது. மேசை லாச்சிகள், அலுமாரிகள், சூட்கேஸ் என்று மனம் போனபடி பதற்றத்துடன் தேடுதல்கள், கிளறுதல்கள், உதறிக் கொட்டுதல்களெல்லாம் தாரளமாக நடந்து கொண்டிருந்தன.

யாருக்குத் தெரியும்? இப்படியொரு நல்லாட்சியில் அமைதியான சூழலில் யாரும் எதிர்பார்த்திருக்காத வில்லங்கமொன்று வருமென்று?

ஒரு பக்கத்துச் சேட்டைக் கையில் கொழுவி அணிந்தபடி மறுபக்கத்தைத் தொங்கவிட்டபடி சைக்கிளில் வந்த வெறிக்குட்டி வேலாத்தை பின் சக்கரத்தில் குதிக்காலை வைத்து ஒரு சடன் பிறேக்கில் சைக்கிளை நிறுத்தினான். சிற்றம்பலத்தார் வீட்டில் குழுமியிருந்தவர்களனைவரும் ஆவலுடன் ஓடிவந்து அவனருகில் நின்றனர். வேலாத்தை, சதா மது போதையிலே காணப்படும் ஒரு வித்தியாசமான பேர்வழி. எதற்கும் அஞ்சாதவன். எதிலும் தலையிடக் கூடிய ஓர் இரும்புத் தலையன்.

"மெய்யேடா வேலாத்தை! விசயமொண்டு கேள்விப்பட்டியே?"

"ஓ! றவுண்ட் அப்பாம், உவன் தங்கராசன்தான் சொன்னவனாம். அதுக்கென்ன பயமே! உப்பிடி எத்தினை ரவுண்ட்அப்புகளைப் பாத்திட்டம்! இனியும் பயப்பிட ஏலுமே! உண்ணாணை! நம்பினால் நம்புங்கோ! நானிப்ப சந்திக்குப் போய் உவன் மயிலனிட்டை ஒரு போத்தல் பனங்கள்ளு வாங்கியடிச்சால் தான் சரி வரும். இராத்திரிக் கொஞ்சம் கூடிப் போச்சுது. ஆமி நிண்டாலென்ன! பொலிசு நிண்டா என்ன! சிவணாணை நானிப்ப சந்திக்குப் போய்க் கள்ளுக் குடிக்காமல் வர மாட்டன்."

வேலாத்தை சொன்னதைச் செய்வான். பயம் என்பது அறவே கிடையாதவன். எதைப் பற்றியும் யோசிக்க மாட்டான்.

"ஓமடா பிள்ளை வேலாத்தை! உனக்கு போற வழிக்குப் புண்ணியம் கிடைக்கும்." யாரோ கிண்டி விட்டார்கள்.

எப்படியோ வேலாத்தை போய் விட்டான். அவன் கள்ளைக் குடித்தாலென்ன! கசிப்பைக் குடித்தாலென்ன! என்ன பிரச்சினையென்பதை வந்து விளக்கமாகச் சொல்லி விட்டான் என்றால்தான் மனதுக்கு ஓர் ஆறுதல் கிடைக்கும்.

"இஞ்சாருங்கோப்பா! விடிய வெள்ளண எழும்பின நேரம் துவக்கம் ஒரு சாயத் தண்ணி கூடிக் குடிக்காமல் வெறு வயித்தோடை கிடந்து காயுறியள். வந்து தேத்தண்ணியைக் குடிச்சுட்டுப் போங்கோவன்."

சிற்றம்பலத்தாரின் மனைவி பரிமளம் பரிவுடன் வந்து பேசினாள்.

"எனக்குத் தேத்தண்ணியும் வேண்டாம் ஒரு பணியாரமும் வேண்டாம். கொஞ்சம் அங் காலை போப்பா! உண்ணாணைக் காத்தார்! வெக்கத்தை விட்டிட்டுச் செல்லுறன். எனக்கு உந்தச் சுற்றிவளைப்பு எண்ட கதை கேட்டவுடனை என்னையறியாமல் பயத்திலை ஒண்டுக்குப் போட்டுதப்பா! பின்னையென்ன! உவங்கள் பாவியள் வந்தாங்களெண்டால் என்ன கிழடு கட்டையளெண்டு பாப்பாங்களோ பெண் பிரசுகள் எண்டு பாப்பாங்களோ எல்லாரையும் கலக்கித் தள்ளிப் போடுவாங்களப்பா."

சிற்றம்பலத்தார், தான் பயந்ததுடன் நில்லாது குழுமியிருந்தவர்கள் அனைவருக்கும் கடுக்காயில் கடும் பேதி கொடுத்தார்.

"டேய் டேய்! பங்கார்! வெறிக்குட்டி வேலாத்தை வாறான்ரா வாறான்ரா! என்னவெண்டு கேப்பம்." எல்லோர் முகங்களிலும் ஏக்கமும் கலக்கமும் தாராளமாகப் பூசப்பட்டிருந்தன. பாவ மன்னிப்பு திரைப்படத்தில் சிவாஜி கணேசனின் விசில் ஸ்டைலில் வந்து சைக்கிளை நிறுத்தினான் ஒருவித திமிருடன். சந்திர மண்டலத்துக்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்ட நாய்க்குட்டி மீண்டும் திரும்பிப் பக்குவமாகப் பூமிக்கு வந்து விட்டதைப் போன்றுணர்ந்தனர் அனைவரும். எப்படியோ வேலாத்தை தப்பி வந்து விட்டான்.

"ஏய் விசர் மனிசங்களே! அங்கை ரவுண்ட் அப்புமில்லை, ஒரு சீலம் பாயுமில்லை. சுகாதாரப் பகுதி, டெங்கு நுளம்பு பாக்கிறத்துக்கெண்டு ஆமியோடையும் பொலிசோடையும் வந்து நிக்கிறாங்கள். வீடு வீடாய்ப் போய் சோதிக்கப் போகின்றாங்களாம். சும்மா வீணாய் நிண்டு நடுங்காமல் ஓடிப்போய் உங்கடை வீடு வாசலுகளைச் சுத்தப்படுத்துங்கோ [illegible] வாறன்! இப்ப உவன் தங்கராசன்ரை கு[illegible] எடுத்து மாலையாய்ப் போடாட்டில் நான் வேலாத்தையில்லை." கறுவியபடி சைக்கி[illegible] பெடலை ஊன்றி மிதித்தான் வேலாத்[illegible]

""கேள்விச் செவியன் ஊரைக் கெடு[illegible] கதைதான் உது" என்று புறுபுறுத்தபடி [illegible] டுக்குள் திரும்பினார் சிற்றம்பலத்தார்.



எட்டு சட்டரை மணிக்கு முன்பு

# இடர் முகாமைத்துவம் குடாநாட்டில் பின்னடைவு

ஹரிஸ்

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவம் என்பது நிவாரணம் கொடுத்தலுடன் மாத்திரம் நின்று விடுவது வேதனைக்குரிய விடயம் அதுவும் வடக்கில் அதன் நிலைமை மேலும் மேலும் பரிதாபகரமாக இருப்பதைக் கட்டியம் கூறும் சம்பவங்கள் பல நடந்து வருவதை பல சம்பவங்கள் உணர்த்தி வருகின்றன அனர்த்த முகாமைத்துவத்துக்கென தனியான அமைச்சு அதிகாரிகள் இருக்கின்ற போதிலும் அந்த துறையில் அபிவிருத்தி அடைய வேண்டிய தூரம் நிறைய இருக்கின்றது. என்பதை அவதானிக்கமுடிகின்றது குறிப்பாக யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரை இது மேலும் மேலும் மோசமாகியே இருக்கின்றன. அனர்த்தம் அவசர நிலைமைகளில் இருந்து மக்களை மீட்டெடுப்பதில் சம்பந்தப்பட்ட தரப்புகள் இன்னும் பலம் குன்றியே காணப்படுகின்றன. இந்த நிலைமையில் இருந்து வடக்கு அபிவிருத்தி அடைய பல தூரங்கள் இருக்கின்றன என்பது சில சம்பவங்கள் ஊடாக உணரக் கூடியதா கவே இருக்கின்றன.

### உடுப்பிட்டியில் இருவர் உயிரிழப்பு

கடந்த வாரம் வடமராட்சி உடுப்பிட்டி பகுதியில் இருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்த செய்திகள் அனைத்து ஊடகங்களிலும் முக்கிய செய்தியாக இடம்பிடித்திருந்தன ஆனாலும் இத்ற்கு பின்னால் உள்ள அனர்த்த மீட்பு செயற்பாடுகளின் தகுதியீனங்கள் இன்னுமே ஆராயப்படாமல் இருப்பதும் நிவர்த்தி செய்யப்படாமல் இருப்பதும் வேதனையை ஏற்படுத்தும் விடயங்களே மோட்டார் கிடங்குள் திருத்த வேலைக்காக இறங்கியிருக்கிறார் குடும்பஸ்தர் அவர் அன்று மோட்டர் திருத்தி வரும் பணத்திலே அந்த குடும்பம் தனது நாளாந்த சீவியத்தை நடத்தி வந்தது அன்றைய நாள் தனது தனது குடும்பத்திற்கு உணவளிக்க அந்த மோட்டர் திருத்தலே அவருக்கு வாய்ப்பாக அமைந்திருக்க வேண்டும் குறித்த மோட் டர் கிடங்கு 4 அடி அகலமும் 13 அடி ஆழ மும் கொண்டது. கிடங்கில் எந்த படியுமே காணப்படவில்லை இதனால் ஏணியூடாக கிடங்கினுள் இறங்கியிருக் கின்றனர் இறங்கிய போது அவருக்கு உதவியாக வீட்டுக்காரர் ஒருவர் என்ன நடக்கிறது என்பதை மேலிருந்து அவதானித்தபடியே இருந்தார் இருவருக்குமே அந்த மோட்டர் கிடங்கு தான் தங்கள் உயிரை பறிக்கும் புதை குழி என சற்றும் எதிர்பார்க்கவில்லை. முதலில் இறங்கியவர் திடிரென சுழன்று மோட்டர் கிடங்கினுள் வீழ்ந்திருகிறார். இதை அவதானித்த மேலிருந்தவரும் அவரைக் காப்பாற்ற எதையுமே யோசிக்காது



அவரைக் காப்பாற்ற வேண்டும் என்ற அவசரத்தில் மோட்டர் கிடங்குக்குள் இறங்கினார் இறங்கியவரும் அதே பாணியில் சுழன்று கிடங்குள் விழுந்ததாக குறித்த வீட்டார் மரண விசாரணையின் போது தெரிவித்திருந்தனர் .

### வேடிக்கை பார்த்த கட்டடம்

இதனை அடுத்து வேடிக்கை பார்க்க அப்பகுதியில் கூட்டம் கூடியது விசவாயுவா மின்சாரமா என பட்டிமன்றம் நடத்துவதைத் தவிர கூடியவர்கள் எதற்குமே தயாராகவில்லை குறித்த விடயம் தொடர்பில் வல்வெட் டித்துறை பொலிசாருக்கு தொலைபேசி ஊடாக தகவல் பறந்தது வந்த பொலிசாரும் விச வாயு என அச்சப்பட்டு தகவலை யாழ் மாநகர தீயணைப்பு படைக்கு அறி வித்தனர் அங்கிருந்த அதிகாரிகளிடமிருந்து ஆழமான கிடங்கா எம்மிடம் சிலிண்டர் இல்லை என்ற பதிலே கிடைத்தது இந்த நிலையில் வைத்திய சாலையில் இருந்து ஒட்சிசன் சிலிண்டரை பெறவும் முயற்சி மேற்கொள்பட்டதாக தெரிவிக் கப்பட்டது மறுபக்கத்தில் விடயம் பற்றி கேள்விப்பட்ட கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவசிறி குறித்த விடயம் தொடர்பில் இராணுவத்தினருக்கும் அப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரிக்கும் அறிவித்ததோடும் அங்கு நின்ற படி எப்படியாவது இரு வரையும் மீட்க வேண்டும் என்ற நோக் கோடு மும்முரமாக இருந்தார்.

### கோழியை இறங்கிப் பரிசோதனை

சற்றைக்கெல்லாம் வல்வெட்டித்துறை இராணுவ முகாமை சேர்ந்த இராணுவ சிப்பாய்கள் வாகனம் கயிறு என்பவற்றுடன் சம்பவ இடத்துக்கு விரைந்தனர் கிடங்குள் உயிருடன் இருந்தால் மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கவும் வாகனம் தயாராக வைக்கப்பட்டிருந்தது சடுதியாக வந்த இராணுவத்தினர் கோழியை கயிறு மூலமாக இற்க்கி விச வாயு இருக்கிறதா என பரிசோதித்தனர் எனினும் கோழி இறக்காததால் விச வாயு இல்லை என உறுதிப்படுத்திய நிலையில் அனைத்து மின்சார வயறையும் அறுத்து விட்டு இடுப்பில் கயிறு கட்டியபடி உள்ளே ஏணியூடாக இறங்கினர் அவர்களுக்கு எதாவது நடந்தால் கயிறு மூலமாக வெளியே இழுத்து எடுக்க சிப்பாய்கள் தயாராக இருந்தனர் இறங்கிய அவர்கள் உள்ளிருந்தவர் கட்டிய சறத்தில் கயிறை கட்டிய பின் மேலேறினர் பின்னர் கயிறு மூலமாக வெளியெடுக்கப்பட்டவர்கள் ஏற்கனவே உயிரிழந்தமையை தயாராக மேலே இருந்த வைத்தியரால் உறுதிப்படுத் தப்பட்டது பின்னர் அவர்கள் மின்சாரம் தாக்கி உயிரிழந்தமை தெரியவந்தது.

> அனர்த்தம் அவசர நிலைமைகளில் இருந்து மக்களை மீட்டெடுப்பதில் சம் பந்தப்பட்ட தரப்புகள் இன்னும் பலம் குன்றியே காணப்படுகின்றன. இந்த நிலைமையில் இருந்து வடக்கு அபிவிருத்தி அடைய பல தூரங்கள் இருக்கின்றன என்பது சில சம்பவங்கள் ஊடாக உணரக் கூடியதாகவே இருக்கின்றன.

### வளப்பற்றைக்குறையும் திறமையீனமும்

வெறும் சம்பவமாக மட்டும் நோக்கப்பட்ட சம்பவத்துக்கு பின்னால் சில திறமையீனங்கள் அதிகார மட்டங்களின் வளப் பற்றாக்குறைகள் என்பன இங்கு எவராலுமே அவதானிக்கப்படவில்லை அதாவது குறித்த கிடங்குள் விச வாயு கசிவு உண்மையாக இருந்திருப்பின் குறித்த நபர்களை எப்படி மீட்கப்பட்டிருப்பார்கள் என்ற சந்தேகம் இன்னும் எழுகின்றது இங்கு காட்டப்படும் ஒவ்வொரு நிமிட தாமதமும் சிக்கியிருப்பவர்களின் உயிரைக் குடிக்கும் என்பதும் இந்த நிலையில் இந்த அவசரத்தில் கோழியைத் தேடி பிடித்து உள் ளிறக்குவது நேர தாமதத்தை மேலும் ஏற்படுத்தும் என்பதும் சிக்கலுக்குரியது மறுபக்கத்தில் சிலிண்டர் இல்லாத தீயணைப்பு பிரிவு யாழ்ப்பாணத்தில் இருப்பதன் ஊடாக யாழ்ப்பாணம் அனர்த்த முகாமைத்துவத்தில் எவ்வளவு பின் தள்ளி இருக்கின்றது என்பதை ஓரளவுக்கேனும் உய்த்துணர்ந்து கொள்ள முடிகிறது தென்னிலங்கையில் இப்படி ஒரு சம்பவம் இடம்பெற்றிருந்தால் சிலிண்டர் எங்கிருந்து கிடைக்கிறது என தெரியாமல் தாராளமாக கிடத்திருக்கும் வடக்கில் மட்டும் சிலிண்டர் கூட இல்லாத தீயணைப்பு படையை அரசு இயக்கி எதை பாதுகாத்து கொள்ள போகின்றது என்பது தான் யாருக்குமே புரியவில்லை

அத்துடன் குடா நாட்டில் ஒரே ஒரு மா நகர சபை இருப்பதனால் அதற்கு மாத்திரமே தீயணைப்பு படை இருக்க வேண்டும் என்பது எழுதப்படாத விதியாக க்டந்த காலங்களில் பின்பற்றப்பட்டு வருகின்றது சிலிண்டர் கூட இல்லாத அந்த தீயணைப்பு படை 30 கிலோ மீற்றர் தாண்டி வட மராட்சிக்கோ அல்லது தூர இடங்களுக்கோ செல்வதற்கிடையில் தீப்பற்றிய இடமோ அல்லது அனர்த்தத்தில் சிக்கிய வர்களோ சமாதியாகி விடுவார்கள். கடந்த காலங்களில் தீவிபத்துகள் தூர இடங்களில் ஏற்பட்ட போது நீரை அள்ளி ஊற்றி பொது மக்களின் முயற்சியாலே அணைக்கப்பட்டது அண்மையில் வடமராட்சி நெல்லியடி பருத்தித்துறை ஆகிய இடங்களில் இடம்பெற்ற கடை தீவிபத்துகளின் போது எல்லாம் நடந்து முடிந்த பின்னரே தீயணைப்பு படை திரைப்படங்களில் எல்லாம் முடிந்த பின்வரும் பொலிசாரை போல கடைகள் சுடுகாடாகியதன் பின்னரே வந்து சேர முடிந்ததில் இருந்து இதனை அவ தானிக்க முடிகிறது எனவே வடக்கில் தூரங்களை பொறுத்து தீயணைப்பு படையோ அல்லது அவசர நிலைமையை கட்டுப்படுத்தும் தரப்புகளோ நிறுவப்பட வேண்டியதன் அவசியங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது

எனவே யாழ் மா நகர சபையின் தீயணைப்பு பிரிவு இன்னும் சகல வசதிகளுடன் நிறுவப்படுவதுடன் மாத்திரம் நின்று விடாது தூரங்களைப் பொறுத்து அனர்த்தங்களை எதிர்கொள்ளும் தரப்புகள் நிறுவப் பட வேண்டும் இதற்கு உரிய தரப்புகள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் அனர்த்தம் ஏற்பட்ட உடன் விழுந்தடித்து நடவடிக்கைகளை எடுப்பதிலும் தேவைகளைக் கோரு வதிலும் எந்த அர்த்தமும் இல்லை இதை உணர்வார்களோ அதிகார மட்டம்?

# மியன்மார் ஆட்சிமாற்ற ஆலோசனைகள் ஆரம்பம்

மியன்மாரில் பல பத்தாண்டு கால இராணுவ ஆட்சியை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ஆங் சான் சூகியின் ஜன நாயகத்துக்கான தேசியக்கழகத்திடம் அதிகாரங்களை மாற்றிக் கொடுப்பதற்குமான பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

தேர்தலில் 80 வீத வெற்றியை சுவீகரித்துள்ள ஆங் சான் சூகியால் அந்த நாட்டின் அதிபர் பதவியில் அமரமுடியாத நிலைமையே இருக்கிறது. அதற்குக் காரணம் அந்த நாட்டில் நடைமுறையில் இருக்கும் இராணுவத்தினால் உருவாக்கப்பட்ட அரசமைப்பாகும்.

தேர்தலில் வெற்றியீட்டியதன் பின்னர் ஆங் சான் சூகி இராணுவத்தின் அதிகாரமிக்க தலைமைத் தளபதியும் அரசமைப்பின்படி அதிபராக இருப்பவருமான தீன் சீன் உடன் தேசிய நல்லிணக்கம் தொடர்பான பேச்சுகளை நடத்த அழைப்பு விடுத்திருந்தார். அதன்படியே இரு தரப்புக்கும் இடையில் கடந்த புதனன்று பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

நவம்பர் 8ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் சூகி அம்மையாரின்



கட்சி 80 வீத ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றிபெற்று அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றது. இதனால் பல வருடக் கணக்காக நடைபெற்று வந்துள்ள இராணுவ ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதிகாரப் பரிமாற்றங்களுக்கான ஏற்பாடுகள் நடைபெறுவதையொட்டி ஜனவரி இறுதி வரை தேர்தலில் வெற் றி பெற்ற உறுப்பினர்கள் பதவியேற்க மாட்டார்கள் என்று தெரிகின்றது. இதேபோல் 1990ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் ஜனநாயகத்துக்கான தேசிய கழகம் பெரும்வெற்றியைப் பெற்றிருந்தது. ஆனால் இராணுவம் அதனை நிராகரித்து மேலும் 20 ஆண்டு காலம் ஆட்சியை நடத்தியது.

இப்போது அதிகார மாற்றத்துக்கான பேச்சுக்கள் வெற்றிபெறுமானால் புதிய அரசமைப்பு ஒன்று வரையப்படுமா என்பது தெரியவில்லை. அத்துடன் இராணுவத்தின் பங்கு – பணி எவ்வாறு அமையும் என்பதும் இனிமேல்தான் தெரிய வரும். இப்போதைய இராணுவத் தளபதி தொடர்ந்தும் அரசியலில் தலையிட்டு வருவாரா? என்பதும் தெரியாமலிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் இலக்கியம்!

மலர் தான் இப்படியான தர்மசங்கடமான வாழ்வுக்குள் தள்ளப்படுவேன் என்பதை தன் பாடசாலைவாழ்நாள்களில் அறிந்திருக்கவில்லை. என்று ஏ.எல். சோதனை மறுமொழி வெளி வந்ததோ அன்றே அவளின் பட்டாம்பூச்சி சிறகுகளை இழந்து தனிமரமானாள்.

பாடசாலையில் அவள் ஓர் அழகிய தேவதை. விளையாட்டென்ன, கலை நிகழ்வுகள் என்ன எல்லாவற்றிலும் அவள்தான் முதல். இதனால் பல பதக்கங்களைப் பெற்றவளாக இருந்தாள். அவளைச் சுற்றி ஒரு வட்டம்



எப்போதும் இருக்கும். இந்த வட்டத்தில் அவள் தனித்துத் திரிவாள். உயரம் காரணமாக.

மலர் கதை, கவிதை எழுதுவதில் இலக்கியங்களை விமர்சிப்பதில் ஆர்வம் கொண்டவள். தன் அழகான கையெழுத்தில் அவள் எழுதிய கதைகள், கவிதைகள் ஏராளம். அவைகளில் அதிகம் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இடம்பிடித்தும் உள்ளன. தன் வட்டத்தில் சிறகடித்துப் பறந்தவளை பெற்றோரின் ஆசை சிறகொடிந்து விட்டது.

"பிள்ளை நீ டொக்டராக வேணும் எண்டதுதான் எங்கட ஆசை. அதை நிறைவேற்ற வேணும். எட்டு ஏ எடுத்திட்டு நீ ஆட்ஸ் படித்து என்ன செய்யப் போறாய்? அப்பா சொல்லுறதை கேட்டு சயன்ஸ் படி." அம்மா தீர்மானமாகக் கூறி விட்டாள். இதுவே மலர் சயன்ஸ் படிக்க காரணமாகியது. மலரால் சயன்ஸில் முழு ஈடுபாட்டுடன் படிக்க முடியவில்லை. இதனால் மூன்று தர ஏ.எல். முடிவுகளும் தோல்வி.

அவளுடன் படித்த நண்பர்கள் எல்லோரும் ஒவ்வொருதுறைக்கு சென்றார்கள். ஓ.எல்.இல் சுமாராக இருந்தவர் கள் கூட ஏதோ ஒரு துறையில் படித்து வேலையாகி விட்டார்கள். மலரால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

உறவுகளின் கேலிப் பேச்சுகளும், தாய் தந்தை சகோதரர்களின் தொடர் அறிவுரைகளும் அவளை நடைப்பிணமாக்கின. வாழ்க்கையே சூனியமாகிப் போனது. பலவேலைகளுக்கு மனுப்போட்டும் ஒன்றும் கிடைக்கவில்லை. அவளின் வசந்தம் இறுகக் கதவடைத் துக்கொண்டது. இலக்கியத்தை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

காலம்தான் எவருக்காகவும் ஓர் இடத்தில் இருப்பதில்லையே! அது தன் பாட்டுக்கு ஓடி 4 வருடங்கள் கழிந்து விட்டது. இப்போது பெற்றோர் மலருக்கு திருமணம் செய்வதில் முனைப்பாக இருந்தார்கள். சொந்தங்கள், நண்பர்களிடம் மலரின் சாதகத்தை கொடுத்துப் பார்த்தும் ஒன்றும் சரிவரவில்லை. பல புறோக்கர்மார் வீடு வந்து போய்க்கொண்டு இருந்தனர். மலரின் பெயர் தெரியாதவர்களிடமெல்லாம் மலரின் சாதகம் போய்ச் சேர்ந்தது.

தாய் இறுதியில் சாத்திரி ஒருவரிடம் மலரின் சாதகத்தைக் காட்டினார். உங்கள் மகளுக்கு காலசர்ப்ப தோசம் இருக்கு அதனால் கலியாணம் பிந்திதான் நடக்கும், அதுவும் ஆக பிந்த விடாதேயுங்கோ பிறகு பிள்ளைப்பேறும் அரிதாகும் என்று சாத்திரியார் நல்லா வெருட்டிவிட்டார்.

தாய் இறுதியில் சாத்திரி ஒருவரிடம் மலரின் சாதகத்தைக் காட்டினார். உங்கள் மகளுக்கு காலசர்ப்ப தோசம் இருக்கு அதனால் கலியாணம் பிந்திதான் நடக்கும், அதுவும் ஆக பிந்த விடாதேயுங்கோ பிறகு பிள்ளைப்பேறும் அரிதாகும் என்று சாத்திரியார் நல்லா வெருட்டிவிட்டார்.

பிறகென்ன மலர் ஒவ்வொரு கோயிலாக கால சர்ப்ப தோசத்துக்கு பரிகாரம் செய்தாள். இதனால் மலரின் சாதகத்தில் தோசமாம் என்ற கதை பிரபல்யமானது. அதுவேறு பிரச்சினையாகியது. அம்மா ஒவ்வொரு நாளும் அவளை வைத்துப் புலம்பத் தொடங்கினாள்.

அரச உத்தியோக மாப்பிளைமார் உத்தியோகமுள்ள பெண் வேண்டும் - என்றனர். வியாபாரிகளோ இது தோச மான சாதகம் என்று ஒதுக்கினர். பொறுத்திருக்க முடியாத பெற்றோர் மலரின் இரு தங்கைகளுக்கும் முதலில் திருமணம் செய்து வைத்தனர். மலர் இன்னும் உடைந்து போனாள். பெற்றோருடன் தனித்தாள்.

மலரின் வாழ்க்கையை நினைத்து பெற்றோர் நோயாளர்களாயினர். மலருக்கும் முப்பத்தைந்து வயதாகிவிட்டது. சாத்திரியார் சொன்னது உண்மையோ? பொய்யோ? ஒருநாள் ஞானி வந்தான். மலருடன் சிறு வயதில் படித்த ஞானி வெளி நாட்டில் 18 வருடங்கள் உழைத்து, சகோதரர்களையும் வெளி நாட்டுக்கு எடுத்துவிட்டு உழைத்துச் சேர்த்த காசுடன் ஊருக்கு வந்திருந் தான்.

ஊரில் நடந்தவைகளை அறிந்து பின்னரும் மலர் வீட்டுக்குச்சென்றான். மலரைத் திருமணம் செய்யும் ஆசையைத் தாயிடம் கூறினான். மலரின் தந்தைக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. சந்தோசத்தில் கண்களில் நீர் திரண்டது. மலரைக் கூப்பிட்டு சம்மதம் கேட்டார்.

மலருக்கு ஞானியை தெரிந்து இருந்தது. ஞானி பாட சாலையில் அவ்வளவு திறமையான மாணவன் இல்லை. எனினும் நடப்பது நடக்கட்டும் என்று சம்மதம் தெரிவித்தாள். ஊர் வாயில் விரலை வைத்தது. மலருக்கு திருமணம் நடந்ததற்காக அல்ல; முதிர் குமரிக்கு இப்படி காசுக்கார மாப்பிள்ளை கிடைத்தானே என்று.

எந்தவித ஆடம்பரமுமின்றி திருமணம் முடிந்தது. ஞானி மீண்டும் வெளிநாடு சென்றான். சென்ற அடுத்த மாதம் மலரையும் வெளிநாட்டுக்குக் கூப்பிட்டு விட்டான். மலர் எழும்புங்கோ இண்டைக்கு ஒரு இலக்கிய கூட்டம் போக வேண்டும் என்று கூறிய ஞானியை ஆச்சிரியமாக நோக்கினாள் மலர்!

பாடசாலை காலத்தில் இருந்த ஞானியை மலருக்குத் தெரியும். அவனுக்கு கலை இலக்கியங்களில் ஈடுபாடே இல்லாதவன். அவனா இன்று இலக்கிய விழாவுக்கு அழைக்கின்றான்? என்ன அதிசயமாக இருக்கு என நினைத்தாள்.

இலக்கிய விழா என்றவுடன் தனது வாழ்வில் சுமார் 20 வருடங்களை சூனியமாக்கி விட்டதை நினைத்து வெட்கினாள். திருமணம் ஏற்பாடான போது ஏற்படாத புத்துணர்வு இன்று ஏற்பட்டது.

எந்தவித மறுப்புமின்றி வெளிக்கிட்டாள். விழா மண் டபத்துக்குள் நுழைந்தவுடன் தன்னையும் தன் கணவரையும் அங்கிருந்தவர்கள் வரவேற்ற விதத்தை எண்ணி ஆச்சரியமடைந்தாள். ஞானியை அவர்கள் மேடைக்கு அழைத்துச் சென்ற போது மேலும் ஆச் சரியத்தின் உச்சிக்கே போனாள்.

அப்போதுதான், அங்கிருந்த ஒருவரின் கையிலிருந்த அழைப்பிதழைப் பார்த்தாள். அதில் மலர் என்று ஏதோ வாசகம் தெரிய, அழைப்பிதழைக் கேட்டு வாங்கிப் பார்த்தாள். மலரின் கவிதை தொகுப்பு வெளியீட்டு விழா.. என்று இருந்ததைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தாள். நம்புவதற்குக் கடினமாக இருந்தது. தானா அல்லது வேறு மலரா என்ற சந்தேகமும் ஏற்பட்டது.

மேடையில் விழாத் தலைவர் பேசத் தொடங்கியிருந்தார். எடுத்த எடுப்பிலேயே "தனது மனைவியின் பாடசாலைக் கவிதைகளைக் கவனமாகச் சேகரித்து, அதை தொகுப்பாக வெளியிட்ட கணவனைப் பாராட்டாமல் இந்த விழாவைத் தொடக்க முடியாது" என்று அவர் முழங்கத் தொடங்கியிருந்தார். மலரின் கண்கள் பனித்தன. இனி மலரின் இலக்கிய கதவுகள் என்றும் திறந்தே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிதாய் அழுவான்

-மு.யாழவன்



எழுந்து நில்!
குனிந்து ஒருதரம்
மண்ணை முத்தமிடு!
நிமிர்ந்து வானத்தை
அண்ணார்ந்து பார்!
உன்
அண்ணாச்சி
அக்காச்சி
மாமன் மகன்
சித்தப்பா மகளென
எல்லோரும் நின்று சிரிப்பார்கள்
உற்றுப்பார்!
கூடியாடி உன்னோடு
விளையாடிய தோழி
கண்களில் வீரமேந்தி
நின்று புன்னகைப்பாள்
அதோ அவனை தெரிகிறதா உனக்கு ?
அமைதிப்படை வந்தபோது
அவன் சிறுவன் -அந்த
அரக்கர் படை
திரும்பும் போது
அவன் மறவன்
தேர்தலுக்கு சுவரொட்டி ஒட்டும்போது
வாய்க்காலுக்குள்
விழுந்து செத்தவனல்ல
போர் கொண்டு
ஊர் புகுந்தோரோடு
பொருத்தினான்
மாண்டுவிட்டான்!
குனி!
இது விளக்கேற்றும் நேரம்
கும்பிடு தெய்வங்களை
அழுவதுபோல் பாசாங்கு
செய்யாதே
அவர்கள் ஆத்திரப்படுவார்கள்
எழுவோம் எனச்சொல்லி
அறிக்கை விடாதே
அவர்கள் மாவீரர்கள்
ஊழித்தீ பரவி
ஊரை அழித்தபோது
காளித்தெய்வமாகி எமை
காப்பாற்றி விட்டவர்கள்
இன்றவர்கள் கல்லறைகள் இங்கில்லை
நின்று விளக்கேற்ற
ஒரு சாண் நிலமில்லை
மொழியாகி எங்கள்
பாடவொரு வழியுமில்லை!
அழுது அழுது
வான்மழை தேடுறது
அவர் கல்லறைகளை
காணாத்தவிப்பில்
வெள்ளப்படை
கொண்டு கிளறுகிறது நிலத்தை!
வீரர்கள் மேனியை
தழுவ முடியாத
தவிப்பில்
நெஞ்சிலடித்து
குழறுகிறது காற்று!
ஆங்காங்கே இருந்து
எழும்பும் நெய்விளக்கின்
ஒளியில் கண் கூசுமென
முகிலைக் கொண்டு
முகம் மறைத்து
அழும் நிலவுக்கு
பெருத்த ஏமாற்றம்!
எங்கே ஒரு சுடரையும்
காணவில்லையென
கண்ணீர் வடிக்கிறது
நீயங்கே வாட்ஸ் அப்பில்!
நானிங்கே
பேஸ்புக்கில்!
வாக்கு கேட்டுவரும்
வள்ளல் பெருந்தகைகள்
சிலர் அறிக்கை விடுவர்
சிலர் கவிதை வடிப்பர்
ஓரிருவர் ஒளித்து நின்று விளக்கேற்றுவர்
தினசரிக்கு
நான் முந்தி
நீ முந்தியென
பேட்டியளிப்பர்!
இந்தளவும்தான்
இதற்குமேல் ஒன்றுமில்லை !
வெறும் உயிரைத்தானே
கொடுத்தார்கள்
அதற்கேன் பெரிதாய்
அழுவான்?

# இன்னொரு பூமி சாத்தியம்தானா?



என். ராமதுரை

எமது சூரிய மண்டலத்தில் பூமியைத் தவிர, வேறு (செவ்வாய் உட்பட) எந்தக் கிரகத்திலும் மனிதர்கள் அல்லது மனிதர்கள் மாதிரியில் யாரும் கிடையாது. இது தெளிவு. எனினும், சூரிய மண்டலத்துக்கு அப்பால் எங்கோ இருக்கின்ற சூரியன் போன்ற ஒரு நட்சத்திரத்தைச் சுற்றுகின்ற கிரகத்தில் மனிதர் மாதிரியானவர்கள் அதாவது வேற்றுலகவாசிகள் இருக்கலாம். அதாவது, அந்த நட்சத்திரம் சூரியன் மாதிரியில் இருந்ததாக வேண்டும். ஆகவே, நாம் அந்த மாதிரி நட்சத்திரத்தைத் தேடியாக வேண்டும்.

நிலவற்ற நாளில் நீங்கள் இரவு வானைக் கவனித்தால் எண்ணற்ற நட்சத்திரங்கள் தெரியும்.

### அற்புதக் காட்சி

வான் காட்சியைக் காண முதலில் அமாவாசை நாளில் ஒரு கிராமத்துக்குச் செல்ல வேண்டும். பின்னர், அக்கிராமத்திலிருந்து தள்ளி வெளியே போய் சிறிதுகூட வெளிச்சம் இல்லாத இடத்தை அடைந்து இருட்டுக்குக் கண்கள் பழகிக்கொண்ட பின்னர் வானை நோக்க வேண்டும். பெரிய கருப்பு நிற வெல்வெட் துணியில் ஏராளமான வைரக் கற்களைப் பரப்பியது போன்று வானில் எண்ணற்ற நட்சத்திரங்கள் தெரியும். இது அற்புதக் காட்சியாக இருக்கும்.

இந்த நட்சத்திரங்கள் அனைத்தும் சூரியன்களே. இவை மிகவும் தொலைவில் இருப்பதால் நட்சத்திரங்களாகத் தெரிகின்றன. சூரியன் என்கிற நட்சத்திரம் நமக்கு அருகில் (சுமார் 15 கோடி கி.மீ. தொலைவில்) இருப்பதால் நமக்கு சூரியனாகத் தெரிகிறது.

இரவு வானில் தெரிகின்ற நட்சத்திரங்கள் அனைத்தும் ஒரே மாதிரியானவை அல்ல. வெறும் கண்ணால் பார்த்தாலே வித்தியாசம் தெரியும். சில நட்சத்திரங்கள் பளீரெனச் சற்றே நீல நிறத்தில் தெரிகின்றன. சில நட்சத்திரங்கள் வெண்மையான ஒளியுடன் காட்சியளிக்கின்றன. சிவப்பு கலந்த செந்நிற நட்சத்திரங்களும் உண்டு. சில நட்சத்திரங்கள் சிவப்பாகத் தெரியும். நட்சத்திரங்களின் வெளிப்புற வெப்பத்தைப் பொறுத்து அவற்றின் நிறம் மாறுபடுகிறது.

### அல்பாயுள் நட்சத்திரங்கள்

பருமனைப் பொறுத்தும் நட்சத்திரங்கள் வித்தியாசப்படுகின்றன. சில நட்சத்திரங்கள் பூதாகாரமானவை. அவை எமது சூரியனைப் போலப் பல மடங்கு பெரியவை. நட்சத்திரங்கள் அனைத்தும் ஒரே வயது கொண்டவையும் அல்ல. சில நட்சத்திரங்கள் மிக நீண்ட ஆயுளைக் கொண்டவை. எமது சூரியன் மிக நீண்ட ஆயுளைக் கொண்டது. சூரியனுடன் ஒப்பிட்டால் பல நட்சத்திரங்கள் அல்பாயுள் கொண்டவையே.

ஒரு நட்சத்திரத்தின் பருமனுக்கும் அதன் ஆயுளுக்கும் தொடர்பு உள்ளதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். வானில் உள்ள திருவாதிரை நட்சத்திரம் வடிவில் மிகப் பெரியது. ஆனால், அது குறைந்த ஆயுளைக் கொண்டது. கேட்டை நட்சத்திரமும் அப்படிப்பட்டதே. திருவாதிரையும் கேட்டையும் சோதிடத்தில் வருகின்ற நட்சத்திரங்களாயிற்றே என்று கேட்கலாம். உண்மையில், அந்தப் பெயர்களைக் கொண்ட நட்சத்திரங்கள் வானில் இருக்கின்றன. திருவாதிரையும் கேட்டையும் வடிவில் பெரிதாகவும் சிவந்த நிறத்துடனும் காணப்படுவதால் இந்த இரண்டு நட்சத்திரங்களுக்கும் செம்பூதம் என்ற பட்டப் பெயர் உண்டு.

சூரியன் நீண்ட ஆயுளைக் கொண்டது என்று கூறினோம். சூரியன் தோன்றி சுமார் 454 கோடி ஆண்டுகள் ஆகின்றன. பூமியும் மற்ற கிரகங்களும் சூரியன் தோன்றிய போதே உண்டானவை. ஆகவே, பூமியின் வயதும் அதேதான். சூரியன் இன்னும் 500 கோடி ஆண்டுகளுக்கு இருக்கும்.

### செம்பூத திருவாதிரை

திருவாதிரை நட்சத்திரம் சூரியனைப் போல 20 முதல் 30 மடங்கு பெரியது. சூரியனைப் போல ஒரு லட்சம் மடங்கு பிரகாசமானது. மிகத் தொலைவில் இருப்பதால் வானில் அது சற்றே சிவந்த புள்ளியாகத் தெரிகிறது. திருவாதிரை நட்சத்திரத்தின் வயது சுமார் ஒரு கோடி ஆண்டுகளே. சில லட்சம் ஆண்டுகளில் அதன் ஆயுள் முடிந்துவிடும். கேட்டை நட்சத்திரத்தின் கதையும் அதேதான். சூரியனைப் போல சுமார் 18 மடங்கு பெரியதான அந்த நட்சத்திரத்தின் வயது சுமார் ஒரு கோடியே 20 லட்சம் ஆண்டுகள். அதுவும் சில லட்சம் ஆண்டுகளில் அழியக்கூடியதே.

### செலவாளிக் கேட்டை

திருவாதிரை, கேட்டை நட்சத்திரங்களுக்கு ஏன் ஆயுள் குறைவு? எமது சூரியனில் ஹைட்ரஜன்தான் எரிபொருள். சூரியனின் மையத்தில் நிலவும் பயங்கரமான வெப்பத்தில் ஹைட்ரஜன் அணுக்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து ஹீலியம் அணுக்களாக மாறுகின்றன. இதுவே அணுச் சேர்க்கை எனப்படுகிறது. இந்த அணுச் சேர்க்கையின் பலனாகப் பெரும் ஆற்றலும் ஒளியும் வெளிப்படுகின்றன.

திருவாதிரை, கேட்டை போன்ற பிரம்மாண்டமான நட்சத்திரங்களில் எரிபொருள் மிக வேகமாக எரிந்து தீர்ந்துபோகிறது. அவை பெரிய செலவாளிகள். எனவே, ஆடம்பரமாக வாழ்ந்து கெட்டவன் கதைதான்.

பூமியின் கதைக்கு வருவோம். பூமியில் உள்ள உகந்த சூழ்நிலைகள் காரணமாக உயிரினம் தோன்றியது. பூமி தோன்றி சில நூறு கோடி ஆண்டுகளுக்குப் பிறகுதான் மனிதன் தோன்றினான். உயிரின வரலாற்றுப்படி மனிதன் நேற்று தோன்றியவன். மனிதன் நாகரிக மனிதனாக மாறிச் சில ஆயிரம் ஆண்டுகளே ஆகியுள்ளன.

அப்படிப் பார்க்கும்போது, சூரியன் போன்று நீண்ட ஆயுளைக்கொண்ட நட்சத்திரத்தைச் சுற்றுகின்ற கிரகத்தில்தான் உயிரினம் தோன்ற முடியும் என்று சொல்லலாம். ஏதோ ஒரு நட்சத்திரத்தின் அருகே பூமி போன்று பல உகந்த சூழ்நிலைகளையும் கொண்ட கிரகம் இருந்தாலும், அதில் நம்மைப் போன்ற புத்திசாலி மனிதர்கள் தோன்றுவதற்கு முன்னர் அந்த நட்சத்திரமே அழிந்து போய்விடும் என்றால் எப்படி?

சிவப்புக் குள்ளனும் வெள்ளைக் குள்ளனும் இந்த விடயத்தில் இரவு வானில் வயது பத்தாது என்று ஒதுக்கி வைக்கத் தக்க நட்சத்திரங்கள் பலவும் உள்ளன. அந்த வகையில் பார்க்கும் போது சூரியன் சைஸில் உள்ள நட்சத்திரங்களே பூமி மாதிரி கிரகத்தைப் பெற்றிருக்க மிகவும் பொருத்தமானவை என்று சொல்லலாம். சிவப்புக் குள்ளன் என்ற பட்டப் பெயர் கொண்ட நட்சத்திரங்கள் மிக நிறையவே உள்ளன. இவை சூரியனைவிடச் சிறியவை. அதேசமயம், சூரியனைவிட அதிக ஆயுளைக் கொண்டவை. இவையும் கிரகங்களைப் பெற்றுள்ளதை நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஆனால், சிவப்புக் குள்ளன் நட்சத்திர மண்டலத்தில் பூமி போன்ற கிரகம் இருக்குமானால், அந்த கிரகம் சில விசேட பிரச்சினைகளை எதிர்கொள்வதாக இருக்கும்.

வெள்ளைக் குள்ளன் எனப்படுகிற நட்சத்திரங்களும் சூரியனைவிடச் சிறியவையே. ஆனால், அவற்றில் பூமி போன்ற கிரகங்கள் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். எனினும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், பூமி போன்ற கிரகங்களைப் பெற்றுள்ள நட்சத்திரங்கள் மிக நிறையவே உள்ளன . நிபுணர்கள் இது விடயத்தில் விரிவாகவே கணக்குப்போட்டு வைத்துள்ளனர்.

> பருமனைப் பொறுத்தும் நட்சத்திரங்கள் வித்தியாசப்படுகின்றன. சில நட்சத்திரங்கள் பூதாகாரமானவை. அவை நமது சூரியனைப் போலப் பல மடங்கு பெரியவை. நட்சத்திரங்கள் அனைத்தும் ஒரே வயது கொண்டவையும் அல்ல. சில நட்சத்திரங்கள் மிக நீண்ட ஆயுளைக் கொண் டவை. நமது சூரியன் மிக நீண்ட ஆயுளைக் கொண் டது. சூரியனுடன் ஒப்பிட்டால் பல நட்சத்திரங்கள் அல்பாயுள் கொண்டவையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிரை மேயும் வேலிகள்



சந்திரசேகர ஆசாத்

அண்மையில் கொழும்பு வடக்கு முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தன, அவரது மகன் உட்பட 6 பேருக்கும் கொழும்பு நீதிமன்றம் சாவுத் தண்டனையைத் தீர்த்துள்ளது. கோடீஸ்வர வர்த்தகர் முகமட் ஷியாம் கொலை தொடர்பாகவே இவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். இவர்கள் மீது கப்பம் கோரி வர்த்தகரைக் கடத்தியமை, கொலை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. கப்பம் கோருவது ஒரு பாரதூரமான குற்றமாகும். அதேபோல் கொலை செய்வதும் சாவுத் தண்டனைக்கு உரிய குற்றமாகும். இந்த இரு பெரிய குற்றங்களும் ஒரு பிரதி பொலிஸ்மா அதிபரின் தலைமையில் அவர் பதவியில் இருக்கும்போதே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் வாஸ்குணவர்த்தனாவின் மகன் தவிர்ந்த ஏனைய 4 குற்றவாளிகளும் பொலிஸ் அதிகாரிகள் என்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டியது.

**வேலிகளின் குற்றங்கள்**

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவி என்பது பொலிஸ் திணைக்களத்தின் அதி உயர்ந்த பதவியான பொலிஸ் மா அதிபர் பதவிக்கு அடுத்த தரத்திலுள்ள பதவி. அப்படிப்பட்ட உயர்ந்த பதவியில் இருந்த ஒருவர் அதே திணைக்களத்தில் பணியாற்றும் ஏனைய 4 அதிகாரிகளுடன் இணைந்து கப்பம் கோரல், கடத்தல், கொலை ஆகிய பாரதூரமான குற்றங்களைச் செய்துள்ளார்.

நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது பொலிஸ் திணைக்களத்தின் கடமையாகும். பொதுமக்களாலோ வேறு தரப்பினராலோ சட்டம் ஒழுங்கு மீறப்படும்போது அதைக் கட்டுக்குள் கொண்டு வருவது பொலிஸாரின் கடமையாகும். ஆனால் அதே பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்தவர்களால் சட்டம் ஒழுங்கு பாரதூரமான முறையில் மீறப்பட்டுள்ளது.

அதேசமயம் இன்னுமொரு பொலிஸ் அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத நடவடிக்கையும் அம்பலத்துக்கு வந்துள்ளது. நாரகேன்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பெருந்தொகைப் பணத்தை இலஞ்சமாகப் பெற்றபோது இலஞ்ச ஊழல் தடுப்பு அதிகாரிகளால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டுள்ளார். இங்கும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டியவராலேயே அது மீறப்பட்டுள்ளது.

பொலிஸாரோ அல்லது இராணுவமோ ஒரு சாதனையைச் செய்து விட்டால் சம்பந்தப்பட்ட அமைச்சர் உட்பட முழு அமைப்பும் உரிமை கொண்டாடுவதுண்டு. ஒரு பிழை இடம்பெறும்போதோ அது தனிநபர்கள் மீது சுமத்தப்பட்டு விடும். ஆனால் தனிநபர்கள் இத்தகைய குற்றச் செயல்களில் துணிந்து ஈடுபட அந்தக் கட்டமைப்புக்களிலுள்ள பலவீனமே காரணம் என்பதை எவருமே ஏற்றுக்கொள்வதில்லை.

**தண்டனையில்லாப் போக்கு**

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அல் – ஹுசைன் வெளியிட்ட இலங்கை தொடர்பான 2015ஆம் ஆண்டு அறிக்கையில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள், குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பும் வகையிலான வாய்ப்புக்கள் என்பவற்றுக்கான கட்டமைப்புக்கள் இன்னமும் நிலைபெற்றிருக்கின்றன எனத் தெரிவித்தமையை நாம் மறந்துவிடமுடியாது.

இப்படியான நிலையில், அதிகாரத்திலுள்ள சிலர் குற்றங்களை மேற்கொள்ளத் தயங்கப் போவதில்லை. உதாரணமாக 58ஆவது படையணிக்குப் பொறுப்பாகச் செயற்பட்ட மேஜர் ஜெனரல் ஜெகத் பயஸ் போர்க்குற்றங்கள் சுமத்தப்பட்ட ஒருவர். இவர் சுவிற்சர்லாந்து போனால் அங்கு கைது செய்யப்படும் நிலையே நிலவுகிறது. ஆனால் அவர் இலங்கையில் இராணுவத்தின் தலைமை அதிகாரியாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

அதேவேளை இந்திய நீதிமன்றத்தால் தேடப்படும் குற்றவாளியாகப் பிரகடனப்படுத்தப்பட்ட முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இங்கு அமைச்சரவை மதிப்பு உள்ள அமைச்சராகப் பதவி வகித்தார், இப்போதும் சுதந்திரமாக நடமாடுகிறார் என்பதை மறந்துவிடமுடியாது.

1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள், இளம்பெண்கள், இளம் குடும்பத் தலைவர்கள் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டுக் காணாமற் போயினர். அவர்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினராலும் இராணுவத்துடன் இணைந்து செயற்பட்ட துணை இராணுவக் குழுவினராலுமே கடத்தப்பட்டனர் என்று ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் முன்பும், நீதிமன்றத்திலும் பொதுமக்கள் சாட்சியமளித்தனர்.

**தண்டிக்கப்படாதவர்கள்**

கிருசாந்தி கொலையில் குற்றவாளியாகக் காணப்பட்டு சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட கோப்ரல் ராஜபக்ச வழங்கிய தகவலின் அடிப்படையில் செம்மணியில் புதைகுழிகள் தோண்டப்பட்டு காணாமற்போன பலரின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அப்போது வடபகுதியில் கட்டளைத் தளபதியாக இருந்தவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா. அவரோ அல்லது சம்பந்தப்பட்ட வேறு எந்த ஓர் இராணுவ அதிகாரியோ கைது செய்யப்படவுமில்லை; விசாரிக்கப்படவுமில்லை. மாறாக ஜானக பெரேரா இராணுவத் தளபதியாகப் பதவி உயர்வு பெற்றார். ஓய்வு பெற்ற பின்பு வெளிநாட்டுத் தூதுவராகவும் பணியாற்றினார்.

அவர் அநுராதபுரத்தில் வைத்து தற்கொலைக் குண்டுதாரியால் கொல்லப்பட்டார். அந்தத் தாக்குதலுக்கு உதவி புரிந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதன் பேரில் சிறைவாசம் அனுபவிக்கிறார். மற்றவர் மேல் வழக்கு விசாரணை இடம்பெற்று வருகிறது.

ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டு, புதைக்கப்பட்டமைக்குப் பொறுப்புக் கூறவேண்டியவர் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக அவர் கொல்லப்பட்டமைக்கு உதவி புரிந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் தண்டிக்கப்படுகின்றனர்.

அது மட்டுமன்றி திருமலை மாணவர்கள் படுகொலை, அக்சன்பெய்ம் தொண்டு நிறுவன ஊழியர்கள் கொலை எனத் தண்டிக்கப்படாத குற்றங்களுக்கு ஒரு நீண்ட பட்டியலே உண்டு.

அதாவது அதிகார பீடத்தினர் செய்யும் கொலைகள் உட்பட சகல குற்றங்களுக்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என்பது இலங்கையில் எழுதப்படாத மரபாகவே விளங்கிவருகிறது. அதன் காரணமாக அதிகார பீடத்தில் இருப்பவர்கள் எந்தப் பெரிய குற்றத்தையும் செய்யத் தயங்குவதில்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தன மேற்கொண்டதாகக் கூறப்படும் கோடீஸ்வர வர்த்தகர் ஷியாம் கொலையும் இந்த வரிசையிலேயே இடம்பெற்றதாக நம்ப வேண்டியுள்ளது. அடிப்படையில், மக்கள் மீதான ஒடுக்குமுறை நடவடிக்கைகளுக்கு பொலிஸார் பயன்படுத்தப்பட்டு வந்தனர் என்பதே கடந்த காலங்களின் உண்மை.

**அரச பொறிமுறையே இடம்கொடுக்கிறது**

கட்டாய ஓய்வூதியத் திட்டத்துக்கு எதிராகக் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பொலிஸாரும் காடையர்களும் இணைந்து அந்தப் பேரணி மீது தாக்குதலை மேற்கொண்டதுடன் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

அதே போன்று பல்கலைக்கழக மாணவர்கள் சில கோரிக்கைளை வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தும்போது பொலிஸார் அவர்கள் மீது மிருகத்தனமான தாக்குதல்களை நடத்துவதுடன் மாணவர்களைக் கைது செய்வதுமுண்டு. மாணவர் மீதான இப்படியான தாக்குதல்களைப் பொலிஸார் மேற்கொண்டபோது நீதிபதி பொலிஸாரைக் கடுமையாகக் கண்டித்ததுடன் தானே மருத்துவமனைக்கு நேரில் சென்று மாணவர்களுக்குப் பிணை வழங்கினார்.

தென்மாகாணப் பல்கலைக்கழகத்துக்குள் ஒரு முன்னாள் பிரதியமைச்சர் தலைமையில் ஒரு குழுவினர் புகுந்து மாணவர்கள் மேல் தாக்குதல் நடத்தியது தொடர்பாகவோ, சம்பிரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தியபோது ஒரு பிரதேச சபை உறுப்பினர் தலைமையில் வந்த குழுவினர் மாணவர்கள் மேல் தாக்குதல் நடத்தி பந்தலையும் எரித்தமை தொடர்பாகவோ, அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைப் பார்வையிடச்சென்ற ஐக்கிய தேசியக் கட்சியினர் மீது தாக்குதல் நடத்தியதுடன் நகரசபைத் தலைவர் துப்பாக்கி காட்டி விரட்டியமை தொடர்பாகவோ எவரும் பொலிஸாரால் கைது செய்யப்படவுமில்லை; நீதிமன்றில் நிறுத்தப்படவுமில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக பேருவளை, அளுத்கம ஆகிய இடங்களில் பொலிஸார் முன்னிலையிலேயே முஸ்லிம்கள் தாக்கப்பட்டதும், வர்த்தக நிலையங்கள், குடியிருப்புக்கள் எரியூட்டப்பட்டதும் இடம்பெற்றன. இவற்றைத் தூண்டி விட்டுத் தொடக்கி வைத்த பொதுபலசேனாவினர் எவருமே கைது செய்யப்படவில்லை.

> 1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள், இளம்பெண்கள், இளம் குடும்பத் தலைவர்கள் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டுக் காணாமற் போயினர். அவர்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினராலும் இராணுவத்துடன் இணைந்து செயற்பட்ட துணை இராணுவக் குழுவினராலுமே கடத்தப்பட்டனர் என்று ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் முன்பும், நீதிமன்றத்திலும் பொதுமக்கள் சாட்சியமளித்தனர்.

வடக்கில் நடந்த பல கொலைகள், கொள்ளைகள், ஊடகவியலாளர் படுகொலைகள், தாக்குதல்கள் என்பன தொடர்பாக எவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. அவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்படுபவர்கள் இன்னும் சுதந்திரமாக நடமாடித் திரிகின்றனர்.

ஒட்டு மொத்தத்தில் பொலிஸார் தாம் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டது மட்டுமன்றி, சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவர்களையும் காப்பாற்றும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவந்துள்ளனர். இவற்றை நிச்சயமாக தனி நபர்களின் தவறான நடத்தைகள் என்று கூறிவிட முடியாது. இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களும் தண்டனையிலிருந்து தப்பக்கூடிய வசதிகளும் இருந்த காரணத்தாலேயே தனிநபர்களால் துணிசலுடன் இத்தகைய குற்றங்களில் ஈடுபட முடிந்தது. ஈடுபட முடிகிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் ஒரு பொலிஸ், இராணுவ சர்வாதிகாரக் கட்டமைப்பை உருவாக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் ஒரு பகுதியாகவே இவற்றைப் பார்க்க வேண்டியுள்ளது.

அதன் பிரதிபலன் வேலியே பயிரை மேயும் நிலை உருவாகியது. ஆட்சி மாறினாலும்கூட பொலிஸார், இராணுவத்தினரின் மேலாதிக்க நிலை இன்னும் தளர்வடையவில்லை என்பதை எவரும் மறுத்து விடமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடுத்தரக் குடும்பங்களின் வாழ்வை வாட்டி வதைக்கும் திருமணச் செலவு



கலியாண ராமன்

தனி மனித வாழ்க்கையில், திருமணம் என்பது ஒரு முக்கிய நிகழ்வாகும். அந்த நிகழ்வு, பலருடைய வாழ்வில் ஒரு திருப்பு முனையாகவும் அமைகிறது. சமூகத்தில் பல மட்டங்களில் உள்ளவர்கள், தங்கள் சமூக மதிப்புக்கு ஏற்றபடி, திருமண நிகழ்ச்சியை நடத்துகின்றனர். அதற்குத் தகுந்தாற்போல், திருமண செலவினங்களிலும் பெருத்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. தங்கள் வருமானத்துக்கு மேல், திருமணச் செலவுகளைச் செய்வதற்கு எமது நடுத்தரக் குடும்பங்கள் தயங்குவதில்லை. கல்விச் செலவைவிட, திருமணச் செலவுகள் பல மடங்கு அதிகம் என்பதுதான் உண்மை.

நடுத்தரக் குடும்பங்களைப் பொறுத்தவரை குடும்பத் திருமணங்கள், மகிழ்ச்சியான சுமைகளாக அமைகின்றன என்று சொன்னால் அது மிகையாகாது. பெண்ணைப் பெற்ற வர்களுக்கு திருமண நிகழ்வுகள் மகிழ்ச்சியை அளித்தா லும், அது பெரும் பொருளாதாரச் சுமையாகப் பின்னர் உரு வெடுத்து, வாழ்க்கை முழுவதும் அந்தச் சுமை அவர்களை அழுத்துகிறது என்பதுதான் நடைமுறை நிகழ்வுகளாகும்.

நம் சமூக அமைப்பைப் பொறுத்தவரை, பெண்ணின் பெற்றோர்கள்தான் பெரும்பாலும் அந்தப் பொருளாதாரச் சுமையைச் சுமக்கின்றனர். தங்கள் பெண்ணின் நிம்மதியான எதிர்கால வாழ்க்கைக்கு வழிவகுக்கும், அத்தியாவசிய முதலீடாகத்தான் பெற்றோர்கள் அந்தச் சுமையைக் கருதுகின்றனர். இது ஒரு சூதாட்டம் போல்தான். பெண்ணின் வாழ்க்கை, எதிர்பார்த்ததுபோல் சரியாக அமையவில்லை என்றால், பொருளாதாரச் சுமையோடு, மனக்கஷ்டத்தையும் சேர்த்து, அவர்கள் சுமக்க ஆரம்பிக்கின்றனர்.

திருமணச் செலவைவிட சீதனம் பெண் வீட்டாரை மேலும் பொருளாதாரச் சுமைகளுக்கு உள்ளாக்கும் மிகப் பெரும் விடயமாகக் காணப்படுகின்றது. மணமகனின் படிப்பு, வேலை, சம்பளம், குடும்பச் சொத்து மற்றும் பிற வருமானங்களைச் சுற்றி சீதனப் பெறுமதிகள் வட்டமிடுகின்றன.

மணமகளின் கல்வித் தகுதி, வேலை, மாத வருவாய் ஆகிய காரணிகள் சீதனத்தை ஓரளவு குறைக்கும் வல்லமை படைத்தவை. நாங்கள் ஒன்றும் கேட்கமாட் டோம். ஆனால், உங்கள் பெண்ணுக்குச் செய்ய வேண்டியதைச் செய்யுங்கள் என்ற மாப்பிள்ளை வீட்டாரின் பொதுவான பேச்சு, அளவு எல்லையை நிர்ணயிக்காமல் அவர்கள் எதிர்பார்க்கின்றனர் என்பதற்கான அடையாளம்.

அவர்கள் வீட்டின் இன்னொரு ஆண் பிள்ளைக்கு ஏற்கெனவே திருமணம் முடிந்திருந்தால், குறைந்தபட்சம் அந்தப் பிள்ளைக்கு வழங்கப்பட்ட சீதனத்திற்கு இணையாக பொன்னையும், பொருளையும், தங்கள் பெண்ணுக்கு பெற்றோர் கொடுக்க வேண்டும். அவர்கள் வீட்டுப் பெண்ணின் திருமணத்துக்குக் கொடுக்கப்பட்ட சீதனத்தின் மதிப்பீடும் ஒரு முக்கிய அளவுகோலாக கருதப்படும் என்பது, பெண்ணைப் பெற்றவர்களுக்கிடையே எழுதப் படாத நியதியாக அமைந்துவிட்டது.

20 ஆண்டுகளுக்கு மேலான உழைப்பில், பெற்றோர் சிறு சிறு துளிகளாகச் சேர்த்த சேமிப்பு, இரண்டு நாள் திருமண செலவில் கரைந்து, அது பெரும்பாலும் வாழ்நாள் கடன் சுமையோடு முடிவடைகிறது. பெரும்பாலான நடுத்தரக் குடும்ப திருமண நிகழ்வுகளுக்காக வீடு, நிலம் மற்றும் பிற சொத்துகள் அடமானம் வைக்கப்படுகின்றன அல்லது விற்கப்படுகின்றன.

இந்த மாதிரி செலவுகள், திருமண வைபவத்தோடு மட்டும் முடிவடைவதில்லை. திருமணத்திற்கு பின்பும் குழந்தை பிறப்பு வரையிலான நிகழ்வுகள் வரை தொடர்கின்றன. இதனால், பெற்றோரின் கடன் சுமையும், அதற்கான வட்டி சுமையும் அதிகரிக்கின்றன.

திருமணத்துக்கான செலவுகளை, அவசியமானவை, அவசியமற்றவை என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவசியச் செலவுகளில் அழைப்பிதழ், திருமண மண்டபம் மற்றும் சாப்பாடு சார்ந்த செலவுகள் முங்கிய பங்கு வகிக்கின்றன. அவசியம் அழைக்கப்பட வேண்டியவர்களின் பட்டியலை ஆழ்ந்த ஆலோசனைகளுக்குப் பிறகு தயாரித்து, அந்த எண்ணிக்கையின் அடிப்படையில்தான் பத்திரிகைகள் அச்சடிக்கப்பட வேண்டும். தொலைபேசி மூலமும் அழைப்பு விடுக்கலாம். இதனால், போக்குவரத்துச்செலவும் குறைய வாய்ப்பிருக்கிறது.

மண்டபங்களைப் பொறுத்தவரை, அவைகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய மொத்த கட்டணத் தொகையில், தவிர்க்கப்படக்கூடிய பல கட்டணங்கள் ஒளிந்திருக்கின்றன. ஆகையால், மண்டபப் பயன்பாட்டுக்கான பல்வேறு கட்டணங்களின் முழு விவரங்களை முன்கூட்டியே விசாரித்து அறிந்து, அவைகளில் அவசியமற்ற செலவுகளுக்கு சம்மதத்தை மறுப்பதால், கணிசமான தொகையை மிச்சப்படுத்த முடியும்.

தற்காலத்தில், வசதி படைத்தவர்களின் வீட்டுத் திருமணங்களில்கூட திருமணம் மற்றும் வரவேற்பு நிகழ்ச்சி களுக்கு தனித் தனி அழைப்பிதழ்கள் கொடுக்கப்படு கின்றன. நெருங்கிய சுற்றத்தினர் மட்டும் முகூர்த்த நிகழ்ச்சிக்கும், நண்பர்கள் வரவேற்புக்கும் அழைக்கப் படுகின்றனர். இந்த முறையில், பல்வேறு செலவிணங்கள் குறைய வாய்ப்பிருப்பதால், இதையே எல்லோரும் பின்பற்றலாம்.

திருமண ஏற்பாடுகள் அனைத்தையும் மண்டபங்களை உள்ளடக்கிய பெரிய விடுதிகளின் பொறுப்பில் விடும் முறை, இப்பொழுது வேரூன்றிவிட்டது எனலாம். ஒப்பந்தக் கட்டணங்களில் உள்ளடங்கிய விவரங்களைக் கேட்டு அறிந்து, தேவை இல்லாதவைகளை ஒப்பந்தப் பட்டியலிலிருந்து நீக்குவதன் மூலம் இந்த முறையில் செலவை ஓரளவு குறைக்கலாம்.

உணவு பரிமாறப்படும் கூடத்தின் மேற்பார்வைக்கென நெருங்கிய உறவினர் அல்லது நண்பரை நியமிப்பதால், [illegible] லாமல், [illegible] யாக ஆள் இல்லாத இலைகளில்கூட சாப்பாடு பரிமாறி, அதற்கும் சேர்த்து கட்டணம் கணக்கிடுவதை மேற்பார்வையாளர் தடுக்கலாம். உணவுப் பந்திகள், அக்கறையுடன் மேற்பார் வையிடப்பட்டால், வீணாகும் செலவுகளைக் குறைக்க அது பெருமளவில் வழி வகுக்கும்.

கடன் வாங்கிக் கொண்டாடப்படும் திருமணங்களில், மாப்பிள்ளை வீட்டார், தங்களுக்குத் தெரிந்த எண்ணற்ற நபர்களுக்கு அழைப்பு விடுக்கும் பழக்கம் இன்றும் நிலவுகிறது. பெண்ணைப் பெற்றவர்கள் இந்தச் செலவுகளை முழுவதும் ஏற்பது நியாயமாகாது. இந்த மாதிரிச் சூழ்நிலையில், மாப்பிள்ளை வீட்டினரும், விருந்துச் செலவின் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்வதுதான் சரியான முறையாகும்.

இந்தக்கால இளம் பெண்கள், பெரும்பாலும் ஆடம்பர நகைகளை அணிவதில்லை. ஆகையால், மாப்பிள்ளையின் பெற்றோர்கள், தங்க நகைகளுக்கான தேவையைக் குறைத்துக்கொள்ளும் வழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். தங்கள் பெண்களுக்கு தங்கம் வழங்க விரும்பும் பெற்றோர்கள் வங்கிகளின் தங்க முறிகளாக வழங்கலாம்.

பெண் குழந்தையின் எட்டு வயது முதல், அவளுடைய கல்வி, திருமணச் செலவுகளுக்கு பெற்றோர்கள் சேமிக்கத் துவங்க வேண்டும். வங்கி வைப்பு நிதிகளின் மீதான வட்டி விகிதம், பண வீக்கத்திலிருந்து முற்றிலும் பாதுகாப்பு அளிப்பதில்லை.


ஆகவே, சேமிப்பின் ஒரு பகுதியை, முறையான தொடர் முதலீட்டு முறையின் மூலம் பங்கு மூலதனம் சார்ந்த வைப்புகளிலும், மற்றொரு பகுதியை பங்கு மூலதனம் மற்றும் கடன்பத்திரங்களை உள்ளடக்கிய திட்டங்களிலும் முதலீடு செய்வதால், பண வீக்கத்தைத் தாண்டிய பொருளாதாரப் பயனைப் பெறலாம்.

பொருளாதாரத் தகுதிக்கு அப்பாற்பட்ட, மிகப் பெரிய திருமணங்களால் தங்கள் பெண்ணின் இல்லற வாழ்க்கையின் தரத்தை உயர்த்திவிடலாம் என்ற எண்ணங்கள் பெற்றோர்களால் களையப்படவேண்டும். மணமகனுக்கும், மணப்பெண்ணுக்கும் இடையேயான மனப்பொருத்தம் மட்டும்தான் அதைச் சாதிக்க முடியும் என்பதை உணர வேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் உடல் வளர்ப்பு மட்டுமன்றி, தெளிவும், ஆரோக்கியமும் மிகுந்த மன வளர்ப்பிலும் கவனம் செலுத்தினால், வாழ்க்கையில் எத்தகைய சூழ்நிலைக்கும் அவர்கள் தங்களை தயார்ப்படுத்திக்கொள்ள அது உதவும்.

தங்கள் திருமணத்திற்குப் பிறகு, பெற்றோர்களை நிரந்தர கடனாளியாக்காத திருமணங்களை திட்டமிடுவதில், தற்கால இளைய சமுதாயத்திற்கு பெரும் பங்கும், பொறுப்பும் உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். 20 ஆண்டுகளுக்கு மேலான உழைப்பில், பெற்றோர் சிறு சிறு துளிகளாகச் சேர்த்த சேமிப்பு, இரண்டு நாள் திருமணச் செலவில் கரைந்து, அது பெரும்பாலும் வாழ்நாள் கடன் சுமையோடு முடிவடைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல்கடந்து தொடருமா இலங்கையின் வெற்றி நடை!

இலங்கை – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான தொடர் எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான தொடர்களை பறிகொடுத்த பின்னர் மேற்கிந்தியத்தீவுகளை முழுவதுமாக வீழ்த்தி பழைய நிலைமைக்கு திரும்பியுள்ள இலங்கை அணியின் வெற்றிப் பயணம் கடல்கடந்து அன்னிய மண்ணில் அதாவது நியூசிலாந்து மண்ணில் தொடருமா என்பதே தற்போதுள்ள கேள்வி.

**டெஸ்டில் இலங்கை சந்தேகம்**

நியூசிலாந்து – இலங்கை அணிகளுக்கு இடையில் இரண்டு டெஸ்ட், ஐந்து ஒருநாள், இரண்டு ரி–20 ஆட்டங்களைக் கொண்ட நீண்ட தொடர் நடைபெறவுள்ளது. டிசெம்பர் 10ஆம் திகதி டெஸ்ட் ஆட்டத்துடன் ஆரம்பமாகும் தொடர் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 10ஆம் திகதி 2ஆவது ரி–20 ஆட்டத்துடன் முடிவடையும். இந்த மூன்று தொடர்களில் டெஸ்ட் தொடர்களில் நியூசிலாந்தின் ஆதிக்கம் கணிசமான அளவு இருக்கவே அதிக வாய்ப்புக்கள் உள்ளன. பழக்கப்பட்ட ஆடுகளங்கள், ரசிகர்களின் ஆதரவு இவை இரண்டிலும் நியூசிலாந்தின் கை ஓங்கியிருக்கும். கருணாரத்ன, குசல் மெண்டிஸ், ஜெயசுந்தர, விதானகே, சந்திமல், மத்தியூஸ், சிறிவர்தன, குசல் ஜெனித் பெரேரா, கேரத், பிரசாத், சமீர ஆகியோர் விளையாடும் பதினொருவர் அணியில் இடம்பிடிக்கலாம். நுவான் பிரதீப், வண்டர்சே, லக்மல் இந்த மூவரும் மேலதிக வீரர்கள். சமீரவுக்குப் பதில் லக்மல் இணையவும் வாய்ப்புக்கள் உள்ளன. இந்த பெயர் விவரத்தில் இருந்து இலங்கை அணி அதிகளவான அனுபவமற்ற வீரர்களை கொண்டு சென்றுள்ளது என்பது தெரியவருகிறது. அனுபவமற்ற வீரர்களின் பங்குபற்றலும் இலங்கைக்கு பின்னடைவை ஏற்படுத்தக்கூடிய ஒரு விடயம். நியூசிலாந்தின் தட்பவெப்ப கால நிலைகளுக்கு ஏற்றால் போல் இலங்கையின் இளம் வீரர்கள் செயற்படுவார்களா என்பது சந்தேகமே.

அனுபவ வீரர்களும் எந்தளவுதூரம் சிறப்பாக செயற்படுவார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஏனெனில் நியூசிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில் (நியூசிலாந்து 'ஏ' அணி) இலங்கை அணி 193 ஓட்டங்களில் சுருண்டது. இத்தனைக்கும் நியூசியில் சர்வதேச வீரர்கள் இடம்பெறவில்லை என்பது கவனிக்கத்தக்க ஒரு விடயம். இந்த ஆட்டத்தில் சந்திமல் ஓட்டம் எதனையும் பெறாமலும் மத்தியூஸ் 3 ஓட்டங்களுடனும் சிறிவர்தன ஓர் ஓட்டத்துடனும் குசல் ஜெனித் பெரேரா ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழந்திருந்தனர். பந்துவீச்சிலும் சமீரவைத் தவிர வேறுஎவரும் சிறப்பாகச் செயற்படவில்லை. மொத்தத்தில் டெஸ்டில் இலங்கையின் வெற்றிநடை சந்தேகமாகவே உள்ளது.

ஒருநாள், ரி–20 ஆட்டங்களில் இலங்கையிடம் வாய்ப்புக்கள் இருக்கவெ செய்கின்றன. ஏனெனில் முதலிரு ஆட்டங்களும் கிறைஸ்சேர்ச்சிலும், அடுத்த இரண்டு ஆட்டங்கள் நெல்சனிலும் இறுதி ஆட்டம் ஓவலிலும் நடைபெறவுள்ளன. தொடர்ந்து இரண்டு ஆட்டங்கள் ஒரே ஆடுகளத்தில் நடைபெறுவதால், ஆடுகளம் தொடர்பான அறிதலுக்கு இந்த அவகாசம் இலங்கைக்கு கைகொடுக்கும். இதை இலங்கை கச்சிதமாகப் பயன்படுத்த வேண்டும். ரி–20 ஆட்டத்தில் நியூசியில் ஆடுகளங்கள் சுழலுக்கு சாதகமாக இருந்ததாக வரலாறு இல்லை. எனவே மலிங்க, குலசேகர இணை ரி–20 தொடரில் அசத்தும் பட்சத்தில் ரி–20 தொடரைக் கைப்பற்றலாம்.


# ரஷ்யா–கென்யா

## ஊக்கமருந்து பாவனையில் மௌனித்து இருக்கும் ஒலிம்பிக் சம்மேளனம்

அடுத்த வருடம் பிரேஸிலின் ரியோ நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ள நிலையில், சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தில் சில செயற்பாடுகள் தொடர்பாக அதிருப்தியில் உள்ளனர் விளையாட்டுத்துறை ஆர்வலர்கள்.

ஊக்கமருந்து பாவனையில் மௌனம் காக்கின்றமை

2000ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரையான சர்வதேச தடகளத் தொடர்களில் ரஷ்யா சார்பாக களமிறங்கிய வீர, வீராங்கனைகளில் 80 சதவீதமானவர்கள் ஊக்கமருந்து பயன்படுத்தியமை அம்பலமானது. ரஷ்ய அரசின் அனுமதியில்லாமல் இத்தகைய பெரும் தொகையானவர்கள் ஊக்கமருந்தைப் பயன்படுத்த சாத்தியமில்லை. இதனால் இந்த சர்ச்சையின் பின்புலத்தில் ரஷ்ய அரசின் தில்லுமுல்லு இருக்கலாம் என்று எதிர்வுகூறப்பட்டது. இதனையடுத்து சர்வதேச தடகளச் சம்மேளனம் தனது அங்கத்துவத்தில் இருந்து ரஷ்யாவை உடனடியாக நீக்கியது. உலக ஊக்கமருந்து தடுப்பு அமையம் ரஷ்ய ஊக்கமருந்து தடுப்பு அமையத்தின் மீது தடைவிதித்தது. இவ்வளவுக்கும் சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் குறித்த விடயம் தொடர்பாக தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கவில்லை. அடுத்த வருடம் ரியோ நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளதால் இதில் ரஷ்யாவுக்கு தடை விதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தனது மௌன நிலைப்பாட்டை சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் கலைப்பதாக இல்லை.



**ஒலிம்பிக் பாதுகாப்பில் முரணான கருத்துக்கள்**

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் தொடரில் 75ஆயிரம் பாதுகாப்பு வீரர்களை கடமையில் ஈடுபடுத்தவுள்ளதாகத் தெரிவித்திருந்தது பிரேஸில் ஒலிம்பிக் சம்மேளனம். பரிஸ் நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து அவர்களின் பிரதான இலக்குகளில் ஒன்றாக விளையாட்டு மைதானங்களும் உள்ளதாக இனங்காணப்பட்டன. இதனால் ரியோ ஒலிம்பிக்கில் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்று எதிர்பார்கப்பட்டது. பாதுகாப்பு பலப்படுத்துவதை தாமும் விரும்புவதாக பிரேஸில் ஒலிம்பிக் சம்மேளனம் தெரிவித்தது. ஆனால், சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் பாதுகாப்பு தொடர்பாக எந்தவொரு கருத்தையும் தெரிவிக்கவில்லை. கடந்த சில மாதங்களில் சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தின் இவ்வாறான செயற்பாடுகள் ஒலிம்பிக் தொடர்களுக்கே உரிய முன்னேற்பாடுகளையும் ஸ்திரத்தன்மையும் கேள்விக் குறியாக்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ரஷ்ய அரசின் அனுமதியில்லாமல் இத்தகைய பெரும் தொகையானவர்கள் ஊக்கமருந்தைப் பயன்படுத்த சாத்தியமில்லை. "

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 600 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 300 | 400 | - |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 600 | - |
| பாரை | 450 | 500 | - | 450 | 800 | 400 |
| சுறா | 500 | 500 | - | 500 | 1000 | - |
| சீலா | 250 | 400 | 400 | 400 | 600 | 350 |
| விளை | 650 | 450 | 400 | 450 | 600 | 400 |
| முரல் | 300 | 400 | 300 | 300 | 200 | - |
| கும்பிளா | 350 | 400 | 300 | 300 | 400 | 200 |
| கிழாக்கன் | 400 | 800 | 300 | 400 | 400 | - |
| ஒரா | 350 | 350 | 300 | 400 | 200 | 300 |
| திரளி | 200 | 250 | 100 | 300 | 100 | - |
| நகரை | 150 | 250 | 100 | 300 | 100 | 300 |
| ஆடை | 150 | 100 | 100 | 100 | 50 | - |
| ஒட்டி | 200 | 150 | 200 | 300 | 50 | 200 |
| திருக்கை | 150 | 250 | - | 250 | 300 | - |
| பாலை | 350 | 250 | - | 270 | 300 | - |
| வாளை | 100 | 150 | 200 | 300 | 300 | 200 |
| கொய் | 100 | 100 | 80 | 100 | 50 | - |
| மதனம் | 150 | 200 | 300 | 250 | 300 | 250 |

# இது புதுசு



## நவீன சமையலறை உபகரணங்கள்

பெண்களுக்கான நவீன சமையலறை உபகரணங்கள் தற்போது கடைகளில் கிடைக்கின்றன. மரக்கறிகளின் தோலை மட்டும் நீக்கி பாத்திரத்தினுள் இட்டு மூடியை மூடி, கைபிடியினால் சுற்றினால் மட்டும் போதும். சிறு சிறு துண்டுகளாக சில நொடிகளில் ஆகிவிடும். விரும்பிய அளவுகளில் வெட்டப்படுவதற்கான ஒழுங்கமைப்பு முறை உண்டு. இது 600 முதல் 1600 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது. அளவுகள், வசதிகளுக்கிணங்க விலைகள் மாறுபடும். பிளாஸ்ரிக்கில் தயாரிக்கப்பட்டுள்ளதால் சுத்தப்படுத்துவது சுலபம், பாவிப்பதும் சுலபம்.



## நாளை

கார்த்திகை -21
திங்கட்கிழமை 07.12.2015
திதி: ஏகாதசி மு.ப. 11.03
நட்சத்திரம்: சித்திரை பி.ப.07.21
ராகுகாலம்: 07.47-09.17 வரை
சுபநேரம்: 12.17- 01.47 வரை
ஏகாதசி விரதம்

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | – | 80 | 120 | 100 | 100 | 120 |
| கத்தரி | 120 | 140 | 150–200 | 160 | 120–140 | 140 | 100 |
| கரட் | 200 | 180 | 100–300 | 200 | 140 –320 | 120–300 | 320 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 40–50 | 40 | 30 |
| பயிற்றை | 300 | 200 | 200–320 | 180 | 280–300 | 300 | 200 |
| பாகல் | 280 | – | 300–480 | 300 | 300 | – | 300 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 100 | 70 | 100 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 120 | 120 | 70 |
| சி.வெங்காயம் | 100 | 110 | 120 | 120 | 100 | 180 | 100 |
| பூசணி | 40 | 50 | 60 | 50 | 40 | 80 | 40 |
| தக்காளி | 200 | 200 | 240 | 240 | 220 | 160 | 180 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 | 50 | 80 | 40 |
| கீரை | 40 | 50 | 50 | 20 | 50 | 40 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 40 | 30 | 40 | 15 |
| பச்சை மிளகாய் | 1000 | 700 | 800 | 700 | 700 | 800 | 1000 |
| புடோல் | 160 | 120 | 140 | 120 | 120 | 140 | 130 |
| கோவா | 180 | 160 | 200 | 200 | 160 | 200 | 180 |
| வெண்டி | 140 | 120 | 150 | 120 | 120 | 140 | 100 |
| போஞ்சி | 300 | 200 | 240 | 280 | 220 | 320 | 220 |
| லீக்ஸ் | 200 | 160 | 160–200 | 180 | 160 | 200 | 180 |
| தேங்காய் | 50 | 45 | 50 | 50–60 | 40 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 65 | 70 | 70 | 70–140 | 80 | 80–120 |
| தேசிக்காய் | 250 | 250 | 350 | 200 | 220 | 200 | 80 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 300 | – | 800 | 340 | 400 | 400 | 300 |
| இராசவள்ளி | 350 | – | – | – | 280 | – | 100 |

# சமைப்போம் வாங்க



## பப்பாளி கேசரி

**தேவையான பொருள்கள்:**

பப்பாளித் துண்டுகள் – ஒரு கப்
ரவை – ஒரு கப்
சர்க்கரை – ஒரு கப்
பால் – கால் கப்
நெய், முந்திரி – தேவையான அளவு
ஏலக்காய் – 2

**செய்முறை:**

பப்பாளித்துண்டுகளை மிக்ஸியில் போட்டு பால் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.
தாச்சியில் நெய் ஊற்றி முந்திரி சேர்த்து வறுத்து எடுத்துக் கொள்ளவும்.
அதே தாச்சியில் ரவையைச் சேர்த்து வறுத்து எடுக்கவும்.
அதன் பிறகு ஒரு கப் ரவைக்கு 2கப் தண்ணீர் விட்டு கலர் பொடி சேர்த்துக் கொதிக்க விடவும்.
தண்ணீர் கொதித்ததும் ரவையைக் கொட்டி, கட்டி தட்டாமல் கிளறி விடவும். ஏலக்காயைப் பொடி செய்து சேர்க்கவும்.
பின்னர் பாத்திரத்தை மூடி வைத்து வேக விடவும். ரவை வெந்ததும் சர்க்கரை மற்றும் அரைத்த பப்பாளி விழுதைச் சேர்க்கவும்.
கலவை ஒன்று சேர்ந்து வெந்து கெட்டியாகி வரும் போது நெய், வறுத்த முந்திரி சேர்த்து இறக்கவும்.
சுவையான பப்பாளி கேசரி தயார்.

# சமையலறை குறிப்புகள்



- தேங்காய் துருவும் பொழுது ஓட்டையும் சேர்த்து துருவி பயன்படுத்தினால் குடல் புண் உண்டாகும். அதனால் வெள்ளைப் பகுதியை மட்டும் பயன்படுத்தவும்.
- மிளகாய் வத்தலை வறுக்கும் பொழுது சிறிது உப்புச் சேர்த்து வறுத்தால் ஹச்...... ஊச்.... என்று தும்மல் ஏற்பட்டு பாடாய்ப் படுத்தாது.
- வடகத்தை வெறும் சட்டியில் வறுத்த பின் எண்ணெயில் வறுத்தால் நன்றாக பொரிந்து மொறு, மொறுப்பாக இருக்கும்.
- வேப்பம் பூவை நெய்யில் வறுத்து சிறிது உப்புச் சேர்த்து சாதத்தில் பிசைந்து பயன்படுத்தினால் காய்ச்சல், வரவே வராது.
- அருகம்புல் சாறு எடுத்து மாவில் கலந்து ரொட்டி செய்து சாப்பிடுவது நல்லது. தாது உப்புக்களும், விற்றமின்களும் அருகம்புல்லில் அதிகம்.
- கறிவேப்பிலைச் செடி நன்கு வளர புளித்த மோருடன் [illegible] ஊற்றி வளர்க்கலாம்.
- போத்தலில் [illegible] கொதிக்கும் எண்ணெயில் நனைக்கப்பட்ட துணியால் போத்தலின் உட்புறத்தைத் துடைத்த பின் ஊறுகாயைப் போட்டு மூடி வைத்தால் பூஞ்சணம் பிடிக்காமல் இருக்கும்.
- பாயாசத்துக்குத் திராட்சைக்கு பதிலாக பேரிச்சம்பழத்தைப் பொடியாக நறுக்கி வைத்து நெய்யில் பொரித்துப் போட்டால் சுவையாக இருக்கும்.
- வெங்காய பகோடா செய்ய மா பிசையும்போது வறுத்த நிலக் கடலையை பொடி செய்து மாவுடன் சேர்த்துப் பிசையவும். இதனால் பகோடா மொறு மொறுவென்று ருசியாக இருக்கும்.
- சர்க்கரைப் பொங்கல் செய்யும்போது அரை கப் தேங்காய் பால் ஊற்றிக் கிளறி இறக்கினால், பொங்கல் மிகவும் சுவையாக இருக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 5 | 3 | | | 7 | 6 | 9 |
| | | 3 | | 7 | | | 8 | |
| 6 | 7 | | | 8 | | | 1 | |
| 7 | | | | 3 | | | | |
| | 1 | | | | 4 | | 7 | 6 |
| | | | | | | 2 | | |
| | | 1 | 5 | | | | | |
| 5 | | 9 | | | | 1 | | |
| | | 7 | 2 | 1 | 3 | | 9 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 1 | 5 | 4 | 9 | 2 | 3 | 7 |
| 4 | 2 | 7 | 1 | 3 | 6 | 9 | 5 | 8 |
| 9 | 5 | 3 | 8 | 2 | 7 | 4 | 6 | 1 |
| 2 | 3 | 6 | 7 | 5 | 8 | 1 | 9 | 4 |
| 1 | 4 | 8 | 6 | 9 | 3 | 7 | 2 | 5 |
| 5 | 7 | 9 | 4 | 1 | 2 | 3 | 8 | 6 |
| 8 | 9 | 4 | 3 | 7 | 5 | 6 | 1 | 2 |
| 7 | 6 | 2 | 9 | 8 | 1 | 5 | 4 | 3 |
| 3 | 1 | 5 | 2 | 6 | 4 | 8 | 7 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

ரெண்டு பொண்ணுங்க ஒரு ஹோட்டல்ல டீ சாப்டுட்டு இருந்தப்போ ஒருத்தி ரொம்ப சோகமா இருக்கிறத நோட் பண்ணி இன்னொருத்தி ஏண்டி சோகமா இருக்க?ன்னா.
அது...என் லவ்வர் ஸ்டாக் மார்க்கட்ல நிறைய பணம் விட்டுட்டான் அடடே அவனோட கம்பெனியும் லாஸ் ஆகிடுச்சி
எனக்கு தெரியும் அவனுக்காக நீ ரொம்ப வருத்தப்படற கண்டிப்பா
இதுல எந்த பிரச்னைக்காக நீ ரொம்ப வருத்தப்படற
ம்ச் ரெண்டும் இல்ல இனிமே அவன் என்னை ரொம்ப மிஸ் பண்ணுவானே அத நினைச்சு தான்

WhatsApp
படித்ததில் பிடித்தது




நர்சரி பள்ளி ஒன்றின் உணவறையில் ஒரு கூடை நிறைய ஆப்பிள்கள் வைக்கப் பட்டிருந்தன.
அந்தக் கூடையின் மேல்
ஒன்றுக்கு மேல் எடுக்காதீர்கள்;
கடவுள்
பார்த்துக்கொண்டிருக்கிறார்
என எழுதி இருந்தது.
சற்று தொலைவில் ஒரு பெட்டி
நிறைய சாக்லேட்டுகள்
வைக்கப்பட்டிருந்தன.
அந்தச் சாக்லேட் பெட்டியின்
மீது ஒரு குழந்தை பின்வருமாறு எழுதியது:
எவ்வளவு வேண்டுமோ எடுத்துக்கொள்ளுங்கள்; கடவுள் ஆப்பிளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்!

Gobinath @Gobinath_SP · Mar 4
கனவுகளைத் தந்துவிட்டு விடிந்ததும் கடந்து போய் விடுகிறது காதல் அதிர்ஷ்டசாலி நான்!

கரிகாலன்
கடந்து சென்ற இரவுக்கெல்லாம் காலடித்தடம் ஒன்றே!

கானா பிரபா
ஒரு கையால் பறக்கும் முத்தம் கொடுத்தால் போதாது உமக்கு என்று தன் இரு கையை வாயில் அழுத்திப் பறக்கவிடும் மகளுக்கும் தெரியும் நேசத்தின் மொழி



Stephan Dilosian
போர் என்னும் புயல் ஆசியா, ஆபிரிக்கா கடந்து இப்ப ஐரோப்பாவில் நிலை கொண்டுள்ளது.

Reshzan Thayaparan · Nov 24
காலை முழுவதும் கொளுத்தும் வெய்யிலும் மாலை முழுவதும் கொட்டும் மழையென வழக்கப்படுத்திக் கொள்ளுது பூமி.

மௌனவல்
வீடு கிளீன் பண்ணும்போது மட்டும் தான் ஏன்மா இவ்ளோ பெருசா வீட்டைக் கட்டினீங்கன்னு கேக்குறது அவ்...



அம்மா என் பிஞ்சுக் கைகளைப் பிடித்து நடக்க கற்று கொடுத்தாய். ஆனால் நானோ உன் நடை தளரும் போது ஓடி விட எண்ணினேன் அம்மா! அதனால் தானோ கல்லறை கூட சுமக்க மறுக்கிறது மின் மயானம் என்னை அழைக்கிறது.




## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரிடம் பாராட்டு வெகுமதி பெறுவர். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**இடபம்:** மனதில் குழப்பம் உண்டாகி மறையும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். வாகனத்தில் மித வேகத்தைப் பின்பற்றவும்.

**மிதுனம்:** உடல்நலத்தில் கவனம் செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தெய்வ வழிபாடு மன அமைதியைத் தரும்.

**கடகம்:** உறவினர்கள் மத்தியில் நன்மதிப்புப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான இலாபம் கிடைக்கும். விரைவில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். மாணவர்கள் ஆர்வத்துடன் படித்து முன்னேறுவர்.

**சிங்கம்:** நண்பர்கள் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். தொழில் வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்குவர். உடல்நலத்துக்கு சிகிச்சை தேவைப்படலாம்.

**கன்னி:** எதிர்பார்த்த செய்தி கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர். அரசியல்வாதிகளுக்குப் பதவி பெற அனுகூலம் உண்டு.

**துலாம்:** உங்களின் நற்செயலைப் பிறர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் மூலதனம் தேவைப்படும். இலாபம் கூடும். உடல் நலனில் கவனம் செலுத்துவது அவசியம். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**விருச்சிகம்:** புதியவர்களின் நட்பால் நன்மை கிடைக்கும். உழைப்புக்கேற்ப தொழிலில் வருமானம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டை நிறைவேற்றுவீர்கள். மாணவர்கள் படிப்பில் தரத் தேர்ச்சி காண்பர்.

**தனுசு:** பொது விடயங்களில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும் பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை வந்து சேரும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**மகரம்:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். உடல்நலத்துக்கு ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** நேர்மையைப் பின்பற்றி நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் தாய்வீட்டாரின் ஆதரவால் மகிழ்வர்.

**மீனம்:** கணவரின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியைத் தரும். பணியாளர்களுக்கு சக ஊழியர்களின் உதவி உண்டு. பெண்களுக்கு பொன், பொருள் சேர யோகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்பயிர்களில் மறிச்சுக்கட்டி அதிக உரப்பாவனை வேண்டாம்

அச்சுவேலி,டிசெ.6
நெற்பயிர்களில் "மறிச்சுக்கட்டித்" தாக்கம் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் பொருத்தமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளாவிடின் நோய் மேலும் பரவுவதோடு நெல் விளைச்சலைப் பெருமளவில் பாதிக்கும்.
எனவே விவசாயிகள் தமது நெற் பயிர்களில் மறிச்சுக் கட்டிப் பாதிப்பு நிலவுவது தொடர்பாக மேலதிக கவனம் செலுத்துவதோடு, பிரதேச விவசாயப் போதனாசிரியர்களுடன்தொடர்பு கொண்டு மேலதிக விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என யாழ் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் அறிவித்துள்ளார்.
தென்மராட்சிப் பகுதியில் தனங்களப்பு, வலி.கிழக்குப் பகுதியில் சிறுப்பிட்டி, புத்தூர் பகுதிகளில், நெல் வயல்களில் மறிச்சுக்கட்டியின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது.

> விவசாயிகள் அளவுக்கு அதிகமாக யூரியா உரத்தைப் பயன்படுத்தி இருப்பதால் நெற்பயிர் அளவுக்கதிகமான தளைச்சத்தைப் பெற்று அளவுக்கு அதிகமான கடும் பச்சை நிறத்தில் காணப்படுகின்றது.

விவசாயிகள் அளவுக்கு அதிகமாக யூரியா உரத்தைப் பயன்படுத்தி இருப்பதால் நெற்பயிர் அளவுக்கதிகமான தளைச்சத்தைப் பெற்று அளவுக்கு அதிகமான கடும் பச்சை நிறத்தில் காணப்படுகின்றது.
இந்த வயல்களில் மறிச்சுக்கட்டி தாக்கம் காணப்படுகின்றது. மறிச்சுக்கட்டியின் தாக்கத்தை இல்லாமல் செய்வதற்குப் பரிந்துரை செய்யப்பட்ட கிருமி நாசினியை விசிற வேண்டும்.
நெல் வயல்களில் நெற்பயிர்களுக்கு அளவுக்கு அதிகமாக யூரியா உரப்பசளைப் பயன்படுத்தாமல் ஒரு ஏக்கருக்கு ஏழு கிலோ யூரியாவை 50 வீதம் பொட்டாஸ் கலந்து பயன்படுத்த வேண்டும்.
விவசாயிகள் தமது நெல்வயல்களை மறிச்சுக்கட்டிதாக்கம் இருப்பதைக் கண்டறிவதற்குக் கூடிய மேலதிக கவனிப்பை, அவதானிப்பைச் செலுத்துவதோடு தாக்கம் இருக்கும் இடத்துப் பிரதேச விவசாயப் போதனாசிரியர்களுடன் கலந்துரையாடி மேலதிக விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (த-ஐ-11)



# மாற்றுவலுவுடையோர் கோரிக்கை முன்வைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.6
யாழ்.மாவட்ட மாற்றுவலுவுடையோர் சுய உதவிக் குழுவினர், யாழ்.மாவட்ட அரச அதிபருடனான சந்திப்பின்போது முக்கிய சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.
தமது குழுவுக்கான நிரந்தர கட்டடம் ஒன்று வழங்கப்பட வேண்டும், அத்துடன் மாற்றுத்திறளானாளிகளின் சுய தொழிலுக்கென வழங்கப்படும் நிதி போதாமையினால் அதனை அதிகரித்தல், மாற்றுத் திறனாளிகளுக்காக அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களில் நிரந்தர வேலைவாய்ப்புக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.
இதேவேளை, மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் மலசல கூடத்துக்கான நிதியை அதிகரித்தல், அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் 3 ஆயிரம் ரூபா வழங்க ஆவன செய்தல், மாற்றுத்திறனாளிகளுக்கான சுயதொழில் பயிற்சி நிலையத்தை யாழ். மாவட்டத்தில் உருவாக்குதல், ஆதரவற்ற மாற்றுத்திறனாளிகள் வாழ்வதற்கான வாழ்வில்லம் அமைத்தல் வேண்டும்.
பாடசாலைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட கல்வி அலகு இருப்பது போன்று பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், உயர் தொழில் நுட்பக் கல்லூரிகள், மற்றும் அரச, தனியார் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட கல்வி அலகை உருவாக்குதல் வேண்டும்.
வாகனச் சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்கும் மாற்றுத்திறனாளிகள் தொடர்பாகச் சட்டங்களைத் தெளிவுபடுத்துவதோடு அவர்களின் சீரான பயணம் தொடர்பாக தெளிவும் விழிப்புணர்வும் ஊட்டுதல், யாழ் மாவட்டத்தின் அனைத்து இடங்களில் இருந்தும் நவீல்ட், வாழ்வகம், சிவபூமி போன்ற பாடசாலைகளில் மாற்றுத்திறனாளிகள் கல்வி கற்கச் செல்வதற்கான வாகன வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.
மாற்றுத்திறனாளிகளுக்கான வீட்டுத்திட்டம், மும்மொழிகளிலும் பேசும் மென் பொருளைப் பொருத்துதல், வீடுகளில் மற்றும் பராமரிப்பு நிலையங்களில் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பராமரிப்பில் வாழும் இதுவரை காலமும் இன்னும் சமூகத்துடன் இணைக்கப்படாத மாற்றுத்திறனாளிகள் கல்விகற்கக்கூடிய நிலையில் இருப்பவர்கள், கல்வி கற்பதற்கும், தொழில் செய்யக்கூடிய நிலையில் இருப்பவர்கள் தொழிற் பயிற்சியைப் பெற்றும் சமூகத்துடன் இணைந்து வாழ்வது கட்டாயமாக்கப்படல் வேண்டும் போன்ற விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. (ஐ-10)

# தனியார் நிறுவனங்களின் விடுமுறை தினம் அறிவிப்பு

அச்சுவேலி,டிசெ.6
வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் செயற்படும் தனியார் கல்வி நிலையங்கள் பிரதி வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரச பொதுவிடுமுறை தினங்களில் மாணவர்களுக்கு விடுமுறை வழங்கி மூடப்படவுள்ளன.
தனியார் கல்வி நிலையங்களுக்கான புதிய கல்வியாண்டு ஆரம்ப தினமாகிய டிசெம்பர் 5 ஆம் திகதியில் இருந்து இந்தப் புதிய நடைமுறை முன்னெடுக்கப்படுகிறது.
மாணவர்களின் பொதுநலன்களையும், ஆன்மீக நலனையும் கருத்தில் கொண்டு வலி.கிழக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எம்.பிரதீபன் தலைமையில் தனியார் கல்வி நிலைய நிர்வாகிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் ஒருமனதாக இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன.
பிரதி வெள்ளிக்கிழமை முழுநாளும் ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2 மணி வரையும் மற்றும் அரச பொதுவிடுமுறை தினங்களிலும் மாணவர்களுக்கு விடுமுறை வழங்கித் தனியார் கல்வி நிலையங்களை மூடுவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.
வலி.கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில் முன்னுதாரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்துக்கு சமூக ஆர்வலர்கள், கல்வியியலாளர்கள் வரவேற்புப் தெரிவித்துப் பாராட்டியுள்ளனர்.
தனியார் கல்வி நிலையங்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட தினங்களில் விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவு யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் முன்மொழியப்பட்டு இருப்பதால் ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இது நடைமுறைக்கு வரலாம் எனக் கூறப்படுகிறது. (ஐ-11)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு தயாரித்தல் போட்டி

நீரிழிவு, உயர் குருதியமுக்கம் மற்றும் கொலஸ்ரோல் அளவு கூடுதலாகக் காணப்படுதல் என்பவை எமது சமுதாயத்தில் கூடுதலாகக் காணப்படுகின்றன. உணவு முறைகளில் ஏற்படும் மாற்றமானது, பொது மக்களின் ஆரோக்கியத்தில் பிரதானமான பங்கை வகிக்கிறது.

இலங்கை மக்களிடையே ஆரோக்கியமான உணவு முறைகளை ஊக்குவிப்பதில் இலங்கை அகஞ்சுரக்கும் தொகுதியியல் நிபுணர்கள் கல்லூரியின் பிரிவான நீரிழிவு அற்ற இலங்கை என்ற அமைப்பு உதவி வருகின்றது.

இந்த அமைப்பானது, எமது கலாசாரத்துக்கமைவான, சுவையான மற்றும் இலகுவாகத் தயாரிக்கக் கூடிய உணவுவகைகள்பற்றிபொதுமக்களை அறிவூட்டுவதன் மூலம் ஆரோக்கியமான உணவு முறைகளைப் பிரபல்யப்படுத்த விரும்புகிறது.



இந்த உணவு தயாரித்தல் போட்டியானது, மேற்குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதை ஊக்குவிப்பதாக அமையும். போட்டி சம்பந்தமான சகல ஆக்கப் பிரதிகளும் கீழே குறிப்பிடப்படும் விளக்க முறைகளுக்கேற்ப அமைவதோடு, நீரிழிவு அற்ற இலங்கை, இலங்கை அகஞ்சுரக்கும் தொகுதியியல் நிபுணர்கள் கல்லூரி, இல. 6, விஜேராம கவுஸ், விஜேராம மாவத்தை, கொழும்பு - 7 என்ற முகவரிக்குப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அனுப்பப்படும் ஆக்கப் பிரதிகள் நீரிழிவு அற்ற இலங்கை அமைப்பின் பதிப்புரிமையைப் பெற்றுக் கொள்வதோடு, இந்த அமைப்பானது அவற்றை விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இலத்திரனியல் அல்லது அச்சிட்ட முறையில் பயன்படுத்துவதற்கான உரிமையையும் பெற்றி ருக்கும்.




**வயதுப் பிரிவு :** எந்தவொரு வயது வரம் புமின்றி எவரும் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடி யும்.

**தேவைகள் :** ஆரோக்கியமான, எமது கலாசாரத்துக்கு அமைவான, சுவையான, சாதாரண சமை யல் முறைகள் மூலம் இலகுவில் தயாரிக்கக் கூடிய மற்றும் எமது நாட்டின் இயற்கை வளங் களைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் உணவாக இருத்தல் வேண்டும்.

**அனுப்பி வைத்தல் :** கீழே குறிப்பிடப்படும் இரண்டு விடயங்களையும் பூர்த்தி செய்து நீரிழிவு அற்ற இலங்கை அமைப்புக்கு அனுப்பி வைக்கவும்.

1. தயாரிக்கப்படும் உணவு
2. உணவின் புகைப்படம்

நீங்கள் தயாரிக்கும் உணவின் தெளிவான புகைப்படத்தின் டிஜிற்றல் பிரதியை மெல்லிய நிறப் பின்புலத்தோடு, வேறு ஏதாவது சேமிப்பு உபகரணம் மூலமாகவோ அனுப்பி வைக்க முடியும்.

# பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகள்

நீரிழிவு அற்ற இலங்கை அழைப்பானது, ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பிரபல்யப்படுத்தும் நோக்கில் சிறுபராயத்தினரை அறிவூட்டுவதன் மூலம் ஆரோக்கியமான பிரசைகளை உருவாக்க விரும்புகிறது.

'இன்றே செயற்படுவோம், நாளையை மாற்றுவதற்காக' என்ற பொருளில் உலகளாவிய ரீதியில் நீரிழிவு தினமானது கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்தக் கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகள் மூலம் பாடசாலை மாணவர்கள் மேற்படி நோக்கங் களை எட்டுவதற்கு உதவமுடியும். கீழே தரப்பட்டுள்ள விளக்க முறைகளுக்கேற்ப போட்டி சம்பந்தமான சகல ஆக்கப் பிரதிகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உங்கள் ஆக்கப் பிரதிகளைப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் 'நீரிழிவு அற்ற இலங்கை', இலங்கை அகஞ்சுரக்கும் தொகுதி நிபுணர்கள் கல்லூரி, இல. 6, விஜேராம கவுஸ், விஜேராம மாவத்தை, கொழும்பு - 7 என்ற முகவரிக்குப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



பிந்திக் கிடைக்கப் பெறும் ஆக்கப் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அனுப்பப்படும் ஆக்கப் பிரதிகள் நீரிழிவு அற்ற இலங்கை அமைப்பைச் சேர்வதுடன் இவற்றை எதிர்காலத்தில் பிரசுரிக்கும் உரிமையையும் அது கொண்டிருக்கும். சகல பாடசாலை மாணவர்களும் இந் தப் போட்டிகளில் கலந்து கொள்ள முடியும். கீழ்வரும் வயதுப் பிரிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கனிஷ்ட பிரிவு: 01. 01. 2016 இல் 15 வயதுக் குட்பட்டோர்

சிரேஷ்ட பிரிவு: 01. 01. 2016 இல் 15 வயதுக்கு மேற்பட்டோர்.

**கட்டுரைப் போட்டி:**

**தலைப்பு:** 'இன்றே செயற்படுவோம், நாளையை மாற்றுவதற்காக'

**நோக்கம்:** நீரிழிவு மற்றும் தொற்றா நோய்களை [illegible] தேவையான மாற்றங்களை [illegible]

**வயதுப் பிரிவு:** கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவு கட்டுரையானது சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியில் எழுதப்பட முடியும்.

**சொற்களின் வரம்பு:** கனிஷ்ட பிரிவு - 1000 சொற்கள்
சிரேஷ்ட பிரிவு - 2000 சொற்கள்

**அனுப்பும்முறை:** கணினி அல்லது தட்டச்சு செய்யப்பட்ட பிரதியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் பதிவுத்தபால் மூலமாக 'நீரிழிவு அற்ற இலங்கை' அமைப்பின் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

**சித்திரப்போட்டி**

**தலைப்பு:** 'இன்றே செயற்படுவோம், நாளையை மாற்றுவதற்காக'

**வயதுப் பிரிவு:** கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவு

**சிறப்பு விவரங்கள்:** தாளின் அளவு - ஏ - 3 சித்திரத்தாள், ஊடகம் - ஏதாவது (பென்சில், கிறேயோன், நீர் வர்ணம், எண்ணெய் வர்ணம், டிஜிற்றல் அல்லது வேறு ஏதாவது). சித்திரமானது. எந்தவொரு வகையான திருட்டுமற்ற சுயமான படைப்பாக இருத்தல் அவசியமாகும்.

**அனுப்பும்முறை:** சித்திரப் பிரதியை 'நீரிழிவு அற்ற இலங்கை' அமைப்பின் முகவரிக்கு (மேலே பார்க்கவும்) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ENGLISH PERSONAL CLASSES
## ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புகள்

அனுபவம் மிக்க ஆசிரியரால் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். யாழ்ப்பாணம்.

தொடர்பு : 077 658 9443 (33727) (12.15)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

தோம்பை வீதி, உடுவில் கிழக்கு "குறத்தாவத்தையும் தோம்பையும் " நிலப்பரப்பு 4உம் வீடும் கிணறும் நான்கு பக்க சுற்றுமதிலுடன் விற்பனைக்கு உண்டு. காலை 9.00 - 5.00 மணி வரை. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

077 711 5579, 075 246 6179 (66472)(11,15,17)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 29 வயதுடைய லக்கினத்தில் ராகு கிரகபாவம் 62 புனர்பூசம் முதலாம் பாதம் கனடா PR உள்ள B.Sc (Chemistry) Chartered படித்து வேலை செய்யும் மணமகளுக்கு படித்த மணமகன் தேவை.
கனடாவில் வசிப்பவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: 071 847 5162 (66504)(11.15)

## நிர்வாக உத்தியோகத்தர் தேவை

இந்திய கட்டட கலைஞர்களால் இலட்சணமாக வடிவமைக்கப்பட்டு இந்து ஆகம முறைப்படி இந்திய சிற்பிகளால் இயக்கச்சியில் நிறுவப்பட்டுள்ள ஒரு இந்து ஆலயத்துக்கு அர்ப் பணிப்புடன் ஒரு திறமையான நிர்வாக உத்தியோகத்தர் தேவை. இதற்குத் தகுதி வாய்ந்த ஆண் / பெண் விண்ணப்பதாரிகள் தங்களது தகைமையுடனான சுயவிவரக் கோவையினை கீழ்வரும் முகவரிக்கு 20.12.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும். திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

**திரு.S.ரவீந்திரன்**
33, நல்லூர் குறுக்கு வீதி,நல்லூர், யாழ்ப்பாணம்.

மேலதிக விவரம் தேவைப்படின்
(66575) (11,15) தொடர்பு: 077 776 0255

ஆலய நிர்வாகத்தினர்.

## மேற்பார்வையாளர் தேவை

தப்ரபேன் கடலுணவு நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளைக்கு பெண் மேற்பார்வையாளர்கள் மற்றும் பெண் ஊழியர்கள் தேவை.

தகைமை (மேற்பார்வையாளர்) - க.பொ.த.உயர்தரம்
வயதெல்லை - 18 - 50 வயது

**குறிப்பு** - தொழிற்சாலை வளாகத்தினுள் 30-40 பெண்கள் தங்கக் கூடிய விடுதி உள்ளது. தவிர கொடிகாமம், காரைநகர், அச்சுவேலி மற்றும் தம்பாட்டி ஆகிய இடங்களில் இருந்து இல வச போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது.சுயவிவரங்களை கீழ்வரும் மின்னஞ்சல் ஊடாக அனுப்பவும்.

tsfjfn15@yahoo.com தொடர்புகளுக்கு: (10.00am- 2.00pm)
076 697 4248
(65737)(11.15)

## 7 ஆவது பிறந்ததின வாழ்த்து



இணுவில் கிழக்கு அங்களப்பாயைச் சேர்ந்த
**சோமசபேசக் குருக்கள் வடிவாம்பிகை**
தம்பதிகளின் ஏகபுத்திரி
**செல்வி சிந்ருஜா (சிந்து)**
தனது 7ஆவது பிறந்ததினத்தை தனது இல்லத்தில் சிவகாமி அம்மன் திருவருளால் வெகு சிறப்பாக கொண்டாடுகின்றார்.
இவரை அப்பா, அம்மா, உற்றார், உறவினர், நண்பர்கள் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.
சிவஸ்ரீ
சா.சோமசபேசக்குருக்கள்

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

af

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

## பிரெஞ்சு மொழி

- இலங்கையில் FRENCH MINISTRY OF FOREIGN AFFAIRES & FRENCH EM BASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே.
- 136 நாடுகளில் 1092 கிளைகள், தலைமை நிறுவனம் 1883 **PARIS** இல் நிறுவப்பட்டது.
- இலங்கையில் AF மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF A1,A2)** ஐ வழங்குகின்றது. எமது **A1** சான்றிதழைப் பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சைக்குத் தோற்றவேண்டியதில்லை.
- **இலவசம்:** படிக்கும் பாடங்களில் **PHOTOCOPIES**, படித்ததற்கான **LETTRE, VISA FORM** நிரப்புதல், **CD, BOOKS** பாவனை....
- யாழ்., வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் **AF** இல் படித்தே **FRANCE, CANADA, SWITZERLAND...** செல்கிறார்கள்.
- பிரெஞ் மொழிபெயர்ப்புக்கள், மாணவர்களுக்கு கட்டணம் குறைவு.

ஆரம்பம் சில தினங்களில். பதிவுகளுக்கு முந்துங்கள்

021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம்-புகையிரதக்கடவை- **AF** வெள்ளை மாடிக்கட்டடம்)

## வீடு வாடகைக்குத் தேவை

நிறுவனம் ஒன்றுக்கு யாழ்ப்பாணத்தில் வீடு ஒன்று உடனடியாகத் தேவை.

(66589)(11,15) 076 912 9308

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, நீர்வேலியில் அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அருகிலுள்ள பழைய தபாற்கந்தோர் ஒழுங்கையில் இருந்து 50m தூரம் அளவில் நவீன முறையில் வடிவமைக் கப்பட்ட வீட்டுடன் கூடிய 2½ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

(66477)(11,15,17) 077 661 8790

## வேலைவாய்ப்பு

**Medical Promotion Representative** (கிளிநொச்சி,முல்லைத்தீவு)

தகைமைகள்:
- வயதெல்லை - 20 - 35
- மருத்துவத்துறையில் 2 வருட அனுபவம்
- மோட்டார் சைக்கிள் வாகனம், அனுமதிப் பத்திரம் உடையவர்.

CV அனுப்ப வேண்டிய முகவரி

இல. 550, **Hospital Road, Jaffna.**
**Email - ccj400@ceymed.lk**
(66571)(11,15) **T.P- 021 221 9777**

## விற்பனைக்கு

**150A, 100A, 60A,20A**

பாவித்த மெயின் சுவிற்சுகள் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.

(66587) (11,15) தொடர்பு:- 077 868 9705

## விற்பனைக்குண்டு

உருக்கு, மரத் தளபாடங்களைத் தயாரிக்கும் மெசின்களுடன் தொழிற்சாலை விற்பனைக்குண்டு.

(66592) (11,15) தொடர்பு:- 077 249 7095

## Majestic Cineplex Jaffna

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் பிளாட்டினம் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15

SPECTRE 007

ப்ரொன்ஸ் 10.30/ 2.30 / 6.30

விசாரணை ☏ 021- 2227712

facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள Bajaj - Pulsar - NPVT - XXXX-180 CC விற்பனைக்கு உண்டு.

(66742) (11.15) தொடர்பு:- 075 289 5346

## அறை வாடகைக்கு

கச்சேரியை அண்மித்த பகுதியில் அறை வாடகைக்கு உண்டு. பெண்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

தொடர்பு :
071 847 4196, 077 325 1637 (66728) (12.15)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

பெமனேரியன், ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகளும் Doberman ஆண் நாயும் விற்பனைக்குள்ளன.

தொடர்பு : 077 414 7463
பருத்தித்துறை (62216)(12.15)

## காணி விற்பனைக்கு

சங்கானை - பொன்னாலை பிரதான வீதியில் (மணிமஹால் தியேட்டர் முன்பாக) அமைந்துள்ள ஒரு பரப்பு 12.09 குளி நிலம் விற்பனைக்கு உண்டு.

(66718) (11,15) தொடர்பு: 081 238 5653
(இரவு 8.00 மணிக்குப் பின்)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

இல. 67, மத்தியூஸ் வீதியில் சகல வசதிகளையும் கொண்ட வீட்டுடன் 2 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
077 0724666 ,077 918 4484
004799515207 (66524) (12.15)



- பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (சுதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
151, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (நர்மினி)

## இலவச விநியோக வசதி

**நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு**
**01.12.2015 ஆம் நாள் தொடக்கம்**

எம்மிடம் ரூபா 5000/= இற்கு மேல் பொருள்கள் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு அப்பொருள்களை உங்கள் இருப்பிடங்களுக்கு கொண்டுசெல்வதற்கு விநியோகவசதி இலவசமாக செய்துதரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பொருள்களை தொலைபேசி மூலம் ஒடர் செய்தும் பெற்றுக் கொள்ளலாம்.**

**குறிப்பு:** விநியோகம் யாழ். மாநகரசபை எல்லைக்குள் அல்லது 7Km தூரத்துக்குள் உற்பட்ட பிரதேசத்துக்குள்.
விநியோக நாள்கள்:- திங்கள், புதன், சனி
விநியோக நேரம் :- மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை

**[illegible] ஸ்ரோர்ஸ் (பிறைவேற்) லிமிட்டட் (KS)** (66744)(10.15.17)

இல. 180 (380) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். **T.P: 221 9469**

### மிதிபலகையில் பயணித்தவர் தலைசுற்றி விழுந்து காயம்

யாழ்ப்பாணம், டிசெ.6

காரைநகரில் இருந்து மன்னார் சென்ற (வழித்தடம் 82) பஸ்ஸின் மிதிபலகையில் பயணம் செய்த இளைஞரொருவர் தலைச்சுற்று ஏற்பட்டு வீழ்ந்ததில் படுகாயங்களுக்கு உள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகச் சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் மறவன்புலோ பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். பூநகரிப் பகுதியைச் சேர்ந்த இளைஞனே மிதிபலகையில் இருந்து வீழ்ந்தவர் ஆவார்.

மிதிபலகையில் பயணிகளை ஏற்றி பஸ்ஸைச் செலுத்துவதற்கு பொலிஸார் தடை விதித்தாலும், சில பஸ் சாரதிகளின் அசண்டையீனமும் கவனக்குறைவுமே இவ் வாறான சம்பவம்இடம்பெறக் காரணம் எனப் பயணிகள்விசனம்தெரிவித்துள்ளனர்.

(த-ஐ-107)

### ஆனையிறவில் மணல் அகழ்வு: டிராக்டர் சுற்றிவளைப்பு

பளை, டிசெ.6

ஆனையிறவுக் காட்டுப் பகுதிக்குள் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவருடன் அவர்களது டிராக்டர்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

குறித்த காட்டுப் பகுதியில் மணல் அகழ்வு இடம்பெறுவதாக பொறுப்பதிகாரிக்கு கடந்த வியாழக்கிழமை தனிப்பட்ட தகவல் கிடைத் துள் ளது. அதையடுத்து சிவில் உடையில் சென்றபொலிஸார் இரு டிராக்டர்களைச்சுற்றிவளைத்தனர். இதன்போது பரந்தன் பகுதியைச் சேர்ந்த இருவரைப்பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(ஐ-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மறைமாவட்டத்தில் 47 ஆண்டுகளின் பின்னர் நடைபெற்ற ஆயரின் திருநிலைப்படுத்தல்

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

யாழ். மறைமாவட்ட புதிய ஆயரின் திருநிலைப்படுத்தல் சடங்கு கடந்த மாதம் 28ஆம் திகதி யாழ். மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றதையொட்டி இந்தக்கட்டுரை பிரசுரமாகிறது. அன்றைய தினம் யாழ். மறைமாவட்டத்தின் பேராலயமான புனித மரியன்னை பேராலயம் விழாக்கோலம் பூண்டு, ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வைக் கோலாகலமாக நிகழ்த்தி முடித்த மகிழ்ச்சியில் திளைத்து நிற்கிறது.

### 47 ஆண்டுகளின் பின்னர் நடைபெற்ற திருநிலைப்படுத்தற் சடங்கு

மேற்படி திருநிலைப் படுத்தல் சடங்கில் ஏறக்குறைய 5ஆயிரம் மக்கள் திரண்டு நிற்க, 500 குருக்கள் புடைசூழ, பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி, இலங்கைக் கத்தோலிக்க திருச் சபையின் கர்தினால் ஆகியோருடன் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் 13 ஆயர்கள் கூடி நிற்க, இளைப்பாறும் யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை திருநிலைப்படுத்தும் தலைமை ஆயராகவும் – இளைப் பாறிய திருகோணமலை ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையும், கண்டி மறைமாவட்ட ஆயர் வியன்னி பெர்னாண்டோ ஆண்டகையும் திருநிலைப்படுத்தும் துணைத் ஆயர்களாகவும் இணைந்து நின்று, மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை ஆயராகத் திருநிலைப் படுத்தினர். இதமான மெல்லிய மழைத் தூறலின் மத்தியில் காலை 8.30 மணியளவில் யாழ். மறைமாவட் டப் பங்குகளின் பிரதிநிதிகள் பங்குக் கொடிகளுடன் பேராலயம் நோக்கிய பவனியை ஆரம்பிக்க, குருக்கள் திருவுடை தரித்துப் பக்தியாகப் பேராலயம் நோக்கி நகர்ந்தனர். இறுதியாக ஆயர்கள், பாப்பரசரின் பிரதிநிதி, கர்தினால் ஆகியோர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை பவனியாக அழைத்து வந்தனர். தலைமைத் திருநிலைப்படுத்தும் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை திருப்பலியை ஆரம்பித்தார். மறையுரையின் பின்னர் புதிய ஆயரைத் திருப்பொழிவு செய்யும் நிகழ்வு ஆரம்பமானது.

### தெரிந்து கொள்ளப்பட்ட ஆயரை அறிமுகம் செய்தல் சடங்கு என்ற வகையில்

நீ. மரிய சேவியர் அடிகளார் புதிய ஆயரைத் திருநிலைப்படுத்துமாறு திருநிலைப்படுத்தும் தலைமை ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்குப் பரிந்துரைத்தார். அதற்கு அவர் இதற்கான அப்போஸ்தலிக்க ஆணை வத்திக்கானில் உள்ள திருத் தந்தை பிரான்சிஸ் பாப்பரசரிடம் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளதா? அப்படியாயின் அதனைப் பகிரங்கமாகப் படியுங்கள் என வேண்டினார். பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி அப்போஸ்தலிக்க ஆணையை வாசித்தார். உலகளாவிய தந்தையாகிய நாம், தேவையான தகுதியும் உள்ளூர் திரு அவை அலுவல்களில் அனுபவமும் கொண்ட அன்பு மகனாகிய மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை யாழ். மறைமாவட்டத்தை ஆளுவதற்குத் தகுதியானவர் என எண்ணுகிறோம். எனவே எமது அதிஉயர் அப்போஸ்தலிக்க அதிகாரத்தின் நிமித்தம் அவரை யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் ஆயராக எல்லா உரிமைகளோடும் கடமைகளோடும் நியமிக்கின்றோம் என அவர் வாசித்தார். பின்னர் அப்போஸ்தலிக்க ஆணை மடலை இறை மக்களுக்கு உயர்த்திக் காட்டிய போது முதல் தடவையாக வானதிரக் கரகோசித்து இறைமக்கள் எல்லாரும் இறைவா உமக்கு நன்றி என ஆர்ப்பரித்தனர்.

### புதிய ஆயரின் உரிமை மற்றும் கடமை பற்றிய மறையுரை:

மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தமது மறையுரையில், ஆயர் நிலை என்பது மகிமையன்று. அது பணியைக் குறிக்கிறது. ஆள்வதைவிடப் பணி புரிவதே ஆயரின் மேலான கடமையாகும். வாய்ப்பிருந்தாலும் இல்லாவிட்டாலும் தேவவார்த்தையை அறிவியும். குற்றம் கடிந்து மிகுந்த பொறுமையோடு போதித்துக் கொண்டிரும் எனத் தெரிவித்தார்.

பின்னர் புதிய ஆயரிடம், ஆயருக்குரிய மேய்ப்புப்பணி குறித்தும், நற்செய்தி மீதான ஆர்வம் குறித்தும், திருச்சபையின் மரபைப் பாதுகாப்பது குறித்தும், திருத் தந்தைக்குக் கீழ்ப்படிவது குறித்தும், எல்லாவற்றுக்கும் மேலாய் ஏழைகள் மீதான ஆயனுக்குரிய அன்பு குறித்தும் அவரின் மனவுறுதியைச் சோதித்து ஆய்வு நடத்தினார். அதற்குப் புதிய ஆயர் விரும்புகிறேன் இறைவன் துணையை நம்பி விரும்புகிறேன் எனத் தெரிவித்து தரையில் முகம் குப்பற வீழ்ந்து இறைவனிடம் சரணடைய, இறைமக்கள் எல்லோரும் ஒரே குரலாய் சகல புனிதர்களின் மன்றாட்டு மாலையைப் பாடினர். பின்னர் புதிய ஆயரின் தலைமீது ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கைவைத்து செபிக்க, தொடர்ந்து ஏனைய ஆயர்களும் செபித்தனர். இது அருட்பொழிவின் அடையாளமாகும். இதன் பின்னர் புதிய ஆயரின் தலைமீது நற்செய்தி நூலை வைத்து அர்ச்சிப்பு செபத்தை திருநிலைப்படுத்தும் தலைமை ஆயர் செபிக்க, மற்றைய ஆயர்களும் இணைந்து செபித்தனர். பின்னர் புதிய ஆயரின் தலைமீது திருநிலைப்படுத்தும் தலைமை ஆயர் கிறிஸ்மா தைலத்தைப் பூசினார். பின்னர் நற்செய்தி நூல் புதிய ஆயருக்கு வழங்கப் பட்டது.

### ஆயர் பணிக்கான சின்னங்கள் வழங்கல்

ஆயர் பணிக்கான சின்னங்களான மோதிரம், நம்பிக்கையின் முத்திரையாகவும், தலைச்சீரா, புனிதத்தின் பேரொளியின் அடையாளமாகவும் – மேய்ப்புப் பணிக் கோல், திருச்சபையை ஆண்டு வழிநடத்தும் ஆயர் பணியின் அடையாளமாகவும் வழங்கப்பட்டன. பின்னர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை புதிய ஆயரைச் சம்பிரதாய பூர்வமாக அழைத்துச்சென்று பேராலய ஆசனத்தில் அமர்த்தி சமாதான முத்தம் வழங்கினார். இப்போது இரண்டாவது தடவையாக வான திரக் கரகோசித்து இறைமக்கள் மகிழ்ந்தனர். மற்றைய ஆயர்களும், புதிய ஆயரின் உறவினர்களும் ஆயரின் சிம்மாசனம் அருகே வந்து சமாதான முத்தம் வழங்கினர். திருப்பலி முடிவில் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் கர்தினால் மேதகு மல்கம் றஞ்சித் ஆண்டகை புதிய ஆயரை வரவேற்று உரையாற்றினார். தொடர்ந்து புதிய ஆயர் தமது நன்றியுரையில் யாழ். மறைமாவட்டத்தில் இருந்தும் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும், வெளி நாடுகளில் இருந்தும் வந்து வாழ்த்துச் சொன்ன அனைவருக்கும் நன்றி செலுத்தினார். திருப்பலி முடிய புதிய ஆயர் பீடத்தை விட்டு இறங்கி இறைமக்களிடையே பவனி வந்து தமது முதல் ஆசீரை இறைமக்களுக்கு வழங்கினார். தொடர்ந்து புதிய ஆயரின் திருப் பொழிவு நிகழ்வுக்கு வருகை தந்த பிரமுகர்கள், அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், குருக்கள், துறவியர் – இறை மக்கள் ஆகியோர் புதிய ஆயரை வாழ்த்தி அவரின் மோதிரத்தைக் முத்தமிட்டு ஆசீர்பெற்றனர். இவரின் ஆயர் திருப்பொழிவு நிகழ்வுக்கென பிரத்தியேகமாக வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த ஆயரின் குடும்ப அங்கத்தவர்களும் நண்பர்களும் மறுதினமே திரும்ப இருந்தமையால் ஆயர் திருப்பொழிவு நிகழ்ந்த அன்றைய தினமே இராப்போசன விருந்தொன்றை புதிய ஆயருக்கு வழங்கி மகிழ்ந்து தமது அன்பையும் நன்றியையும் தெரிவித்தனர். மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிர காசம் ஆண்டகையின் முதற் திருப்பலியாக, தமது தற்போதைய பங்கான யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயப் பங்கில் புதிய ஆயர் முதல் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார். மரியன்னை வழி இயேசுவிடம் என்ற விருது வாக்கை எடுத்துள்ள இவர், தம் முதல் திருப்பலியை இங்கு நிறைவேற்றியதும் பொருத்தமானதே. ஆயர் தமது பணி விளக்கச் சின்னத்தில் அன்னையைப் பொறித்திருப்பதையும், மாதந்தோறும் அன்னையின் பக்தராக மடுப்பதி சென்று வருவதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஆயர் தமது கழுத்தில் அணிந்திருக்கும் திருச் சிலுவையில் ஆண்டவர் மட்டும் சிலுவையில் அறையப் பட்டிருக்கவில்லை. அன்னை மரியாளும் அருகிலிருக்குமாறு அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த ஆயர், அன்னை மரியாள் ஆண்டவருக்கு அருகில் இருந்து அவரின் திருக் காயங்களின் அருளைப் பெற்று மனுக் குலத்துக்குப் பரிந்து பேசுகிறாள் எனத் தெரிவித்து, அந்த மரியன்னை வழியே தாமும் யாழ். மறை மாவட்டத்தை வழி நடத்தப் போவதை கோடிட்டுக் காட்டினார். இன்னுமொரு முக்கிய விடயத்தை அங்கு இறைமக்கள் மத்தியில் தெரிவித்து தமது குருக்கள் மீது தாம் கொண்டுள்ள நம்பிக்கையை வெளியிட்டார். இலங்கையில் உள்ள 12 மறைமாவட்டங்களில் யாழ். மறைமாவட்டமே அதிக ஆளுமையும் ஆற்றலும் உள்ள குருக்களைக் கொண்டுள்ளது எனத் தெரிவித்து யாழ். மறைமாவட்டம் புதுப் பொலிவு பெறப்போகிறது எனச் சொல்லாமற் சொன்னார்.

> மரியன்னை வழி இயேசுவிடம் என்ற விருது வாக்கை எடுத்துள்ள இவர், தம் முதல் திருப்பலியை இங்கு நிறைவேற்றியதும் பொருத்தமானதே. ஆயர் தமது பணி விளக்கச் சின்னத்தில் அன்னையைப் பொறித்திருப்பதையும், மாதந்தோறும் அன்னையின் பக்தராக மடுப் பதி சென்று வருவதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.



### பத்திரிசியார் - ஹென்றியரசர் கல்லூரிகளில் வரவேற்பு:

புதிய ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தமது குருத்துவப்பணியில் கல்விப் பணியாற்றிய ஹென்றியரசர் கல்லூரியும், பத்திரிசியார் கல்லூரியும் அவர் திருப்பொழிவு பெற்ற மறு தினமே அவரை அழைத்து வாழ்த்துத் தெரிவித்து மகிழ்ந்தன. தூர நோக்கும், துணிந்த முடிவும், நிறைந்த ஆற்றலும், அபார நிர்வாகத் திறனும், கல்விப் பணியில் முழு அனுபவமும் கொண்ட மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை மூன்று தசாப்தப் போரினால் துவண்டு போயிருக்கும் கிளிநொச்சி – முல்லைத்தீவு பிரதேசங்களுக்குத் துணை புரியும் விதமாக புனித பத்திரிசியார் கல்லூரியின் கிளைக் கல்லூரியை கிளிநொச்சியில் ஆறாம் வகுப்பில் இருந்து உடன் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு கல்லூரி அதிபர் ஜெறோ செல்வநாயகம் அடிகளாருக்கு வேண்டுகோள் விடுத்தார்.

### ஆயரின் பணி ஏற்பு நிகழ்வு

கடந்த மாதம் 30 ஆம் திகதி யாழ். மறைமாவட்டத்தின் புதிய ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை சம்பிரதாய பூர்வமாக யாழ். மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்றார். இந்த நிகழ்வு 160 குருக்கள் புடைசூழ குரு முதல்வர் அருட்திரு. கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் நடை பெற்றது. ஆயர் தமது சிம்மாசனத்தில் அமர்ந்திருக்க குருக்கள் அனைவரும் தனித் தனியாகச் சென்று முழந்தாட்படி இட்டு திருக் கர மோதிரத்தை முத்தமிட்டு தமது பணிவையும் ஒத்துழைப்பையும் முழுமையாக வழங்குவதாக உறுதி செய்தனர்.

(கட்டுரையாளர் ஊடக விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்களும் பெண்களும்

சுகிபாலா

தகவல்களைச் சேமித்து வழங்கப் பயன்படுத்தப்படும் கருவிகளாக ஊடகங்கள் விளங்குகின்றன. மக்களுக்குத் தகவல்களை வழங்குவதுடன், மக்களுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ தாக்கத்தைச் செலுத்துவதாக இந்த ஊடகங்கள் அமைகின்றன. ஊடகவியல் என்பதில் பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளங்கள் என்பவை அடங்கும்.

காலையில் எழுந்தவுடன் புதினப் பத்திரிகையைத்தான் பார்க்கிறோம். சிலருக்குக் காலையில் தேநீர் குடிப்பது போல பத்திரிகையும் பார்த்தாக வேண்டும். விடிந்ததும் வானொலியிலும், தொலைக்காட்சியிலும், செய்திகளைக் கேட்டாலும், பின்னர் செய்தித்தாள் களையும் தேடி எடுத்து வாசிக்கின்றோம்.



ஒவ்வொரு ஊடகங்களுக்குமிடையிலும் போட்டித் தன்மை காணப்படுவதால், அவை நேரம் எடுத்து ஒழுங்குபடுத்தி வசீகரிக்கக்கூடிய வகையில் செய்திகளையும், வேறு இதர விடயங்களையும் தருகின்றன.

சமூகப் பிரச்சினைகள், வேறுபல நல்ல விடயங்கள், சுவாரசியமான தகவல்கள், நகைச்சுவை அம்சங்கள் எனத் தன்னகத்தே கொண்டமைந்தது தான் ஊடகம். வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, இணையத்தளங்கள் என ஊடக வடிவமைப்புக்கள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே செல்கின்றன. இந்த ஊடகங்களில் சில அரச அனுசரணையுடனும், சில தனியார் மயமாகவும் செயற்படுகின்றன.

இதில் நாம் ஊடகங்களும் பெண்களும் எனும் வகையில் நோக்கினால் ஊடகத்துறையில் சாதித்தவர்களும் உள்ளனர். பொதுவாகவே ஊடகவியலாளர்கள் என்றாலே பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியவர்களாகின்றனர். அதிலும் பெண்களின் சிக்கல்கள் இன்றும் அதிகம்......

> செய்தி சேகரிப்பாளர்களாக பெண்கள்வேலை பார்க்குமிடத்து பல பிரச்சினைகளை எதிர் நோக்குகிறார்கள். இதில் உள்ளக, வெளியக செய்தி சேகரிப்பாளர்களும் உண்டு. வெளியிடங்களுக்கு சென்றுவருவது என்பதில் உண்மையில் பெண்கள் பல உடல்,உளம் சார்ந்த பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்.

என்னதான் ஊடக சுதந்திரம் பற்றிப் பேசப்பட்டாலும், உண்மைகளை பக்கச்சார்பின்றி சமூகத்துக்கு வெளிக்கொணரும் எந்தவொரு ஊடகவியலாளர்களும் சமூக விரோதிகளால் உயிர் அச்சுறுத்தப்பட்டு, சுதந்திர நடமாட்டத்தை மேற்கொள்ள முடியாதுள்ளது. கொலை அச்சுறுத்தல்கள், பழிவாங்கல், மிரட்டல்கள் மறைமுக எதிர்த்தாக்கங்களாக விளைவிக்கப்படுகின்றன. இவை பொதுவாக நேர்மையான ஊடகவி யலாளர்களுக்குக் கிடைத்த சாபக் கேடு என்றே கூறலாம்.

ஆனால் அவற்றை நினைத்து பெருமைப் பட்டுக் கொள்ளும் அதேநேரம் அங்கு பெண்களின் நிலை, பிரச்சினைகள் பற்றி சிந்திப்போமானால்.....

தொலைக்காட்சியை எடுத்துக் கொண்டோமேயானால் சினிமாப்படங்களை விட சின்னத்திரைச் சினிமாக்களே இன்றைய நிலையில் மக்களை ஆட்டிப்படைக்கின்றன. சினிமாக்களில் பெண்களின் நடிப்புத் திறமையைப் பாராட்டினாலும் ஆழ்ந்து நோக்கினால் பெண்களின் சாதாரண இயல்பு மறைக்கப்பட்டு அதிகப்படியான அல்லது குறைந்த குண இயல்புகளோடு மெருகேற்றப்படுகின்றன.

அதேநேரம் மக்களிடம் கைதட்டலை வேண்டுவதற்காகவும், வசூலை அதிகரிப்பதற்காகவும் பெண்களைக் கீழ்த்தரமான வார்த்தைகளால் பேசுவது, நையாண்டி செய்வது, அடிப்பது போன்றவாறும் சித்திரிக்கப்படுகின்றன.

இதனைவிட சினிமாக்களில் பெண்களுக்கு நடிப்புக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டும். பொதுவாக மனிதனுக்கு ஆள் பாதி ஆடை பாதி என்பார்கள். ஆனால் இன்றைய சினிமாவில் பெண்களின் நிலை, பாதி ஆடை கூட இருப்பதாகத் தெரியவில்லை. பொதுவான கைதட்டல்களுக்கு அவை ஏற்றதாகக் காணப்படுவது போன்றிருந்தாலும் தனிப்பட்ட பெண் சார்ந்து நோக்கினால் அவை பெண்களை வெறும் காட்சி, கவர்ச்சிப் பொருளாக மட்டுமே சித்திரிப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

வானொலிகள், இணையப்பக்கங்கள் எனப் பார்த்தோமானால் அதிலும் பெண்களின் பங்கு காணப்படுகின்றது. இவற்றில் பெண்களின் திறமைகள் வெளிக்கொணரப் பட்டு ஆளுமை விருத்தி செய்யப்படுவதோடு மட்டுமல்லாமல் சிறந்த தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்கின்றனர். பத்திரிகையை எடுத்து நோக்கினால் இங்கும் பெண்களின் நிலை மேலோங்கிக் காணப்படுகிறது. ஊடகவியலாளர்கள் எனும் வகையில் பலருக்கும் பலவிதமான வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கும். அதில் ஆண், பெண் வேறுபாடின்றி அனைவருக்கும் அவரவர் தகுதி, விருப்பு வெறுப்புக்களுக்கு ஏற்றால் போல பணிகள் வழங்கப்பட்டிருக்கும். இதில் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் பிரதேச செய்தி சேகரிப்பாளர்கள், படப்பிடிப்பாளர்கள், துணை ஆசிரியர்கள் என வேலைகள் உண்டு.

உதாரணமாக செய்தி சேகரிப்பாளர்களாக பெண்கள்வேலை பார்க்குமிடத்து பல பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். இதில் உள்ளக, வெளியக செய்தி சேகரிப்பாளர்களும் உண்டு. வெளியிடங்களுக்குச் சென்று வருவது என்பதில் உண்மையில் பெண்கள்பல உடல்,உளம் சார்ந்த பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர். போக்குவரத்துப் பிரயாணங்களின் போது எதிர்நோக்கும் அசௌகரியங்கள், அதுமட்டுமல்லாது எவரையேனும் சந்தித்து உரையாடும் நிகழ்வுகளில் ஏற்படுகின்ற காலதாமதங்கள் என வேலை நேர இழுபறிகள் சொந்த வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.



இத்தனை சவால்களுக்கு மத்தியிலும் பெண்கள் இன்னமும் சளைக்காமல் ஊடகத்துறையில் பணியாற்றுகின்றனர். ஊடகத்துறை என்பது இந்தச் சமூகத் துக்கு இன்றியமையாத ஒன்று. இதில் பெருமைப்பட்டுக் கொள்ளும் விடயங்களும், சலிப்பூட்டும் விடயங் களும் என, நல்லது கெட்டது எனக் கலந்தே உள்ளன. ஊடக விய லாளர்களை வெறுமனே இயந்திரமாகப் பார்க்காமல், அவர்களையும் மனிதர்களாக நினைத்து மதித்து அவர்கள் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பது நல்லதோர் ஆரோக்கியமான சமூகத்துக்கு உகந்ததாகும்.

என்ன தான் [illegible] எதற்கும் அஞ்சா[illegible] ஊடகவியலாளர்கள் என்றும் போற்றத்தக்கவர்கள்.

# பிரிட்டனின் பங்களிப்பை எதிர்பார்க்கும் தமிழர்கள்

இலங்கையில் இனங்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், இராணுவ மறுசீரமைப்பு மற்றும் இடம்பெயர்ந்தோர் நலன்களுக்காகவும் 6.6மில்லியன் ஸ்ரேர்லிங் பவுண்ஸை வழங்க பிரிட்டன் முன் வந்துள்ளது. பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக மோல்டா சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வெள்ளியன்று பிரிட் டிஷ் பிரதமர் டேவிட் கமரூனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அப் பொழுதே பிரிட்டிஷ் பிரதமர் கமரூன் இலங்கைக்கான உதவிகளை அதிகரிப்பதற்கு இணக்கம் தெரிவித்தார்.

லண்டனில் உள்ள பிரிட்டிஷ் பிரதமர் அலுவலகம் இது தொடர்பாக விடுத்த அறிக்கையைக் கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் வெளியிட்டுள்ளது. அதன்படி அடுத்த மூன்று வருட காலப்பகுதிக்கு இலங்கையில் நல்லிணக்கம், இராணுவ மறுசீரமைப்பு மற்றும் இடம்பெயர்ந்தோர் நலன்களுக்காக 6.6 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸை பிரிட் டன் வழங்கும். இதனைவிட இலங்கையில் வதிவிடத்தைக் கொண்டிராத (புதுடில்லியிலிருந்து செயற்படுவார்) பிரிட்டனின் பாதுகாப்பு ஆலோசகர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த ஆலோசகர் இலங்கையின் இராணுவ மறுசீரமைப்புக்கு ஏற்புடைய வகையில் பிரிட் டனின் இராணுவப் பயிற்சிநெறிகளைப் பெற்றுத் தருவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பார். ஆகவே இராணுவத்தை மறு சீரமைப்பதற்கான உதவிகள், இராணுவத்தின் தரத்தை உயர்த்துவதுடன் நின்றுவிடக்கூடாது. இராணுவத்தை ஒழுக்கம், கட்டுப்பாடுள்ள சர்வதேச தரத்திலான இராணுவமாக மாற்ற உதவவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். கொல்லப் பட்ட 40 ஆயிரம் அப்பாவி மக்களில் பெரும்பாலானோர் இராணுவத் தாக்குதல்கள் காரணமாக உயிரிழந்தனர் என்று தருஸ்மன் தலைமையிலான ஐ.நா. நிபுணர்கள் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.




இராணுவத்தில் ஒழுக்கம், கட்டுப்பாடு அவசியமானது. இலங்கையில் நல்லிணக் கத்தை ஏற்படுத்துவதிலும், இடம் பெயர்ந்தோரை மீள் குடியேற்றுவதிலும் அரசு இன்னமும் பல பிரச்சினை களை எதிர் நோக்கி வருவதால் பிரிட் டனின் உதவிகள் இத்துறை களில் அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க உதவவேண்டும்.

மைத்திரி - ரணில் அரசு பதவியேற்ற பின்னர் பிரிட்டனுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் பலமடைந்துள்ளன. இலங்கைக்கும் பிரிட்டன் உட்பட்ட மேற்கு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் சீரழிந்து போயிருந்தன. பிரிட்டன் இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்காகப் பகிரங்கமாகவே குரல்கொடுத்தது. போர்க் குற்றம் குறித்த கலப்பு நீதிமன்ற விசாரணைக்கு ஆதரவு வழங்கியது. யுத்தத்தின் இறுதிப்பகுதியில் இலங்கை அரசுக்கு அவசரமாக ஆயுத உதவி தேவைப்பட்ட சமயம் பிரிட்டன் ஆயுதங்களை வழங்க மறுத்தது. சீனா, பாகிஸ்தான், ரஷ்யா, இஸ்ரேல், அமெரிக்கா, இந்தியா, செக்கோஸ்லாவாக்கியா, உக்ரைன் ஆகிய நாடுகளிடமிருந்து ஆயுதங்களைப் பெற்றே இலங்கை அரசால் புலிகளைத் தோற்கடிக்க முடிந்தது. அத்துடன் போரின்போது கொழும்பில் இருந்த தனது பாது காப்பு ஆலோசகரையும் பிரிட்டன் விலக்கிக்கொண்டது.

தற்பொழுது இலங்கை பாதுகாப்பு ஆலோசகரை மீண்டும் நியமிக்கவும், இலங்கைக்கு இராணுவ சீரமைப்புக்கும் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கும் மீள்குடியேற்றத்துக்கும் உதவ பிரிட்டன் முன்வந்திருக்கிறது. இது முன்னைய ஆட்சியாளர்களுக்கு நிச்சயமாக கடுப்பை ஏற்படுத்தும் என்று நம்பலாம். முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஊடகம் ஒன்றில் தனது வயிற்றெரிச்சலைக் கொட் டித் தீர்த்துள்ளார்.

இராணுவ சீரமைப்பென்றால் இராணுவத்தைக் குறைக்கப் போகிறார்களா அல்லது போரில் வெற்றியீட்டிய இராணுவத்தில் மாற்றங்களை ஏற்படுத்தப் போகிறார்களா என்று கேள்வி எழுப்பியுள்ளார். போரின்போது கடுமையான ஆயுதத் தேவை ஏற்பட்ட சமயம் பொதுநலவாய உறுப்பு நாடு என்ற ரீதியில் பிரிட்டன் இலங்கைக்கு உதவி செய்திருக்க வேண்டும். ஆனால், பிரிட்டன் மறுப்புத் தெரிவித்துவிட்டது என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைகள் மனிதப் பேரழிவை ஏற்படுத்தும் என்று பிரிட்டன் கருதியது. அதனால்தான் இலங்கைக்கு ஆயுத உதவியை மறுத்திருக்கலாம். 2009 ஏப்ரலில் போரை நிறுத்துமாறு பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் மஹிந்த அரசிடம் கோரிக்கை விடுத்ததை நாம் மறந்துவிடமுடியாது.

ஆகவே, இலங்கை விவகாரங்களில் பிரிட்டன் தொடர்ந்து உதவவேண்டும். இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும், பிரிட்டனின் பங்களிப்பைத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசதியற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல்



வவுனியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட வசதியற்ற பாடசாலை மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கான கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு-கடந்த 2ஆம் திகதி காலை வவுனியா பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

'பிளான் சிறிலங்கா' நிறுவனத்தின் வவுனியா மாவட்ட உதவிப்பணிப்பாளர் வி. என். கே. திசாநாயக்க, பிளான் சிறிலங்கா நிறுவனத்தின் சிறுவர் ஆலோசகர் மற்றும் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர் கா. உதயராஜா, சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஜெய கெனடி மற்றும் உத்தியோகத்தர்களினால் ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள 65 வசதியற்ற பாடசாலை மாணவர்களுக்கான கற்றல், கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (தி)



## ஆயிரம் சிறுவர்களுக்கு பெரன்டினாவின் உதவி

தனது வருடாந்த சிறுவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் செயற்றிட்டத்தைப் பெரன்டினா புத்தளத்திலிருந்து ஆரம்பித்திருந்தது. 102 மாணவர்கள் இந்தப் புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொண்டனர். நாட்டின் 9 மாவட்டங்களைச் சேர்ந்த 703 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கும் செயற்பாட்டில் இவர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தனர். மேலும், 300 க்கும் மேற்பட்ட 5ஆம் தரத்தில் பயிலும் மாணவர்களுக்கும் கல்விசார் புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இந்தச் செயற்றிட்டம், சிறுவர்களின் எதிர்காலத்தொழில் அல்லது உயர் கல்விக்கான உரிமைக்கு வழிகாட்டும் வகையில் அமைந்துள்ளது.

பெரன்டினா எம்புளொய்மன்ட் சென்டர் லிமிட்டெட்டின் மாவட்ட முகாமையாளர் சுபுன் தாரக இந்த நிகழ்வில் வரவேற்புரையை நிகழ்த்தி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இதனைத் தொடர்ந்து, பெரன்டினா எம்புளொய்மன்ட் சென்டர் லிமிட்டெட்டின் பொது முகாமையாளர் ஹேமந்த ஹரிஸ் சந்திர, பெரன்டினாவினால் வழங்கப்படும் சேவைகள் பற்றிய விளக்கமொன்றை வழங்கியிருந்தார். மேலும் பார்வையாளர்களுக்கு வீடியோ காட்சியும் ஒளிபரப்பு செய்யப்பட்டிருந்தது. இதன்போது, இந்த நிகழ்ச்சித்திட்டம் பற்றிய முழுவிளக்கமும் தற்போதைய நிலவரம் பற்றிய விவரங்களும் வழங்கப்பட்டிருந்தன.

புத்தளம் மாவட்டத்தின் சமாதான கல்விப் பணிப்பாளர் ஈ.ஏ.வசந்த பண்டார, 'தேசத்தின் கல்விக்கு சமூகம் எவ்வாறு பங்களிப்பு வழங்கலாம்' எனும் தலைப்பில் உரையாற்றியிருந்தார். இந்த நிகழ்வுக்கான அலங்கார ஏற்பாடுகள் மற்றும் நாட்டிய நர்த்தன நிகழ்வுகளை சாலியவெவ மாதிரி பாட சாலையின் மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். (தி)

# வணிகம்

## டைலர்ஸ் கழகத்தின் முதலாம் ஆண்டு பூர்த்தி



இலங்கையில் சுவர் மற்றும் தரை டைல்கள் உற்பத்தி செய்வதில் முன்னோடிகளாகத் திகழும் லங்கா வோல் டைல்ஸ் பிஎல்சி மற்றும் லங்கா டைல்ஸ் பிஎல்சி ஆகியவை தமது டைலர்ஸ் கழகத்தின் ஒரு வருட பூர்த்தியை அண்மையில் கொண்டாடியிருந்தன. கொழும்பு தாமரைத் தடாகத்தில் இந்த மாபெரும் நிகழ்வு இடம் பெற்றது. இந்த நிகழ்வில் 1,500 க்கும் மேற்பட்ட டைல் பணியாளர்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2014 செப்ரெம்பர் மாதத்தில் லங்கா டைல்ஸ் டைலர்ஸ் கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. நாடு முழுவதையும் சேர்ந்த 800 பேர் வரை இதில் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டனர். டைல் பணியாளர்களுக்காக ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது கழகமாக இது அமைந்துள்ளது. இந்த ஸ்தாபக நிகழ்வில், டைல் பணியாளர்களுக்கு என்.எவ்.சி. செயற்படுத்தப்பட்ட அட்டை ஒன்றும் வழங்கப்பட்டிருந்ததுடன், கழகத்துடன் அவர் கள் தொடர்ந்து இணைந்திருக்கும் பட்சத்தில், பெறுமதிவாய்ந்த பணப் பரிசில்களும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

> 2014 செப்ரெம்பர் மாதத்தில் லங்கா டைல்ஸ் டைலர்ஸ் கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. நாடு முழுவதையும் சேர்ந்த 800 பேர் வரை இதில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டனர்.

ஒரு வருடபூர்த்திநிகழ்வில், 20 டைல் பணியாளர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா பணத்தொகை போனஸ் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்ததுடன், 47 டைல் பணியாளர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா போனஸ் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்தது. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்

## நின்டெண்டோ அறிமுகம் செய்யும் அட்டகாசமான கேம்



வீடியோ கேம் வடிவமைப்பு நிறுவனமான நிண்டெண்டோ அடுத்த மாதம் புத்தம் புதிய வீடியோ கேம் ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளதாக உத்தியோகபூர்வ அறிவித்தலை விடுத்துள்ளது.

விரைவு ரேசிங் என்.ஜி.ஓடு எனும் இந்தக் கேமானது முன்னைய சேசிங் கேம்களை விடவும் வேகமாகச் செயற்படக்கூடிய வகையில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் கேம் தொடர்பான முன்னோட்டம் ஒன்று வெளியிடப்பட்ட போதிலும், மேலதிக தகவல்கள் எவையும் வெளியிடப்படவில்லை. எனினும், கேம் பிரியர்களை வெகுவாகக் கவரக்கூடிய வகையில் காணப்படும் இந்தக் கேம் தொடர்பான மேலதிக தகவல்கள் எதிர்வரும் வாரங்களில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஐபோன்- 7எஸ், தொடுபேசி புதிய தகவல் வெளியீடு

அப்பிள் நிறுவனத்தின் மொபைல் சாதனங்களுக்கு உலகளாவிய ரீதியில் பலத்த வரவேற்பு இருப்பது அனைவரும் அறிந்ததே.

இந்த நிலையில் அந்த நிறுவனம் புதிதாக அறிமுகம் செய்யவிருக்கும் சாதனங்கள் தொடர்பிலான தகவல்கள் பரபரப்பாக வெளியாவது வழமை.




அவ்வாறே தற்போது ஐபோன்-7எஸ் தொடுபேசி தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது. 2017 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்படவுள்ள இந்த அலைபேசியின் திரையானது ஓ.எல்.டி. தொழில்நுட்பத்தைக் கொண்ட திரையாக இருக்கும் என்பதே அதுவாகும். வெளியாகவுள்ள ஐபோன்-7 எஸ் தொடுபேசி தொடர்பான தக வல்கள் கசிந்திருந்தமையைத் தொடர்ந்தே இந்தத் தகவலும் வெளியாகியுள்ளது.

## அதிரடி வசதிகளுடன் எல் ஜி. ரே ஸ்மார்ட்போன்

எல் ஜி. நிறுவனம் ஒற்றை சிம் மற்றும் இரட்டை சிம் வகைகளைக் கொண்ட எல்ஜி ரே தொடுபேசியை (LG Ray Smartphone) அறிமுகப்படுத்தியுள்ளது.

எல்ஜி ரே தொடுபேசி டி இல் 267ppi பிக்சல் அடர்த்தி மற்றும் 720X1280 பிக்சல்கள் கொண்ட 5.5 இன்ச் எச்.டி. டிஸ்பிளேயைக் கொண்டுள்ளது.

இதில்மைக்ரோறீம்அட்டைவழியாக (குறிப்பிடப்படாத வரையறை) விரிவாக்கக்கூடிய 16ஜிபி உள்ளடங்கிய சேமிப்பும் உடன் வருகிறது.

13 மெகாபிக்சல் பின்புற கமரா மற்றும் 8 மெகா பிக்சல் முன்புறம் எதிர்கொள்ளும் கமரா என்பவற்றைக் கொண்டுள்ளது.

இந்த தொடுபேசி 3,000mAh பட்டரி திறன் மூலம் இயக்கப்படுகிறது. மேலும், ஏனைய வசதிகளாக, வைபை, ஜிபிஎஸ், ரேடியோ, ப்ளூடூத் 4.0, 3ஜி, ஜிஎஸ்எம் மற்றும் மைக்ரோ-யூஎஸ்பி 2.0 ஆகியவை உள்ளடங்கி உள்ளன.




அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின்55ஆவதுஆண்டு பட்டமளிப்பு விழாவும், சைவ நாதம் நூல் வெளியீடும்அண்மையில் கீரிமலையில் நடைபெற்றது. (ஐ)




கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய 'சுப்பிரமணியம் மாலதி' முன்பள்ளியின் நவராத்திரி விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ)



சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசாலைக்கு வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்தார். (ஐ)




சண்டிலிப்பாய் வடக்கு அகில இலங்கை சேக்கிழார் மன்ற அறநெறிப் பாடசாலையின் நவராத்திரி விழா இரடையபுலம் ஞான வைரவர் ஆலயத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டார். (ஐ)



திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியின் விஜயதசமி நிகழ்வில் சித்திர ஆக்கத்திறன் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் நிறுவனத்தினர் சான்றிதழ் வழங்கி வைத்தனர். (ஐ)





கோண்டாவில் மேற்கு சீ.சீ.த.க. பாடசாலை மாணவர்களின் சிங்களப்பாடல் கலை நிகழ்வுகள். (ஐ)





புத்தூர் மடிஹேற பஞ்சசீஹ வித்தியாலயமும், கோண்டாவில் மேற்கு சீ.சீ.த.க. பாடசாலையும் இணைந்து பண்மைச் சமூக நிகழ்வுடன் கூடிய கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டனர். இதில் அநுராதபுரம் ரத்னாயக்கா யாயதகய பாடசாலையின் நிகழ்வுகளின் காட்சிகள். (ஐ)



மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள். (ஐ)



கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் கொட்டடி சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய முதியோர் தின நிகழ்வில் சட்டத்தரணி மதுரநாயகம் முதியோர் ஒருவரைக் கெளரவித்தார். (ஐ-135)




ஆனைக்கோட்டை அ.மி.த.க. காடசாலையின் நடைபெற்ற விசேட கல்வி [illegible] மன்ற உறுப்பினர் [illegible] விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில் வழங்கி வைத்தார். (ஐ)



கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தில் இடம்பெற்ற பாடசாலை மட்டக் கண்காட்சி. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சிக் கல்வி வலயத்தின் 'சேவா மங்கலம்' செயற்றிட்டத்தின் கீழ ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெறும் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியையான திருமதி சிவயோகம் சிவபாலசேகரத்துக்கு வலயத்தினால் ஓய்வூதியம் பெறுவதற்கான பத்திரங்களும், பாராட்டுப் பத்திரமும், வலயத்தின் விருதும் வழங்கும் நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. (ஜ-9)



ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் வி.சுப்பிரமணியத்தின் நினைவு நாள் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. (ஜ)



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இதில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் கலந்து கொண்டு மாணவர்களைக் கௌரவித்தார். (ஜ-433)



"நாங்கள் அமைப்பின்" வழி காட்டலின் கீழ் தையல் இயந்திரங்கள் பயனாளிகளுக்கு வட்டு.கிழக்கு அறிவொளி சனசமூக நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன், வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி. தென் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஜெபநேசன் மற்றும் பயனாளிகள் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-21)



தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி சிறார்களின் வலய நிலை ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு, நுணாவில்கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் இடம்பெற்றது. சாவகச்சேரி, கொடிகாமம், வரணி, மட்டுவில், கச்சாய், கைதடி ஆகிய ஆறு குடும்ப முன்பள்ளிகளின் ஏற்பாட்டில் முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டன. (ஜ-9)



தேசிய சேமிப்பு வங்கி ஜெய்பூர் நிறுவனத்துக்கு தொலைக்காட்சியொன்றை அன்பளிப்புச் செய்துள்ளது. (ஜ-10)



யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு சேவையாற்றும் நிறுவனங்கள் ஒருங்கிணைந்து நடத்திய 'அகக் கண்கள் தந்த ஆனந்த வெற்றிகள்' அரங்கேற்றுக் கலை நிகழ்வுகள் அண்மையில் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் மங்கல விளக்கேற்றினர். (ஜ)



வயாவிளான் மத்திய கல்லூரியில் நடைபெற்ற ஒளிவிழாவில் நிகழ்வுகள். (ஜ)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி ஒதுக்கீட்டில் தீவக கல்வி வலயத்தைச் சேர்ந்த வசதிகுறைவான தெரிவு செய்யப்பட்ட இருபத்தைந்து மாணவர்களுக்கு வேலணை மத்திய கல்லூரியில் வைத்து துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்தார். (ஜ)



2015 ஆம் ஆண்டுக்கான திருஞான சம்பந்தர் வித்தியாலயத் தின் மாணவர் நாடாளுமன்றத்தில் வெற்றி பெற்றவர்கள் அதிபருடன் நிற்பதைக் காணலாம். (ஜ-422)



வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் தின நிகழ்வும் அண்மையில் கல்லூரியின் கலையரங்கில் இடம்பெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் மாணவர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவித்தார். (ஜ-10[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசா, வவுனியா கண்டி வீதி கற்குளியில் வசிக்கும் வறுமை நிலையில் உள்ள குடும்பமொன்றுக்கு கட்டடப் பொருள்களை வழங்கிவைத்தார்.



வவுனியா பூவரசங்குளம் மத்திய மகாவித்தியாலயத்தின் அதிபராகச் சேவையாற்றி, தற்போது வவுனியா சைவப்பிரகாச ஆரம்பப்பாடசாலையில் அதிபராக கடமையாற்றும் திருமதி தியாகசோதி யுவராஜா, பாடசாலையின் மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றியமையைப் பாராட்டி சேவைநலன் பாராட்டும் விழா பூவரசங்குளம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. (ஐ)



காந்தியடிகளின் ஜனன தினத்தை முன்னிட்டு மலையக கலாசார குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு கண்டி கெப்பிற்றிக்கொலாவ மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. மலையகத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராதா வெங்கட்ராமன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, பல்துறை சார்ந்த 16 பேருக்கு விருதுகள் வழங்கிக் கௌரவித்தார். (ஐ-135)



வடமாகாண விவசாய அமைச்சால் மீள்குடியேறிய விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும், மறுவயற் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் வகையிலும் மறுவயற்பயிர் விதைகள் வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கிளிநொச்சி மாவட்டத்தில் இத்தாவில், முகமாலை, வேம்பொடுகேணி, உழவனூர், நாதன்திட்டம் கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 123 விவசாயிகளுக்கான விதை வழங்கும் நிகழ்வு வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையில் இடம்பெற்றது. (ஐ)



வவுனியா விபுலானந்தாக் கல்லூரிக்கு வடமாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசாவால் நிதி உதவி வழங்கப்பட்டது. (ஐ)



போரினால் அழிவடைந்த ஆலய புனரமைப்புப் பணிக்கான நிதி உதவி, வடமாகாண சுகாதார அமைச்சின் குறித்து ஒதுக்கப்பட்ட கொடை நிதியிலிருந்து வழங்கி வைக்கப்பட்டது. (ஐ)



வட மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஒன்பது சைக்கிள்கள் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 9 மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. (ஐ-9)



வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வயாவிளான் மத்திய கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தால் சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி நூல்கள் கல்லூரி அதிபர் வ.த.ஜயந்தனிடம் கையளிக்கப்பட்டபோது.



வவுனியா மாவட்டத்துக்கான உயிரிழை முள்ளந்தண்டு வடம் பாதிப்புற்றோருக்கான அமைப்பின் அலுவலகம், மன்னார் வீதியில், வேப்பங்குளத்தில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் கு. அகிலேந்திரனால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் நிரப்புநிலைய ஊழியர்கள் மீது தாக்குதல்

கைதடி சந்தியிலுள்ள ப.நோ.கூ சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தின் ஊழியர்கள் இருவரை இனம்தெரியாதநபர்கள் தாக்கிவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

இவ்வாறு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் நேற்றிரவு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றிரவு 8.30 மணியளவில் குறித்த நிலையத்திற்கு இலக்கத்தகட்டை மறைத்தபடி நான்கு மோட்டார் சைக்கிளில் வந்த இனம்தெரியாத நபர்கள் ஊழியர்கள் இருவரை தலைக்கவசத்தால் தாக்கிவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-288)

## சென்னை

பாதிப்புற்ற மக்களுக்கு உதவி வழங்குவது தொடர்பிலான அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறான உதவிகள் வழங்குவது என்பது தொடர்பாக பேசப்பட்டுள்ளது. இந்தியத் துணைத் தூதரகத்தின் தூதுவர் அ.நடராஜனுடன், தான் இது தொடர்பில் பேசியதாக அமைச்சரவைக் கூட்டத்தில் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தியத் துணைத் தூதுவர், கொழும்பிலுள்ள தூதுவருடன் பேசிய பின்னரே எவ்வாறான உதவிகள் தேவை என்பதைத் தெரியப்படுத்த முடியும் என்றும், திங்கட்கிழமை வரை பொறுத்துக் கொள்ளுமாறும் தெரிவித்தாக முதலமைச்சர் இந்தச் சந்திப்பில் குறிப்பிட் டுள்ளார்.

மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இங்கிருந்து பொருள்களைக் கொண்டு செல்வது உசிதமானதாக இருக்காது என்பதாலும், சென்னை தவிர்ந்த தமிழ் நாட்டின் ஏனைய மாவட்டங்களிலேயே பொருள்களைக் கொள்வனவு செய்யலாம் என்பதாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிதி சேகரிப்பில் ஈடுபடுவது பொருத்தமானதாக இருக்கும் என்று அமைச்சரவைக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய நிதி சேகரிப்பு நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார். (த-5)

## நகுலேஸ்வரத்தில்

யாக விடுவிக்கப்பட்டு வருகின்றது. இரண்டு கட்டங்களில் 3 ஏக்கர் வரையிலான நிலப் பரப்பும் 8 வீடுகள் வரையிலும் விடுவிக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் மூன்றாம் கட்டமாக, நகுலேஸ்வரம் பகுதியில் அமைந்திருந்த வேணுகா ஆச்சிரமம் மற்றும் அதனுடன் இணைந்த வீடுகள் உள்ளிட்ட 5 ஏக்கர் நிலப் பரப்பை விடுவிப்பதற்குப் பாதுகாப்பு அமைச்சு இணங்கியுள்ளது. கடந்த மாதம் பலாலியில் இடம் பெற்ற கலந்துரையாட லில், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் இதற்கான இணக்கத்தை தெரிவித்திருந்தார். தற்போது குறித்த காணியை விடுவிப்பதற்கான எழுத்து மூலமான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் அமைந்துள்ள காவலரண்களை இரண்டுவாரங்களில் அகற்றி மக்களிடம் கையளிப்பதற்குப் பாதுகாப்புத் தரப்பினர் சம்மதித்துள்ளனர். மற்றும் செம்மண் வாய்க்கால் மயானத்துக்குச் செல்வதற்குக் கடற்படையினரிடம் முன்னறிவித்தல் வழங்கிவிட்டு அந்தப்பகுதிக்குச் செல்ல முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## மரண அறிவித்தல்



### சிந்தாத்துரை நெல்சன் சசிகரன் (சசி)

இல.4, பழைய கச்சேரி அருகில், கிளிநொச்சியை வதிவிடமாகக் கொண்டவரும், தற்போது வட்டக்கச்சியில் வசித்து வந்தவருமாகிய நெல்சன் சசிகரன் 04.12.2015 வெள்ளிக் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சிந்தாத்துரை-செல்வராணி தம்பதியரின் அன்பு மகனும், பிறேமினியின் பாசமிகு கணவரும், திபோனாவின் அன்புத் தந்தையும், கலாமதி, லெஸ்லி, சபிதா, செல்வகுமார், நெல்சன், திவ்வியா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.12.2015) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் வட்டக்கச்சியில் உள்ள அன்னாரது இல்லத்திலிருந்து கிளிநொச்சி இலங்கை பெந்தகோஸ் சபை தேவாலயத்துக்கு ஆராதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டு, ஆராதனையின் பின் கிளிநொச்சி திருநகர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கிளிநொச்சி. (63584) (10.17) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நிர்மலா பற்குணராசா



பிறப்பு:- 01.02.1960
இறப்பு :- 02.12.2015

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை (காந்தியா வீதி) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நிர்மலா பற்குணராசா 02.12.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - பொன்னம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற இரத்தினம் - சின்னம்மா தம்பதிகளின் மருமகளும், சுபோ, றொபின்சன், பிவித்தா, சின்னவன் ஆகியோரின் அன்பு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.12.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் காக்கைதீவு எருக்கலம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,
காந்தியா வீதி. (66620) (11,15,17) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கண்மணி கந்தையா



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி கந்தையா நேற்று (05.12.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாராயணப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற திலகவதியின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கார்த்திகேசு கந்தையாவின் அன்புமனைவியும் புவனேஸ்வரி (கிளி), மனோகரன், சர்வேஸ்வரி, ஈசா, மாலா, ரஞ்ஜினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயலலிதா, நவரட்ணம், அருளானந்தம், கதிர்செந்தாமரை ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சர்மிளா, பிரசன்னா, பிரசாத், சிவமாறன், சிவாஜினி, டெர்சன், வின்சன், விஸ்திகா, சாருகா, கஜன், அஸ்வத், ரூபிகா, ரஜிதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அஜய்யின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2015) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொக்குவிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாமகள் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (66639) தகவல்: பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை ரவிச்சந்திரன்



பூநகரியைப் பிறப்பிடமாகவும் பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை ரவிச்சந்திரன் நேற்று (05.12.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - இராசமணி தம்பதிகளின் அன்பு மகனும் நடராஜா - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் விஜயலட்சுமியின் அன்புக்கணவரும் சங்கரன், தர்ஷன், கேதினா(யா/இந்து மகளிர் கல்லூரி), கிரிஷாளினி (யா/காசிப்பிள்ளை வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயச்சந்திரன் (ஜேர்மனி) காலஞ்சென்ற பாலச்சந்திரன் ஆகியோரின் சகோதரனும் மதியழகன், ரசிகரன், சிவகரன், இராசலட்சுமி (கனடா), தமயந்தினி, அமுதினி ஆகியோரின் மைத்துனரு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(66646) தகவல் : குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி குகராணி பாலசுப்பிரமணியம்

கலைமணி வீதி, கட்டைப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி குகராணி பாலசுப்பிரமணியம் 04.12.2015 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம்-சரஸ்வதி தம்பதி யரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான கெசபதி-பத்மினி தம் பதியரின் மருமகளும், பாலசுப்பிரமணியத்தின் (சாய்ராம் மோட்டோர்ஸ்-மருதனார் மடம்) அன்பு மனைவியும், துஷியந்தி, கோபி (லண்டன்) பிரியந்தி, முரளி (றோயல் சேவிஸ் ஸ்ரேசன்-மருதனார்மடம்) ஆகியோரின் அன்புத் தாயும், முகுந்தன் (வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி அதிபர்), சஞ்சி (லண்டன்), பிரதீபன் (யாழ்ப்பாணம் பிரதான, புகையிரத அதிபர்) சுஜாதா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2015) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(66634) (11,15,17)

தகவல்: குடும்பத்தினர்.
021 223 0308

## மரண அறிவித்தல்

### பொன்னம்மா இரத்தினம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்மா இரத்தினம் 05.12.2015 காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்டார்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகன்வீதி,
திருநெல்வேலி கிழக்கு. (66637) (11,15,17) தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன உரிமையாளரான
**பாலசுப்பிரமணியம் ரவீந்திரதேவா**
அவர்களின் அன்புத் தாயார்
**சுகராணி பாலசுப்பிரமணியம்**
அவர்கள் 04.12.2015 அன்று இறைபதமடைந்து விட்டார். அவரது மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர்கள்**
**றோயல் சேர்விஸ் ஸ்ரேசன் ,சுன்னாகம்.**
(C/ 20591)(12.15)


# இடம்மாறி சத்திரசிகிச்சை: மருத்துவரின் மீது வழக்கு

கொழும்பு, டிசெ. 6

தனது மனைவிக்கு இடம்மாறிச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள கணவர், சத்திர சிகிச்சையை மேற்கொண்ட மருத்துவருக்கு எதிராகப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அதனால் மருத்துவர் சிக்கலை எதிர்கொண்டுள்ளார்.

களுத்துறை அகலவத்தையைச் சேர்ந்தவரே அகலவத்தை பொலிஸ் நிலையத்தில் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

தனது மனைவியின் இடது மார்பகத்தில் இருந்த பருவை சத்திரசிகிச்சையின் மூலமாக அகற்ற வேண்டிய குறித்த மருத்துவர் பதிலாக வலது மார்பைச் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தியுள்ளார் என்று குறித்த மருத்துவருக்கு எதிராக அந்தப் பெண்ணின் கணவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தன்னுடைய தவறை உணர்ந்த அந்த வைத்தியர், மீண்டுமொரு சத்திரசிகிச்சையை மேற்கொண்டு, தனது மனைவியின் இடது மார்பகத்தில் இருந்த பருவை அகற்றியுள்ளார் என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடது மார்பகத்துக்குப் பதிலாக வலது மார்பகத்தைச் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தியுள்ளதாக வைத்தியரின் கவனத்துக்குக் கொண்டு வந்தபோது தனக்கு வேலைகள் அதிகம் என்று அந்த மருத்துவர் கூறிச் சமாளித்துள்ளார். அதன் பின்னரே, மனைவியை மீண்டும் நினைவிழக்கச் செய்து, இடது மார்பில் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தியுள்ளார் என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சத்திரசிகிச்சையை மேற்கொண்ட வைத்தியரை விசாரணைக்கு உட்படுத்தியதாகத் தெரிவித்த களுத்துறை வைத்தியசாலைப் பணிப்பாளர், இரண்டு மார்பகங்களிலும் பருக்கள் இருந்தமையால் அவ்விரண்டையும் அகற்றி, அதிலிருந்தவற்றைப் பரிசோதனைக்கு அனுப்பியுள்ளதாக அந்த வைத்தியர் அறிக்கையிட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

(த-4)


## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
காசிநாதர் குலசிங்கம்
(செந்தா பஸ் உரிமையாளர்)
திதி:- ஏகாதசி

எமை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் எட்டு
கடந்திட்ட போதிலும்
அணையாத தீபமாய் என்றும்
உங்கள் நினைவுகள்
எங்கள் மனதில்
சுடர் விட்டுக் கொண்டே இருக்கும்

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

அரசகேசரிப் பிள்ளையார் கோவில் வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(65821)(12.15)

தோற்றம் 29.03.1956
மறைவு 05.12.2007

## முதலாம் ஆண்டு நினைவேந்தல்



அமரர்
இராசேஸ்வரி நவரத்தினம்

மலர்வு 29.11.1952
உதிர்வு 17.11.2014

சீராகச் சிறப்பாக வாழ்ந்தோம் நீ மறைந்து
ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலுமே துன்பம்
ஆறாது ஆறாது அறிவாயோ என் உடம்பு
நீறாகிப் போகுமட்டும் நீங்காது நின் நினைவு

நாவற்குழி.
(66723)(11.15)
கணவர் - ஆ.நவரத்தினம்

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் செல்வநாயகம்



அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்வநாயகம் நேற்று (05.12.2015) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய நாகலிங்கம்- ரோசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களாகிய செல்லத்துரை - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களாகிய கந்தசாமி, பூமணி, குணரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தயாவதி, முரளிதரன் (ஆசிரியர் - R.C.T.M பாடசாலை- நீர்வேலி), மனோகரி, கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், உமாசங்கர், வனஜா, அருள் நேசன் (உதவிக் கணக்காளர்- இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்),தகராஜா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிதுஜன், மயூரதன், சௌமிகா,காணவி,கீர்த்திகன், தாரிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.12.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11 மணியளவில் அச்சுவேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
(66619)(11,15,17)
தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர்த்துளிகளை காணிக்கையாக்குகின்றோம்

**வேலுப்பிள்ளை சின்னத்தம்பி**



அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அவர் பிரிவின் நிமித்தம் கலக்கமடைந்து இருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா இறைவனடி சேரப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ மாரி அம்பாள் ஸ்ரோர்ஸ்,
213, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம்.

அம்பாள் ஸ்ரோர்ஸ்
இல. 01, பாடசாலை வீதி,
திருநெல்வேலி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
கந்தையா தர்மலிங்கம்
(நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்)

தோற்றம் 23.09.1937
மறைவு 08.11.2015

கடந்த 08.11.2015 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கந்தையா தர்மலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (06.12.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.88/19, கேசாவில் வீதி,
பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 236 3537

## கண்ணீர் அஞ்சலி

**வேலுப்பிள்ளை சின்னத்தம்பி**



அவர்களின்
மறைவுச்செய்திகேட்டு
மீளாத்துயர் அடைவதுடன்
அவரின் பிரிவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**வெஸ்டா இன்டர்ஸ்றீஸ்**
**ஆனைக்கோட்டை**
**யாழ்ப்பாணம்.**
(66622)(12.15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளகப்

நடவடிக்கைகளில் மைத்திரிபால அரசு ஈடுபட்டுள்ளது. இதனை நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்சவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்குமிடையில் 30 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த செப்ரெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை நிறுவும் பணிகள் எதிர்வரும் ஜனவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்காகப் பாதுகாப்பு அமைச்சு, வெளிவிவகார அமைச்சு , நீதி அமைச்சு, ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் ஆகியன கூட்டாக இணைந்து சிறந்த பொறிமுறை ஒன்றை உருவாக்குவது குறித்து ஆராய உள்ளன.

ஜெனிவா தீர்மானத்தின் அடிப்படையில் எவ்வாறான பொறிமுறையை உருவாக்குவது -அதனை எவ்வாறு நம்பகத்தன்மையுடன் செயற்படுத்துவது குறித்து மேற்படி உயர்மட்டக் குழுக்கள் இணைந்து ஆராய்ந்து தீர்மானம் எடுக்கவுள்ளன.

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2016 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர் இந்தப் பொறிமுறை உருவாக்கம் குறித்து ஆராயவுள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். இதேவேளை, வரவு-செலவுத் திட்ட மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் 19 ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ)

## எதிர்க்கட்சி

தெரிவிக்கப்படுகின்றது.

2016ஆம் ஆண்டுக் கான வரவு-செலவு திட்டத்துக்குப் பிரதான எதிர்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியிருந்ததுடன், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் அதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தார். இதன் மூலம் சம்பந்தன் உண்மையான எதிர்க்கட்சித் தலைவர் இல்லை என்பது நிரூபணமாகியுள்ளது என்று கூட்டு எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றுக் கொள்வதற்காக எதிர்வரும் தினங்களில் சபாநாயகர் கரு ஜயசூரியவுடன் பேச்சு நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

அதனையடுத்துச் சர்வதேச நாடாளுமன்ற சங்கத்திலும் இது தொடர்பில் முறைப்பாடு ஒன்றைச் செய்து எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எதிர்க்கட்சிக்கான அனைத்துப் பொறுப்புக்கள், கடமைகளைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

வரவு-செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்க்கட்சி ஆசன உறுப்பினர்கள் மற்றும் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே இது தொடர்பில் இரகசிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதன்போதே மேற்படித் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரியவந்துள்ளது. (த-சி)

## டக்ளஸ்

ஆசிரியராக - அதிபராக இருந்த காலப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொடுத்ததாகவும், அப்படிச் சேர்க்கப்பட்டவர்களை விடுவிப்பதற்கு பணம் பெற்றதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா இந்தச் சபையில் குற்றம்சாட்டியுள்ளார்.

இந்த விடயங்களை டக்ளஸ் தேவானந்தா நிரூபிப்பாராயின் எனது இந்த அரசியல் வாழ்விலிருந்து முற்றாக ஒதுங்கத் தயார் என அவருக்குச் சவால் விடுக்கின்றேன் டக்ளஸ் தேவானந்தா ஓர் கொலையாளி. அவர் இந்தியாவால் தேடப்படும் குற்றவாளி. அந்த நாட்டுக்குக்கூடச் செல்ல முடியாதவர்.

அவரின் கட்சியைச் சேர்ந்த அற்புதன் மற்றும் முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன், ஊடகவியலாளர் நிமலராஜன்உள்ளிட்ட பலரின் படுகொலையுடன் டக்ளஸ் தேவானந்தா தொடர்புபட்டவர். வடக்கில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமற்போகக் காரணமாக இருந்தவர்.

டக்ளஸ் தேவானந்தா என்ற கப்பல் இன்று மூழ்கிக்கொண்டிருக்கின்றது. அவரின் அநீதிகள், குற்றங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன - என்றார். (த-சி)

## மகேஸ்வரனின்

தன்னைத்தானே இனங்காட்டிக் கொண்டார்.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே விஜயகலா மகேஸ்வரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுக்கு முன்னதாக உரையாற்றிய ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, படுகொலை செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் தொடர்பில் சில கருத்துக்களைத் தெரிவித்ததுடன், அவரின் கொலை தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பில் நம்பிக்கை இல்லை எனில், மேல் நீதிமன்றத்தை நாடமுடியும் எனக் கூறிய நிலையிலேயே, சூத்திரதாரி தன்னை இனங்காட்டிக் கொண்டதாக விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நேற்று (நேற்றுமுன்தினம்) இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு மீதான விவாதத்தில் எனது கணவரின் படுகொலை தொடர்பாக நான் குறிப்பிட்டிருந்தேன். எனது கணவரின் பெயரைக் கூறும் உரிமை எனக்குள்ளது. ஆனால், எனது கணவனைக் கொன்றவர் யார் என்று நான் குறிப்பிடவில்லை. சூத்திரதாரி இந்தச் சபையில் இருக்கின்றார் என்றே குறிப்பிட்டிருந்தேன். இங்கு 225 பேர் இருக்கின்றனர். அவர்களில் யார் சூத்திரதாரி என்று நான் குறிப்பிடவில்லை. இந்நிலையில் அந்தச் சூத்திரதாரி தன்னைத்தானே இனங் காட்டிக் கொண்டார்.

எனது கணவரின் படுகொலை தொடர்பாகக் கடந்தகாலத்தில் சரியான முறையில் விசாரணை நடைபெறவில்லை. அதனால் மீண்டும் விசாரணை இடம்பெற வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகி யோரிடம் கோரினேன். நீதிதான் தீர்ப்பு வழங்கவேண்டும்.

நான் குற்றம் செய்யாவிட்டால் பயப்படத் தேவையில்லை. இந்தச் சூத்திரதாரி தன்னைத்தானே இனங்காட்டிக் கொண்டார். இவரை உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும்- என்றார். (த-சி)

## சுமந்திரனுடன்

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

தனது உரையின் ஆரம்பத்தில் சவூதியில் கல்லால் எறிந்து சாவுத்தண்டனைக்குள்ளாக்கப்பட்டுள்ள இலங்கைப் பெண் தொடர்பாகதனது கவலையை வெளியிட்ட அவர், ரியா சட்டம் தொடர்பிலும் சில கருத்துக்களை முன்வைத்தார்.

நான் இஸ்லாத்தில் நம்பிக்கை கொண்டவன் அல்லன். ஆனால், அதைப் பின்பற்றுபவர்களை மதிப்பவன். எனது கருத்துகள் இஸ்லாத்துக்கோ அதனைப் பின்பற்றுபவர்களுக்கோ எதிரானதல்ல. நான் நட்புறவுடன் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகின்றேன்.

சவூதியில் இலங்கைப் பெண் ஒருவருக்கு கல்லால் எறிந்து சாவுத் தண்டனை நிறைவேற்றுமாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில மணி நேரத்தில் அந்தத் தண்டனை நிறைவேற்றப்பட்டுவிடும். இதேபோன்றதொரு நிலையை 2013 ஆம் ஆண்டும் ரிசானா விடயத்தில் எதிர்கொண்டோம். ரிசானாவுக்கு தலை துண்டிக்கப்பட்டுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. சில நாடுகளில் பழைமைவாதச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. நாம் நாகரிக காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

நான் கிறிஸ்தவன். எனது மத வேதாந்தத்திலும் கல்லால் எறிந்து தண்டனை நிறைவேற்றும் முறை உள்ளது. ஒரு தடவை ஒரு பெண்ணை கல்லால் எறிந்து கொல்வதற்காகக் கொண்டு வருகின்றார்கள். அப்போது இயேசுநாதர், உங்களில் பாவம் செய்யாதவர்கள் இந்தப் பெண் மீது முதல் கல்லை எறியுங்கள், என்று கூறுகின்றார். கற்களுடன் வந்தவர்கள் கற்களைப் போட்டுவிட்டுத் திரும்புகின்றனர்.

இங்கு முன்வரிசையில் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் இருக்கின்றார். இந்த அரசிலும் பல முஸ்லிம்கள் இருக்கின்றனர். உங்களிடம் நட்புறவுடன் ஒரு கேள்வியைக் கேட்கின்றேன் என்று கூறிவிட்டு, ரியா சட்டம் என்று தொடங்கியபோது ஐ.தே.க.வின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் கூச்சலிட்டுக் கொண்டு எழுந்தார்.

அதுவரை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த அமைச்சர் ரிசாத் பதியுதீன், மரிக்கார் எழுந்ததைப் பார்த்துவிட்டு தாமும் எழுந்து நின்று கூச்சலிடத் தொடங்கினர். இதன்போது எனது மிகுதிப்பேச்சைக் கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள் என்று சுமந்திரன் கூறியபோதும் அவர்கள் தொடர்ந்தும் கூச்சலிட்டனர்.

தமது மதச் சட்டத்தை சுமந்திரன் விமர்சிப்பதாக குற்றஞ் சாட்டிய இவர்கள் சுமந்திரனை வசைபாடினர்.

குழப்பம் ஏற்படுத்தாது அமைதியாக இருக்கும்படி சபாநாயகர் பல தடவைகள் கூறியபோதும் மரிக்காரும், ரிசாத் பதியுதீனும் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினர். ஒரு கட்டத்தில் சபாநாயகரின் அறிவிப்பைப் பொருட்படுத்தாது மரிக்கார் தொடர்ந்தும் கூச்சலிட, மரிக்கார் உங்களுக்கு 3 தடவைகளுக்கு மேல் அறிவுறுத்திவிட்டேன், என சபாநாயகர் கடுந்தொனியில் எச்சரித்தார்.

அப்போது சுமந்திரன், அமைச்சரே! உறுப்பினர்களே! நான் இஸ்லாத்துக்கோ, முஸ்லிம்களுக்கோ எதிரானவன் அல்லன். இலங்கை முஸ்லிம்களுக்காக குரல் கொடுத்ததற்காக நான் கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டவன், எனக் கூறியபோதும் அமைச்சர் ரிசாத் பதியுதீன் சுமந்திரனைக் கடுமையாக விமர்சித்தார்.

அப்போது எழுந்த சபை முதல்வரும் அமைச்சருமான லஷ்மன் கிரியெல்ல, சுமந்திரனை பேச அனுமதிக்க வேண்டும். அவர் கூறும் விடயங்களில் தவறில்லை. இருக்குமானால் அவற்றை பதிவேட்டிலிருந்து நீக்க நீங்கள் (சபாநாயகர்) உத்தரவிடுங்கள், என்றார்.

ஆனால், நான் பேசுவதில் தவறுகள் கிடையாது. அப்படி ஓர் இனத்தையோ, மதத்தையோ புண்படுத்துபவன் நானல்ல. முதலில் இந்த உறுப்பினர்கள் எனது பேச்சை முழுமையாகக் கேட்க வேண்டும், என்றார் சுமந்திரன். இந்நிலையில், அமைச்சர் நவீன் திஸாநாயக்க, பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா போன்றோர் சுமந்திரனுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்ததுடன், அவரை தொடர்ந்தும் பேச அனுமதிக்குமாறும் கோரினார்.

எனினும், அமைச்சர் ரிசாத் மற்றும் 3 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தொடர்ந்தும் இடையூறுகளை ஏற்படுத்திக் கொண்டு கூச்சலிடவே சபாநாயகர் கரு ஜயசூரிய கடுந்தொனியில் உத்தரவிட்டு அவர்களை அமரவைத்தார். (த-5-சி)

## கடன்சுமை

நிலையில், விவசாயம் செய்து கிடைக்கும் வருமானத்தில் தன்னையும் தனது குடும்பத்தையும் கவனித்துவந்த உரும்பிராயைச் சேர்ந்த குறித்த குடும்பஸ்தர், அதனால் கிடைக்கும் இலாபம் போதாத காரணத்தால் கடன் பெற்றிருந்தார் என்றும், அந்தக் கடனைச் செலுத்த முடியாத காரணத்தினால் அவர் உயிர் துறந்துள்ளார் என்றும் பொலிஸாரால் தெரிவிக்கப்படுகின்றது.

கடினப்பட்டு விவசாயம் செய்து அனைவருக்கும் உணவளிக்கும் விவசாயிக்கு அதனால் கிடைக்கும் வருமானம் குறைவு என்று அவரது உறவுகள் கூறுகின்றன. வருமானத்தை அதிகரிப்பதற்காகக் கடன் பெற்றிருந்தார் என்றும் கூறப்படுகிறது. எனினும் அவரால் கடனை திருப்பிக் கொடுக்க முடியவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் அவர் உயிர் துறந்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்று பொலிஸார் கூறினர்.

அவ்வாறே கரவெட்டியிலும் குடும்பப் பெண் ஒருவர் கடன் சுமை தாங்காமல் உயிர் துறந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர் என்றும், அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்காகக் கடன் பெற்றிருந்தார் என்றும், வெளிநாடு சென்ற இருவரிடமிருந்தும் பணம் கிடைப்பதாகவும் கூறப்படுகிறது.

ஆயினும் அவரால் முன்னர் பெற்ற கடனை ஈடு செய்யக் கூடியதாக இருக்கவில்லை என்றும், எதிர்வரும் ஜனவரியில் கடனைச் செலுத்தவேண்டியிருந் ததாகவும் அதுபற்றி அவர் தனக்கு நெருங்கியவர்களுக்குக் கூறிக் கவலைப்பட்டு வந்துள்ளார் என்றும் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் தனது வயதான தாயாருடன் இருந்துள்ளார். இந்நிலையில் அவர் நேற்று உயிர் துறந்துள்ளார். அவரது சடலம் மீட்கப்பட்டு மந்திகை வைத்தியசாலையில் விசாரணை மற்றும் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்த னர்.

வடக்கில் உள்ள விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கடன் சுமையால் வாடி வருவதாகக்கூறிக் கவலைப்பட்டு வரும் நிலையில் இத்தகைய பரிதாபகரமான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(த-4-108)

## தாஜுதீன்

பின்னரே வாகனத்தில் இருக்க வைக்கப்பட்டு விபத்தில் சிக்க வைக்கப்பட்டிருக்கின் றார் என்று, சட்ட வைத்திய அதிகாரி நீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

இதனையடுத்து தாஜுதீன் கொலை வழக்கு சூடு பிடித்துள்ளது. நீதிமன்றத்தினால், தாஜுதீன் கொலை செய்யப்பட்டே வாகனத்தில் இருக்க வைக்கப்பட்டுள்ளார் என்ற விடயம் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்றும், அந்த அறிவித்தல் கிடைத்தவுடன் சந்தேக நபர்கள் உடனடியாகக் கைது செய்யப்படுவர் எனவும் குற்றப் புலனாய்வு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

(த-5)

## ரணில்


உரையாற்றுவதற்காக, நாடாளுமன்றத்துக்கு மகிந்த ராஜபக்ச வருகை தந்திருந்தார். நாடாளுமன்ற அமர்வு முடிந்த பின்னர், மகிந்த ராஜபக்சவின் வேண்டுகோளுக்கு அமையவே நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசியுள்ளார்.

இதன்போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் பிரதமர் தரப்பிலிருந்தோ, மகிந்த ராஜபக்சவின் தரப்பிலிருந்தோ எந்தவொரு விடயங்களும் கசியவில்லை.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை, பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் விபத்தில் சாகவில்லை என்றும், அவர் கொலை செய்யப்பட்ட பின்னரே வாகனத்தில் இருத்தி வைக்கப்பட்டு விபத்தில் சிக்க வைக்கப்பட்டுள்ளார் என்றும், சட்ட மருத்துவ அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே மேற்படி சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதத்தை நெருங்குகிறார் கோக்லி வெற்றியின் விளிம்பில் இந்தியா



இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான நான்காவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாளில் இந்தியா இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடி 4 இலக்குகள் இழப்புக்கு 190 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து முதல் இன்னிங்ஸிற்காக 334 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் அப்பொட் 5 இலக்குகளையும் பியட் 4 இலக்குகளையும் தகீர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்காவின் இன்னிங்ஸ் 121 ஓட்டங்களுடன் முடிவுக்கு வர கூடவே நாளும் முடிவுக்கு வந்தது.

பந்துவீச்சில் ஜடேயா 5 இலக்குகளையும் அஸ்வின், ஜாதேவ் இருவரும் தலா 2 இலக்குகளையும் இசாந் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

தென்னாபிரிக்காவை தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸிற்காகவும் (பொலோ ஒன்) துடுப்பெடுத்தாட வைக்கக்கூடிய வாய்ப்பு இருந்தும் தாமே இரண்டாவது இன்னிங்ஸை தொடர்கிறோம் என்று அறிவித்தார் கோக்லி. 213 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது இந்தியா. நடுவரின் தவறான முடிவு தென்னாபிரிக்காவுக்கு கைகொடுக்க மோர்கலின் பந்தில் வீழ்ந்தார் விஜய். ஓட்டங்கள் பெறாத நிலையில் போல்ட் ஆனார் ரோகித். தவானும் புஜாராவும் இணை மேலதிக இலக்குகள் இழப்பின்றி 50 ஓட்டங்கள் வரையில் தாக்குப் பிடித்தது. 21 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் தவான். சிறிது நேரத்தில் புஜாராவின் ஆட்டமும் முடிவுக்கு வந்தது. தற்பொழுது இந்தியா 57-4. கோக்லியும் ரகானேயும் இணைய தென்னாபிரிக்காவின் பந்துவீச்சு ஒன்றுமில்லாமல் ஆனது. உடையும் தன்மையான ஆடு களத்தில் எப்படி விளையாடுவது என்று இருவருமாக இணைந்து தென்னாபிரிக்காவுக்கு பாடம் புகட்டினார்கள்.

நுணுக்கமான அணுகுமுறைகளில் கோக்லியை ஓரம்கட்டினார் ரகானே. இந்தத் தன்மையுடைய ஆடுகளங்களில் சுழலை எதிர்கொள்ளும் பொழுது பந்தை சிறிது மேலெழும்பும் படியாக விட்டு விளையாட வேண்டும். வேகப் பந்தை எதிர்கொள்ளும் பொழுது அதற்கு நேர்மாறான உத்தியைக் கையாள வேண்டும். கோக்லி இடையிடையே சிறுசிறு தவறுகள் செய்தாலும் ரகானேயின் ஆட்டத்தில் நேர்த்தியும் நிதானமும் பிரதிபலித்தது. ஆளுக்கொரு அரைச் சதம் கடக்க இணைப்பாட்டம் நூறு ஓட்டங்களை எட்டியது. இந்தத் தொடரின் சிறந்த இணைப்பாட்டம் இதுதான். போதிய வெளிச்சம் இன்மை காரணமாக 81 பந்துப் பரிமாற்றங்கள் வீசப்பட்ட நிலையிலேயே நாள் முடிவுக்கு வந்தது. கோக்லி 83 ஓட்டங்களுடனும் ரகானே 52 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இந்தியா இது வரை 403 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

மோர்கல் 3 இலக்குகளையும் தகீர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)



## மீண்டும் வேண்டும் அமீர் வக்கார் யுனிஸ் கருத்து

பாகிஸ்தான் அணியில் அமீர் மீண்டும் இடம்பெற அனுமதிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் அந்த அணியின் பயிற்சியாளரான வக்கார் யுனிஸ்.

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளரான அமீர் கடந்த 2010ஆம் ஆண்டு இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் ஆட்ட நிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டதால் அவருக்கு 5 ஆண்டு தடை விதிக்கப்பட்டது. தற்போது தடை முடிந்து உள்ளூர் தொடர்களில் விளையாடி வருகிறார். இந்த நிலையில் பாகிஸ்தான் அணியில் முகமது அமீரை சேர்க்க வேண்டும் என்று பயிற்சியாளர் வக்கார் யுனிஸ் தெரிவித்துள்ளார்.

யுனிஸ் தனது உரையில் - முகமது அமீர் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை அனுபவித்து விட்டார். அவர் கிரிக்கெட்டுக்குத் திரும்பும் தகுதியுடன் உள்ளார். அவர் நல்ல திறனில் இருக்கிறார். அவருக்கு இன்னொரு வாய்ப்பு அளிக்க வேண்டும். அவரைப் பாகிஸ்தான் அணியில் சேர்க்க வேண்டும். அமீர் மீண்டும் வந்தால் பாகிஸ்தானின் பந்துவீச்சு வரிசை மிகச்சிறந்த பலம் பெறும்- என்றார். (ம)



## பக்கச்சார்பற்ற கோட்லா ஆடுகளம்

*பொலக் பெருமிதம்*

டெல்லி ஆடுகளம் பக்கச் சார்பற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரரான பொலக்.

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான 4ஆவது டெஸ்ட் ஆட்டம் டெல்லியின் கோட்லா மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இந்த் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா முதல் இன்னிங்ஸில் 121 ஓட்டங்களில் சுருண்டது. குறித்த ஆட்டத்தில் தொலைக்காட்சி வர்ணனையாளராகச் செயற்படும் பொலக் தெரிவிக்கையில் - டெல்லி டெஸ்டில் அமைக்கப்பட்ட ஆடுகளம் பக்கச்சார்பற்ற தன்மையுடன் அமைக்கப்பட்டுள்ளது. ஆடுகளத்திலோ அல்லது பராமரிப்பிலோ குறைகூற ஒன்றும் இல்லை. தென்னாபிரிக்கா 121 ஓட்டங்களில் சுருண்டமைக்கு அதன் திறனற்ற தன்மையே காரணம்- என்றார்.(ம)

## சென்னைக்கு உதவ இந்திய அணி தயார்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் முடிந்தவுடன் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வோம் என்று இந்திய அணியின் வீரர்களான அஸ்வின், முரளி விஜய், ரகானே தெரிவித்துள்ளனர்.

சென்னை இடர் தொடர்பாக அஸ்வின் தெரிவிக்கையில் - இந்த பேரிடரிலும் மக்கள் ஒருவருக்கொருவர் உதவிக்கரம் நீட்டியிருப்பது குறித்து பெருமையாக உள்ளது. மக்களில் பலர் ஒருவருக்கொருவர் உதவிக்கரம் நீட்டியிருப்பது நல்ல விடயம். சென்னையின் உணர்வு இப்போது நல்ல முறையில் வெளிப்பட்டுள்ளது. இந்த அழிவில் அனைத்தையும் இழந்த குடும்பங்களுக்காக நான் ஆழ்ந்து வருந்துகிறேன். இந்தத் தொடர் முடிந்தவுடன் நிச்சயம் மக்களுக்காக உதவி புரிய களத்தில் இறங்குவேன்- என்றார்.

முரளி விஜய் கூறும்போது, சென்னையின் அனர்த்தம் உண்மையில் நம்பமுடியாத அளவுக்கு உள்ளது. அனைவரும் மனவலிமையுடன் இந்த நிலைமைகளை எதிர்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்தத் தருணத்தில் எனது குடும்பத்தினருடன் சென்னையில் இருக்க விரும்புகிறேன்- என்றார்.

ரகானே தெரிவிக்கையில் - சென்னை மக்களுக்காக பிரார்த்திக்கிறோம். எங்களால் சென்னை மக்களின் வலியை உணர முடிகிறது. இந்திய வீரர்கள் உங்களுக்கு (சென்னைக்கு) உதவ திட்டத்துடன் உள்ளனர். தென்னாபிரிக்கா வுக்கு எதிரான தொடர் முடிந்த பின்னர் நிச்சயம் அணியின் பங்களிப்பு கிடைக்கும்- என்றார். (ம)

# தவான், கோக்லி, ரகானே, விஜய் நால்வர் மீதும் ஐ.சி.சி. நடவடிக்கை?


இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் நான்காவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாளில் மைதானத்தில் நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டமைக்காகவும் மோதல் போக்கைக் கடைப் பிடித்தமைக்காகவும் இந்த நால்வருக்கும் ஐ.சி.சி. அபராதம் விதிக்க வாய்ப்புக்கள் உள்ளதாக தெரியவருகிறது.

தென்னாபிரிக்காவை பொலோ ஒன் செய்யவைக்க வாய்ப்பிருந்தும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தது இந்தியா. மோர்கல் வீசிய பவுன்சர் பந்தை விஜய் குனிந்து விடமுற்பட்ட வேளையில் அது துடுப்பு மட்டைக்கு மூன்று இஞ்ச் மேலாகச் சென்றது. குருட்டு நம்பிக்கையில் தென்னாபிரிக்கா முறையிட நடுவர் தர்மசேனாவும் அதை ஆட்டமிழப்பு என்று தெரிவித்துவிட்டார். இதனால் விஜய்க்கும் தர்மசேனாவுக்கும் சிறிது நேரம் வாக்குவாதம் ஏற்பட்டது. விஜய் பவிலியன் செல்லும் வரை தர்மசேனாவைத் திட்டிக் கொண்டே சென்றார்.

சிறிது நேரத்தால் கைக் கவசம் வேண்டும் என்று பவிலியன் நோக்கி தெரிவித்தார் தவான். ஒரு பந்துப்பரிமாற்றம் சென்றபின்னரும் கவசம் வரவில்லை. தாகீர் வீசிய பந்து தவானின் கையை தாக்கியது. இதனையடுத்து தவான் பவிலியனில் இருந்து மேலதிக வீரரான லோகேஸ் ராகுலை உடனடியாக வருமாறு கோபமாக தெரிவித்தார். இதுவும் சிறிது நேரம் பரபரப்பை ஏற்படுத்தியது.

தாகீர் வீசிய பந்தை கோக்லி இலக்குக் காப்பாளருக்கு பின்னால் வெட்டிவிட முற்பட்ட வேளையில் அது மட்டையில் படாமல் இலக்குக் காப்பாளரிடம் சென்றது. தாகீர் முறையிட நடுவரும் ஆட்டமிழப்பு என்று கொடுத்து விட்டார். அது ஒரு முறையற்ற பந்துவீச்சு. இதை எதிர் திசையில் நின்ற ரகானே கவனித்து இருந்தார். கோக்லி மட்டையில் படவில்லை என்று வாக்குவாதம் செய்ய, ரகானே இது முறையற்ற பந்துவீச்சு மூன்றாம் நடுவரிடம் செல்லுமாறு நடுவருடன் முரண்பட்டார். மூன்றாம் நடுவரின் பரிசீலிப்பில் அது முறையற்ற பந்துவீச்சு என்று தெரியவர கோக்லி தப்பித்தார்.

இந்தச் சம்பவங்களில் வீரர்களிடத்தில் பெரிய தவறு இல்லாவிட்டாலும் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிபந்தனையின் படி மோதல் போக்கை கடைப்பிடித்தல் (தவான்), நடுவரின் தீர்ப்புக்கு எதிராக வாக்குவாதத்தில் ஈடுபடுதல் (விஜய், கோக்லி, ரகானே) ஆகிய குற்றங்களுக்காக இவர்கள் நால்வருக்கும் அபராதம் விதிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன.(ம)



## 21 சுற்றுகளாக அதிகரித்தது உலக கார் பந்தயத் தொடர்

அடுத்த வருடத்துக்கான கார்பந்தயத் தொடர் 21 சுற்றுக்கள் கொண்டதாக நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக கார்பந்தயத் தொடர் இதுவரை காலமும் 19 சுற்றுக்களாக நடத்தப்பட்டது. ஜனவரியில் ஆரம்பமாகும் இந்தத் தொடர் நவம்பர் மாதத்துடன் முடிவடையும். இந்தநிலையில் வருடம் முழுவதும் தொடரை நீடிக்கச் செய்யும் விதமாக 21 சுற்றுக்களாக அடுத்த வருடம் முதல் தொடர் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு வருடத்துக்கான தொடரில் இங்கிலாந்தின் கமில்டன் கிண்ணம் வென்றிருந்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண அணி அபாரவெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 6
தேசியமட்ட உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுநடைபெற்ற ஆட்டமொன்றில் வடமாகாண அணி அபார வெற்றிபெற்றது.
41ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான இருபாலருக்குமான உதைபந்தாட்டத் தொடர்பதுளைவின்சன்டயஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றுவருகின்றது. நேற்றுக் காலை 8 மணிக்கு இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் வட மாகாண அணியை எதிர்த்து வட மத்திய மாகாண அணி மோதிக் கொண்டது. இதில் வடமாகாண அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் வடமாகாண அணி காலிறுதிக்கான வாய்ப்பைப் பெற்றுள்ளது. (ம-23)



யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ. நிறுவனத்தின் 125 ஆவது ஆண்டை முன்னிட்டு வீதி ஓட்ட நிகழ்வு நேற்றுக் காலை 6 மணியளவில் நடைபெற்றது. (9)

# 750 வெற்றியாளர்களைக் கௌரவித்த வடமராட்சியின் வர்ண இரவுகள் நிகழ்வு



கரணவாய், டிசெ. 6
வடமராட்சிக் கல்வி வலயத்தில் பெருவிளையாட்டுக்கள் மற்றும் மெய்வன்மைப் போட்டிகளில் சாதனை படைத்த 750 வெற்றியாளர்கள் வர்ணவிருதுநிகழ்வில் கௌரவிக்கப்பட்டதுடன் 28 பாடசாலைகளும் கௌரவிக்கப்பட்டன.
வடமராட்சிக் கல்வி வலயத்தில் சாதனை படைத்தவர்களை கௌரவிக்கும் நிகழ்வான வர்ண இரவுகள் நிகழ்வு கடந்த புதன்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரியின் கலையரங்கில் இடம்பெற்றது. இதில் வலயமட்டப் பெருவிளையாட்டுக்களில் சாதனை படைத்த 27 பாடசாலை அணிகளும் வலய மட்டத்தில் மெய்வன்மைப் போட்டிகளில் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்ட 16 வீர, வீராங்கனைகளும் வலய மட்ட சதுரங்கப் போட்டியில் முதல் இடம்பெற்ற 20 மாணவ மாணவிகளும் மாகாண மட்டத்தில் பெருவிளையாட்டில் வெற்றி பெற்ற 28 அணிகளும் மெய் வன்மைப் போட்டியில் வெற்றிபெற்ற 19 வீரவீராங்கனைகளும் கௌரவிக்கப்பட்டனர்.
மட்டுமல்லாமல் தேசியமட்டப் போட்டிகளில் 15 வயதுப் பிரிவுக்கு உட்பட்ட தட்டெறிதலில் தங்கப் பதக்கம் பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் பி.ஆனந்த், 17 வயதுக்கு உட்பட்ட தட்டெறிதலில் வர்ண சான்றிதழ் பெற்ற ஹாட்லிக் கல்லூரி மாணவன் எஸ்.பிரகாஸ்ராஜ், பளு தூக்கல் போட்டியில் 19 வயதுக்கு உட்பட்ட பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற வல்வை சிதம்பராக்கல்லூரி மாணவிகளான ஆர்.தசாந்தினி, கே.யோகேஸ்வரி, தேசியமட்ட குத்துச்சண்டைப் போட்டியில் வெற்றிபெற்ற ஹாட்லிக் கல்லூரி மாணவர்களான எஸ்.ஜீவாந்த், எஸ்.கிரிதரன், ஜோன் கனிஸ்ட மெய்வன்மைப்பொட்டியில் பதக்கம் வென்ற ஹாட்லிக் கல்லூரி மாணவர்களான பி.ஆனந், என்.பிரவீனன், ரி.அபிசானந் ஆகியோருடன் தேசிய மட்ட கபடிப் போட்டியில் 2ஆம் இடம்பெற்ற பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை வீராங்கனைகள் அத்தனை பேரும் விசேட விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.
அத்துடன் தேசிய மட்டப் போட்டிகளில் அதிக அணிகளைப் பங்குபற்ற வைத்த பாடசாலைகளான பருத்தித்துறைஹாட்லிக்கல்லூரி, மற்றும் பருத்தித்துறைமெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை ஆகியவற்றின் அதிபர்கள் விசேட விருதுகள்வழங்கிக்கௌரவிக்கப்பட்டனர்.
வலயக் கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், வடமாகாண கல்விப்பணிப்பாளர் சி.உதயகுமார், வடமாகாண பிரதிக்கல்விப்பணிப்பாளர் கே.சத்தியபாலன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்களான வே.சிவயோகன், சு.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-108)

### மேசைப்பந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், டிசெ. 6
இலங்கை மேசைப்பந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப் படும் இருபாலருக்குமான மேசைப் பந்தாட்டத் தொடர் எதிர் வரும் 19ஆம் திகதி தொடகம் 22ஆம் திகதி வரை யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (ம-23)

### தேசிய கூடைப்பந்தாட்டத்தில் வடமாகாண பெண்கள் அணி அரையிறுதிக்குள் நுழைந்தது

யாழ்ப்பாணம், டிசெ. 6
தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் வடமாகாண பெண்கள் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.
41ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொழும்புறோயல்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெற்று வருகின்றன. பெண்களுக்கான காலிறுதியாட்டத்தில் வடமாகாண அணியை எதிர்த்து கிழக்கு மாகாண அணி மோதிக் கொண்டது. அதில் வடமாகாண அணி 56:26 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30மணிக்கு இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் வடமேல் மாகாண அணியுடன் மோதவுள்ளது. ஆண்களுக்கான காலிறுதி ஆட்டத்தில் வடமாகாண அணியை எதிர்த்து மத்திய மாகாண அணி மோதிக்கொண்டது. இதில் மத்திய மாகாண அணி 60:57 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# இலங்கையை வீழ்த்துவோம்; மக்கலம் தெரிவிப்பு

நியூசிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இலங்கை அணியை நியூசிலாந்து வீழ்த்தும் என்று தெரிவித்துள்ளார் நியூசிலாந்து அணியின் தலைவரான மக்கலம்.
தொடர் தொடர்பாக மக்கலம் தெரிவிக்கையில் - ஆஸ்திரேலிய அணியிடம் தோல்வியடைந்ததை வைத்து நியூசிலாந்து பலவீனமாக உள்ளது என்று எவரும் எடைபோட்டுவிடக்கூடாது. இரண்டாவது ஆட்டத்தில் லையனின் ஆட்டமிழப்பு தொடர்பான தீர்ப்பு எமக்குச் சாதகமாக அமைந்திருந்தால் நிச்சயம் நாம் தொடரைச் சமன் செய்திருப்போம். எல்லா அணிகளையும் போலவே சொந்தமண்ணில் நாம் பலமானவர்கள்தான். இலங்கை அணியில் இருக்கும் வீரர்களில் பலர் நியூசிலாந்தையும் அதன் ஆடுகளங்களையும் இப்போதே அறிகிறார்கள். இதுவே இலங்கையின் பெரும் பலவீனம். மகேல, சங்கா இல்லா தமை அந்த அணியின் வெளிநாட்டு சுற்றுப்பயணங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இவற்றைப் பயன்படுத்தி நிச்சயம் இலங்கையை வீழ்த்துவோம்-என்றார். (ம)

"இலங்கைஅணியில்இருக்கும் வீரர்களில் பலர் நியூசிலாந்தையும் அதன் ஆடுகளங்களையும் இப்போதே அறிகிறார்கள். இதுவே இலங்கையின் பெரும் பலவீனம்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதத்துடன் தொடங்கிய கோக்லி சதத்துடன் முடிப்பாரா வருடத்தை?

ஒரு வருடத்தில் தான் சந்தித்த முதலாவது டெஸ்ட் ஆட்டத்திலும் இறுதி டெஸ்ட் ஆட்டத்திலும் சதம் விளாசிய பெருமை கோக்லிக்குக் கிடைக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தை ஆஸ்திரேலியாவுக்கு எதிராக எதிர்கொண்டது இந்தியா. கடந்த ஜனவரியில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கோக்லி சதம் விளாசி சதத்துடன் வருடத்தை ஆரம்பித்திருந்தார். தென்னாபிரிக்காவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் கோக்லி 83 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளார். இந்தவாய்ப்பைப்பயன்படுத்தி சதம் விளாசினால் அவர் வருடத்தை சதத்துடன் தொடங்கி சதத்துடன் முடித்த பெருமையைப் பெறுவார். இதற்கு கோக்லிக்கு இன்னும் 17 ஓட்டங்களே தேவை. (ம)





# சந்தர்போல் நீக்கம்

## லாரா மீண்டும் பாய்ச்சல்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடருக்கான தீவுகளின் அணியில் இருந்து சந்தர்போல் நீக்கப்பட்டமைக்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ள தீவுகளின் முன்னாள் தலைவரான லாரா, சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தொழில்நுட்பக் குழுவிடம் அனுமதி பெற்று அவரை மீண்டும் இணைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

ஆஸ்திரேலியா - மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடர் எதிர்வரும் 10ஆம் திகதி ஆஸ்திரேலியாவில் ஆரம்பமாகிறது. இந்தத் தொடரில் பங்குபற்றவுள்ள மேற்கிந்தியத் தீவுகளின் அணி ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளது. இந்த அணியில் சந்தர்போல், கெயில், பிராவோ, சமி, பொலார்ட் ஐவரும் இடம்பெறவில்லை. ஏனையோர் நீக்கப்பட்டமையைப் பெரிதளவில் கண்டு கொள்ளாத லாரா சந்தர்போல் நீக்கப்பட்டமைக்குக் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

சந்தர்போலின் நீக்கம் தொடர்பாக லாரா தெரிவிக்கையில்–தீவுகளின் கிரிக்கெட் எதை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறதுஎன்பதுஎனக்குத் தெரியவில்லை. சந்தர்போல் ஏன் அணியில் இருந்து நீக்கப்பட்டார் என்பதும் சிறிதும் புரியவில்லை. எதற்காக இந்த நடவடிக்கை. அவர் ஓர் அற்புதமான வீரர். எத்தகைய சூழ்நிலைகளையும் தனித்துச் சமாளிக்கும் வல்லமை படைத்தவர். டெஸ்டில் இத்தகைய வீரர்களின் பங்குபற்றல் நிச்சயம் வேண்டும். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஆஸ்திரேலிய மண்ணில் வைத்து, அறிவிக்கப்பட்டுள்ள அணியால் சாதிப்பது கடினம். அவர்களுடன் அனுபவ வீரர்களும் இணைய வேண்டும். சந்தர்போலை உடனடியாக அணிக்கு திரும்ப வழிவகை செய்ய வேண்டும்– என்றார். (ம)

# சிறந்த வீராங்கனையாக சாய்னா நேவால்?

சர்வதேச பூப்பந்தாட்ட சம்மேளனம் விருதுகளுக்கான தனது பட்டியலில் சாய்னாவின் பெயரையும் உள்வாங்கியுள்ளது.

சர்வதேச பூப்பந்தாட்ட சம்மேளனம் ஆண்டுதோறும் உலகின் சிறந்த வீர–வீராங்கனைகளைத் தெரிவு செய்து விருது வழங்கி வருகிறது. இந்த ஆண்டுக்கான விருது எதிர்வரும் 7ஆம் திகதி டுபாயில் அறிவிக்கப்படுகிறது. இந்தப் பட்டியலில் இந்திய வீராங்கனை சாய்னா நேவால் இடம்பிடித்துள்ளார். (ம)

# லோகேஸ் ராகுல் உள்ளே ரோகித் சர்மா வெளியே

*சொல்கிறார் மஞ்ரேகர்*



தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் தடுமாறிவரும் ரோகித் சர்மாவுக்குப் பதிலாக டெஸ்ட் ஆட்டத்தில் லோகேஸ் ராகுல் இடம்பெற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் இந்திய அணியின் முன்னாள் வீரரான மஞ்ரேகர்.

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான தொடரில் தொலைக்காட்சி வர்ணனையாளராகப் பணியாற்றும் மஞ் ரேகர், ரோகித் சர்மா தொடர்பாகத் தனது வர்ணனையில்:- ரோகித் சர்மாவின் ஆட்டம் மிகமிக மோசமாக உள்ளது. துடுப்பாட்டத்துக்குச் சாதகமான ஆடுகளங்களில்தான் அவர் சிறப்பாகச் செயற்படுகிறார். ஏனைய ஆடுகளங்களில் அவரது செயற்பாடு அணிக்கு உதவியாக இல்லை. அதிலும் குறிப்பாக நாக்பூர், கோட்லா போன்ற உடையும் தன்மை மிகுந்த ஆடுகளங்களில் ரோகித் தாக்கத்தைச் செலுத்துவதாகத் தெரியவில்லை. இந்த நிலையுடன் அவரை அணியில் நீடிக்க அனுமதிக்கக் கூடாது. அவருக்குப் பதிலாக ஆஸ்திரேலியாவில் வைத்து சதம் விளாசிய லோகேஸ் ராகுலை கொண்டுவர வேண்டும்– என்றார். (ம)

**Maths Classes**

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான கணித வகுப்புக்கள் (ஆங்கிலமொழி, தமிழ் மொழி மூலமான) இலகுவான முறையில் குழுவாகவோ அல்லது தனியாகவோ பிரபல அனுபவமிக்க ஆசிரியரால் கற்பிக்கப்படும். (கொக்குவில், மானிப்பாய், சுன்னாகம் அண்டிய பகுதிகள் விரும்பத்தக்கது)

தொடர்புக்கு : 077 5963 730

**பதவி வெற்றிடங்கள்**

இலங்கையின் முன்னணி CIMA கற்கை நிறுவனத்துக்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு தகுதியானோர் நேரில் சமுகமளிக்கவும்.

- வரவேற்பாளர் - பெண் (Receptionist-Female) ஆங்கிலப் புலமை உள்ளவர்களுக்கு முன்னுரிமை
- அலுவலக சுத்திகரிப்பாளர் - ஆண் (Cleaner Staff)

காலம் : 09.12.2015 (காலை 9.00 மணி)

Wisdom Business Academy - Jaffna.
154 A/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**கணக்காளர் தேவை H.N.D.A**

யாழ். நகர் நிறுவனம் ஒன்றுக்கு H.N.D.A தகைமையுடன் டெலி கணக்காளர் தேவை.
Tally தெரிந்திருத்தல் அவசியம்

தொடர்பு : 077 791 1219

(66728) (12.15)

**CHEMISTRY**

க.பொ.த(உ/த) 2016 DAY

✓ இரசாயனக் கணிப்புக்கள்
திங்கள் - வெள்ளி 11.30 - 1.30 PM

✓ வாயுக்கள்
சனி - ஞாயிறு 7.30 - 9.45 AM

DIAS B.Sc (Hons) Spl.in.Chem

NEW SCIENCE WORLD
Navalar Road - Brown Road Junction-Jaffna.

**காணி விற்பனைக்கு**

திக்கத்திலிருந்து நெல்லியடி வீதியில் 10½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பழைய அம்பாள் மில், வடிசாலையில் இருந்து 100M தொலைவில்.

தொடர்பு:- 077 308 5236,
077 157 4757

(66704)
(11.15)

**Rent a Car**

நாள், மாதாந்த அடிப்படையில் கார்கள் வாடகைக்கு உண்டு.

T.P: 075 2040061

**கோனேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி**
(German Language Academy)

ஜேர்மன், சுவிஸ், ஒஸ்ரியா ஆகிய நாடுகளுக்கான டொச் மொழிகள் ஜேர்மன் தூதரகம் நடத்தும் A1 பரீட்சைக்கு ஏற்றவகையில் S. கோனேஸ்வரன் அவர்களால் கற்பிக்கப்படுகிறது.
(தொடர்பு கொண்டபின் நேரில் வரவும்)

077 9707 322
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**மயூரன் ஆசிரியரின் ஜேர்மன் கல்லூரி**

ஜேர்மன், சுவிஸ் நாடுகளுக்கு செல்பவர்களுக்கான டொச் (Deutsch) மொழிகள் இலகுவான மொழியில் $A_1$ சான்றிதழுக்கு ஏற்றவாறு கற்பிக்கப்படுகின்றது.

Note:
ஒரே தடவையில் பரீட்சையில் சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம் உண்டு.
புதிய பிரிவுகள் திங்கள், புதன் கிழமைகளில் ஆரம்பமாகின்றன.

தொடர்புகளுக்கு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.